

தமிழரசு
பெரியார் நினைவு
சமத்துவபுரம்
காஞ்சிபுரம் மாவட்டம்
மூன்றாண்டுச் சாதனை மலர்
மே 1-31, 1999, ரூ.6







## நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது.

## அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்


மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.


Mudra:TNSACS:6259:98

# 3 ஆண்டுச் சாதனை மலர்

### திருக்குறள்

**கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்**
**உடையானாம் வேந்தர்க் கொளி.**

நலவாழ்வுக்கு வேண்டியவற்றை வழங்கியும், நிலையுணர்ந்து கருணை காட்டியும், நடுநிலை தவறாமல் ஆட்சி நடத்தியும், மக்களைப் பேணிக் காப்பதே ஓர் அரசுக்குப் புகழொளி சேர்ப்பதாகும்.

**– கலைஞரின் திருகுறள் உரையிலிருந்து...**


## தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2030

சித்திரை – வைகாசி

மே 1–31, 1999

மலர் : 30 இதழ் : 21 & 22

விலை ரூ. 6

# தொழில் வளர்ச்சியில் தமிழகம் முதலிடம்

தமிழ்நாட்டிலே 1996 முதல் 1999ஆம் ஆண்டு வரை தொடங்கப்பட்ட புதிய தொழிற்சாலைகளின் விவரம்:காஞ்சிபுரம் செல்கின்ற வழியிலே இருங்காட்டுக் கோட்டையில் 1,829 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப் பட்டிருக்கிறது, தொழில் வளாகத்திற்காக, பல தொழில்களைத் தொடங்க வேண்டும் என்பதற்காக இந்த மூன்று ஆண்டு காலத்தில். 2,450 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் ''ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட்'' நிறுவனத்தினுடைய கார் தொழிற்சாலை. 320 கோடி ரூபாய் செலவில் திருவள்ளூரில் ''மிட்சுபிஷி லேன்சர்'' கார் தொழிற்சாலை. 1,700 கோடி ரூபாய் செலவில் மறைமலை நகரில் அமைக்கப்பட்ட ''போர்டு மோட்டார்ஸ்'' நிறுவனத்தினுடைய கார் தொழிற்சாலை. 40 கோடி ரூபாய் முதலீட்டில் இருங்காட்டுக் கோட்டையில் இல்ஜின் இன்டஸ்டிரிஸ்'' நிறுவனத்தின் ஆட்டோமொபைல் கார் உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை. 23 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக் கோட்டையில் ''டைனமாடிக் குரூப் கம்பெனிகள்'' நிறுவனத்தின் ஆட்டோமொபைல் கார் உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

44 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக் கோட்டையில் போஸ் ஹூண்டாய் ஸ்டீல் மேனுபேக்சரிங் லிமிடெட் நிறுவனத்தின் காயில் சென்டர் (Coil Centre) தொழிற்சாலை.



மாண்புமிகு முதலமைச்சர்
**கலைஞர்**

27 கோடி ரூபாய் செலவில் மறைமலைநகரில் வாலியோ ஃபிரிக்ஷன் மெட்டீரியல்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நான்–ஆஸ்பெஸ்டாஸ் பிரிக்ஷன் மெட்டீரியல்ஸ் தயாரிக்கும் தொழிற்சாலை; காரின் உதிரி பாகங்கள் தயாரிக்கின்ற தொழிற்சாலை;

30 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக் கோட்டையில் மேன்டோ பிரேக் சிஸ்டம்ஸ் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் ஹைட்ராலிக் பிரேக்கிங் சிஸ்டம் தயாரிக்கும் தொழிற்சாலை;

59 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக் கோட்டையில் மட்சுஷிடா ஏர்கண்டிஷனிங் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் ஏர்கண்டிஷனர்ஸ் தயாரிக்கும் தொழிற்சாலை; அறைகளுக்கு வைக்கக் கூடிய ஏர்கண்டிஷன் இயந்திரங்களை தயாரிக்கக்கூடிய தொழிற்சாலை;

8.6 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக் கோட்டையில் லுமெக்ஸ் சாப்லிங் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் 'ஆட்டோமோடிவ் லைட்ஸ் தயாரிக்கும் தொழிற்சாலை;

45 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக் கோட்டையில் ஜே.பி.எம்.சங்வூ லிமிடெட் நிறுவனத்தின் தகடு உலோக பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.




17 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக் கோட்டையில் ஜே.கே.எம். டேரியம் ஆட்டோமோட்டிவ் லிமிடெட் நிறுவனத்தின் உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை;

9 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக் கோட்டையில் பி.எச்.சி. மேனுபேக்சரிங் லிமிடெட் நிறுவனத்தின் கார் கதவுகள் தயாரிக்கும் தொழிற்சாலை;

43 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக் கோட்டையில் டோங்கி விஷன் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனத்தின் உலோகத் தகடு பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை;

9 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக் கோட்டையில் ஷார்தா மோட்டார் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனத்தின் கார் எக்சாஸ்ட் (Car Exhaust) தயாரிக்கும் தொழிற்சாலை;

5 கோடி ரூபாய் செலவில் ஒசூரில் ப்ளூமிங் மெடோஸ் லிமிடெட் நிறுவனத்தின் மலர் வளர்க்கும் தொழிற்சாலை; அதாவது வெளிநாடுகளுக்கு மலரை ஏற்றுமதி செய்வதற்கான தொழிற்சாலை;

41 கோடி ரூபாய் செலவில் ஈரோடு அருகே உள்ள சோளங்கபாளையத்தில் எஸ்.கே.எம். எக் ப்ராடக்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் முட்டை பதப்படுத்தும் தொழிற்சாலை; அந்த முட்டை பதனிடும் தொழிற்சாலை 41 கோடி ரூபாய் செலவில் தொடங்கப்பட்டது.

5 கோடி ரூபாய் செலவில் காஞ்சிபுரம் அருகில் உள்ள செட்டிப்பாளையத்தில் பாரத் டெக்ஸ் பேஷன்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலை;

### ரூ.300 கோடியில் கும்மிடிப்பூண்டியில் தாப்பர் டூபாண்ட் தொழிற்சாலை

300 கோடி ரூபாய் செலவில் கும்மிடிப் பூண்டியில் தாப்பர் டூபாண்ட் லிமிடெட் நிறுவனத்தின் நைலான் இழை தயாரிக்கும் தொழிற்சாலை. இதுகூட கடந்த ஆட்சிக்காலத்திலே தொடங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. பல பிரச்சினைகளுக்கு இடையே பிறகு இந்த ஆட்சிக் காலத்திலேதான் அந்தத் தொழிற்சாலை தொடங்கப்பட்டது;

27 கோடி ரூபாய் செலவில் தாம்பரம் ஏற்றுமதி வளாகத்தில் ஆசியன் லைட்டிங் நிறுவனத்தின் உலோகக் குழல் விளக்கு தயாரிக்கும் தொழிற்சாலை;

4.5 கோடி ரூபாயில் செலவில் கரூர் அருகிலே உள்ள அப்பர்பாளையத்தில் கரூர் யார்ன் லிங்க்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் நூல்– ஆடை தயாரிக்கும் தொழிற்சாலை,

10 கோடி ரூபாய் செலவில் ஒசூரில் டாரஸ் நாவல்டீஸ் லிமிடெட் நிறுவனத்தின் டோலமைட், ஸ்டோன்வேர் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலை;

21 கோடி ரூபாய் செலவில் திருப்போரூரில் ஸ்ரீராம் ஆட்டோ காம்பொனன்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் ஆட்டோமொபைல் உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை;

11 கோடி ரூபாய் செலவில் சென்னைக்கருகில் உள்ள மணலியில் ரமணசேகர் ஸ்டீல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் உலோகச் சுருள்களைத் தகடாக மாற்றும் தொழிற்சாலை;

12 கோடி ரூபாய் செலவில் கோயம்புத்தூரில் இன்சில் இண்டஸ்ட்ரியல் லிமிடெட் நிறுவனத்தின் தொழிற்சாலை;

33 கோடி ரூபாய் செலவில் புழல் கிராமத்தில் செம்பவாங் – ஸ்ரீராம் நிறுவனம், சிங்கப்பூர் நிறுவனம் இது, பொருள் விநியோகத் தொழிற்சாலை;

### ரூ.500 கோடியில் சேலத்தில் சிஸ்கால் எஃகு தொழிற்சாலை

500 கோடி ரூபாய் செலவில் சேலத்தில் சிஸ்கால் நிறுவனத்தின் எஃகுத் தொழிற்சாலை, அண்மையிலே திறந்து வைக்கப்பட்டது.



756 கோடி ரூபாய் செலவில் சென்னை பேசின் பிரிட்ஜ் ஜி.எம்.ஆர். வாசவி நிறுவனத்தின் மின்திட்டம்.

இந்த தொழிற்சாலைகளின் மொத்த முதலீடு 6,067 கோடி. இதில் நேரடியாக வேலைவாய்ப்பு 9,626 பேருக்கு; மறைமுகமான வேலைவாய்ப்பு 18 ஆயிரம் பேருக்குக் கிடைக்கும்.

### இப்போது வேலை நடைபெற்று வரும் தொழில்கள் விபரம்

இது அன்னியில் இப்போது வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற தொழில்கள் – அவைகள் எவை என்று பார்த்தால், 450 கோடி ரூபாய் செலவில் திருப்பெரும்புதூரில் செயிண்ட் கோபைன் நிறுவனத்தின் மிதவைக் கண்ணாடி தயாரிக்கும் தொழிற்சாலை, அதனுடைய வேலை முக்கால் பகுதி முடிந்துவிட்டது.

50 கோடி ரூபாய் செலவிலே இருங்காட்டுக் கோட்டையில் மார்க்யூப் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் பேப்பர் போர்டு மிஷினரி தயாரிக்கும் தொழிற்சாலை.

44 கோடி ரூபாய் செலவிலே இருங்காட்டுக் கோட்டையில் கோவேமா உட்பிளாஸ்ட் லிமிடெட் நிறுவனத்தின் ரிஜிட் பி.வி.சி.பலகை தயாரிக்கும் தொழிற்சாலை.

5 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக் கோட்டையில் ஆட்டோலெக் இண்டஸ்ட்ரிஸ் நிறுவனத்தின் நீர் மற்றும் எண்ணெய் பம்ப் தயாரிக்கும் தொழிற்சாலை.

30 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக் கோட்டையில் ரெனால்ட்ஸ் பென் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் பால் பாயிண்ட் பேனாக்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

15 கோடி ரூபாய் செலவில் திருபெரும்புதூரில் இன்வால் (மெடிக்கல்) இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் குருதிப் பைகள் (Blood bags) தயாரிக்கும் தொழிற்சாலை.

20 கோடி ரூபாய் செலவிலே ஓசூரில் டான்ப்ளோரா இன்ப்ரா ஸ்ட்ரக்சர் லிமிடெட் நிறுவனத்தின் தொழில் வளாகம்.

6 கோடி ரூபாய் செலவில் (Bio-technology Park for Women) சென்னையில் மகளிருக்கான உயிர் தொழில்நுட்பப் பூங்கா.

210 கோடி ரூபாய் செலவிலே செங்கல்பட்டில் மகேந்திரா இண்டஸ்ட்ரியல் பார்க் லிமிடெட்

நிறுவனத்தின் ஆட்டோ உதிரிபாகங்களுக்கான தொழில் வளாகம்.

27.7 கோடி ரூபாய் செலவில் சென்னையில் மெடிடெக் ப்ராடக்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தொழிற்சாலை.

5.6 கோடி ரூபாய் செலவில் சென்னையில் இண்டியன் அண்டு நேச்சுரல் மெடிக்கல் ப்ராடெக்ட்ஸ் லிமிடெட் தொழிற்சாலை.

28.5 கோடி ரூபாய் செலவில் மறைமலை நகரில் ஆப்டிகல் பைபர் கேபிள் ப்ராஜெக்ட் தொழிற்சாலை.

320 கோடி ரூபாய் செலவில் தரமணியில் டைடல் பார்க் லிமிடெட் நிறுவனத்தின் தொழில் வளாகம்.

3,200 கோடி ரூபாய் செலவில் கடலூரில் பென்னார் ரிபைனரிஸ் நிறுவனத்தின் எண்ணெய் சுத்திகரிப்புத்



தொழிற்சாலை. இப்போது விரைவிலே அதற்கு அடிக்கல் நாட்டப்பட இருக்கிறது. 2001ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்திற்குள்ளாக முடிவடையும் என்கின்ற உறுதியோடு அடிக்கல் நாட்டப்பட இருக்கிறது.

142.65 கோடி ரூபாய் செலவில் சேலத்தில் சிஸ்கால் நிறுவனத்தின் மெட்டல் கோக் தயாரிக்கும் தொழிற்சாலை.

44.75 கோடி ரூபாய் செலவில் தரமணியில் கலாடாரிம்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் அலுமினியத் தொழிற்சாலை.

200 கோடி ரூபாய் செலவில் தரமணியில் வான் ஓம்மரன் டேங்க் டெர்மினல் நிறுவனத்தின், கெமிக்கல் சேமிப்பு டேங்க் தயாரிக்கும் தொழிற்சாலை.

### *எண்ணூரில் எல்.என்.ஜி. எரிவாயு மின்திட்டம்*

எண்ணூரில் 2,000 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் எல்.என்.ஜி. எரிவாயு மின்திட்டம்.

ஜெயங்கொண்டத்தில் 5,500 கோடி ரூபாய் முதலீட்டில் ஆண்டுக்கு 4 மில்லியன் டன் நிலக்கரியை வெட்டி எடுத்து, 500 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் அனல்மின் திட்டம். அதற்கான நிலம் கையகப்படுத்துகின்ற பணி வெகு வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மொத்த முதலீடு 22,946 கோடி ரூபாய். நேரடி வேலைவாய்ப்பு 11,000 பேருக்கு. மறைமுக வேலைவாய்ப்பு ஒன்றரை இலட்சம் பேருக்கு கிடைக்கும்.

### *தொழில் முதலீட்டில் தமிழகம் முதலிடம்*

மே 1996இல் தொழில் நிறுவனங்களில் செய்யப்பட்டிருந்த முதலீடுகள் அடிப்படையில் தமிழகம் அகில இந்தியாவில் தொழில் வளர்ச்சியில் ஐந்தாம் இடத்தில் இருந்தது. 1996இல் கழக அரசு மீண்டும் அமைந்து தொழில் வளர்ச்சிக்கு அளித்து வரும் ஊக்கம் காரணமாக, 1999 ஜனவரி வரையில் முதலீடுகள் அடிப்படையில் தமிழகம் தொழில் வளர்ச்சியில் இரண்டாம் இடத்திற்கு முன்னேற்றம் கண்டுள்ளது. அண்மையில் 1991 மே மாதத்திலிருந்து 1999 ஜனவரி மாதம் வரை இந்திய மாநிலங்களில் செய்யப்பட்டுள்ள முதலீடுகளை எல்லாம் தொகுத்து, 1999 ஏப்ரல் மாதத்தில் இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம் C.M.I.E.- Centre for Monetoring Indian Economy அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது. அந்த அறிக்கை விவரங்களின்படி தமிழ்நாடு தொழில் முதலீடுகளின் அடிப்படையில் முதல் இடத்தைப் பெற்றுள்ளது. அகில இந்தியாவில் மொத்த தொழில் முதலீடு ஒதுக்கீடு 1999 ஜனவரி வரையில் 13 இலட்சத்து 15 ஆயிரத்து 17 கோடி. 13 இலட்சம் கோடி. அந்த 13 இலட்சம் கோடியில் ஆந்திராவினுடைய பங்கு, அவர்கள் அங்கே செய்துள்ள முதலீடு 1,06,364 கோடி



– 8.09 சதவிகிதம்; கர்நாடகத்தில் 1,07,703 கோடி – 8.19 சதவிகிதம்; ஒரிசாவில் 1,14,033 கோடி – 8.67 சதவிகிதம்; குஜராத்தில் 1,46,703 கோடி – 11.16 சதவிகிதம்; மராட்டியத்தில் 1,51,058 கோடி – 11.49 சதவிகிதம்; தமிழ்நாடு 1,51,187 கோடி – 11.50 சதவிகிதம். இந்தக் குதிரைப் பந்தயத்தில் மூக்கை நீட்டுகிற மாதிரி நீட்டி, முதலிடத்திற்கு வந்திருக்கிறோம். சென்ற ஆண்டு மராட்டியம் நம்மைவிட .02 சதவிகிதம் அதிகமாக இருந்தது. இப்பொழுது நாம் மராட்டியத்தை விட .01 சதவிகிதம் அதிகமாக இருக்கிறோம். முதலீட்டில் மாத்திரமல்லாமல், ஏற்றுமதி தொழிலிலும் கூட நாம் எந்த இடத்தில் இருக்கிறோம்.

### உலகப் பொருளாதாரத்தோடு இணைந்துள்ள தகவல் தொழில் நுட்பம்

எழுபதுகளிலே வெறும் கருத்துப் படிவமாக மாத்திரமே கருதப்பட்டிருந்த தகவல் தொழில் நுட்பம் இன்றைக்கு எங்கும் நிறைந்த பொருளாக ஆகிவிட்டது. தொழில் வளர்ச்சியின் ஒவ்வொரு பிரிவும் தகவல் தொழில் நுட்பத்தால் பின்னிப் பிணைக்கப்பட்டு, வளர்க்கப்பட்டு வருகின்றது. உலகப் பொருளாதாரத்தோடு இணைந்து விட்ட ஒன்றாக தகவல் தொழில்நுட்பம் உருவாகி வருகிறது. தகவல் தொழில் நுட்பம் இல்லாத எந்தத் தொழிலும் முன்னேற்றம் அடையாத பழைய தொழிலாகவே இப்பொழுது கருதப்படுகிறது.

21ம் நூற்றாண்டில் உலகப் பொருளாதாரத்தின் உந்து சக்தியாக தகவல் தொழில்நுட்பம் விளங்கப் போகிறது. தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்காகவும், அதன் பயன்கள் கிராமப் பகுதிகளிலும் ஊடுருவி சாமான்யர்களுக்கும் சென்றடைய வேண்டும். தமிழ்நாட்டிலே ஆண்டுதோறும் படித்து வெளியே வரும் 23 ஆயிரம் பொறியியல் பட்டதாரிகளில், 13 ஆயிரம் பட்டதாரிகளுக்கு மேலாக தகவல் தொழில் நுட்பம் மற்றும் அதன் தொடர்பான கல்வியைப் பெற்று இப்பொழுது வெளியே வந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிக எண்ணிக்கையிலான மென்பொருள் பொறியியல் வல்லுநர்கள் வேலை செய்து வருகிறார்கள். இன்றைய அளவில் தமிழகத்தில் 22 ஆயிரம் பேருக்கு மேலாக மென்பொருளை வாழ்க்கைத் தொழிலாகக் (Software Professionals) கொண்டிருக்கின்றார்கள்.

தகவல் தொழில் நுட்பத்திற்கென்றே, சென்னை தலைமைச் செயலகத்தில் தனியாக ஒரு துறை, ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவர் தலைமையின் கீழ் 5.10.1998 முதல் உருவாக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

தமிழ்நாட்டில் தகவல் தொழில் நுட்பம் வேகமாக வளர்ச்சி அடையவும், அதற்கான அணுகுமுறைகளை உருவாக்கிச் செயல்படுத்தவும், முதலமைச்சர் தலைமையிலே I.T. Task Force ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது.

அரசு தகவல் தொழில் நுட்பத்திற்கென்று, தனியே கொள்கை (I.T. Policy) ஒன்றை உருவாக்கி அறிவித்துள்ளது. இக்கொள்கை, தகவல் தொழில்நுட்பத் தொழில் முனைவோர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

பழைய மாமல்லபுரம் சாலையில் சிறுசேரி என்ற இடத்தில் 1,000 ஏக்கர் நிலப்பரப்பில் மிகப்பெரிய வன்பொருள் (Hardware) மற்றும் மென்பொருள் (Software) வளர்ச்சிக்கு பன்னாட்டுத் தரத்தில் தகவல் தொழில் நுட்பப் பூங்கா ஒன்றை சிப்காட் நிறுவனம் உருவாக்கிக் கொண்டு வருகின்றது. சென்னையில் தரமணியிலிருந்து பழைய மாமல்லபுரச் சாலை வரையிலான பகுதி, தகவல் தொழில் நுட்ப நெடுஞ்சாலையாக (I.T.Super Highway) விரைந்து முன்னேறி வருகின்றது.

சமீபத்தில் சோழிங்கநல்லூரில் டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் என்னும் நிறுவனம், ஆசியாவின் மிகப் பெரிய மென்பொருள் மையத்தைத் தொடங்கியுள்ளது. அதைத் தொடர்ந்து மற்ற மிகப் பெரிய நிறுவனங்களான விப்ரோ, இன்போசிஸ் மற்றும் போலாரிஸ் ஆகியவை தங்களது மையங்களை அந்தப் பகுதியிலே நிறுவி வருகின்றன.

★ ★ ★

# கலைஞர் ஆட்சியில் கல்வியில் கவின்மிகு வளர்ச்சி

மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்

உயிர்கள் எய்தியுள்ள பொறிகளுள் காட்சிப் புலனுக்கு ஏதுவாகும் கண்களே சிறப்புடையன. மானுடர்க்கோ எனில், காட்சிப் புலனாகும் எண்ணையும் எழுத்தையும் பயில்வதன் மூலம் அறிவை எந்த அளவும் பெருக்கிக் கொள்வதற்குரிய கல்வியைப் பெறும் திறம் பெற்றவராதலின் கண்களே பலப்பல மடங்குச் சிறப்புடையவாம்.

எண்ணும், எழுத்தும் கண்ணென உணர்த்திய வள்ளுவர், அவற்றை அறியும் தேர்ச்சி இல்லாத கண்கள். முகத்திரண்டு புண்கள் என்றார். கல்வி அறிவு பெறும் வாயில்களையே அறியாத நிலை, அவர்களை அறியாமையில் ஆழ்த்துவதால் எதிர்கொள்ள நேரும் துன்பமும் துயரமும் கண்களே புண்களாக இருக்க நேரிடில் எய்தும் துன்பத்தை நிகர்த்தது என்று வள்ளுவர் எச்சரிக்கின்றார்.

கல்வி மிக விரிந்தது. பலவகைப்பட்டது. ஆர்வமிக்கவரின் அயராத முயற்சியினாலும் அடையத் தக்கது சிறிதளவே. ஆனாலும் அந்தக் கல்விதான் அவரவர் அறிவைத் தெளிவுபடுத்தி வாழும் வழி அமைக்கிறது.

*"சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ*
*நன்றின்பால் உய்ப்ப தறிவு"*

- என்னும் வள்ளுவர் வாய் மொழிக்கேற்ப மனிதன் தீமையின் பாதையில் செல்வதனை விலக்கி, நல்வழியில் செலுத்துகின்ற அந்த அறிவை வளர்த்துக்கொள்ளக் 'கல்வி' இன்றியமையாததாகிறது.

ஒரு சமுதாயம் முன்னேற, நாடு வளம் பெற, மக்கள் நல்லவற்றை நாடி இனிய சொல்லினராக தன்னலத்தையே கருதிப் பொது நலத்திற்குக் கேடு செய்யாதிருக்க, ஒப்புரவு தழைக்க, சமய நல்லிணக்கம், சாதி வேற்றுமை புறக்கணிப்பு, தீண்டாமை ஒழிப்பு, பெண்ணடிமை நிலை மறுப்பு, சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் ஆகியவற்றின் பயனென வளர்ந்த ஜனநாயக உரிமை காத்தல் ஆகியவை ஒரு நாட்டு மக்களின் கல்வித் தகுதியையே அடிப்படை யாகக் கொண்டுள்ளன.

குறிப்பாக ஜனநாயகக் குடியாட்சி செம்மையுற, அனைவரும் கல்வி கற்றவராக வேண்டும். சிறார் எவரும் கல்வி பெறாத நிலை இருத்தல்



கூடாது. இந்திய அரசியல் சட்டமும் இதனை வற்புறுத்துகிறது. ஆயினும் அந்தக் குறிக்கோள் எய்தாத நிலையே நீடித்தது. அண்மையில் தமிழக அரசு சிறார் அனைவரும் கற்கச் செய்வதை வலியுறுத்தக் கட்டாயக் கல்விச் சட்டத்தை நிறைவேற்றியுள்ளது. **கலைஞரின்** கழக அரசு அதனை உடனடியாகச் செயற்படுத்தும் கடமையையும் மேற்கொண்டுள்ளது.

கல்வித் துறையில் கழக அரசு கடந்த மூன்றாண்டுகளில் மகத்தான சாதனைகள் புரிந்துள்ளது. அவைகளுள் சிறப்பான சிலவற்றை இக்கட்டுரையில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

## தொடக்கப்பள்ளிகள்

தமிழ்நாட்டில் அனைத்துச் சிறாரும் கட்டாயமாகக் கல்வி கற்கச் செய்யும் குறிக்கோளை எய்த, ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்குள் தொடக்கப் பள்ளிகள் இல்லாத கிராமங்களே இல்லை என்ற நிலையை உருவாக்க, இவ்வரசு முனைப்புடன் செயல்பட்டு கடந்த மூன்று ஆண்டுகளில் 553 புதிய தொடக்கப் பள்ளிகள் துவங்கியுள்ளது. இந்த ஆண்டு சுமார் 400 தொடக்கப் பள்ளிகள் துவங்கப் படுவதையும் சேர்த்து, சுமார் 953 புதிய தொடக்கப் பள்ளிகள் இந்த மூன்று ஆண்டுகால ஆட்சியில் உருகொண்டுள்ளன. கடந்த ஆட்சியின்போது ஐந்து ஆண்டுகளில் 531 தொடக்கப் பள்ளிகள் மட்டுமே துவங்கப்பட்டது இங்கே கருதத்தக்கது.

## தாய்மொழியில் கல்வி

மழலையர் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்குத் தாய்மொழியில் கல்வி வழங்கச் செய்வதுதான் சிறப்புடைத்து என்பதை உணர்ந்த அரசு, அதனை நடைமுறைப் படுத்திட, மொழிப் பாடங்கள் தவிர்த்து மற்ற 3 பாடங்களுள் இரண்டைத் தமிழிலேயே நடத்த வேண்டுமென்றும், அப்படி நடத்த முன்வரும் பள்ளிகளுக்கு மட்டுமே ஒப்புதல் வழங்கப்படும் என்றும், அப்படி ஒப்புதல் பெறாத பள்ளிகளில் படித்தவர்கள் தேர்வு வைத்தே அரசுப் பள்ளிகளில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்றும் 13.1.99 அன்று ஆணை வெளியிட்டுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகால ஆட்சியில் 196 தொடக்கப் பள்ளிகளே நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பபட்டன. ஆனால் கழக ஆட்சியில் இதுவரை 262 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டுள்ளன. வரும் ஆண்டில் 200 தொடக்கப்பள்ளிகள் உயர்த்தப்படுவதைக் கருத்தில் கொண்டால் 462 பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தப் பட்டுள்ளன.

நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துவதில் கடந்த ஆட்சியில் 134 பள்ளிகளே உயர்த்தப்பட்ட நிலையில், இந்த ஆட்சியில் 234 பள்ளிகள் உயர்த்தப் பட்டுள்ளதுடன், வரும் ஆண்டில் 80 பள்ளிகள் உயர்த்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சியில் 80 உயர் நிலைப் பள்ளிகளே மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டன. கழக ஆட்சியில் 196 பள்ளிகள் மேல் நிலைப் பள்ளிகளாக உயர்த்தப் பட்டுள்ளன. வரும் ஆண்டில் உயர்த்தப்படும் 50 உயர்நிலைப் பள்ளிகளையும் சேர்த்தால் 246 மேல்நிலைப் பள்ளிகளாக உயரும். இதனால் கடந்த ஆட்சியை விட மூன்று மடங்குச் சாதனை படைத்துள்ளது தெளிவாகும்.

## கணினிப் பயிற்சி

கணிப்பொறிப் பயிற்சியின் அவசியத்தை உணர்ந்த இவ்வரசு **முதலமைச்சர்** ஆணையின்படி, அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினி கல்வி வழங்கும் திட்டத்தை அறிமுகப் படுத்தி, பள்ளிக்கு 40 மாணவர்கள் வீதம் 48,000 மாணவர்களுக்கு உடனடியாகக் கணிப்பொறிப் பயிற்சி வழங்கிட இந்த ஆண்டே நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

## ஆசிரியர்கள் நியமனம்

கடந்த ஆட்சியில் பள்ளிகட்கு வேண்டிய ஆசிரியர் நியமனம் முறையாகக் காலத்தில் செய்யப் படவில்லை என்பது நாடறிந்த ஒன்று. இந்த ஆட்சியில் பணியில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு மாவட்ட வாரியாக, வேலை வாய்ப்பு அலுவலகப் பட்டியல் முன்னுரிமையின்படி இன்றுவரை 31,170 இடைநிலை ஆசிரியர்களை நியமனம் செய்துள்ளது. தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் 1,996 பட்டதாரி ஆசிரியர்களையும், 2,506 முதுகலை ஆசிரியர்களையும், 828 கல்லூரி ஆசிரியர்களையும், 682 உடற்கல்வி ஆசிரியர்களையும், 108 ஓவிய ஆசிரியர்களையும், 100 தையல் ஆசிரியர்களையும், 68 இசை ஆசிரியர்களையும் மொத்தத்தில் 37,458 ஆசிரியர்களை எவரும் குறைகாண இடமின்றி நியமித்து ஒரு சாதனை படைத்துள்ளது.

இந்த அரசு பொறுப்பேற்றவுடன் 1996ஆம் ஆண்டு ஆறாவது ஊதியக்குழுவை நியமித்து, மத்திய அரசு அறிவித்த புதிய ஊதிய விகிதங்களை அனைத்து அரசு ஊழியர்களுக்கும் வழங்கியது. இருந்தபோதிலும் ஆசிரியர்களுக்கு மத்திய அரசு ஊதிய விகிதங்களை அப்படியே செயற்படுத்த முடியாத நிலையில், ஒரு நபர் குழுவை நியமித்து அதன் பரிந்துரைகளை ஏற்று அவர்களுக்கும் உயர்த்திய ஊதிய விகிதத்தை முதல்வர் **கலைஞர்** அறிவித்து, ஆசிரியர்களுக்கு இந்தியாவிலேயே உயர்ந்த ஊதிய விகிதத்தை வழங்கியது கழக அரசுதான். இடைநிலை ஆசிரியர் ஊதிய விகிதம் 1200-30-1560-40-2040 என்பதிலிருந்து 4500-125-7000 என்பதாக உயர்த்தப்பட்டது. பட்டதாரி ஆசிரியர் ஊதிய விகிதம் 1400-40-1600-50-2300-60-2600 என்பதிலிருந்து 5500-175-9000 எனவும், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் ஊதிய விகிதம் 1820-60-2300-75-3200 என்பதிலிருந்து 6500-



200-10500 எனவும் உயர்த்தப் பட்டுள்ளது. உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு ஊதிய விகிதத்துடன் தனி ஊதியம் ரூ.500ம், மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்குத் தனி ஊதியமாக ரூ.600ம் வழங்கியுள்ளது. மேலும் அவ்வப்போது மத்திய அரசால் அறிவிக்கப்படும் அகவிலைப்படி உயர்வும் ஆசிரியர்களுக்கும், பிற அலுவலர்கட்கும் உடனுக்குடன் வழங்கப்படுகிறது.

பள்ளிகளில் பணிமூப்பு அடிப்படையில் கடந்த மூன்று ஆண்டுகளில் 2001 ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர். தலைமை ஆசிரியர்களாகப் பணிபுரிந்த 228 பேர் மாவட்டக் கல்வி அதிகாரி களாகவும், மாவட்ட கல்வி அதிகாரிகளாகப் பணிபுரிந்த 101 பேர் முதன்மைக் கல்வி அதிகாரி களாகவும் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

## அடிப்படை வசதிகள்

கடந்த மூன்றாண்டுகளில் 6,466 பள்ளிகளுக்கு வகுப்பறைக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. 541 பள்ளிகளில் கழிவறை வசதி செய்து தரப்பட்டுள்ளது. மேலும் 18,750 பள்ளிகளுக்கு மின்வசதி செய்துள்ளதுடன், 1,000 பள்ளி களுக்கு ஆய்வகக்கலன்களும், 7,847 பள்ளிகளுக்கு விளையாட்டுப் பொருட்களும் வாங்கி வழங்கப் பட்டுள்ளன. மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டத்தின் சீரிய பயனை உணர்ந்த இவ்வரசு தருமபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் ஆகிய நான்கு மாவட்டங் களில் மட்டும் செயல்பட்டு வந்ததை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், பெரம்பலூர் ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்திச் செயல்படுத்துகிறது. இத்திட்டத்தின் மூலம் 812 பள்ளிகளுக்கு வகுப்பறைகள் கட்டிக்கொடுக்கப் பட்டுள்ளது.

மூன்று ஆண்டுகளில் பள்ளிக் கல்வித்துறையில் உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.235 இலட்சம் மதிப்புள்ள புத்தகங்கள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன. தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு ரூ.150 இலட்சம் செலவில் (1560 பள்ளிகளுக்கு) ஒவ்வொரு பள்ளிக்கும் 560 புத்தகங்கள் வீதம் வழங்கப் பட்டுள்ளன. 1,112 தொடக்கப் பள்ளிகளுக்கு வானொலிப் பெட்டிகள் (Two - in - one) வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

## இலவசப் பாடப்புத்தகங்கள்

இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு ஒன்று முதல் ஐந்து வரை பயிலும் மாணவ மாணவியர் அனைவ ருக்கும் இலவசப் பாடப்புத்தகங்கள் வழங்க ஆணையிட்டுள்ளது. பாடப் புத்தகங்கள் பற்றாக்குறை இருந்த நிலையைப் போக்கி, காலதாமதமா வதையும் தவிர்த்து முனைப்புடன் செயல்பட்டு பள்ளிகள் திறக்கப்படும் முன்னர் மே மாத இறுதியிலேயே அனைத்துப் பாடப்புத்தகங்களும் அனைத்துப் பள்ளிகட்கும் கிடைக்கத் திட்டமிட்டு நிறைவேற்றி வருகிறது.

மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டத்தின் மூலம் தொடக்கப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களில் திறமை மிக்கவர் களைக் கொண்டு, தொடக்கப் பள்ளி வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் கற்பதற்கு ஏற்றவகையில் அமைந்த பாடப்புத்தகங்கள் தயாரிக்கும் பணி சிறப்பாகச் செய்து முடிக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் அந்த வகுப்புக்களில் படிக்கும்

மாணவர்களின் அறிவுத் திறன் வளர்ப்பதற்கு ஏற்ற பாடப் புத்தகங்கள் வழங்க வழி செய்யப் பட்டுள்ளது. இம்முறையில் 98-99ஆம் ஆண்டில் நான்காம் வகுப்பிற்கு அனைத்துப் பாட புத்தகங்களும் வழங்கியதுடன் 1999-2000ஆம் ஆண்டில் ஐந்தாம் வகுப்பிற்கான அனைத்துப் பாடப் புத்தகங்களும் வழங்கியதுடன் 1999-2000ஆம் ஆண்டில் ஐந்தாம் வகுப்பிற்கான அனைத்துப் பாடப் புத்தகங்களும் சிறந்த முறையில் அச்சிடப்பட்டுவழங்கப்பட உள்ளது.

## ஆசிரியர் பயிற்சி

ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் கீழ்ப் பணிபுரிபவர்கள் பள்ளிக் கல்வித் துறையைச் சார்ந்தவர்கள் என்பதால், அடிக்கடிப் பணி மாற்றம் பெறுவதால் மாவட்ட ஆசிரியர் பயிற்சி மையங்களின் ஆசிரியர்கள் நிரந்தரமாகச் செயல்பட இயலாத நிலை இருந்து வந்தது. ஆசிரியர் பயிற்சியின் திறன் வளர்வதற்கும், ஆசிரியர்கள் முழு ஈடுபாடு கொள்வதற்கும் ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் ஒரு தனி அலகாக ஏற்கப்பட்டு அதில் பணிபுரிவோர் அத்துறையிலேயே பணியாற்றுவதற்கும், அத்துறைக்கு வேண்டிய சிறப்புக் கல்வித் தகுதி உள்ளவர்களை அத்துறைக் கெனவே நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிதாக உருவான 8 மாவட்டங்களிலும் ஆசிரியர் பயிற்சி மையங்கள் (DIET) தொடங்கப் பட்டுள்ளன. ஆசிரியர்களின் கல்வித் தரத்தை உயர்த்தவும், களிப்பூட்டும் முறையில் மாணவர்கட்குக் கல்வி வழங்கவும் உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டு, குழந்தைகளுக்கு ''விளையாட்டாகக் கல்வி'' என்ற முறையைக் கைக்கொள்ளச் செய்து வருகிறது. பாடச்சுமையைக் குறைக்க உயர்மட்டக் குழு ஒன்று நியமித்து, பாடப் புத்தங்களில் காணப்பட்ட மிகைப்பகுதிகளைக் குறைத்து வழங்கப்பட்டுள்ளன. மத நல்லிணக்கம், மானிட நேயம், தீண்டாமை ஒழிப்பு, சகோதரத்துவம் போன்ற சிறந்த கொள்கைகளை வலியுறுத்திய நாட்டுத் தலைவர்கள், அறிஞர்கள், சான்றோர்கள் கருத்துகளைப் பாடப்புத்தகங்களில் ஆங்காங்கே இடம்பெறச் செய்யப் பட்டுள்ளது. மெட்ரிக் பள்ளிகளின் பள்ளியிறுதி வகுப்புப் பாடப் புத்தகங்களின் விலை மிகுதியைக் கருதி மெட்ரிக் இறுதி வகுப்புக்கான பாடப் புத்தகங்களை அரசே அச்சிட்டுக் குறைந்த விலையில் வழங்கி வருகிறது.

பணியிலிருக்கும்போதே இறந்த அரசுக் கல்வித்துறை ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களின் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு முறையாக வழங்காத நிலையை மாற்றி அவர்தம் குடும்பத்தில் உரிமை வழியினரின் கல்வித் தகுதியின் அடிப்படையில் 824 பேருக்குப் பணிகள் வழங்கப் பட்டுள்ளன.

1996ஆம் ஆண்டு முதல் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் மூலம் அந்தந்த மாவட்டத்திலுள்ள பல்வேறு பள்ளிகளுக்குத் தேவையான நிலம், கட்டடம், தொலைக்காட்சிப் பெட்டிகள், வானொலிப் பெட்டிகள், மேசை, நாற்காலி, புத்தகங்கள், கணிப் பொறி, விளையாட்டுப் பொருள்கள் முதலானவை பொதுமக்களிடம் நன்கொடையாகப் பெறப்பட்டு அந்தந்தப் பள்ளிகளுக்கு வழங்கப் படுகிறது. இது பொது மக்கள் பங்கேற்கும் திட்டமாகும். இதன் மூலம் 97-98ஆம் ஆண்டு ரூ.39.68 கோடி மதிப்புள்ள பொருட்களும், 98-99ஆம் ஆண்டு ரூ.46.57 கோடி மதிப்புள்ள பொருட்களும் ஆக மொத்தம் ரூ.86.25 கோடி மதிப்புள்ள பொருட்கள் பெறப்பட்டு அவ்வப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டது ஒரு பயன்மிகுச் சாதனையாகும்.

தேர்வுத்துறையின் பணியில் குறை ஏற்படாதவாறு ஒழுங்கு படுத்தும்வழிகாண உயர்மட்டக்குழு ஒன்று அமைக்கப் பட்டு அதன் பரிந்துரையின் பேரில் தேர்வு நடைமுறையில் சீர்திருத்தங்கள் கொண்டுவரப் பட்டுள்ளன. தேர்வு காலத்தில், ஆங்காங்குக் கேள்வித் தாள்களைப் பாதுகாத்து வைக்கும் மையங்களில் இரட்டைப் பூட்டு முறை நடைமுறைப்படுத்தப்பட்டு, அரசுத் தேர்வுகளின்போது கேள்வித் தாள் வெளிப்படும் வாய்ப்பு தவிர்க்கப்பட்டுச் செவ்வனே நடைபெறுகின்றது. போலிச் சான்றிதழ்கள் தயாரித்து வழங்கும் முறைகேட்டை ஒழிக்க, அரசுத் தேர்வுகளில் வழங்கும் சான்றிதழ்களில் முப்பரிமாண வில்லை (Hologram) பதித்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரசுத் தேர்வுத் துறையில் பணியாற்றுபவர்களுக்குப் போதிய உயர்வு இல்லாததைக் கருத்தில் கொண்டு, தேர்வுத் துறையில் செயலர் நிலையில் உள்ளவர்களுள் 12 பேருக்குத் துணை இயக்குநர் பதவி உயர்வு வழங்கத் தனி ஆணை வழங்கிப் பதவி உயர்வுக்கு வழி செய்யப்பட்டுள்ளது.

## நூலகங்கள்

பெருகிவரும் நூலகங்களின் தேவைக்கேற்ப, கிராம அளவில் 523 ஊர்ப்புற நூலகங்கள் திறக்கப்பட்டுப் பொதுமக்கள் பயன்படுத்தும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த மூன்று ஆண்டுகளில் ரூ.9 கோடியே 13 இலட்சத்திற்குரிய நூல்கள் வாங்கி நூலகங்கட்கு வழங்கப் பட்டுள்ளது. கன்னிமாரா நூலகத்தின் சிறப்புத்தகுதியைக் காத்திட அந்நூலகத்தின் 100-வது ஆண்டு நிறைவை முன்னிட்டு ரூ.180 இலட்சம் செலவில் மூன்று மாடிக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. சுமார் 50 இலட்சம் செலவில் மூலக் கட்டிடத்தின் கலைச்சிறப்புக் கூறுகள் கெடாமல் பாதுகாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நூலகங்களுக்கான 686 நூலகர்கள்/ பணியாளர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். பல ஆண்டுகளாக உள்ளாட்சி அமைப்பு களிலிருந்து சரிவர வசூலிக்கப் படாமல் நிலுவையில் இருந்த நூலக வரி, அரசு எடுத்த துரித நடவடிக்கை

மூலம் கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.38.55 கோடி வசூலாகியுள்ளது.

சுமார் ஒரு கோடி ரூபாய் செலவில் சென்னை டென்னிஸ் விளையாட்டு அரங்கில் மின்னொளி வசதி செய்யப்பட்டுள்ளது. பன்னாட்டுக் கைப்பந்து மேம்பாட்டு மையம் சென்னை, நேரு விளையாட்டு அரங்கில் நிறுவப் பட்டு, உலகத் தரம் வாய்ந்த விளையாட்டு வீரர்கள் உருவாக்கப் படுகின்றனர். விளையாட்டு வீரர்களுக்கான முதலமைச்சர் விருது மூன்று பேருக்கு ரூபாய் ஒரு இலட்சம் பரிசுத்தொகையுடன் வழங்கப்படுகிறது. தேசிய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுத் தொகை உயர்த்தப்பட்டு, தங்கப் பதக்கம் பெற்றவர்களுக்கு ரூ.50,000-மும் வெள்ளிப் பதக்கம் பெற்றவர்களுக்கு ரூ.30,000-மும், வெண்கலப் பதக்கம் பெற்றவர்களுக்கு ரூ.10,000-மும் வழங்கப்படுகிறது.

பெற்றோர் ஆசிரியர் கழகம், பள்ளிகளில் கல்வித்தரம் வளரச் செய்வதற்கு உரிய பணிகளை ஆற்றி வருகிறது. முன்னர் சுமார் 15,000 பள்ளிகளில் பெற்றோர் ஆசிரியர் கழகம் அமைந்துள்ளது. அனைத்துப் பள்ளிகளிலும் இந்த அமைப்பை ஏற்படுத்துவதன் மூலம் பள்ளி சிறப்புடன் செயல்பட ஊக்கப்படுத்தப்படுகிறது. தொழிற் கல்வியில் சேர்வதற்குரிய நுழைவுத் தேர்வுக்குச் செல்லும் மாணவர்கட்கு உதவ, இலவசப் பயிற்சி வகுப்புகளை ஒவ்வொரு ஆண்டும் 83 இடங்களில் பெற்றோர் ஆசிரியர் கழகம் நடத்தி வருகிறது. இதனால் ஆண்டுக்குச் சுமார் 13,700 ஏழை மாணவர்கள் பயன்பெறுகின்றனர்.

திருச்சியில் ரூ.128 இலட்சத்தில் கோளரங்கம் கட்டி முடிக்கப்பட்டு, அதற்கான ரூ.150 இலட்சம் மதிப்புள்ள ஒளிபரப்பும் கருவிகள் ஜப்பான் அரசின் நன்கொடையாகப் பெறப்பட்டு நிறுவப்பட்டுள்ளது. இதன் மூலம் விண்வெளியில் உலவும் கோள்களின் இயக்கம், நட்சத்திரங்களின் தோற்றமும் அழிவும்; விண்ணில் தோன்றும் சிறப்பு நிகழ்ச்சிகளான சூரிய கிரகணம், சந்திர கிரகணம், எரிகற்கள் வீழ்தல், வால்நட்சத்திரம் போன்றவற்றைப் பொதுமக்கள் கண்டு தெளியும் வாய்ப்பைப் பெறுவர்.

> மத ஓடத்திலேறிய மாந்தரே - பலி
> பீடத்திலே சாய்ந்தீரே ! - பாரதிதாசன்

ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மாணவர்களின் முன்னேற்றத்தில் இவ்வரசு சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்று வேலைவாய்ப் பகத்தில் பதிவு செய்திருந்த ஆதிதிராவிட மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்த அனைவருக்கும் வேலைவாய்ப்பு அளித்துவிட்ட நிலையில், அவர்களுக்குரிய ஒதுக்கீடு இடங்களை நிரப்புவதற்கு மேற்கொண்டு தேவைப்பட்ட 1,152 பணியிடங்களுக்கு, அவ்வினம் சார்ந்த பட்டதாரி ஆசிரியர் தகுதி யுடையவர்களைக் கொண்டு இதற்கெனத் தேவைப்படும் குறுகிய காலப் பயிற்சி வழங்கி நிரப்பப் பட்டது. அவ்வினத்தில் இடைநிலை ஆசிரியர் கிடைக்காத குறையைப் போக்க 17 மாவட்ட ஆசிரியர் பயிற்சி மையங்களில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கென்றே ஒரு தனிப் பிரிவாகப் பயிற்சி வகுப்பு ஏற்படுத்தி 50 மாணவர்கள் வீதம் 850 மாணவ மாணவியர்களுக்குக் கூடுதலாகப் பயிற்சி அளிக்கப் படுகிறது. கல்லூரி ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதில் ஏற்பட்ட பின்னடைவு இடங்கட்கென ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினர் 100 பேரைத் தனியாகத் தெரிவு செய்ய ஆணையிடப் பட்டுள்ளது.

கடந்த ஆட்சியில் நிகழ்ந்த முறைகேடுகளின் விளைவாக நீதிமன்றத் தீர்ப்பின்படி மூடப்பட்ட 219 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் சேர்ந்து பாதிக்கப்பட்ட மாணவர் களுக்கு உதவிடும் மாற்று வழிகாண அரசு முயற்சி செய்தது. அதற்காக ஒரு குழுவை ஆந்திர மாநிலத்திற்கு அனுப்பி அங்கும் அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டபோது நடைமுறைப் படுத்தப்பட்ட முறையை அறிந்து வரச்செய்தது. ஆந்திராவில் மேற்கொண்ட முயற்சிகளும் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பால் நிறைவேற்ற முடியாத நிலையே நீடிப்பதாக அறியப்பட்டது. பல வழிமுறைகளைப் பரிசீலித்தபின் முடிவாக 21 மாவட்ட ஆசிரியர் பயிற்சி மையங்களிலும், 8 அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களிலும் சேர்க்கப்படும் மாணவர்களில் 30 விழுக்காடு இடங்களைப் பாதிக்கப் பட்ட அந்த மாணவர்களுக்கென ஒதுக்கி வழங்கியும் அவர்கள் வயது வரம்பை 5 ஆண்டுகள் தளர்த்தியும் ஆணையிட்டு இவ்வரசு அவர்கட்கு ஆசிரியர் பயிற்சி பெறும் வாய்ப்பளித்துள்ளது.

## தொழில்நுட்பக் கல்வி

சுயநிதிப் பொறியியல் கல்லூரிகளில் இரண்டாம் ஆண்டில் பாடங்கள் ஒதுக்குவதற்கென்று ஒரு பெருந்தொகையை மாணவர் களிடம் பெற்றுவந்த முறைக்கு இடமில்லாமற்செய்ய எண்ணி, பொறியியல் படிப்பில் சேரும் முதலாம் ஆண்டே மாணவர்கள் மதிப்பெண் தகுதி வரிசையில் இடஒதுக்கீடு முறைப்படி, பயிலும் கல்லூரியினையும் பாடப்பிரிவையும் தேர்ந்தெடுக்கும் வகையில், ஒற்றைச் சாளர முறையினை (Single Window System) 1997-98ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தி வருகிறது. இந்த ஒற்றைச் சாளர முறை பெற்றோர்களாலும் பல துறையினராலும் பாராட்டப் பட்டுள்ளது. மற்ற மாநிலங்களும் இதனை முன்னோடியாகக் கொண்டு செயல்படுத்த விழைகின்றன.

இதனால் ஏழை மாணவர்கள் மிகுந்த பயனடைந்து வருகின்றனர். கிராமப்புறப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்குப் பொறியியல் கல்லூரிகளில் இடம் கிடைக்க ஏதுவாக 15 விழுக்காடு இடம் ஒதுக்கப்பட்டுப் பின்தங்கிய கிராமப்புற மாணவர்கள் பயன் அடைந்து வருகின்றனர். 1998-99 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பல்தொழில் நுட்பப் பயிலகங்களிலும் மாணவர் சேர்க்கையில் ஒற்றைச் சாளர முறை நடைமுறைப்படுத்தப்படுகிறது.

பொறியியல் கல்லூரிகளில் பல ஆண்டுகளாகப் பதவி உயர்வு வழங்கப்படாத நிலையை உணர்ந்து பல நிலைகளில் 65 பேர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

பொறியியல் தொழிற்கல்வி உள்ளிட்ட மேற்படிப்பில் சேருபவர்கள் மாநிலத்தில் முதல் பத்து இடங்களில் வரும் பட்டதாரி இல்லாத குடும்பத்தைச் சார்ந்த மாணவ மாணவியருக்கு, கல்விக்கான அனைத்துச் செலவையும் அரசே ஏற்றுக் கொண்டுள்ளது. மேலும் பத்தாவது மற்றும் பன்னிரண்டாவது வகுப்புத் தேர்வு மதிப்பெண்களில் மாநிலத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவ மாணவியருக்கும், மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவ மாணவியருக்கும் மேற் படிப்புக்கான முழுச் செலவையும் அரசே ஏற்றுக் கொண்டுள்ளது. இதனால் 97-98ஆம் ஆண்டு 235 மாணவர்களுக்கும், 98-99ஆம் ஆண்டு 227 மாணவர்களும் பயனடைந் துள்ளனர்.

கடந்த மூன்றாண்டுகளில் பொறியியல் கல்லூரிகளில் மாணவர்கள் சேர விரும்பும் ஆர்வத்தையும், வேலைவாய்ப்பு வளர்ச்சியையும் கருதி, 43 புதிய சுயநிதிப் பொறியியல் கல்லூரி களும், 59 பல்தொழில் நுட்பப் பயிலகங்களும், 67 கலை அறிவியல் கல்லூரிகளும் துவங்குவதற்கு ஏற்பளிக்கப்பட்டு அவை தொடங்கப் பட்டுள்ளன.

1997ஆம் ஆண்டு சேலத்தில் பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களின் பெயரில் பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டது. வருங் காலங்களில் தகவல் தொழில் நுட்பத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு, அத்துறையில் வேலை வாய்ப்பைப் பெருக்கிடத் தமிழ்நாடு தொழில்நட்பத் தகவல் மையம் (TANITEC) என்னும் நிறுவனம் ஏற்படுத்தப்பட்டு உயர் தகுதியுடைய வல்லுநர்களை உருவாக்கி வருகிறது.

பல்கலைக் கழகங்கள், அரசு மற்றும் உதவி பெறும் கலை அறிவியல் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குப் பல்கலைக்கழக மானியக்குழு (U.G.C.) அளித்துள்ள ஊதிய விகிதங்களை வழங்கி இந்தியாவிலேயே முதலில் வழங்கிய மாநிலம் என்ற சாதனை படைத்துள்ளது. அதேபோல் அகில இந்திய பொறியியல் கல்விக் குழுவின் (A.I.C.T.E) அறிவிப்பின் படி, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள், பல்தொழில் நுட்பப் பயிலகங்கள் மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் உள்ளிட்ட அனைத்திலும் உள்ள ஆசிரியர்களுக்கும் உயர் ஊதிய விகிதங்களை எவ்வித மாற்றமும் இன்றி வழங்கியுள்ளது.

அரசுக் கலை அறிவியல் கல்லூரிகளில் கடந்தகால ஆட்சியில் ஒரு பணியிடங்கூட நிரப்பாத நிலையில் 828 விரிவுரையாளர் பணியிடங்கள் நிரப்பப்பட்டு மாணவர்கட்குச் சிறந்த கல்வி கிடைக்க வழி செய்யப்பட்டது. மாணவர்களின் பாதுகாப்பைக் கருதி வம்பு வதை (Ragging) தடுப்புச் சட்டம் இயற்றப்பட்டது. நீண்ட காலமாகக் கவனத்தில் கொள்ளப் படாத அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பணிபுரியும் 205 விளையாட்டுக் குறியீட்டாளர்கள் அரசுப் பணியாளர்களாக மாற்றப் பட்டு ஊதிய விகிதமும் வழங்கப் பட்டு அவர்தம் பணியும் வரன்முறை செய்யப்பட்டுள்ளது. அரசுக் கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு வழங்கும் நல்லாசிரியர் விருது, "டாக்டர் இராதாகிருட்டிணன் விருது" என்று முதல்வர் செய்த பெயர் மாற்றத்துடன் பரிசுத்தொகையும் ரூ.1,000 த்திலிருந்து ரூ.2,000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

பல்கலைக் கழகப் பாடத் திட்டங்களைத் தரம் உயர்த்தவும், பயன்பாட்டை உயர்த்தவும், மொழிப் பயன்பாட்டுத் திறனை வளர்க்கவும் உயர்கல்வி ஆய்வு மன்றத்தால் உரிய ஆலோசனை வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. கல்லூரிகளில் பட்டப் படிப்பு பெறும் மாணவர்கள் தமது பாடங்களில் மட்டுமின்றிப் பிற துறையைச் சார்ந்த பாடங்களிலும் பயிற்சி பெறச் சில பல்கலைக் கழகங்களில் வழிவகை செய்யப் பட்டுள்ளது. கல்லூரிகளில் பட்டப்படிப்புடன் தொழில் சார்ந்த கல்விப் பயிற்சி பெறவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அரசுக் கல்லூரிகளில் இளநிலை பட்டப்படிப்பில் 20 புதிய பாடப்பிரிவுகளும், 37 தொழில் சார்ந்த பாடப்பிரிவுகளும் ஆரம் பிக்கப்பட்டதுடன் மேற்படிப்புப் பட்டப் பிரிவில் 22 பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கணிப் பொறிக் கல்வியின் அவசியத்தை உணர்ந்த இவ்வரசு 15 கல்லூரி களில் புதிய கணிப்பொறிப் பிரிவை ஏற்படுத்தி மாணவர்கள் கணிப் பொறிக் கல்வி பயில வழிவகை செய்துள்ளது.

கல்வித் துறையில் வேலைச் சுமை அதிகமாக இருப்பதைக் கருத்தில் கொண்டும் துறையின் பணிகளை விரைவுப்படுத்தவும் ஏதுவாக, கல்வித்துறை இரண்டாகப் பிரிக்கப்பட்டு, உயர்கல்வித்துறை என்றும் பள்ளிக் கல்வித் துறை என்றும் இருகூறுகளாகத் தனித் தனிச் செயலர்களைக் கொண்டு சிறப்பாக இயங்கி வருகிறது.

# மக்கள் நல்வாழ்வு

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்
திரு. ஆற்காடு நா. வீராசாமி

தமிழினத் தலைவர் **கலைஞர்** அவர்கள் 13.5.96 அன்று நான்காவது முறையாக தமிழக முதல்வராக பொறுப்பேற்றுக் கொண்டபின், தமிழகத்தில் அனைத்துத்துறைகளிலும் ஒரு பெரும் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதை அனைவரும் அறிவர்.

கலைஞரின் சீரிய தலைமையில் செயல்பட்டு வரும் அமைச்சரவையில் நான் மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்று மூன்று ஆண்டுகள் முடியும் இத்தருவாயில், அந்த இரு துறைகளிலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து தமிழரசு வாசகர்களிடையே பகிர்ந்து கொள்வது எனக்கு உள்ளபடியே மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

**மக்கள் நல்வாழ்வுத்துறை**

தமிழக மக்கள் அனைவரும் நோயற்ற வாழ்வினை வாழ்ந்திட அடிப்படை மருத்துவ வசதிகளை ஏற்படுத்தி தருவதே கலைஞர் அவர்களின் அரசின் நோக்கமாகும்.

இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் தான் மாநில அரசே முழுச்செலவையும் ஏற்றுக் கொண்டு ரூ.52 கோடியில் 600 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு இரண்டே ஆண்டுகளில் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதனால் இம்மாநிலத்தில் இயங்கி வரும் 1,409 அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அனைத்தும் சொந்தக் கட்டடத்தில் இயங்கும் நிலைமை தமிழ்நாட்டில் மட்டிலுமே உண்டு.

நோயாளிகளின் நலனைக் கருதி ரூ.12 கோடி செலவில் 225 அவசர ஊர்திகள் வழங்கப் பட்டுள்ளன.

கிராமப்புறங்களில் வசிக்கும் ஏழை மக்களின் நலனுக்காக 250 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இரவு பகலாக 24 மணி நேரமும் இயங்கும் வகையில் இந்தியாவிலேயே முதன்முறையாக மேம் படுத்தப் பட்டு செயல்படுகின்றன.

இத்துறையின் கீழ் இயங்கும் பல்வேறு மருத்துவமனைகளை மேம்படுத்தும் வகையில் ரூ.20 கோடி தனி ஒதுக்கீடு செய்து மருத்துவமனைகளில் கட்டட வசதிகளுக்காகவும், புதிய நவீன கருவிகளை வழங்குவதற்காகவும் செலவிடப்பட்டுள்ளது.

மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளின் வசதிக்காக ரூ.8 கோடி தனி ஒதுக்கீடு செய்து, புதிதாக கட்டில்கள், மெத்தைகள் மற்றும் படுக்கை விரிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.



கருவுற்ற தாய்மார்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்கும் வகையில் 201 மருத்துவ மனைகளில் Ultra Sound Scan கருவிகள் வழங்கப் பட்டுள்ளன.

மருத்துவமனைகளில் அமைந்துள்ள அறுவை அரங்குகளின் அறுவை சிகிச்சை நடைபெறும்போது நோயாளிகளின் இரத்தத்தில் உள்ள ஆக்ஸிஜன் அளவை கண்காணிக்க 200 மருத்துவமனைகளில் Pulse Oxymeter கருவிகள் வழங்கப்பட்டன.

இரத்தப் பரிசோதனைச் செய்து கொள்ளும் நோயாளிகள் சோதனையின் முடிவை உடனுக்குடன் துல்லியமாக அறியும் வண்ணம் Semi - Auto Analyser என்னும் நவீன கருவிகள் ரூ.150 இலட்சம் செலவில் சுமார் 140 மருத்துவ மனைகளுக்கு வழங்கப் பட்டுள்ளன. இக்கருவியின் மூலம் சுமார் 120 வகையான இரத்தப் பரிசோதனைகளைச் செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த 3 ஆண்டுகளில் இத்துறையின் கீழ் இயங்கி வரும் அரசு மருத்துவமனைகளில் 2,918 படுக்கை வசதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

கிராமப்புறங்களில் வசிக்கும் பொதுமக்களின் மருத்துவ வசதிகளின் மேம்பாட்டை கருத்திற் கொண்டு கடந்த மூன்றாண்டுகளில் 28 அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மருத்துவமனைகளாக மேம்படுத்தப்பட்டுள்ளன.

நோயாளிகளின் உடற்கூறு பரிசோதனைகளை மேம்படுத்தும் வகையில் பத்து மாவட்ட மருத்துவ மனைகளில் முதன்முறையாக C.T.Scan கருவிகள் நிறுவப்பட்டுள்ளன.

கண்ணொளி வழங்கும் திட்டத்தில் இடையில் ஏற்பட்ட தொய்வினை நீக்கி கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் எப்போதும் இல்லாத அளவில் பத்து இலட்சத்து இருநூற்று பத்து நபர்களுக்குக் கண்புரை அறுவை சிகிச்சை செய்து அவர்களுக்குக் கண்ணாடி வழங்கி கண்ணொளி அளிக்கப்பட்டது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மையாகத் திகழ்கிறது. இத்திட்டம் மாநிலத்தில் எவ்வாறு செயல்படுகிறது என்பதை அறிய, மற்ற மாநிலத்திலிருந்து அலுவலர்கள் இங்கு வந்து அதனைக் கண்டறிந்து செல்கிறார்கள். அதிக அளவில் இம்மாநிலம் தேசிய அளவில் இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் முன்னோடியாகத் திகழ்கிறது. வரும் 2000 ஆம் ஆண்டில் கலைஞரின் பிறந்த தினமான ஜூன் 3க்குள், தமிழகத்தில் வளர்ச்சியடைந்த கண்புரை பெற்றவர் எவரும் இல்லை. (Matured Cataract free) என்னும் இலக்கை அடைய நமது அரசு திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு, குடும்ப நலத்துறையில் எய்திய சாதனையைக் கருத்தில் கொண்டு, மத்திய அரசு தமிழ்நாட்டிற்கான குறியீட்டினை விலக்கிக் கொண்டது. குடும்ப நல இலக்கு, நிர்ணயிக்கப்பட்ட ஆண்டுகளைக் காட்டிலும் செயல்பாடு தொடர்ந்து சிறப்பாக உள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள கிராமப்புறங்களில் வசித்து வரும் அனைத்து மக்களுக்கும் அடிப்படை சுகாதார வசதிகள் அளிப்பது அரசின் முக்கிய நோக்கமாகும். அதன் அடிப்படையில், கடந்த மூன்று ஆண்டுகளில் 18 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தோற்றுவிக்கப் பட்டன. தற்போது மொத்தம் 1,409 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தமிழ்நாட்டில் உள்ளன.

கடந்த 3 ஆண்டுகளில் 29 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அரசு வட்டார மருத்துவமனைகளாக/ வட்டாரமில்லாத அரசு மருத்துவமனைகளாக நிலை உயர்த்தப்பட்டன.

1997–98ஆம் ஆண்டு சேலம் மாவட்டம் இளம்பிள்ளை ஆரம்பச் சுகாதார நிலையத்தில் பிரசவ அறை, பிரசவ பேறுகால அறை மற்றும் அறுவை அரங்கம் கொண்ட கட்டடம் கட்ட ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

ஆரம்பச் சுகாதார நிலையங்களின் பணிகள் சிறப்புற செயல்பட ஏதுவாக அனைத்து 387 வட்டார ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கும் மற்றும் 37 சமுதாய நலக் கட்டடங்களுக்கும் உட்பட 424 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் தொலைபேசி வசதி ஏற்படுத்த ஆணை வழங்கப்பட்டு, 203 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் தொலைபேசி தொடர்பு பொறுத்தப்பட்டுள்ளது.

ஆரம்பச் சுகாதார நிலையப் பணிகளை மேம்படுத்தவும், அங்கு கூடுதலான வசதிகள் ஏற்படுத்தவும், தொழிலதிபர்களிடம் கலந்து ஆலோசிக்கப்பட்டு முதல் கட்டமாக 24 தொழில் நிறுவனங்கள் 56 ஆரம்பச் சுகாதார நிலையங்கள், 5 துணை சுகாதார நிலையங்கள் மற்றும் 9 அரசு மருத்துவமனைகள் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து, தற்போது 42 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தொழில் நிறுவனங்களால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

பொதுமக்களுக்கு எல்லா நேரங்களிலும் மருத்துவ சேவை/வசதி கிடைக்க வேண்டுமென்ற நோக்கில், அனைத்து வட்டார ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மற்றும் சமுதாய நல நிலையங்களை 24 மணிநேர ஆரம்பச் சுகாதார நிலையங்களாக மாற்றிட தீர்மானித்து தற்போது 250 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் 24 மணி நேர ஆரம்பச் சுகாதார நிலையங்களாக சேவை புரிகின்றன.

பட்டதாரிகள் இதுவரையில்லாத குடும்பத்தை சார்ந்த மாணவர்களில் முதல் பத்து இடங்களில் பெறுபவருக்கு மருத்துவம் மற்றும் பல் மருத்துவ கல்விச் செலவை அரசு ஏற்கும் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது.

மருத்துவமனைகள் திறம்பட செயல்பட ஒவ்வொரு மருத்துவமனையிலும் ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டுள்ளது




கடந்த இரு நிதி ஆண்டுகளில் மருத்துவக் கல்வி இயக்ககத்தின் கீழ் இயங்கும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு ரூ.20 கோடிக்கு நவீன உயர்தர தொழில் நுட்பம் வாய்ந்த மருத்துவக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்கப்பட்டு வழங்கப்பட்டு உள்ளன.

1997–98ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளியில் புதிய மருத்துவக் கல்லூரி துவங்க ஆணையிடப்பட்டு, 26.10.97 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், இக்கல்லூரி துவக்கப்பட்டது. அரசு புதிய கட்டடம் கட்ட ரூ.1,273 இலட்சம் ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டது. கட்டடப் பணிகள் நடைபெற்று வருகிறது.

1998–99ல் தூத்துக்குடியில் மருத்துவமனை ஆரம்பிக்க 2.9.1998ல் அரசு ஆணையிட்டது.

அரசு பொது மருத்துவமனையில், அனைத்து விதமான மருந்துகளும், ஏழை, எளியவருக்கு எவ்வித தட்டுப்பாடும் இல்லாமல் வழங்கப்பட்டு வருவதுடன், நோயாளிகளுக்குத் தேவைப்படும் விலை உயர்ந்த மருந்துகளும், மருத்துவ சேவை கழகத்தின் மூலம் அவ்வப்போது தருவிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

பல ஆண்டுகளாக சிவில் சர்ஜன்களாகவே இருந்து வரும் மருத்துவர்களுக்குப் பதவி உயர்வுக்கு வகை செய்யும் பொருட்டு முதுநிலை சிவில் சர்ஜன்கள் பதவிகள் உருவாக்கி பயன்பெற வகை செய்யப்பட்டுள்ளது.

பொது மருத்துவமனையில், அனைத்து ஏழை, எளிய நோயாளிகளுக்கும் முழு உடல் ஸ்கேன் (சி.டி.ஸ்கேன்) படம் இலவசமாக எடுத்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

சென்னை, அரசு பொது மருத்துவமனையில் பின்வரும் சிறப்பு அம்சங்கள் குறிப்பிடத்தக்கன:

- சென்னை, அரசு பொது மருத்துவமனையின் இருதய சிகிச்சைப் பிரிவில், அரசு அனுமதியின் பேரில் ரூ.4.23 கோடியில், மற்றுமொரு இருதய ஆய்வுக் கூடம் நிறுவப்பட்டு, சிறப்புற செயல்பட்டு வருகிறது.

- நாள் ஒன்றுக்கு சுமார் 6,000 முதல் 8,000 நோயாளிகள் சிகிச்சை பெற்று வரும் சென்னை, அரசு பொதுமருத்துவமனையின் புறநோயாளிப் பகுதி, சுமார் 1 கோடியே 35 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டு நோயாளிகளுக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

திருமங்கலம், அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரிக்கு ரூ.7 இலட்சம் செலவில் நுண்கதிர் இயந்திரம் வாங்கி நிறுவப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு மற்றும் கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், விழுப்புரம் மாவட்ட தலைமை மருத்துவமனையிலும், 10 வட்டார மருத்துவமனைகளிலும் மற்றும் 10 ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் சித்த மருத்துவப் பிரிவுகளும், விழுப்புரம், திருவண்ணாமலை மற்றும் கும்பகோணம் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் ஓமியோபதி மருத்துவப் பிரிவுகளும் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மருந்து செய் நிலையத்திற்கு மருந்துகளைப் பொட்டலங்களாக செய்யும் தானியங்கி இயந்திரங்கள் ரூ.6.15 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

1997–98 ஆம் ஆண்டு முதல் 60 வயதிற்கு மேற்பட்ட பதிவு பெற்ற பரம்பரை சித்த மருத்துவர்களது ஓய்வு ஊதியத் தொகையினை ரூ.150 லிருந்து ரூ.500 ஆக உயர்த்தி அரசு ஆணை வழங்கியுள்ளது. இதன் மூலம் சுமார் 750 மருத்துவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

தேசிய சித்த மருத்துவ நிலையம் – சித்த மருத்துவ மேம்பாடு மற்றும் ஆராய்ச்சிப் பணிகளுக்காக தேசிய சித்த மருத்துவ நிலையத்தை, சென்னையில் நிறுவிட மத்திய அரசு உத்தேசித்துள்ளது. இதற்காக தமிழக அரசு சென்னை, தாம்பரம் சானடோரியம் அருகில் 14.78 ஏக்கர் நிலத்தை இலவசமாக மத்திய அரசுக்கு வழங்கியுள்ளது. 27.3.99 அன்று தேசிய சித்த மருத்துவ நிலையத்தை நிறுவ மாண்புமிகு மத்திய சுகாதாரத் துறை இணை அமைச்சரின் தலைமையின் கீழ் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் நீரிழிவு, எலும்புமுறிவு மற்றும் மகப்பேறின்மை ஆகிய ஆராய்ச்சிப் பிரிவுகளும், யோகா மற்றும் இயற்கை வைத்தியப் பிரிவும் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

பகுதி–2 திட்டத்தின் கீழ், 10 வட்ட மருத்துவமனைகளில் சித்த மருத்துவப் பிரிவுகளும், 10 அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்களில் சித்த மருத்துவப் பிரிவுகளும், கரூர், பெரம்பலூர், திருவாரூர், திருவள்ளூர் மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் ஓமியோபதி மருத்துவப் பிரிவுகளும், இராமநாதபுரம், திருவாரூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் யுனானி மருத்துவப் பிரிவுகளும், திருச்சி மற்றும் கும்பகோணம் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் ஆயுர்வேத மருத்துவ பிரிவுகளும் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவக் கல்லூரிகள் மற்றும் அவற்றுடன் இணைந்துள்ள மருத்துவமனைகளின் மேம்பாட்டிற் காக 1997–98ஆம் ஆண்டு ஒட்டுமொத்தமாக ஒதுக்கப்பட்ட ரூ.6 கோடி நிதியில் பல்வேறு திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டு அவை நிறைவேற்றப்பட்டுள்ளன.

**மின்சாரத்துறை**

இத்துறைக்கு நான் பொறுப்பேற்கும் போது, இத்துறையில் ஊழல் மண்டிக் கிடந்தது. மக்கள் பணம் பல்வேறு வகைகளில் விரயமாக்கப்பட்டு வந்தது. நிலக்கரி இறக்குமதி செய்வதில் பெரும் முறைகேடு நடந்துவந்தது. மின்வாரிய அதிகாரிகள், இறக்குமதியாளர்களுடன் தொடர்பு கொண்டு நிலக்கரி விலையைக் குறைக்கும்படி செய்தனர். இதுமட்டுமின்றி மின்வாரியத்துக்குக் கொள்முதல் செய்யும் பொருட்களின் விலைகளும் கணிசமாகக் குறைக்கப்பட்டு, மின்வாரியத்துக்கு இலாபம் கிடைத்திட வழி செய்யப்பட்டது. இதனால் ஆண்டொன்றிற்கு மின்வாரியத்திற்குச் சுமார் ரூ.200 கோடி இலாபம் கிடைத்துள்ளது.

மேலும், முந்தைய அரசு, மத்திய அரசின் தாராளமயமாக்கல் கொள்கையின் அடிப்படையில் உலகளவில் 15 நிறுவனங்களுடன், மின்சார உற்பத்தி செய்வதற்கு ஒப்பந்தம் (M.O.U.) செய்து கொண்டது. ஆனால், பல்வேறு (அந்த அரசுக்கு வாடிக்கையான) காரணங்களால், எந்த ஒரு நிறுவனமும் மின்உற்பத்தி செய்ய முன்வரவில்லை. ஆனால் கலைஞரின் அரசு பொறுப்பேற்ற பின், அந்த நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் மீண்டும் நம் தமிழகத்துக்கு வந்து, என்னையும், நமது தமிழக முதல்வர் கலைஞர் அவர்களையும் சந்தித்து, தாங்கள் மின்உற்பத்தி செய்ய தயாராக இருப்பதாக கூறினார்கள். அவர்களுடன் ஒளிவு மறைவற்ற வகையில் (Transparent) பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களெல்லாம் தற்போது, மின்உற்பத்தி தொடங்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். தற்போது

- தூத்துக்குடி–ஐ ஒருங்கிணைந்த எரிவாயு சுழலி மின்திட்டம் (103 மெ.வா.)
- தூத்துக்குடி–ஐஐ ஒருங்கிணைந்த எரிவாயு சுழலி மின்திட்டம் (103 மெ.வா.)
- பாகனூர்–ஐ ஒருங்கிணைந்த எரிவாயு சுழலி மின்திட்டம் (102 மெ.வா.)
- பாகனூர்–ஐஐ ஒருங்கிணைந்த எரிவாயு சுழலி மின்திட்டம் (102 மெ.வா.)
- எண்ணூர் ஒருங்கிணைந்த எரிவாயு சுழலி மின்திட்டம் (103 மெ.வா.)
- ஓசூர் டீசல் இன்ஜின் மின் திட்டம் (52 மெ.வா.)
- ஜெயங்கொண்டம் நிலக்கரி மின் திட்டம் (580 மெ.வா.)
- வடசென்னை அனல்மின் திட்டம்–I (580 மெ.வா.)
- தூத்துக்குடி அனல் மின் திட்டம்–II (525 மெ.வா.)
- வேம்பார் எரிவாயு சுழலி மின் திட்டம் (1873 மெ.வா.) மற்றும்
- காட்டுப்பள்ளி வரிவாயு சுழலி மின் திட்டம் (1047 மெ.வா.)

ஆக மொத்தம் 5,562.546 மெ.வா. திறனுள்ள திட்டங்களுக்கு, தனியார் துறையினரால் தொடங்க, தமிழக அரசால் ஒப்பமிட ஒப்புதல் வழங்கப் பட்டுள்ளது.

மேலும் 1. எஸ்.டி.சி.எம்.எஸ். நெய்வேலி நிலக்கரி மின்திட்டம் 250 மெ.வா.

2. பிள்ளைபெருமாள் நல்லூர் எரிவாயு சுழலி மின் திட்டம் 330 மெ.வா.

3. சமயநல்லூர் டீசல் என்ஜின் மின்திட்டம் 106 மெ.வா.

4. சாமல்பட்டி டீசல் என்ஜின் மின்திட்டம் 106 மெ.வா.





முதலான திட்டங்களுக்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. தனியார் நிறுவனங்களில் ஒன்றாக ஜி.எம்.ஆர். வாசவி என்னும் நிறுவனத்தினால் சென்னை பேசின் பாலம் அருகே மின் உற்பத்தி நிலையம் நமது தமிழக முதல்வரால் தொடங்கப்பட்டு தற்போது நாள்தோறும் 196 மெ.வா. அளவுள்ள மின்சாரம் மின்வாரியத்துக்கு வழங்கப்பட்டு வருகிறது. இது நமது தமிழகத்தில் தனியார் நிறுவனத்தினால் தொடங்கப்பட்ட முதல் மின் உற்பத்தி நிலையமாகும். இது கலைஞர் அரசின் சாதனைக் கிரீடத்தில் பொறிக்கப்பட்டுள்ள வைரக்கல் என்றால் மிகையாகாது.

இதுமட்டுமின்றி, கீழ்பவானி வலது கரை கால்வாய் புனல் மின் திட்டம் (2 x 5) 10 மெ.வா. பேசின்பாலம் எரிவாயு சுழலி மின் திட்டம் (4 x 30) 120 மெ.வா. சாத்தனூர் புனல் மின் திட்டம் 7.5 மெ.வா. முதலான திட்டங்களும் கலைஞரின் அரசால், இந்த மூன்று ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவைமட்டுமின்றி, மின் பகிர்மானத்தில் 163 துணைமின் நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 1,37,485 தெருவிளக்குகள் போடப்பட்டுள்ளன. சுமார் 1,11,808 விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. 1,717 கி.மீ. நீளமுள்ள உயர்மின் அழுத்த கம்பிகள் போடப்பட்டுள்ளன. புதிதாக 1,37,950 குடிசைகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. 13,51,109 வீடுகளுக்கு மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

மின் வாரியத்தின் உற்பத்திச் செலவு அதிகரித்து வந்தாலும், தாய்மையுள்ளம் கொண்ட நமது கலைஞர் அவர்கள் அரசு வீடுகளுக்கான மின்சாரக் கட்டணத்தை மிகக் குறைவாக வசூலித்து வருகிறது. நமது மாநிலத்தில், மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது மின்சார கட்டணங்கள் குறைவாகவே உள்ளது. நமது முதலமைச்சர் அவர்கள் தான் 1989ஆம் ஆண்டு விவசாயத்திற்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தார். தற்போது இத்திட்டத்தினால், சுமார் ரூ.1,500 கோடி இழப்பு ஏற்பட்டாலும், விவசாயிகளின் நலன் கருதி இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுதவிர குடிசைகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் ஒரு விளக்குத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையில் செயல்பட்டு வரும் இந்த அரசு தொடர்ந்து பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி, தமிழகத்தை இந்திய மாநிலங்களிலேயே அனைத்து துறைகளிலும் முதல் நிலையில் கொண்டுவரும் என்பதில் எந்த அய்யமும் இல்லை. ★

# வருவாய்த்துறையின் சீர்மிகு பணிகள்

மாண்புமிகு
வருவாய்த்துறை
அமைச்சர்
நாஞ்சில்
திரு. கி. மனோகரன்

ஆட்சியாளர்கள் எப்படி இருக்க வேண்டும் என நமது இலக்கியங்களும், அறநூல் களும் எடுத்துக் கூறியுள்ளன:

The Kings bear the blow or wield the power in order to see that there is no cry of distress from any quarter

பொதுமக்களின் குறைகளைக் கண்டறிந்து அவர்கள் கேட்கா விட்டாலும்கூட அவற்றைப் போக்குவதற்குத் தேவையான உடனடி முயற்சிகளை மேற் கொள்வது ஒரு அரசின் கடமையாகும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த ஒரு கொள்கையைக் கடமையாகக் கொண்டு இந்த அரசை வழிநடத்தி வருகிறார்கள்.

வருவாய்த்துறை பல்வேறு துறைகளுக்கும் தாய்த் துறை ஆகும். நிர்வாகத்தின் முது கெலும்பாக விளங்கி கட்டுக் கோப்பான சமுதாய முன்னேற்றத்திற்குப் பெரும் துணையாக இருப்பது வருவாய்த் துறையாகும். பொதுமக்களின் வாழ்வில் பிறப்பிலிருந்து இறுதி நிகழ்ச்சியாம் இறப்பு வரை பல்வேறு நிலைகளில் வருவாய்த் துறையின் பங்களிப்பு இன்றி யமையாததாக அமைகிறது. சமுதாய மாற்றத்திற்கும் மறுமலர்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் வருவாய்த்துறை தொடர்ந்து பெரும் தொண்டாற்றி வருகிறது.

***நிலம் சார்ந்த பணி***

கடந்த மூன்றாண்டுகளில் வீட்டுமனை வழங்க நிர்ணயிக்கப் பட்ட இலக்கு 2 இலட்சத்து 35 ஆயிரம் ஆகும். ஆனால் பிப்ரவரி 99 வரை 5,10,440 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு இருக்கிறது.

20,000 ஏக்கர் நிலம் விவசாய நில ஒப்படைக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இந்த மூன்றாண்டுகளில் 22,515.40 ஏக்கர் விவசாய நிலங்கள் ஒப்படை செய்யப்பட்டது.

நில உச்சவரம்பு மிச்ச வரம்பாக இருந்த நிலையை மாற்ற மாண்புமிகு முதல்வர் 1970ஆம் ஆண்டில் கொண்டு வந்த நிலச்சீர்த்திருத்த உச்ச வரம்பை 30 ஏக்கரிலிருந்து 15 ஏக்கராக மாற்றியது உள்ளிட்ட பல சட்டத் திருத்தங்கள் வாயிலாக 1999 பிப்ரவரி முடிய மிகையாக அறிவிக்கப்பட்ட மொத்தப் பரப்பு 1 இலட்சத்து 98 ஆயிரத்து 673 ஏக்கராகும். 1 இலட்சத்து 37 ஆயிரத்து 318 நபர்களுக்கு, 1 இலட்சத்து 72 ஆயிரத்து 775 ஏக்கர் நிலம் ஒப்படை செய்யப் பட்டுள்ளது. ஒப்படை பெற்றவர்கள் நிலத்தை மேம்படுத்தி வாழ்வில் மேலும் வளம் காண எக்டேர் ஒன்றுக்கு ரூ.2,500 நிதி உதவி வழங்கப்படுகிறது. இவைகள் ஏழைகளின் இன்னல்களைக் களைய இந்த அரசு மேற்கொண்டு வருகிற முயற்சிகளின் எடுத்துக்காட்டுகளாகும். இந்த நேரத்தில் ஆங்கிலக் கவி ஷெல்லியின் சில வரிகள் இங்கே நினைவுகூறத் தக்கது:

"The seed ye sow another reaps
The wealth ye find another keeps;
..................................................
..................................................
Sow seed, - but let no tyrant reap;
Find wealth, - let no imposter heap



"நீ விதைக்கிறாய் வெறோருவன் கதிர் அறுக்கிறான்;
நீ கண்ட செல்வத்தை மற்றவன் அடைகிறான்;
..................................................................................
..................................................................................
இந்த நிலை மாறவேண்டும். ஆகவே,
விதையை நடு – வேறு எக்கொடியவனும் பயிரை அறுக்க வேண்டாம்;
செல்வத்தைத்தேடு – வேறு வேஷதாரி எவரும் அதைக் குவிக்க வேண்டாம்
..................................................................
..................................................................

'உழைப்பவனே அதன் பலனுக்கு உரியவன்' – என்ற இந்த அரசின் கொள்கைகள், இந்த கவிதை வரிகளின் உருவகமே ஆகும். 1971ஆம் ஆண்டிலே நமது அரசு கொண்டு வந்த குடியிருப்புச் சட்டத்தின்படி பட்டா வழங்கப்பட்ட ஏழைகளுக்கு இந்திரா ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டிக் கொடுப்பதில் முன்னுரிமை வழங்குமாறு ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அரசு அறிவுறுத்தியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

### *நிர்வாக அமைப்பு*

நிர்வாகம் தூய்மையாகவும், வெளிப்படையானதாகவும் மக்களால் எளிமையாக அணுகுவது போலும் அமைய வேண்டும் என்பதில் இந்த அரசு மிக முனைப்புடன் இருக்கிறது. அதற்கான நிர்வாக சீர்திருத்தங்கள் வருவாய்த்துறையிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு –

4 மாவட்டங்கள், 8 கோட்டங்கள் மற்றும் 24 வட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

தற்போதுள்ள 29 மாவட்டங்களில் 21 மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் அவற்றிற்கெனக் கட்டப்பட்டுள்ள கட்டடங்களில் இயங்கி வருகின்றன. நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வாடகைக் கட்டடத்திலும் மற்ற 7 மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், அரசு மற்றும் அரசு சார்பு கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. இந்த மாவட்டங்களில் பெரும் திட்ட வளாகங்களுக்கு நிலம் கையகப்படுத்தவும் கட்டடப் பணிகளுக்காகவும் ரூ.53.57 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. கடந்த மூன்றாண்டுகளில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டுவதற்கு 4.51 கோடி ரூபாயும், வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டுவதற்கு 10.28 கோடி ரூபாயும் அனுமதிக்கப் பட்டுள்ளது. கடந்த மூன்றாண்டுகளில் 204 ஈப்புகள் மற்றும் 35 சீருந்துகள் வாங்குவதற்கு 7.10 கோடி ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது.

### *பணியாளர் நலம் சார்ந்தது*

தமிழகத்தில் உள்ள 17,274 வருவாய் கிராமங்களை 12,506 முழுநேர கிராம நிர்வாக அலுவலர்கள் நிர்வகித்து வருகின்றனர். பதவி இழந்த முன்னாள் கிராம அலுவலர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. ஓய்வூதியம் ரூ.175 மற்றும் இதரப்படிகளும், குடும்ப ஓய்வூதியமாக ரூ.100–ம் 5–12–1986 முதல் வழங்க ஆணையிடப்பட்டது. இந்த ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் முறையே ரூ.250 மற்றும் ரூ.150ஆக அண்மையில் உயர்த்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 12,260 முன்னாள் கிராம அலுவலர்களும் மற்றும் அவர்களது குடும்பத்தினரும் பயனடைந்து உள்ளனர். பகுதிநேர கிராம உதவியாளர்களாகப் பணியாற்றிய அனைவரும் முழுநேர கிராம உதவியாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தற்போது, 26,247 கிராம உதவியாளர்கள் பணி புரிந்து வருகின்றனர்.

### *இயற்கை இடர்சார்ந்த துயர் துடைக்கும் பணி*

இயற்கை இடர்பாடுகள் ஏற்படும் நேரங்களில் இந்த அரசு நிவாரணப்பணிகளைப் போர்க்கால அடிப்படையில் செயல்படுத்தி வருவது அனைவருக்கும் தெரிந்ததே. வறட்சிக் காலங்களில், அதாவது 1997ஆம் ஆண்டு மார்ச் முதல் செப்டம்பர் வரை நிலவிய வறட்சியின் காரணமாக 15 மாவட்டங்களுக்கு மட்டும் 26.44 கோடி ரூபாய் நிவாரணப் பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1,405ஆம் பசலியில் 19 மாவட்டங்களில் நிலவிய வறட்சியின் காரணமாக 22.30 கோடி ரூபாய் நிலவரித் தள்ளுபடி செய்யப்பட்டது. 1,406ஆம் பசலியில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விருதுநகர், திருநெல்வேலி, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ரூ.2.28 கோடி மற்றும் தூத்துக்குடி மாவட்டத்திற்கு ரூ.14.25 இலட்சம் ரத்துச் செய்யப்பட்டது.

இதுமட்டுமின்றி, கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ரூ.87.85 இலட்சம் நிலவரி தள்ளுபடி செய்யப்பட்டது. அதேபோல், 1,407ஆம் பசலிக்கான நிலவரி கேட்பு 43.33 கோடி ரூபாய். கடந்த பருவ காலப் பெருமழையால் பாதிப்பு காரணமாக நிலவரி ரத்து செய்யப்பட்டது. ஏற்கெனவே தொகை செலுத்தப்பட்டு இருந்தால், அடுத்த ஆண்டு நிலவரிக்கு அது ஈடு செய்யப்படும்.

1996ஆம் ஆண்டில் வடகிழக்கு மாவட்டங்களில் மழையும் வெள்ளமும் ஏற்பட்டது. வெள்ளச் சேதங்களால் ஏற்பட்ட நிவாரண பணிகளுக்காக 219.35 கோடி ரூபாய் நிதி ஒப்பளிக்கப்பட்டது.

1997ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ள சேதம் காரணமாக நிவாரணப் பணிகளை மேற்கொள்ள 58.95 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. கடலோர மாவட்டங்களில் அமைந்துள்ள 91 புயல் பாதுகாப்பு மையங்களைச் செப்பனிட 87.50 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இயற்கை இடர்பாடுகள் மற்றும் சட்ட ஒழுங்கு பிரச்சினைகள் ஏற்படும்பொழுது எளிதில் தொடர்புக் கொள்வதற்கு வசதியாக 36 வட்டங்களிலும், 19 கோட்டங்களிலும், இருவழி தகவல் தொடர்பு சாதனம் (வி.எச்.எப்) அமைப்பதற்கு, அரசு ரூ.110.75 இலட்சம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.

### *மக்கள் போற்றும் மனுநீதித் திட்டம்*

கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் 7,27,536 மனுக்கள் பெறப்பட்டு 3,65,640 மனுக்கள் கோரிக்கைகள் ஏற்கப்பட்டுள்ளன. 3,04,847 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. 57,049 மனுக்கள் நிலுவையில் உள்ளன.

பொதுமக்கள் குறைத் தீர்க்கும் நாள் அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு திங்கட்கிழமையும் மாவட்ட ஆட்சியர்/கோட்டாட்சியர்/வட்டாட்சியர் அலுவலகங்களில் நடைபெறுகிறது. இத்திட்டத்தின் கீழ் கடந்த மூன்றாண்டுகளில்



7,58,615 மனுக்கள் பெறப்பட்டு அவற்றில் 3,56,799 மனுக்கள் ஏற்கப்பட்டன. 3,00,721 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. 1,01,095 மனுக்கள் நிலுவையில் உள்ளன.

***விபத்தின்போது விரைந்தோடும் நண்பன்***

ஏழை எளிய மக்களுக்காக பல்வேறு நலத் திட்டங்களை வருவாய்த்துறை செயல்படுத்தி வருகிறது. விபத்து நிவாரணத் திட்டத்தின் மூலம் கைத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் பொழுது ஏற்படும் விபத்தினால் இறக்க நேரிடும் ஏழை தொழிலாளர் குடும்பங்களுக்கு ரூ.15,000 நிதி உதவி வழங்கப்படுகிறது. அங்கங்களை இழக்கநேரிடும் நபர்களுக்கு ரூ.5,000 முதல் ரூ.10,000 வரை ஊனத்திற்கேற்றவாறு நிவாரணம் வழங்கப்படுகிறது. வறிய நிலையில் உள்ள ஏழை குடும்பத்தில் பொருளீட்டும் குடும்பத் தலைவர் எதிர்பாராமல் இறந்துபோனால் அவர் குடும்பத்திற்கு ரூ.10,000 நிதியுதவி அளிக்கப்படுகிறது.

இயற்கை சீற்றம் அல்லது தீ விபத்துகளால் குடிசைகள் நாசமடைந்தால், முழுவதும் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ.1000–மும் பகுதி சேதம் அடைந்த குடிசைகளுக்கு ரூ.500–ம் வழங்கப்படுகிறது. அத்துடன் 5 கிலோ அரிசியும், 1 லிட்டர் மண்ணெண்ணையும் ஒரு வேட்டி அல்லது லுங்கி மற்றும் ஒரு சேலை ஆகியவையும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்படுகிறது. புயல், வெள்ளம், இடி, மின்னல் மற்றும் தீ ஆகியவற்றால் உயிரிழந்தோர் குடும்பத்திற்கு நிவாரணமாக ரூ.15,000 வழங்கப்படுகிறது. முதல் முறையாக இயற்கை சீற்றத்தால் கால்நடைகள் உயிர் இழந்தால் அதற்காக ஒரு இழப்பீட்டுத் தொகையும் 1996ஆம் ஆண்டு முதல் முதிர்ந்த பசு/எருது/எருமை, இறந்தால் தலா ரூ.5000–மும், பசு/எருமை கன்று இறந்தால் தலா ரூ.3000–மும், ஆடு இறந்தால் தலா ரூ.1000–மும் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட சமத்துவபுரம் திட்டத்திற்கு எங்கெங்கு அரசு நிலம் இருக்கின்றனவோ அவை ஆதிதிராவிடர் நலத்துறைக்கு நில மாற்றம் செய்யப்படுகின்றன. இதுவரை 15 மாவட்டங்களை உள்ளடக்கிய 23 நேர்வுகளில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

விவசாய நில உடமைதாரர்களுக்கு நில உடமைகளை மெய்ப்பிக்கும் வகையில் சட்டபூர்வமான சான்றாவனமாக விளங்கக்கூடிய நில உரிமை பதிவேடு ஒன்றை வழங்க அரசு 1983ஆம் ஆண்டு ஒரு சட்டத்தை இயற்றியது. முதல் கட்டமாக வேலூர், தஞ்சாவூர், திருச்சி, பெரம்பலூர், கரூர், கோயம்புத்தூர், மதுரை, தேனி மற்றும் தூத்துக்குடி ஆகிய 9 மாவட்டங்களில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது. இம்மாவட்டங்களில் உள்ள பட்டாதாரர்களின் எண்ணிக்கை 25,23,763. வழங்கப்பட்ட பட்டா புத்தகங்கள் 19,58,211. இரண்டாம் கட்டமாக சேலம், நாமக்கல், தருமபுரி, இராமநாதபுரம், திண்டுக்கல், திருநெல்வேலி மற்றும் கடலூர் ஆகிய 7 மாவட்டங்களில் இத்திட்டம் விரிவுபடுத்தப் பட்டுள்ளது. இம்மாவட்டங்களில் 37.17 இலட்சம் பட்டாதாரர்கள் உள்ளனர். பூர்வாங்க பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

***கணினி மயமாக்கும் பணி***

வருவாய் நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கும் நில பதிவுருக்களைப் பராமரிக்கவும் ஒரு திட்டத்தை மைய அரசு தோற்றுவித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் நவீன உபகரணங்கள் வாங்கவும், பயிற்சி கட்டமைப்புகளை வலுப்படுத்தவும், அலுவலக கட்டடங்கள் கட்டவும், அனுமதிக்கப்பட்ட நிதி பயன்படுத்தப்படுகிறது. 1989–90லிருந்து 1995–96 வரை ரூ.722.06 இலட்சம் இத்திட்டத்தின் கீழ் செலவிடப்பட்டுள்ளது. நிலப் பதிவுருக்களைக் கணினி மயமாக்கும் திட்டத்தின் மூலம் கிராமக் கணக்குகளைக் குறிப்பாக 'அ' பதிவேடுகள் மற்றும் சிட்டா ஆகிய நிரந்தர கணக்குகள் கணினியில் பதிவு செய்யப்படுகின்றன. இதுவரை அரசு ஒப்பளித்தத் தொகை ரூ.513 இலட்சத்தில் ரூ.248.48 இலட்சம் செலவிடப்பட்டு 6,104 கிராமங்களின் 'அ' பதிவேடுகள் விவர குறிப்புகளும் 2,883 கிராமங்களின் சிட்டா விவர குறிப்புகளும் கணினியில் பதிவு செய்யப்பட்டுள்ளன. 1–7–1999க்குள் குறைந்தபட்சமாக 50 வட்டங்களில் 'அ' பதிவேடுகள் மற்றும் சிட்டா பதிவேடுகள் முழு கணினி மயமாக்கப்படும்.

அவுல் பக்கீர் ஜெயினுலாபுதீன் அப்துல் கலாம் அண்மையில் பாரத ரத்னா விருதுப்பெற்ற விஞ்ஞானி – இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தில், முக்கியமான கருத்தாழம் மிக்க விஞ்ஞான இலட்சியங்களைத் தந்து கொண்டிருப்பவர் கூறுகிறார்,

"A developed India by 2020 or even earlier is not a dream.
It is a vision for many young Indians.
It is a mission we all can and succeed".

கி.பி.2020 அல்லது அதற்கு முன்போ கூட இந்தியாவை ஒரு வளர்ந்த நாடாக மாற்றுவது என்பது ஒரு கனவல்ல; பல இளம் இந்தியர்களுக்கு அது ஒரு குறிக்கோள். நாம் அனைவரும் ஒன்றுபட்டு ஆற்றக்கூடிய, எய்தக்கூடிய ஒரு சாதனையாகும்.

தமிழகத்தை 21ஆம் நூற்றாண்டை நோக்கி மாண்புமிகு முதல்வர் வழிகாட்ட நாம் அனைவரும் அந்தக் குறிக்கோளை நிறைவேற்றப் பாடுபடுவோம்.

# ஊரக வளர்ச்சித் துறையின் சாதனைகள்

மாண்புமிகு
உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. கோ.சி. மணி

சொல்வதைச் செய்வோம் செய்வதைச் சொல்வோம் என்ற மூல மந்திர அடிப்படையில், இந்த அரசு தேர்தல் வாக்குறுதியில் சொல்லியிருந்தபடி ஆட்சிப்பொறுப்பு ஏற்றவுடன் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு உடனடியாக தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டது. ஐந்தாண்டு காலமாக நடத்தப்படாமலிருந்த உள்ளாட்சித் தேர்தல்களை ஆட்சிப்பொறுப்பு ஏற்ற ஐந்து மாதத்திற்குள் வெற்றிகரமாக நடத்தி முடித்தது இந்த அரசின் முதல் சாதனை. இது மட்டுமல்லாமல், அவ்வப்போது ஏற்படும் காலி இடங்களுக்கும் உடனுக்குடன் தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.



### ஊராட்சிகளுக்கு நிதி பகிர்ந்தளித்தல்

மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின்படி, 1997—98ஆம் ஆண்டு ரூ.369.41 கோடி ஊரக உள்ளாட்சிகளுக்கு மானியம் வழங்கப்பட்டது. இதில் 28 மாவட்ட ஊராட்சிகளுக்கு ரூ.30.9 கோடியும் 384 ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.139.3 கோடியும் மற்றும் 12,584 கிராம ஊராட்சிகளுக்கு ரூ.139.3 கோடியும் வழங்கபபட்டது. இந்த மானியத்திலிருந்து மேற்படி உள்ளாட்சி அமைப்புகள் பராமரிப்புச் செலவுகள் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில் எஞ்சிய ரூ.59.58 கோடி கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சமன்பாடு மற்றும் ஊக்கத் தொகையாக உள்ளது.

மேலும் 1998—99ஆம் ஆண்டில், இந்நிதியானது ரூ.467.95 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

### பத்தாவது நிதிக்குழு மானியம்

பத்தாவது நிதிக்குழுவின் பரிந்துரையின்படி, ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கு 1996—97ஆம் நிதியாண்டில் இருந்து வருடந்தோறும் ரூ.71.83 கோடி வழங்கப்பட்டு வருகிறது. இந்நிதியில் மூலதனப் பணிகளை மேற்கொள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அனுமதியளிக்கப் பட்டுள்ளது. 1996-97ஆம் ஆண்டு 28 மாவட்ட ஊராட்சிகளுக்கு ரூ.28 கோடியும், 384 ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.38.4 கோடியும், 10,000 மற்றும் அதற்கு மேல் மக்கள் தொகையுள்ள 71 ஊராட்சிகளுக்கு ரூ.5.43 கோடியும் வழங்கப்பட்டது.

1997—98ஆம் நிதியாண்டில், மாவட்ட ஊராட்சிகளுக்கு ரூ.14 கோடியும், ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.38.7 கோடியும் வழங்கப்பட்டது. கிராம ஊராட்சிகளைப் பொறுத்தவரை 1996—97ஆம் ஆண்டைப்போல் அல்லாது, அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் இத்திட்ட நிதி ரூ.19.13 கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 1998—99ஆம் ஆண்டு ரூ.71.83 கோடி நிதியானது மூன்று நிலை ஊராட்சிகளுக்கும், பிரித்து வழங்கப்பட்டுள்ளது.



### ஒதுக்கப்பட்ட வரித்தொகை

உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிமையான தலவரி, தலமேல்வரி, சிறுகனிமம் மற்றும் உரிமம் வரி, முத்திரைத்தாள் தீர்வை மேல் வரி மற்றும் கேளிக்கை ஆகிய இனங்களின் கீழ், மொத்தம் ரூ.338 கோடி ஆண்டுதோறும் அளிக்கப்படுகிறது.

1997—98ஆம் நிதியாண்டில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு மொத்தம் ரூ.822.32 கோடி நிதி ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### வளர்ச்சித் திட்டங்கள்

1996ஆம் ஆண்டு இந்த அரசு பொறுப்பேற்ற சமயம் முந்தைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப் படாமல் 1,14,142 பணிகள் நிலுவையில் இருந்தன. இதில் ஆதிதிராவிடர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான 83,487 தொகுப்பு வீடுகளும் அடங்கும். சாதாரணமாக இந்த எண்ணிக்கைப் பணிகளை முடிக்க

மூன்று ஆண்டுகள் ஆகும். இந்த நிலுவைப்பணிகள் சுமார் ரூ.104.42 கோடி கூடுதல் செலவில் முடிக்கும் பொறுப்பை இநத அரசு ஏற்று இன்று வரை 1,13,939 பணிகளை முடித்துள்ளது.

இதனைத் தவிர்த்து 1996—97 மற்றும் 1997—98ஆம் ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களின் மொத்தம் 4,89,917 பணிகள் மேற்கொள்ளப்பட்டு கடந்த 24 மாதங்களில் 5,37,414 பணிகள்முடிக்கப்பட்டுள்ளன.

### மத்திய நிதி பெறுவதில் தமிழகம் முன்னிலை

மத்திய அரசு தமிழ்நாட்டுக்கு முதல் தவணையாக ஒதுக்கப்பட்ட நிதியில் 50 சதவீதத்திற்கு மேல் அதிகமாக செலவழித்து, இவ்வரசு அகில இந்திய அளவில் முதன்முதலாக இரண்டாவது தவணைக்கான கருத்துருவை மத்திய அரசு மானியம் பெற கீழ்க்கண்ட திட்டங்களுக்குச் சமர்ப்பித்து மானியம் பெற்றுள்ளது.

- ★ இந்திரா நினைவு குடியிருப்புத்திட்டம்
- ★ ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம்
- ★ வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்
- ★ ஜீவன்தாரா கிணறு திட்டம்
- ★ ஒருங்கிணைநத ஊரக வளர்ச்சித் திட்டம்
- ★ இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்பு பயிற்சித் திட்டம்
- ★ மத்திய சுகாதாரத் திட்டம்

அகில இந்திய அளவில் எந்த மாநிலமும் இவ்வாறு குறிப்பிட்ட காலத்திற்கு முன் கருத்துரு அனுப்பி மத்திய அரசிடமிருந்து நிதி பெற்றதில்லை என்பதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

மேலும் மூன்றாவது தவணை/கூடுதல் நிதி ஒதுக்கீட்டிற் கான கருத்துருக்கள் முக்கிய திட்டங்களான ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், வேலை வாய்ப்பு உறுயளிப்புத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம் போன்ற திட்டங்களுக்கு ஜனவரி —பிப்ரவரி மாதங்களிலேயே மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. மத்திய அரசு கூடுதல் நிதியாக ஜவகர் வேலை வாய்ப்பு திட்டத்திற்கு ரூ.5.26 கோடியும் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்திற்கு ரூ.5.98 கோடியும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கு ரூ.5.42 கோடியும் வழங்கப்பட்டு உள்ளது. வேலை வாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்திற்தான மூன்றாம் தவணையும் இளைஞர்களுக் கான சுயவேலைவாய்ப்பு பயிற்சித் திட்டத்திற்கான கூடுதல் நிதியும் மத்திய அரசின் நிதிப்பற்றாக்குறையால் இன்னும் வரப்பெறவில்லை.

## புதிய திட்டங்கள்

### அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

நகர்ப்புறங்களில் உள்ள வசதி வாய்ப்புகள் கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கும் கிடைக்கப்பெற வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த சிறப்புத் திட்டம் தான் அண்ணா மறுமலர்ச்சித் திட்டமாகும்.

ரூ.51.86 கோடி மதிப்பீட்டில் அண்ணா மறுமலர்ச்சித் திட்ட சிறப்பு நிதி ஒதுக்கீட்டில் ஒரு சட்டமன்ற தொகுதிக்கு ஒரு ஊராட்சி என்ற அடிப்படையில் 212 கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டங்களில் ரூ.110.65 கோடியும், அண்ணா மறுமலர்ச்சித் திட்ட சிறப்பு நிதி ரூ.51.86 கோடி மூலமும் மொத்தம் 29,679 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு கிராமமும் அனைத்து வசதிகளையும் கொண்ட ஒரு மாதிரி கிராமமாக அமைப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

1998—99ஆம் ஆண்டில் 212 ஊராட்சிகளில் ரூ.180.43 கோடி மதிப்பீட்டில் 23,264 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதில் ரூ.75 கோடி சிறப்பு மானியமாக மாநில அரசால் வழங்கப்பட்டது. குடிநீர் திட்டத்திற்கென மட்டும் ரூ.65.07 இலட்சம் மதிப்பீட்டில் 1,462 வேலைகள் செய்யப்பட்டுள்ளன.

### நமக்கு நாமே திட்டம்

இந்தியாவிலேயே முதன்முதலாக மக்களாகவே திட்டமிட்டு செயல்படுத்தும் திட்டத்தில் அரசு பங்கேற்கும் வண்ணம் "நமக்கு நாமே" என்ற அரிய திட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்து உள்ளார்கள்.

1997—98ஆம் ஆண்டில் மக்கள் வளர்ச்சி திட்டத்தில் தீவிரமாக பங்கு கொண்டு பணமாகவோ (அ) பொருளாகவோ (அ) உழைப்பாகவோ அளித்து அரசு திட்டங்களுடன் இணைத்து ஒரு வட்டாரத்தில் ஒரு மாதத்திற்கு ஒரு கிராமத்திலாவது செயல்படும் வகையில் 'நமக்கு நாமே' என்ற புதியதொரு திட்டம் செயலாக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கான சிறப்பு நிதியாக ரூ.5 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 100 சதவீதம் பொது மக்கள் பங்குடன் ரூ.321.26 இலட்சத்தில் 2,445 பணிகளும் பொதுமக்கள் பகுதி பங்குடன் ரூ.368.34 இலட்சத்தில் 1,845 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

1998—99ஆம் ஆண்டு அரசு மொத்தம் 4,790 பணிகளை 3,047 கிராமங்களில் எடுத்துக் கொண்டுள்ளது. இதில் 4,317 வேலைகள் முடிவுற்றன. பள்ளிக்கட்டடப் பணிகள், இணைப்புச் சாலைகள், பள்ளி சுற்றுச் சுவர், பால் விநியோகக் கட்டடங்கள், பள்ளிக்குக் கணிப்பொறிகள் வழங்குதல் மற்றும் மரத் தளவாட பொருட்கள், பாலங்கள், நீர் ஆதார மேம்பாட்டுப் பணிகள், கடற்கரை (Beach) அமைத்தல் போன்ற பல பணிகளும் எடுக்கப்பட்டுள்ளன.

நடப்பாண்டில் (1999—2000) முதற்கட்டமாக ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நமக்கு நாமே திட்டத்தை நகரப் பகுதிகளுக்கும் தற்போது அரசு விரிவாக்கம் செய்துள்ளது.



## தெரு விளக்குகள்

இந்த அரசு பொறுப்பேற்றவுடன் 1995—96 நிலவரப்படி தேவைப்படும் தெருவிளக்குகள் பற்றி கணக்கெடுக்கப்பட்டதில் 50,000 தெரு விளக்குகள் கூடுதலாக தேவைப்படுகிறது என்று கண்டறியப்பட்டது. இதை நிறைவு செய்யும் வகையில் 1997—98இல் 17,334 தெரு விளக்குகளும் 1998—99இல் 25,714 தெரு விளக்குகளும் ஆகமொத்தம் 43,048 தெருவிளக்குகள் சிறப்பு நிதி ஒதுக்கீடு மூலம் போட நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதேபோல் இதர திட்டங்கள் மூலமாக கடந்த மூன்று ஆண்டுகளில் 24,143 தெரு விளக்குகள் போட நடவடிக்கை எடுக்கப்பட்டது. கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 67,191 தெருவிளக்குப் பணிகள் புதியதாக எடுக்கப்பட்டுள்ளது. இவற்றில் 42,974 தெருவிளக்குகள் இதுவரை அமைக்கப்பட்டுள்ளன. கடந்த மூன்று ஆண்டுகளில் எடுக்கப்பட்ட தெருவிளக்குகள் தற்போதுள்ள மொத்த தெரு விளக்குகள் எண்ணிக்கையில் சுமார் 7 சதவிகிதம் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் கிராமப்புற வசதியை மேம்படுத்த முக்கிய கிராமங்களில் 10,000 சோடியம் ஆவி விளக்குகள் அமைக்க சென்ற ஆண்டு ரூ.2.65 கோடி ஒதுக்கப்பட்டு அந்த பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

# அடிப்படை வசதிகள்

## குடிநீர்

பாதுகாப்பற்ற நீரை குளங்கள், ஆறுகள் போன்றவற்றிலிருந்து எடுத்து பயன்படுத்துவது முதல் திறந்த வெளிக்கிணறுகள், அடிகுழாய்கள், தரைமட்ட தொட்டிகள், மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் என படிப்படியாக வாழ்க்கைத் தரத்திற்கேற்ப வசதிகள் மாறி இன்று தெரு குழாய்களை அடுத்து கிராமப்புறங்களிலும் வீட்டு இணைப்புகள் தரும் மகத்தான பணியை இந்த அரசு செய்துள்ளது. நகர்ப்புற மக்கள் பெறும் அதே வசதியை கிராம மக்களும் பெற ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு 40 லிட்டருக்கு குறையாமல் குடிநீர் தர வாய்ப்புள்ள கிராமங்களில் நீர் ஆதாரத்திற்கு ஏற்ப வீட்டு இணைப்புகள் வழங்கலாம் என அரசு ஆணையிட்டுள்ளது. இதனால் இன்று 2,16,000 முறையற்ற வீட்டு இணைப்புகள் ஒழுங்குபடுவதுடன் 1,60,000 புதிய இணைப்புகளும் வழங்கப்படும். இதனால் கூடுதலாக ரூ.36.66 கோடி வைப்புத் தொகையை உள்ளாட்சி அமைப்புகள் பெறுவதோடு, ரூ.1.09 கோடி மாதந்தோறும் தண்ணீர் தீர்வையாக கூடுதல் நிதி திரட்டி குடிநீர் பணிகளைப் பராமரிக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

## சாலைகள்

கிராமபுறங்களுக்குத் தார்ச் சாலைகள் அமைக்கப்பட வேண்டுமென்ற ஒரு தொலைநோக்குத் திட்டத்தை முதன்முதலாக கொண்டு வந்தது கலைஞர் அவர்களின் அரசு தான். 1989இல் தொடங்கப்பட்ட இப்பணி இடையில் தடைப்பட்டு 1996—97இல் பொறுப்பேற்ற பின்பு மீண்டும் தொடங்கப்பட்டது. உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டிலுள்ள சாலைகளில் சென்ற ஆண்டு எடுக்கப்பட்ட 6,281.42 கி.மீ. சாலைகளுடன் கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் மொத்தமாக 16,883.70 கி.மீ. உள்ளாட்சி அமைப்புக்குட்பட்ட சாலைகள் தார்ச் சாலைகளாக மாற்ற எடுக்கப்பட்டு, மார்ச் மாதம் வரை 15,063.45 கி.மீ. சாலை தார்ச்சாலைகளாக மாற்றப்பட்டுள்ளன.

## தொகுப்பு வீடுகள்

ஏழைகளுக்குக் கான்கிரீட வீடுகள் வழங்கும் திட்டத்தை துவக்கியது கலைஞர் அவர்களின் அரசு தான். இந்த திட்டத்தில் சென்ற ஆண்டு எடுக்கப்பட்ட வீடுகள் 46,016. கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 1,74,266 வீடுகள் எடுக்கப்பட்டன. இத்திட்டம் துவக்கப்பட்ட நாளிலிருந்து இதுவரை மொத்தமாக, 4,35,897 கான்கிரீட் வீடுகளும், 2,24,271 ஓடு வேயப்பட்ட வீடுகளும் கட்டப்பட்டுள்ளது. இதிலிருந்தே கணிசமான அளவு பணிகள் இந்த மூன்று ஆண்டுகளில் தான் நடைபெற்று உள்ளது என்பதை உணரமுடியும். மார்ச் '99 நிலவரப்படி எடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பணிகளில் 11,718 வீடுகளே நிலுவையில் உள்ளன.

## கல்வி

துவக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளுக்குக் கட்டட வசதிகள், குடிநீர் வசதிகள், கழிப்பிட வசதிகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை ஊரக வளர்ச்சித் துறை முனைப்போடு செய்து வருகிறது. சென்ற ஆண்டு மட்டும் 1,540 கட்டடங்கள் துவக்கப் பள்ளிகள்/நடுநிலைப் பள்ளிகளுக்குக் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. கடந்த மூன்று ஆண்டுகளில் 4,362 கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் இதுவரையில் 3,900 துவக்க/நடுநிலைப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. நிலுவையாக உள்ள கட்டடங்கள் விரைவில் முடிக்கப்படும்.

இதுவரையில் நடைமுறையில் இல்லாத முறையை மாற்றி உயர்நிலை பள்ளிகள்/மேல்நிலை பள்ளிகளுக்கு ஊரக வளர்ச்சித் துறை மூலம் 500 கட்டடங்கள் கட்டித் தரப்படும் என சென்ற ஆண்டு அரசு அறிவித்தது. 1998—99இல் இந்த இலக்கையும் மிஞ்சி 796 கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவற்றில் 354 கட்டடங்கள் இதுவரை கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

## ஜீவன்தாரா கிணறுகள்

ஏழை விவசாயிகள் நிரந்தர வருமானம் பெற கடந்த ஆண்டு மட்டும் 4,048 ஏழை விவசாயிகளுக்கு ஜீவன்தாரா கிணறுகள் தோண்ட நிதி உதவி செய்யப்பட்டது. கடந்த மூன்று ஆண்டுகளில் 14,132 சிறு/குறு விவசாயிகள் இதனால் பயன்பெற்றுள்ளனர்.

## நீர் ஆதாரப் பணிகள்

நீர் வளத்தை பாதுகாக்கவும், நிலத்தடி நீர் ஆதாரத்தை மேம்படுத்தவும் நீர் ஆதாரப் பணிகளை இந்த அரசு முனைப்போடு செயல்படுத்தி வருகிறது. அனைத்து ஊராட்சிகளிலும் இப்பயன் சென்றடைய சென்ற ஆண்டு இத்திட்டத்தில் ஒரு ஊராட்சிக்குக் குறைந்தது ஒரு இலட்சம் மதிப்பீடு உள்ள நீர் ஆதார பணிகளாவது செய்யப்படும் என அறிவித்தேன் இதன் மூலம் ரூ.133.15 கோடி மதிப்பீட்டில் 11,818 ஊராட்சிகளில் 12,104 பணிகள் மேற்கொள்ளப் பட்டன.

வறுமை ஒழிப்பு திட்டத்தை இந்த அரசு முனைப்போடு செயல்படுத்தி வருகிறது. கடந்த ஆண்டு மட்டும் 1,37,100 குடும்பங்கள் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் கடன் உதவி பெற்றுள்ளனர். கடந்த மூன்று ஆண்டுகளில் 4,87,965 குடும்பங்கள் இத்திட்டத்தில் பயன் பெற்றுள்ளனர்.

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

தமிழக அரசால் நிறுவப்பட்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தமிழ்நாட்டிலுள்ள ஊரக மற்றும் நகரக மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதை தலையாய கடமையாகக் கருதி செயல்பட்டு வருகிறது. கடநத மூன்றாண்டுகளில் வாரியத்தின் சாதனைகளின் விவரம் பின்வருமாறு:



## ஊரகப் பகுதிகளுக்கான குடிநீர்த் திட்டம்

தமிழக அரசு தமிழ்நாட்டில் குடிநீர் வழங்கப்படாத குடியிருப்புகளே இல்லை என்ற நிலையை உருவாக்கும் என உறுதி அளித்தவாறு குடிநீர் வசதி இல்லாத 154 குடியிருப்புகளுக்கும் 31—3—1997க்கு முன்பாகவே குடிநீர் வசதி செய்துதரப்பட்டது.

ஊரகப் பகுதிகளில் 12,500 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்துதரப்படும் என இலக்கீட்டு, 14,457 குடியிருப்புகளுக்கு ரூ.673 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டன.

2,770 தனி மின்னிறைப்பான் திட்டங்களில் புனரமைப்புப் பணிகள் ரூ.30.00 கோடி செலவில் மேற்கொள்ளப்படும் என இலக்கீடு நிர்ணயிக்கப்பட்ட போதிலும் ரூ.32.74 கோடி செலவில் 3,222 தனி மின்னிறைப்பான் திட்டங்கள் புனரமைக்கப்பட்டன. தவிரவும் 289 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் ரூ.12.50 கோடி செலவில் புனரமைக்கப்படும் என அறிவிக்கப்பட்ட போதிலும் 233 கூட்டுக் குடிநீர் திட்டங்களுக்கு மட்டுமே புனரமைப்பு பணிகள் தேவைப்பட்டன. இதில் ரூ.7.10 கோடி செலவில் 233 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கும் புனரமைப்புப் பணிகள் செய்து முடிக்கப்பட்டது.

ஃபுளோரைடால் பாதிக்கப்பட்ட 1,453 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்துதரப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தும் 1,514 குடியிருப்புகளுக்கு ரூ.53.40 கோடி செலவில் குடிநீர் வசதி செய்துதரப்பட்டது.

குடிநீர் பற்றாக்குறை மிகுந்துள்ள இராமநாதபுரம் மாவட்டத்தில் உவர்நீரை நன்னீராக்கும் கலன்களின் மூலம் குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு வருகிறது. 409 குடியிருப்புகளில் உள்ள 3,49,000 மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.41 கோடி மதிப்பீட்டில் இந்தியாவிலேயே மிகப் பெரிய அளவிலான 3.8 மில்லியன் (தினசரி 38 இலட்சம்) லிட்டர் கொடுதிறன் உடைய கலன் உள்பட 11 உவர்நீரை நன்னீராக்கும் கலன்கள் நிறுவப்பட்டன.

## நகரகக் குடிநீர்த் திட்டங்கள்

கடந்த மூன்று ஆண்டுகளில் 19,24,000 மக்கள் பயன்பெறும் வண்ணம் ரூ.196.67 கோடி மதிப்பீட்டில் 11 நகராட்சிகள், 44 நகரக பேரூராட்சிகள் மற்றும் 43 ஊரக பேரூராட்சிகளுக் கான குடிநீர்த் திட்டங்கள் பயனுக்கு கொண்டுவரப்பட்டன.

❖ ❖ ❖

பேரறிஞர் அண்ணா அவர்கள் வேளாண்மை பற்றி குறிப்பிடும் போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். "நம் நாட்டில் படித்தவர்கள் குறைவாகவும், அப்படி படித்தவர்களில் மிகக் குறைவானவர்களே உழவுத் தொழிலில் ஈடுபடுவதால், வேளாண் விஞ்ஞான முறைகளைப் புகுத்தி விவசாய புரட்சியைத் தோற்றுவிப்பது குறித்து தொடர்ந்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கின்றது என்று, 8-6-1968ல் மேழிச் செல்வம் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் பேரறிஞர் அண்ணா அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார்கள்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் இந்த இலட்சிய அடிப்படை உணர்வை இதயத்தில் வைத்து செயல்படும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் வேளாண்மைக்கு முன்னுரிமை தந்து திட்டங்கள் வகுத்து, தரிசு நிலங்களை மேம்படுத்த டாக்டர். வி.சி. குழந்தைசாமி தலைமையில் குழு அமைத்ததும், இஸ்ரேல் நாட்டு தொழில் நுட்ப ஆலோசனைகளைப் பெற்றதும் நினைவு கூறத் தக்கனவாகும்.

டாக்டர் வி.சி. குழந்தைசாமி தலைமையில் உள்ள வல்லுனர் குழுவின் பரிந்துரையின் பேரில் தமிழகத்தில் உள்ள மொத்த நிலங்களில் **15 விழுக்காடு** தரிசு நிலங்களாக இருப்பதை, **மேம்படுத்துவதற்காக இந்த நிதி ஆண்டிலேயே முதலமைச்சர் அவர்கள், நிதி ஒதுக்கீடு செய்து, 10 ஆயிரம் எக்டேர் நிலப்பரப்பில்** விளைச்சல் நிலங்களாக மாற்ற தரிசு நில மேம்பாட்டு ஆணையம் (Waste Land Development Authority) அமைக்க முடிவு எடுத்து இருப்பது குறிப்பிடத் தகுந்ததாகும்.

இத்தகு சிறப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தி தமிழகத்தில் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்று இரண்டாவது பசுமைப் புரட்சியை உண்டாக்குவதே தமிழக அரசின் மேலான கொள்கையாகும். அனைத்துப் பயிர்களின் உணவு உற்பத்தித் திறனை அதிகரித்து உற்பத்தியைப் பெருக்குவதே முக்கிய நோக்குமாகும். உழவர்கள் நலம் பெற சீரிய பல திட்டங்களை நிறைவேற்றி கிராமப் பொருளாதாரம் உயர்ந்திட வழிவகை காணப்பட்டுள்ளது.

### அரிசி உற்பத்தி

1997-98ஆம் ஆண்டில் 70.52 இலட்சம் மெ. டன் அரிசி உற்பத்தி செய்யப்பட்டது. இது 1996-97ஆம் ஆண்டின் அரிசி உற்பத்தியைவிட 12.45 இலட்சம் மெ. டன்கள் கூடுதல் ஆகும். 1998-99ஆம் ஆண்டில் **அரிசி உற்பத்தி** 75 இலட்சம் மெ. டன்களாகும்.

### பயறு உற்பத்தி

பயறு வகைகளைப் பொறுத்த மட்டில் 1996-97ஆம் ஆண்டு 2.33 இலட்சம் மெ. டன்னாக இருந்தது. 1997-98 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட இரு மடங்காக

# வேளாண்மை வளர்ச்சி

- மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்

(4.51 மெ. டன்) உயர்ந்தது. 1998-99ஆம் ஆண்டில் 6.12 இலட்சம் மெ. டன்னாக உயரும்.

### மொத்த உணவு தானியங்கள் உற்பத்தி

1996-97ஆம் ஆண்டில் 69.30 இலட்சம் மெ. டன்னாக இருந்த உணவு தானியங்களின் மொத்த உற்பத்தி, 1997-98ஆம் ஆண்டில் 86.68 இலட்சம் மெ.டன்னாக உயர்ந்து, 1998-99ஆம் ஆண்டில் 94.12 இலட்சம் மெ. டன்னாக உயரும்.

### எண்ணெய்வித்துக்கள் உற்பத்தி

எண்ணெய்வித்துக்கள் உற்பத்தி 15.14 இலட்சம் மெ. டன்னிலிருந்து 18.95 இலட்சம் மெ. டன்னாக 1997-98ல் உயர்ந்தது. இது 1998-99ல் 21 இலட்சம் மெ. டன்னை அடைந்திடும்.

### பருத்தி உற்பத்தி

1996-97ஆம் ஆண்டில் 3.28 இலட்சம் பொதிகளாக இருந்த பஞ்சு உற்பத்தி 1997-98ல் 4 இலட்சம் பொதிகளாக உயர்ந்தது. இது 1998-99ல் 6 இலட்சம் பொதிகளாக உயரும்.

### கரும்பு உற்பத்தி

1996-97ஆம் ஆண்டில் கரும்பு உற்பத்தி (வெல்லம்) 24.11 இலட்சம் மெ. டன்னாக இருந்தது. 1997-98ஆம் ஆண்டில் 36.68 இலட்சம் மெ.டன்னாக உயர்ந்தது. 1999-99ஆம் ஆண்டில் 36.96 இலட்சம் மெ.டன்னாக உற்பத்தி உயரும்.

### இடுபொருள்கள் விநியோகம்

தரமான விதைகளே அதிக உற்பத்திக்கு அடிப்படை. என்பதால், 1996-97ஆம் ஆண்டு 23,098 மெ.டன் சான்று விதைகளும், 1997-98ஆம் ஆண்டில் 28,097 மெ. டன் சான்று விதைகளும், 1998-99ஆம் ஆண்டு பிப்ரவரி வரை 28,828 மெ. டன் சான்று விதைகளும் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

### களர், உவர் நிலச்சீர்திருத்தம்

1997-98ஆம் ஆண்டு தஞ்சாவூர், திருவாரூர், காஞ்சிபுரம்,திருவள்ளூர், வேலூர், திருண்ணாமலை, சேலம் மற்றும் நாமக்கல் ஆகிய எட்டு மாவட்டங்களில் 12,000 ஏக்கர் பரப்பளவில் களர் உவர் நிலச் சீர்திருத்தம் மேற்கொள்ள ரூ.4.05 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு மூன்று ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டுக்கும் 4,000 ஏக்கர் வீதம் சீர்திருத்தப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1998-99 ஆம் ஆண்டு 4,000 ஏக்கர் களர், உவர் நிலச் சீர்த்திருத்தத்திற்காக ரூ.1.28 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பிப்ரவரி '99 முடிய 225 ஏக்கர் பரப்பில் ரூ.44.10 இலட்சம் செலவில் சீர்திருத்தப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### மண் அளவை மற்றும் நில உபயோகஅமைப்பு

மண்ணின் தன்மை, அதன் பௌதீக மற்றும் இரசாயண குணங்கள் ஆகியவற்றை கள ஆய்வுகள் மற்றும் பரிசோதனைக்கூட ஆய்வுகள் மூலம் கண்டறிந்து சர்வதேச நிலைக்கேற்ப மண்ணை வரிசைப்படுத்தி, நில அமைப்பியலின்படி வரைபடம் வரைந்து பயன்படுத்தும் நோக்கத்தோடு கோயம்புத்தூர், தஞ்சாவூர், வேலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய 4 இடங்களில் இயங்கும் இம்மண் அளவை அமைப்புகளில் இதுவரை 2.61 இலட்சம் எக்டரில் விரிவான அளவை மேற்கொள்ளப்பட்டது.

### ஆதிதிராவிடர் விவசாயிகள் பகுதிகளில் விதைப்பண்ணை

1997-98ஆம் ஆண்டு ஆதிதிராவிடர் விவசாயிகள் பகுதிகளில் ரூ.51.64 இலட்சம் செலவில் 1,377 எக்டர் பரப்பில் விதைப்பண்ணை அமைக்கப்பட்டது.

### உயிர் உரங்கள்

இயற்கை உரமான உயிர் உரங்களைக் கொண்டு நில வளத்தை மேம்படுத்தவும், நிலத்தின் தன்மையைப் பாதுகாக்கவும் அசோஸ்பைரில்லம், பாஸ்போ பேக்டீரியா, ரைசோபியம் ஆகிய நுண்ணுயிர்கள் 1996-97ஆம் ஆண்டு 66.86 இலட்சம் பொட்டலங்களும், 1997-98ஆம் ஆண்டு 53 இலட்சம் பொட்டலங்களும் 1998-99ஆம் ஆண்டு பிப்ரவரி 99 வரை 61.60 இலட்சம் பொட்டலங்களும் விவசாயிகளுக்கு விநியோகிக்கப் பட்டன.

### நுண்ணூட்டச் சத்துக்கள்

நுண்ணூட்டச் சத்து உரங்கள் வேளாண்மைத் துறையில் தயாரிக்கப்பட்டு 1997-98ஆம் ஆண்டு 1,164 மெ. டன்னும், 1998-99ஆம் ஆண்டு பிப்ரவரி 99 வரை 1,085 மெ. டன்னும் உழவர்களுக்கு விநியோகிக்கப் பட்டன.

### பண்ணைக் கழிவுகளை உரமாக்குதல்

பண்ணைக் கழிவினை புளூரோட்டஸ் பூஞ்சானம் கொண்டு உயிரியல் மாற்றம் செய்து மண்ணின் தன்மையை மாற்றவும், விளைச்சலைப் பெருக்கவும் இச்சிக்கனமான ஒருங்கிணைந்த உரமிடும் முறை மேற்கொள்ளப்பட்டு, 1997-98ஆம் ஆண்டு ரூ.6.98 இலட்சம் செலவில் 11,027 எண்கள் சிறுதளைகள் விவசாயிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது.

### உர அடையாள அட்டை

விவசாயிகளுக்குத் தகுந்த நேரத்தில் வரையறுக்கப்பட்ட விலையில் ரசாயன உரம் கிடைக்க உர அடையாள அட்டைகள் வழங்கும் திட்டம் ரூ.12 இலட்சம் நிதி ஒதுக்கீட்டுடன் முதலில் 5 வேளாண்மை கோட்டங்களிலும், 1998-99ஆம் ஆண்டில் மேலும் 24 வேளாண்மை கோட்டங்களிலும் வழங்கப்பட்டன.



இதுவரை 8 இலட்சம் உர அடையாள அட்டைகள் அச்சிடப்பட்டு மேற்படி கோட்டங்களில் வழங்கப் பட்டுள்ளன.

## பயிர் பாதுகாப்பு

குறைந்த செலவில், பயிர்களின் பூச்சி, நோய் சேதத்தை தவிர்த்தல் மற்றும் சுற்றுச்சூழல் மாசுபடுதல், மண்ணின் நச்சுத் தன்மை மற்றும் பூச்சிகளின் பெருக்கம் ஆகியவற்றால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்தல் போன்ற நோக்கத்திற்காக ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறை தமிழகத்தில் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இதில் இந்தியாவிலேயே தமிழகம் முன்னிலை வகிக்கிறது. இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 3,020 வயல்வெளிப் பள்ளிகள் அமைக்கப்பட்டு, 90,600 விவசாயிகள் பயன் பெறுகின்றனர்.

## பண்ணைக் கருவிகள் மற்றும் டிராக்டர்கள் விநியோகம்

கடப்பாறை, மண்வெட்டி போன்ற கருவிகளை வேளாண்மைத் தொழிலாளர்கள் பயன்படுத்துவதற்காக 50% மானிய விலையில் 1998-99ஆம் ஆண்டில் ரூ.28 இலட்சம் செலவில் 44,680 எண்கள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த 3 ஆண்டுகளில் 1,977 பவர் டில்லர்களும், 524 டிராக்டர்களும் மானிய விலையில் உழவர்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

## ஆயில் என்ஜின்கள் விநியோகிக்கும் திட்டம்

1998-99ஆம் ஆண்டு ரூ.50 இலட்சம் செலவில் ஐந்து குதிரைத்திறன் கொண்ட 625 ஆயில் என்ஜின்கள் அக்ரோபெஃட் நிறுவனம் மூலம் தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கவும் ரூ.31 இலட்சம் செலவில் 7.5 குதிரைத்திறன் கொண்ட 500 ஆயில் என்ஜின்கள் அனைத்து மாவட்ட விவசாயிகளுக்கும் வழங்கவும் ஆணை பிறப்பிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## முதலமைச்சரின் மரம் வளர்ப்புத் திட்டம்

மழை வளத்தைப் பெருக்கவும், சுற்றுப்புற சுகாதாரத்தைச் சீரமைக்கவும் முதலமைச்சரின் மரம் வளர்ப்புத் திட்டம் மூலம் 1997-98ஆம் ஆண்டு 25 ஊராட்சி ஒன்றிய சாலைகளில் ரூ.5.38 கோடி செலவில் 5,03,832 புளி மற்றும் வேம்பு மரக்கன்றுகள் 1,825 கி.மீ. தூரத்திற்கு நடப்பட்டுள்ளன. 26 மாவட்டங்களில் 136 பஞ்சாயத்து யூனியன்களில் ரூ.7 கோடி செலவில் மாவட்ட ஆட்சியாளர்களால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 1999-2000ஆம் ஆண்டில் இத்திட்டம் செயல்படுத்தப் படும்.

## நெய்வேலி காட்டாமணி களை அழிப்பு

காவிரி டெல்டா மாவட்டங்களில் வாய்க்கால்களில் நீர் வரத்தை தடுத்து சேதத்தை ஏற்படுத்தும் நெய்வேலி காட்டாமணிச் செடிகளை அழிக்கும் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டிலும், அதற்கு முந்தைய ஆண்டிலும் ரூ.3.93 கோடியில் 5,728 எக்டேர் பரப்பில் களைகள் அழிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

## தென்னை உற்பத்தியை அதிகரிக்கும் திட்டம்

தென்னை உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு சீரிய திட்டங்களுடன் ஆண்டு ஒன்றுக்கு 12 இலட்சம் தென்னங்கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

## உழவர் பயிற்சி

உழவர் பயிற்சி நிலையங்கள் மூலம் விவசாயி களுக்குக் கிராமப்புற பயிற்சி மற்றும் நவீன தொழில் நுட்பங்களுக்கான பயிற்சி மற்றும் இரண்டாம் நிலை செயல் விளக்கங்கள் மேற்கொள்ளுதல், விளம்பரம் மற்றும் கூட்டு விவாதங்கள், உழவர் சுற்றுலா மற்றும் உழவர்தின விழா ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு உழவர்கள் பெரும் பயன்கள் பெற்றுள்ளனர். ஆண்டு ஒன்றுக்கு சுமார் 60,000 விவசாயிகள் இதன் மூலம் பயன்பெறுகின்றனர்.

## தமிழ்நாடு பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம்

சிறு மற்றும் மிகச்சிறு விவசாய பண்ணை மகளிர்களுக்குப் புதிய மற்றும் வேளாண் தொழில்நுட்பங்களில் பயிற்சி அளித்தல், உற்பத்தியை அதிகரித்தல், அவர்கள் குடும்பங்களின் உணவு நிலை தன்னிறைவைப் பெறுதல் ஆகிய நோக்கங்களுடன் டென்மார்க் நிதி உதவியுடன் தமிழ்நாடு பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ரூ.28.73 கோடி ஒதுக்கீட்டுடன், 68,893 பண்ணை மகளிர்களை பயிற்றுவிக்க திட்டமிடப்பட்டு செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2002 மார்ச் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

### எண்ணெய் பனை உற்பத்தி மேம்பாட்டுத் திட்டம்

சமையல் எண்ணெய் உற்பத்தியில் தன்னிறைவு பெற, தேவையை பூர்த்தி செய்யும் வகையில் எண்ணெய் பனை சாகுபடித் திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இத்திட்டம் எட்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் திருச்சி, கரூர், பெரம்பலூர், தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு ரூ.8.38 கோடி செலவில் 6105.29 எக்டேர் பரப்பில் எண்ணெய்ப்பனை நடவுப்பணி மேற்கொள்ளப்பட்டது. 9வது ஐந்தாண்டுத் திட்டத்தில் இத்திட்டம் திருநெல்வேலி, தூத்துக்குடி, தேனி ஆகிய மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு 1998-99 வரை ரூ.4.63 கோடி செலவில் 2,743 எக்டேர் பரப்பில் நடவுப்பணி மேற்கொள்ளப்பட்டது. 1999-2000ஆம் ஆண்டில் திருவள்ளூர் மற்றும் வேலூர் மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### வெள்ள நிவாரணம்

இயற்கை சீற்றங்களினால் எதிர்பாராத விதமாக அதிக மழை பெய்து பயிர்களுக்குச் சேதம் ஏற்பட்ட நிலையில் தமிழக அரசு உதவிக்கரம் நீட்டி கடந்த 3 ஆண்டுகளில் வெள்ள நிவாரணத் தொகையாக ரூ.60.42 கோடியை வழங்கியுள்ளது.

### பயிர் விளைச்சல் போட்டி

விவசாயிகளை ஊக்குவித்து உற்பத்தியை பெருக்க பயிர் விளைச்சல் போட்டியை மாநிலம் மற்றும் மாவட்ட அளவில் பல்வேறு பயிர்களில் நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக 1996-97ஆம் ஆண்டு ரூ.6.5 இலட்சமும், 1997-98ஆம் ஆண்டில் ரூ.13.05 இலட்சமும், 1998-99ஆம் ஆண்டில் ரூ.14.01 இலட்சமும் விவசாயிகளுக்குப் பரிசாக வழங்கப்பட்டு விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.



### இஸ்ரேல் நாட்டு வேளாண்மை தொழில்நுட்பத்தை கடைப்பிடித்தல்

இஸ்ரேல் நாட்டு வேளாண்மை தொழில் நுட்பங்களைப் பின்தங்கிய மாவட்டங்களான தருமபுரி, சிவகங்கை, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்த இஸ்ரேல் நாட்டில் தஹால் நிறுவன விஞ்ஞானிகள் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளது. இதற்காக ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையில் ரூ.2.33 கோடியில் ரூ.2.31 கோடி செலவிடப்பட்டது. இவ்வறிக்கையில் முன்னோடி செயல்விளக்கப் பண்ணை அமைக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இது பரிசீலனையில் உள்ளது.

### தோட்டக்கலை

ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம், ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டம், மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், 'மா'வில் உரமிடல் மற்றும் பயிர் பாதுகாப்புக்கென செயல்விளக்கப் பாத்திகள் அமைக்கும் திட்டம், திண்டுக்கல் மாவட்டத்தில் மலை வாழை சாகுபடிக்கு புத்துயிர்ப்பு செய்யும் திட்டம், நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்குத் தெளிப்பு நீர் பாசன கருவிகள் வழங்கும் திட்டம், கல்வி நிலையங்களில் மரக்கன்றுகள் நடவு செய்தல், வேளாண்மை மனித வள மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டம் போன்ற தோட்டக்கலைத்துறை மேம்பாட்டு திட்டங்களுக்காகக் கடந்த 3 ஆண்டுகளில், ரூ.17.26 கோடி மத்திய - மாநில அரசுகளின் நிதியுதவியில் விவசாயிகளுக்கு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

### ஒருங்கிணைந்த முந்திரி அபிவிருத்தித் திட்டம்

இத்திட்டத்தில் முந்திரி உற்பத்தியையும், உற்பத்தி திறனையும் பெருக்கும் நோக்கத்துடன் உயர் விளைச்சல் தரவல்ல முந்திரி ஒட்டுச்செடிகள், உரங்கள், பயிர்பாதுகாப்பு மருந்துகள், 100 சத மானிய விலையில் வழங்கப்படுகிறது. பரப்பு விரிவாக்கத்தின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் 6,052 எக்டேர் முந்திரி சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டது. பழைய நலிவடைந்த தோட்டங்களைப் புதுப்பித்திட 800 எக்டேர் பரப்பில் நடவுச்செடிகள், உரங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகளுக்காக மானியம் வழங்கப்பட்டது. முந்திரி பயிர் பாதுகாப்பு மேற்கொள்ளும் பொருட்டு சுமார் 11,112 எக்டேர் பரப்பில் பயிர் பாதுகாப்பு மருந்துகள் வழங்கப்பட்டன. இத்திட்டங்களுக்காக கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.4.20 கோடி செலவினம் மேற்கொள்ளப் பட்டது.

ஒருங்கிணைந்த நறுமணப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், 2,500 எக்டேரில் பல்வேறு நறுமணப் பயிர்கள் சாகுபடிக்கு ரூ.4.54 கோடி செலவிடப் பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த வெப்ப, குளிர் மற்றும் வறண்ட பகுதி பழங்கள் சாகுபடித் திட்டத்தின் கீழ் பழங்கள் சாகுபடிக்கு ரூ.3.58 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**வணிக மலர்கள் அபிவிருத்தித் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் உதகையில் மாதிரி மலரியல் மையம் ஒன்று துவங்கப்பட்டு திசு வளர்ப்புமுறையில் அலங்காரச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. இத் திட்டத்தின் கீழ் கடந்த மூன்றாண்டுகளில் ரூ.85.514 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாட்டில் மலர் வளர்ச்சி மேம்பாடு, வேர் மற்றும் கிழங்குகள் அபிவிருத்தித் திட்டம், காய்கறி அபிவிருத்தித் திட்டம், மூலிகை மற்றும் வாசனைப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டம், காளான் அபிவிருத்தித் திட்டம். ஒருங்கிணைந்த கோகோ அபிவிருத்தித் திட்டம் ஆகியவைகள் நிறைவேற்றப்படுகின்றன.

தோட்டக்கலைத் துறையின் மூலம் பசுமைக் குடில்கள் அமைக்கும் திட்டமும், தானியங்கள் உலர்த்த பிளாஸ்டிக் விரிப்புகளும், தாழ்வான குடில்கள் அமைக்க பாலித்தீன் விரிப்புகளும் விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய ரூ.35 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் தங்கள் விளை பொருட்களைக் கிட்டங்கிகளில் 4 மாதம் வரை இருப்பு வைத்து விளைப்பொருட்களின் மொத்த மதிப்பில் 50 முதல் 75 சதவிகிதம் வரை பொருளீட்டுக் கடனாக ரூ.25,000 அதிகப்பட்சமாக பெறலாம். முதல் 15 நாட்களுக்கு வட்டி இல்லை. மீதமுள்ள நாட்களுக்கு 12 சதவீதம் முதல் 14.5 சதவீதம் வரை வட்டி வசூலிக்கப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் 15,863 விவசாயிகளுக்கு ரூ.3.19 கோடி பொருளிட்டுக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

மலர் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் பொருட்டு, சென்னை விமான நிலையத்திற்கு அருகில் பன்னாட்டு மலர் ஏல மையம் ரூ.40.59 கோடியில் உருவாக்கப் படுகிறது.

மதுரையில் நெல் வணிக வளாகம், ரூ.13.57 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படவுள்ளது. திருச்சியில் கரும்பு வெல்ல வணிக வளாகம் ரூ.9.80 கோடியில் உருவாக்கப்படவுள்ளது. ஈரோட்டில் மஞ்சள் வணிக வளாகம் ரூ.30.89 கோடியில் உருவாக்கப்படும்.

மேலும் விளைபொருட்கள் விற்பனையில் விவசாயிகளுக்கு சேவை புரிந்திடவும், நிர்வாக வசதிகளுக்காகவும் (சென்னை மாவட்டம் நீங்கலாக) ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு விற்பனைக்குழு ஏற்படுத்த அரசாணை வெளியிடப்பட்டு விற்பனைக்குழு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சொட்டு நீர்பாசனத் திட்டத்தின் கீழ் கடந்த 3 ஆண்டுகளில், 25,500 எக்டேர் நிலங்கள் பயன்படும் வகையில் ரூ.31.35 கோடி மானியமாக வழங்கப் பட்டுள்ளது.

**திட்டச் செலவினம்**

மத்திய, மாநில அரசு திட்டங்களின் மூலமாக வேளாண்மைத் துறையில் கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.428 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**நாளைய வேளாண்மை**

பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்றபடி அடுத்த பத்தாண்டுகளில் உணவு உற்பத்தியை இரட்டிப் பாக்கவும் மற்றும் வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்தோடு பல்வேறு செயல் திட்டங்களை நிறைவேற்றவும், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை தரம் உயர்த்தி பக்குவப்படுத்தி விற்பனை செய்திடவும், இயற்கை சூழல் மாசுபடாமல் உயிர்ச்சத்து உரங்களையும், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளையும் கடைபிடித்து, இயற்கை வேளாண் மையை ஊக்குவிக்கவும், பண்ணை வருமானத்தை பெருக்கிட ஒருங்கிணைந்தப் பண்ணையம் செய்திடவும், தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை தீவிர கவனம் செலுத்தி வருகிறது.



"வளம் குன்றா வேளாண்மை" என்ற கொள்கையோடு, இரண்டாவது பசுமைப் புரட்சியை நோக்கி வெற்றி நடைபோடுகிறது இத்தமிழகம்.

★ ★ ★

# பொதுப்பணித்துறையின் பணிகள்

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்
திரு. **துரைமுருகன்**

பொதுப்பணித்துறை பழமையும், பெருமையும் வாய்ந்த துறைகளில் ஒன்றாகும். இது நீர்வள ஆதார அமைப்பு, கட்டட அமைப்பு என இரு பிரிவுகளாக 1995ஆம் ஆண்டு டிசம்பர் முதல் இயங்கி வருகிறது.

### *நீர்வள ஆதார அமைப்பு*

வேளாண்மையை முதன்மையாகக் கொண்ட நமது பொருளாதாரத்தில் தொழில் மயமாக்குதல் மற்றும் பல திட்டங்களின் செயலாக்கத்தால் நீர்ப்பாசனம் முறையாக மாறுதலடைந்து வருகிறது. நீர்வள ஆதார அமைப்பு மாநிலத்தின் நீர்ப்பாசனத்தை முக்கிய பொறுப்பாகக் கொண்டுள்ளது. நீர்வள ஆதார அமைப்பின் முக்கிய நோக்கமானது, நீர்த்தேவையைக் கோரும் அனைத்து பகுதியினரும் பயன்பெறும் வகையில் நிலமேற்பரப்பு நீரையும், நிலத்தடி நீரையும் நன்கு நிர்வகித்து, அறிவியல் ரீதியில் பங்கீடு செய்து அதன் மூலம் வேளாண்மை உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் பெருக்குவதேயாகும்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நான்காவது முறையாகப் பொறுப்பேற்ற பின்னர், பாசன அமைப்புகளின் நடைமுறை பிரச்சினைகளின் அடிப்படையில் முறையான தீர்வு காண அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

### *முக்கிய சாதனைகள்*

- மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தளராத பெருமுயற்சியின் விளைவாக, காவிரி நீர்த்தாவாவில் ஆகஸ்டு 1998இல் தொடர்புடைய மாநிலங்களுக்கிடையே ஓர் இணக்க நிலை ஏற்பட்டு, தஞ்சை விவசாயிகளின் நலன்கள் பாதுகாக்கப் பட்டுள்ளன.

- கிருஷ்ணா குடிநீர் திட்டப்பணிகள் செவ்வனே முடிக்கப்பட்டு கடந்த இரு ஆண்டுகளாக கிருஷ்ணா குடிநீர் சென்னைக்கு வந்து கொண்டிருக்கிறது. இவ்வாறு கனவோ என எண்ணியிருந்த திட்டத்தை நனவாக்கி சென்னை நகருக்கு குடிநீரைக் கொண்டு வந்தது முதலமைச்சர் கலைஞர் அவர்களின் சிறப்பான பாராட்டைப் பெற்றது.

- கரிகாலன் காலத்திற்குப் பின்னர், 1997–98 முதல் காவிரியின் கழிமுகப் பகுதி வாய்க்கால்களில் வரலாறு காணாத வகையில் இயந்திரங்களைப் பயன்படுத்தி தூர்வாரும் பணி மற்றும் நெய்வேலி காட்டாமணக்குச்



செடிகளை அகற்றும் பணி நடைபெற்று வருகின்றன.

1997–98ஆம் ஆண்டில் ரூ.12.75 கோடி செலவு, 1998–99ஆம் ஆண்டில் ரூ.23.50 கோடி செலவு என இதுவரை சுமார் 4,350 கி.மீ. நீளம் கால்வாய்கள், ஆறுகள் மற்றும் வடிகால்களில் தூர்வாரப்பட்டது. மேலும் 74 கண்மாய்களிலும் தூர்வாரப்பட்டது.

### முதலமைச்சரின் ஏரிகள் தூர்வாரும் திட்டம்

ஒரு சட்டமன்றத் தொகுதியில் குறைந்தபட்சம் ஒரு கண்மாய் என்ற அடிப்படையில், கண்மாய் தூர்வாருவதற்கான வழிமுறைகளுடன் 1997–98ஆம் ஆண்டில் 200 கண்மாய்களுக்கு ரூ.19.91 கோடி செலவு செய்ய ஒப்புதல் வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்கு கிராமப்புற மக்கள் மற்றும் பாசனதாரர்களிடமிருந்து மிகையான அளவு வரவேற்பு கிடைத்துள்ளதால் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த முடிவெடுத்து 1998–99ஆம் ஆண்டில் மேலும் 200 கண்மாய்களுக்கு ரூ.20 கோடியில் ஒப்புதல் வழங்கப்பட்டது. அனுமதியளிக்கப்பட்ட 400 கண்மாய்களில் முதல் ஆண்டு அனுமதியில் 167 கண்மாய்களிலும் இரண்டாம் ஆண்டு அனுமதியில் 22 கண்மாய்களிலும் இதுவரை ரூ.20.22 கோடி செலவிடப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

### நடுத்தர மற்றும் சிறுபாசனத் திட்டம்

1996–97ஆம் நிதி ஆண்டு தொடக்க நிலையில் 15 (நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின் கீழ் நடைபெற்றுவரும் 9 பணிகள் உட்பட) நடுத்தர மற்றும் சிறுபாசன திட்டங்கள் செயலாக்கத்தில் இருந்தன. 1996–97ஆம் ஆண்டில் நான்கு திட்டங்கள் ரூ.82.20 கோடியிலும், 1997–98ஆம் ஆண்டில் நான்கு திட்டங்கள் ரூ.96.54 கோடியிலும் மேலும் 1998–99ஆம் ஆண்டு பதினான்கு திட்டங்கள் ரூ.104.83 கோடியிலும் செயல்படுத்த அரசு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் தற்போது பல்வகை நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. மேற்கூறிய 22 பணிகளால் சுமார் 19,266 எக்டேர் பாசன பரப்பு பயனடையும்.

### சிறப்பு சிறுபாசனத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் பாசன உறுதியளிக்கக்கூடியதும், கூடுதல் பாசனம் அளிக்கக்கூடியதுமான புதிய மற்றும் புனரமைப்புப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1996–97ஆம் ஆண்டில் 13 பணிகள் ரூ.2.94 கோடியிலும்; 1997–98ஆம் ஆண்டில் 12 பணிகள் ரூ.3.54 கோடியிலும்; 1998–99ஆம் ஆண்டில் 19 பணிகள் ரூ.8.69 கோடியிலும் தமிழக அரசால் ஒப்புதல் வழங்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தில் 8 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 36 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. மேற்கண்ட 44 பணிகளால் சுமார் 10,711 எக்டேர் பாசன பரப்பு பயனடையும்.

### நீர்வள ஆதார தொகுப்புத் திட்டம்

உலக வங்கியின் நிதி உதவியுடன் ரூ.807.49 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தில் கடந்த மூன்றாண்டுகளில் ரூ.480.73 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மொத்த நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்ட ரூ.761.16 கோடி பணிகளில் 256 சிப்பங்களுக்கான ரூ.520 கோடி பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

மேலும், விவசாயிகளை நீர் மேலாண்மையில் ஈடுபடுத்திட 352 பாசனச் சங்கங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

துறையில் நூதன முறைகளைப் புகுத்தி மேம்பாட்டுக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வல்லுநர் கூட்டுக்குழு ஏற்படுத்தப்பட்டு செவ்வனே செயற்பட்டு வருகிறது.

மேலும் ரூ.400 கோடி மதிப்புள்ள பணிகளுக்கு உலக வங்கி ஒப்புதல் பெற வழிவகை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

துறையை நவீனப்படுத்த 600 கணிப்பொறிகள், 140 படிபெருக்கிகள், 468 தானியங்கி மட்ட கைகள், 3 மின்னியக்கி ''டோடல் ஸ்டேஷன்'', 8 மின்னியக்கி தியோடலைட், 180 ஈப்புகள், 12 வேன்கள், 17 கார்கள், 1 சிறிய பேருந்து மற்றும் தொலையுணர்வு கருவிகள் ரூ.30 கோடி மதிப்பில் பெறப்பட்டுள்ளன.

ரூ.10 கோடி மதிப்பில் துறை அலுவலர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நம்பியாறு, சோத்துப்பாறை நீர்த்தேக்கப் பணிகளைப் பார்வையிட்ட உலக வங்கி மேற்பார்வைக் குழு பணியின் தரத்தைப் பெரிதும் பாராட்டியுள்ளது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் ரூ.212.38 கோடி செலவிடப்பட்டுள்ளது.

### நீரியல் திட்டம்

உலக வங்கியின் நிதி உதவியுடன் தமிழகத்தில் இத்திட்டத்தைச் செயல்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்ட தொகை ரூ.38.65 கோடியாகும். இத்திட்டத்தின் நோக்கம் 'நீரியல் சுழற்சி' சம்பந்தப்பட்ட மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீரின் அளவு மாற்றுத் தன்மை பற்றிய விவரங்களைச் சேகரிப்பதாகும்.

### ஐரோப்பிய குழும நிதி உதவியுடன் ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டம்

ஐரோப்பிய குழும நிதி உதவியுடன் 316 மானாவாரி மற்றும் 80 முன்னாள் ஜமீன் ஏரிகளை நவீனப்படுத்த அரசு ஒப்புதல் வழங்கப்பட்ட மதிப்பீடுத் தொகையான ரூ.125 கோடியில் கடந்த மூன்றாண்டுகளில் 142 மானாவாரி மற்றும் 52 முன்னாள் ஜமீன் ஏரிகள் ரூ.35 கோடி செலவில் நவீனப்படுத்தப்பட்டன.

### அணை பாதுகாப்புத் திட்டம்

1991ஆம் ஆண்டு உலக வங்கி நிதி உதவியுடன் ரூ.48.30 கோடியில் அணை பாதுகாப்புத் திட்டம்



நீர்வழிகளில் கடல்நீர் புகவும், தங்கு தடையின்றி நீரோட்டம் ஏற்பட்டு அவை ஆண்டு முழுவதும் சுத்தமாக இருக்க, தடையாகவுள்ள மணல் திட்டுக்களை அகற்றி அவை மீண்டும் ஏற்படாவண்ணம் தடுக்கவும் தக்கவோர் ஏற்பாட்டுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பரிசீலனையில் உள்ளது. மைய அரசின் தேசிய கடல்சார் தொழில்நுட்ப ஆராய்ச்சி மையத்திடமிருந்து இதுகுறித்து அறிவுரை கோரப்பட்டுள்ளது. மேலும் நீர்வழிப் பாதைகளின் கரையோரப் பகுதிகளைச் செம்மைப்படுத்தி, கூடுதல் வணிக வசதிகளும், பொழுதுபோக்கு, சமூகநல வணிகநோக்கு திட்டப் பேருரு தயாரித்து செயலாக்கத்தக்க ஒப்பந்தக்காரரைத் தெரிவு செய்யும் பணிக்கு அறிவுரை வழங்க ஒரு கலந்துரை நிறுவனத்தை அமர்த்தி ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டுள்ளன.

தொடங்கப்பட்டது. மேட்டூர், சாத்தனூர், வீடூர், வெலிங்டன், கோமுகி, மணிமுத்தாறு, பேச்சிப்பாறை, சோலையாறு, குண்டேரிபள்ளம், உப்பாறு, சித்தமல்லி ஆகிய அணைக்கட்டுகளில் ரூ.27.54 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### *மாநில ஏரிப்பாசனத் திட்டம்*

1995–96ஆம் ஆண்டு 447 பொதுப்பணித்துறை மற்றும் 557 முன்னாள் ஜமீன் ஏரிகளைத் தரப்படுத்தவும், நவீனப்படுத்தவும் ரூ.12.63 கோடி அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டது. 1996–97ஆம் ஆண்டு 343 பொதுப்பணித்துறை மற்றும் 369 முன்னாள் ஜமீன் ஏரிகளை ரூ.8.73 கோடி மதிப்பீட்டிலும், 1998–99ஆம் ஆண்டு 251 பொதுப்பணித்துறை மற்றும் 189 முன்னாள் ஜமீன் ஏரிகளை ரூ.6.68 கோடி மதிப்பீட்டிலும் தரப்படுத்த அரசு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.16.94 கோடி இப்பணிகளில் செலவிடப்பட்டுள்ளது.

### *புதிய வீராணம் திட்டம்*

வீராணம் திட்டத்தின் பயனை கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் ஏரியினைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு வழங்கும் வகையில் திட்டக்கருத்துரு மாற்றியமைக்கப்பட்ட ரூ.110.95 கோடி மதிப்பீட்டுக்கு அரசாணை வழங்கப்பட்டது. மொத்தமுள்ள 25 சிப்பங்களில் ரூ.42.11 கோடி மதிப்புள்ள 13 சிப்பங்களின் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### *சென்னை பெருநகர நீர்வழிகளைச் செப்பனிட்டு சீரமைக்கும் திட்டம்*

சென்னை மாநகரிலுள்ள அடையாறு, கூவம், பக்கிங்ஹாம் கால்வாய், ஒட்டேரி நல்லா, கேப்டன் காட்டன் வாய்க்கால் மற்றும் இதர சிறிய வடிகால் போன்ற நீர்வழிகளில் உள்ள சேறு மற்றும் தூர் மண்ணை அகற்றவும், இத்திட்டத்தினால் பாதிக்கப்படும் மக்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கவும், தேவையான நிலம் கையகப்படுத்தவும் ரூ.252 கோடி மதிப்புள்ள பணிகள் பொதுப்பணித்துறையின் மூலம் செயற்படுத்தப்பட உள்ளன. இதுவரை ரூ.12 கோடி மதிப்புள்ள பணிகள் செய்யப்பட்டுள்ளன. கூவம் மற்றும் அடையாறு

### *கடலரிப்பு தடுப்புத் திட்டங்கள்*

எண்ணூர் விரைவு நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள கடற்பகுதி இராயபுரத்திலுள்ள மீன்பிடி துறைமுகத்திலிருந்து 9.08 கி.மீ. நீளத்திற்குக் கடலரிப்பினால் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலும் சில குறிப்பிட்ட இடங்கள் கடலரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ளன. தற்போது இப்பகுதிகளைக் கடலரிப்பிலிருந்து காக்க கருங்கற்களைக் குவிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த மூன்றாண்டுகளில் இப்பணிகளுக்கு ரூ.7.96 கோடி (மத்திய நிதி உதவி உட்பட) செலவிடப்பட்டுள்ளது.

மேற்கு நோக்கிப் பாய்ந்து கடலில் வீணாகும் ஆற்று நீரை தமிழகத்திற்குத் திருப்ப கேரள அரசுடன் கீழ்க்கண்ட திட்டங்கள் குறித்துப் பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது.

பாண்டியாறுபுன்னம்புழா நீர்பங்கீடு : 14 டி.எம்.சி. நீரில் 7 டி.எம்.சி. தமிழகத்திற்குத் திருப்பிவிடல்.

பரம்பிக்குளம்–ஆழியாறு ஒப்பந்தங்களில் தேவையான மாற்றங்கள் செய்தல்.

பம்பா–அச்சன்கோவில்–வைப்பாறு இணைப்பின் மூலம் 22 டி.எம்.சி. நீரை தமிழகத்திற்குத் திருப்பிவிடல்.

பெரியாறு நீர்த்தேக்க அளவை முன்பிருந்தவாறு அதன் முழுநீர் மட்டமான 152 அடிக்கு உயர்த்துதல்.

### *கட்டட அமைப்பு*

கட்டட அமைப்பு மாநில அரசு துறைகளுக்கும், இதர முகமைகளுக்கும் கட்டடங்களை கட்டிக் கொடுப்பதற்கும், பராமரிப்பதற்குமான பொறுப்பை வகிக்கின்றது. நல்ல தரமான கட்டடங்களைச் சிறந்த தொழில்நுட்ப உதவியின்

துணையோடு குறைந்த செலவில் கட்டுவதும் கட்டிய கட்டடங்களை நிறைவு தரும் வகையில் பராமரிப்பதும் கட்டட அமைப்பின் நோக்கமாகும்.

கட்டட அமைப்பின் மூன்றாண்டு சாதனைகள் பின் வருமாறு:

**கல்வித்துறை**

1,087 பள்ளிகளில் கூடுதல் வகுப்பறை கட்டடங்கள், 274 பள்ளிகளில் இரு வகுப்பறை கட்டடங்கள், 97 பள்ளிகளில் மூன்று வகுப்பறை கட்டடங்கள், 94 பள்ளிகளில் நான்கு வகுப்பறை கட்டடங்கள், 433 பள்ளிகளில் ஆய்வு கூடங்கள், 127 பள்ளிகளில் கழிவறைகளில் மற்றும் தொடக்கக் கல்வி அலுவலருக்கான அலுவலகக் கட்டடங்கள் ரூ.85.42 கோடி செலவில் ஒப்புதல் வழங்கப்பட்டு செயற்பாட்டில் பல்வேறு நிலைகளில் உள்ளன.

**நினைவகங்கள்**

வள்ளுவர் கோட்டம், பூம்புகார் சுற்றுலா மையம், பேரறிஞர் அண்ணா நினைவகம், நாகர்கோவில் அமரர் ஜீவா நினைவகம், கிண்டியில் முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் நினைவகம், கிண்டியில் தியாகிகள் மணி மண்டபம், மதுரையில் தியாகி விசுவநாததாஸ் நினைவகம், திருநெல்வேலியில் பூலித்தேவன் நினைவகம், பட்டுக்கோட்டையில் கல்யாணசுந்தரம் நினைவகம், உடுமலைப்பேட்டையில் உடுமலை நாராயணகவி நினைவகம் ஆகியவை ரூ.5.82 கோடி செலவில் ஒப்புதல் வழங்கப்பட்டு செயற்பாட்டில் பல்வேறு நிலைகளில் உள்ளன.

**நீதித்துறை கட்டடப் பணிகள்**

46 இடங்களில் நீதிமன்றம் மற்றும் குடியிருப்பு கட்டடங்களும், சென்னை உயர்நீதி மன்றத்தில் 13 விசாரணை அரங்குகளில் மேம்பாட்டுப் பணிகளும், 30 நீதிபதி இல்லங்களும் மொத்தம் ரூ.34.83 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன. ரூ.28.01 கோடி செலவில் 8 நீதிமன்றக் கட்டடப் பணிகள் முடிவுற உள்ளன.

**காவல்துறை**

காவல்துறைக் கட்டடங்கள் ரூ.6.58 கோடி செலவிலும், 2,571 காவலர் குடியிருப்புகளில் நவீன கழிப்பிட வசதி ரூ.5.23 கோடி செலவிலும் ஒப்புதல் வழங்கப்பட்டு செயற்பாட்டில் பல்வேறு நிலைகளில் உள்ளன.

**சிறைத்துறை**

வேலூர் மத்திய சிறை திருச்சி, கடலூர், பாளையங்கோட்டை ஆகியவற்றில் மேம்பாட்டுப் பணிகள் ரூ.8.12 கோடி செலவில் ஒப்புதல் வழங்கப்பட்டு செயற்பாட்டில் பல்வேறு நிலைகளில் உள்ளன.

**வருவாய்த்துறை**

சென்னை, விழுப்புரம் மற்றும் தூத்துக்குடியில் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களும், புதுக்கோட்டை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் ஆட்சி அலுவலகத்தில் கூடுதல் கட்டடங்களும், சங்கராபுரம், அரவாக்குறிச்சி, கமுதி, பேரையூர் ஆகிய இடங்களில் வட்டாட்சியர் அலுவலகமும், பெரம்பலூரில் கோட்டாட்சியர் அலுவலகமும் மொத்தம் ரூ.19.65 கோடி செலவில் கட்டப்பட்டன. மேலும் ரூ.38.54 கோடி செலவில் 7 புதிய மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டப் பணிகள் தொடங்கப்பட உள்ளன.

இவை தவிர பதிவுத்துறை, கருவூலம் மற்றும் கணக்குத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, வேளாண்மைத்துறை, பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி



மேம்பாட்டுப் பணிகள் ஆகியவற்றிற்குக் கட்டடங்கள் ரூ.59.13 கோடி செலவில் ஒப்புதல் வழங்கப்பட்டு செயற் பாட்டில் பல்வேறு நிலைகளில் உள்ளன.

நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின் கீழ் ரூ.59 கோடி செலவில் புதிய அலுவலகங்கள் மற்றும் குடியிருப்பு கட்டடங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு செயற்பாட்டில் பல்வேறு நிலைகளில் உள்ளன.

கட்டட அமைப்பின் மின் பிரிவு நெடுஞ்சாலைத் துறைக்காக 250 வாட்ஸ் சோடியம் ஆவி மின் விளக்குகள் சென்னை–பல்லாவரம்–தாம்பரம் சாலை, எண்ணூர் விரைவு சாலை, மதுரை–ஆரப்பாளையம் சாலை, சேலம்–கொண்டலாம்பட்டி சாலை, வேலூரில் காட்பாடி சாலை மற்றும் பாலாற்று குறுக்குச் சாலைகளில் ஒளியூட்டும் பணிகள் ரூ.3 கோடி செலவில் முடிக்கப்பட்டன. ●

# சாலைப் போக்குவரத்தில் சாதனை

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் போக்குவரத்து மிக முக்கிய அங்கம் வகிக்கிறது. இரயில் போக்குவரத்து மட்டுமே முக்கிய பங்கு வகித்த நிலையை மாற்றி தமிழகத்தில் சாலைப் போக்குவரத்துத் துறையில் மேற்கொண்ட சிறப்பான நிர்வாகச் சீர்திருத்தத்தால் தடங்கலற்ற, பாதுகாப்பான, வசதியான பயணத்தை பொதுமக்களுக்கு அளிக்கும் பொருட்டு சட்டத்தின் மூலமாகவும் பிற முறைகளினாலும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை இவ்வரசு மேற்கொண்டது. அரசின் மூன்றாண்டு சாதனைகளில் சிலவற்றை கீழே காணலாம்.

1-4-1996ஆம் நாளன்றுள்ளவாறு தமிழ்நாட்டிலுள்ள அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 15,857 ஆகும். கடந்த மூன்றாண்டுகளில் பேருந்துகளின் எண்ணிக்கை கணிசமான அளவிற்கு அதிகரிக்கப்பட்டு 28-2-1999ஆம் நாளன்றுள்ளவாறு பேருந்துகளில் எண்ணிக்கை 17,045. இது 7% உயர்வாகும்.

ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தவுடனேயே மாநில அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளுக்கு புதுப் பொலிவினைக் கொடுக்கும் நோக்குடன் அனைத்து மாநிலப் போக்குவரத்துக் கழகங்களிலும் இருந்த பழைய பேருந்துகளுக்குப் பதிலாகப் புதிய பேருந்துகளை சேர்த்தது. கடந்த மூன்றாண்டுகளில் 7,384 புதிய பேருந்துகள் சேர்க்கப்பட்டுள்ளன.

இக்கழகங்கள் 28-2-1999ஆம் நாளன்றுள்ளவாறு 17,045 பேருந்துகளை கொண்டுள்ளன. இவற்றில் 15,390 பேருந்துகள் அன்றாடம் இயக்கப்பட்டு வருகின்றன.

கடந்த மூன்றாண்டுகளில் 1,291 புதிய பேருந்து வழித்தடங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இவற்றில் 442 புதிய வழித்தடங்கள் 1997-98ஆம் ஆண்டில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பரிந்துரைகளின் பேரில் அறிமுகம் செய்யப்பட்டன.

**மாணவர் நலன்**

முன்னர் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்கள் மட்டுமே தமிழ்நாட்டிலுள்ள மாநிலப் போக்குவரத்துக் கழகங்களில் இலவசப் பயணம் மேற்கொள்ளும் சலுகைகள் அனுபவித்து வந்தனர். இந்த அரசு இந்த சலுகையை மேலும் நீட்டித்துள்ளது. தற்போது 1996-97ஆம் ஆண்டிலிருந்து ப்ளஸ்-2 வகுப்பு (12ஆம் வகுப்பு) வரை படிக்கும் மாணவர்களும் மாநிலப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசப் பயணம் மேற்கொள்ளலாம்.

அரசு அங்கீகாரம் பெற்றுள்ள கல்லூரிகளிலும் ஏனைய கல்வி நிறுவனங்களிலும் பயிலும் மாணவர்கள் மாநில விரைவுப் போக்குவரத்துக் கழகங்கள் நீங்கலாக மற்ற மாநிலப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் மாதாந்திர சலுகைக் கட்டண அட்டையில் 50% கட்டணம் செலுத்தி பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றன.

மொத்தத்தில், மாநிலம் முழுவதிலும் சுமார் 16 இலட்சம் மாணவர்கள் இலவச சலுகைக் கட்டணங்களால் பயனடைகின்றனர். சுமார் 6 இலட்சம் மாணவர்கள் 50% சலுகைக் கட்டணத்தால் பயனடைகின்றனர்.

1997ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி 'மினி பஸ்' திட்டத்தை இத்துறை ஆரம்பித்தது. இதுவரை, ஒரு முறை கூட பஸ் செல்லாத கிராமங்களுக்கும் இப்பொழுது மினி பஸ்கள் விடப்படுகின்றன. கிராம மக்கள் அனைவரும் இத்திட்டத்தினை வரவேற்றுள்ளனர். தற்பொழுது ஏறத்தாழ 550 சிறு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

கிராமப்புற மக்கள் அலைச்சலின்றி அருகிலேயே தங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஆங்காங்கே புதிதாக 6 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களும், 13 பகுதி அலுவலகங்களும், 2 செக்போஸ்ட்டுகளும், ஒரு போக்குவரத்து துணை ஆணையர் அலுவலகமும் உருவாக்கப்பட்டன.

ஒரு பொத்தானை அழுத்தியவுடன் வாகனத்தைப் பற்றிய அனைத்து விவரமும், ஓட்டுநர் பற்றிய விவரமும் அறியும் விதத்தில் இத்துறை கணினி மயமாக்கப்படுகிறது. மேலை நாடுகளுக்கு நிகராக தமிழகத்தில் கணினியினால் உருவாக்கப்பட்ட துளையிடும் வசதி கொண்ட ஓட்டுநர் உரிமங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஒருமுனை வரி அடிப்படையில் இவ்வரசு கர்நாடகத்தில் 150 பேருந்துகளை இயக்கி வருகிறது.

மக்களுக்கு சேவை செய்வதையே கடமையெனக் கொண்டு, அவர்கள் நலம் பேணுவதற்காக போக்குவரத்து அலுவலகம் வரும் பொதுமக்கள் அமருவதற்காக ரூ.7.59 இலட்சம் செலவில் பெஞ்சுகள் வாங்கப்பட்டன. மேலும் கழிப்பிட வசதிக்கென ரூ.14 இலட்சம் செலவு செய்ய ஆணையிட்டது.

பொது மக்களை சுரண்டி அல்லல்படுத்தும் இடைத் தரகர்களை ஒழிக்க உரிய விதித் திருத்தம் கொண்டு வந்தது. படிவங்களுக்காக (Form) பொதுமக்கள் அலைந்து துயருற்ற நிலையை மாற்றி எளிதாக கிடைக்கும் வகையில் முகவர்களை நியமித்தது இவ்வரசு.

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்
**திரு.கே.பொன்முடி**

ஓட்டுநர் திறனை மேம்படுத்த தேர்ச்சித் தளங்கள் அமைத்து சாதனை படைத்தது இவ்வரசு.

ஓட்டுநர் உரிமம் பெற குறைந்தபட்சம் 8ஆம் வகுப்பு கல்வித் தகுதியெனவும், ஓட்டுநர் பணியும் "தொழில்" என கொள்ள சட்டத்தில் வகை செய்ய மத்திய அரசை கேட்டுள்ளது.

மக்களின் விருப்பமே அரசின் விருப்பம் என்பதற்கேற்ப பதிவு எண்ணில் கூட்டுத் தொகை '8' விரும்பாதவர்களுக்கு வழங்க வேண்டாம் என ஆணையிட்டு அவர்களின் மகிழ்வைப் பெற்றது இவ்வரசு. மேலும் நவீன எண்களின் கட்டணத்தை ரூ.5000லிருந்து வெகுவாகக் குறைத்தது.

மகளிரின் நலம் நாடும் இவ்வரசு, இத்துறையில் வரலாற்றில் முதல் பெண் ஆய்வாளரை கரூரில் நியமனம் செய்தது. மகளிரைக் கொண்டு ஒரு கூட்டமைப்பு ஏற்படுத்தி பெண்களே ஆட்டோ ரிக்ஷாக்களை இயக்கும் வகையில் 8 பெண்களுக்கு அனுமதி அளித்தது.

பணியாளர்களின் திறனை மேம்படுத்த மத்திய சாலைப் போக்குவரத்து நிறுவனம், மோட்டார் வாகன ஆராய்ச்சி நிலையம்,



அண்ணா மேலாண்மை நிறுவனம் ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சி அளித்தது.

30.10.98 முதல் சென்னை மாநகரில் 5 இருக்கைகள் கொண்ட டீசல் தானியங்கி வண்டிகள் அறிமுகப் படுத்தியதும் இவ்வரசு.

தொலை தூரங்களுக்குச் செல்லும் பயணிகளின் வசதியைக் கருத்தில் கொண்டு அதிக இடவசதியுடன் கூடிய சொகுசுப் பேருந்தை அறிமுகம் செய்தது.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' எனும் முதுமொழியை மனதிற் கொண்டு மாசற்ற தமிழகத்தை உருவாக்க 1.7.98 முதல் வாகனங்களின் புகையளவை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க 132 சோதனை மையங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. 6 மாதத்திற்கொரு முறை புகையளவு சோதனை செய்யவும், அதிகப் புகை வெளியேற்றும் வாகனங்களுக்கு அவ்விடத்திலேயே தண்டனை வழங்கவும் ஆணையிட்டு மக்களின் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டியது இவ்வரசு.

விலை மதிப்பற்ற மக்களின் உயிரைக் காக்கும் வகையில் சாலை விபத்துக்களை தவிர்க்கும் நோக்கில் ஓட்டுநர் உரிமங்கள் வழங்குவதில் உள்ள நடைமுறையை சரியாக பராமரித்தும், தானியங்கி சைகை விளக்குகள் அமைத்தும், ஒரு வழிப்பாதை, நான்கு பிரிவுப் பாதை அமைத்தும், அதிகச் சுமையேற்றல், குடிபோதையில் வாகனம் ஓட்டுதல் ஆகியவற்றைக்



கண்டுபிடித்து தடுத்தும், இவற்றையெல்லாம் கண்காணித்து ஆவன செய்ய மாவட்டந்தோறும் சாலைப் பாதுகாப்புக் குழுக்கள் அமைத்தும், அதற்கும் மேல், உள்துறைச் செயலரின் தலைமையில் உயர் நிலைக் குழு அமைத்து ஆய்வு செய்தும் பணியாற்றி வருகிறது. இருப்பினும் ஏதோ ஒரு காரணத்தால் விபத்து ஏற்படும் போது மாண்புமிகு முதலமைச்சரின் விபத்து நிவாரண நிதியிலிருந்து, பாதிக்கப்பட்டவரின் நிதி நிலையினை கருத்தில் கொள்ளாமல் அனைவருக்கும் நிவாரணம் வழங்கப்படுகிறது. இவ்வகையிலான தொகை கீழ்க்கண்டவாறு இவ்வரசு உயர்த்தியுள்ளது.

★ இறப்பு ரூ.3000லிருந்து ரூ.5000

★ நிரந்தர செயலிழப்பு ரூ.1500லிருந்து ரூ.3000

★ ஒரு கண் அல்லது ஒரு கை அல்லது கால் இழப்பு ரூ.800லிருந்து ரூ.2000

★ ஏனைய இனங்கள் ரூ.100லிருந்து ரூ.250

இத்துறையின் செயல்பாடு நாட்டிலேயே தமிழகம் பெருமை கொள்ளும் வகையில் உள்ளது. சாதனைகள் குறிப்பிடத் தக்கவையாக இருந்தாலும் இவ்வரசின் இலக்கினை அடைய இன்னும் முழு மூச்சுடன் செயல்பட்டு உலகிலேயே முதலிடத்தை அடைந்து நாட்டின் பொருளாதார வளர்ச்சியினை மேம்படுத்தும் என்பது உள்ளங்கை நெல்லிக் கனியாகும். □

# சாதனை படைக்கும் நெடுஞ்சாலைத்துறை

- மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் துறைமுகத்துறை அமைச்சர்
திரு. தா.கிருட்டிணன்

தமிழ்நாட்டில் நெடுஞ்சாலைத்துறை தனது கட்டுப்பாட்டில் 3,783 கி.மீ. தேசிய நெடுஞ்சாலை களாகவும், 4,192 கி.மீ. மாநில நெடுஞ்சாலைகளாகவும் 10,051 கி.மீ. பெரிய மாவட்டச் சாலைகளாகவும், 40,820 கி.மீ. இதர மாவட்ட சாலைகளாகவும், ஆகமொத்தம் 58,846 கி.மீ. சாலைகள் பராமரிக்கப்பட்டும் மேம்படுத் தப்பட்டும் வருகின்றது. நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் உள்ள சாலைகளைப் பராமரிக்கவும், மேம்படுத்தவும் பல்வேறு தலைப்புகளின் கீழ் தமிழக அரசு நிதி ஒதுக்கீடுகள் செய்து கொடுக்கின்றது.

## திட்டப் பணிகள்

நெடுஞ்சாலைத்துறையில் 1996-97ஆம் ஆண்டிற்குத் திட்டப்பணிகளுக்கான தலைப்பில் ரூ.224.10 கோடியும், 1997-98ஆம் ஆண்டிற்கு ரூ.376.04 கோடியும், 1998-99ஆம் ஆண்டிற்கு ரூ.492.55 கோடியும் அரசால் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

## பகுதி–II திட்டம்

பகுதி-II திட்டம் தலைப்பின் கீழ் 1996-97ஆம் ஆண்டில் 33 சிறு பாலங்களும், 30.60 கி.மீ. சாலை பணிகளும் எடுத்து செயல்படுத்தப் பட்டன. 1997-98ஆம் ஆண்டில் 59.20 கி.மீ. சாலைப்பணிகள் மற்றும் 22 சிறுபாலங்கள் எடுத்துச் செயல்படுத்தப்பட்டன. 1998-99ஆம் ஆண்டில் 28 பாலப்பணிகளும் 91.70 கி.மீ. சாலைப்பணிகளும் எடுக்கப் பட்டு பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

## "நபார்டு" வங்கி திட்டம்

சாலைகளைச் செப்பனிட, தமிழக அரசு 'நபார்டு' வங்கியின் நிதி ஆதாரங்களைப் பெருமளவில் பெறுவதில் வெற்றி பெற்றுள்ளது.




1997-98ஆம் ஆண்டில் நபார்டு வங்கியின் ஊரக உள் கட்டமைப்பு வளர்ச்சி நிதி 2இல் 2,823 கி.மீ. நீளமுள்ள அரசு சாலைகளை வலுப்படுத்துதல், அகலப்படுத்துதல் மற்றும் 8 முக்கிய பாலங்களைக் கட்டுவதற்கு ரூ.157.53 கோடி கடனுதவி பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டன. சாலைப்பணிகள் அனைத்தும் முடிவுறும் நிலையில் உள்ளன.

1998-99ஆம் ஆண்டில் நபார்டு வங்கியில் ஊரக உள் கட்டமைப்பு வளர்ச்சி நிதி 3இல் புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் கன்னியா குமரி மாவட்டங்களில் 366.58 கி.மீ. நீளமுள்ள பெரிய மாவட்டச் சாலை மற்றும் இதர மாவட்டச் சாலைகளை மேம்பாடு செய்யவும் மற்றும் தமிழக அரசு சாலைகளில் 25, மாவட்டங்களில் அமைந்துள்ள 53 முக்கிய பாலங்கள் புதியதாக கட்ட அல்லது திரும்ப கட்டுவதற்கு ரூ.125.77 கோடி கடனுதவியுடன் பணிகள் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப் பட்டுள்ளன. சாலைப் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. பாலப்பணிகள் செயல்படுத்த நடவடிக்கைகள் தொடங்கப் பட்டுள்ளன.

இவை தவிர, தமிழகத்தில் 22 மாவட்டங்களில் 67 பாலங்களைக் கட்டுவதற்கும் பாலங்கள் அமையவுள்ள, இடங்களில் அமைந்துள்ள 184 கி.மீ. நீளமுள்ள 28 சாலைகளை மேம்பாடு செய்யவும், நபார்டு வங்கியின் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி 4இல் ரூ.756.3 கோடி கடனுதவியுடன் மேற்கொள்ள ஒப்பளிக்கப்பட்டு பணிகள் துவங்கப்படவுள்ளன. மேலும் கன்னியாகுமரி மாவட்டம், மேற்கு கடற்கரைச் சாலையில் 71 கி.மீ. நீளமுள்ள விடுபட்ட பகுதிகளை நபார்டு வங்கி உதவியுடன் ரூ.22.39 கோடி மதிப்பில் இணைத்திடும் பணி தொடங்கப் பெற்றுள்ளது.

கிராமச் சாலைகள் திட்டத்தில், 1991ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கின்படி 1000-க்கும் மேற்பட்ட மக்கள் வாழும் 301 கிராமங்கள் பயன்பெறும் வகையில் 704.20 கி.மீ. நீளத்திற்குத் தார்ச்சாலை அமைக்கும் பணிகள் ரூ.53.73 கோடி செலவில் நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. இதனால் 1000-க்கும் மேற்பட்ட மக்கள் வாழும் அனைத்து கிராமங் களுக்கும் இணைப்புச் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

## சிறப்பு உறுப்புத் திட்டம்

சிறப்பு உறுப்புத் திட்டத்தின் கீழ் கிராம மக்கட் தொகையில் 50 விழுக்காட்டிற்கு அதிகமான ஆதிதிராவிடர் மக்கள் தொகை உள்ள கிராமங்களுக்குத் தார்ச்சாலை வசதி செய்திட 1998-99ஆம் ஆண்டு நபார்டு வங்கியின் நிதி உதவி பெற்று 190.30 கி.மீ. நீளத்திற்குத் தார்ச் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன. மேலும் 203 கி.மீ. சாலை அமைக்க ரூ.30.34 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## பேருந்து வழித்தட மேம்பாட்டுத் திட்டம்

பேருந்து வழித்தடங்களை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக பேருந்துகள் சென்று வரும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை தார்ச் சாலையாக மேம்படுத்துவதற்குப் பேருந்து வழித்தட திட்டத்தின் கீழ் 1998-99ஆம் ஆண்டு நபார்டு வங்கியின் நிதியுதவி பெற்று 391.90 கி.மீ. நீளத்திற்குத் தார்ச் சாலைகள் ரூ.29.18 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

## பாலங்கள்

பல ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட வலுவிழந்த பாலங்கள் ஏறத்தாழ 3,357 உள்ளன. இவைகளைத் திரும்ப கட்டுவதற்கும் குறுகிய பாலங்களை மேம்படுத்துவதற்கும் முதன்முறையாக ரூ.347 கோடி மதிப்பில் மாநிலம் முழுவதும் 106 பாலங்களைக் கட்ட/திரும்ப கட்ட நபார்டு/ஹட்கோ உதவியுடன் பெரிய திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் 72 பாலங்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளன. மற்ற பாலப்பணிகளும் விரைவில் தொடங்கப்பட உள்ளன. இப்பாலங்கள் அனைத்தும் இரண்டு ஆண்டுகளில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த 52 ஆண்டுகளில் நெடுஞ்சாலைத் துறையினரால் மொத்தம் 195 பெரிய பாலங்கள் மட்டுமே கட்டி முடிக்கப்பட்ட நிலையில், 106 பெரிய பாலங்கள் இரண்டு ஆண்டுகளில் தமிழகத்தில் அமையப் பெறுவது மிகப்பெரிய சாதனையாகும்.

இதேபோல் ரூ.95.44 கோடி செலவில் இதர மாவட்டச் சாலை ஊராட்சி ஒன்றிய சாலைகளில் 102 புதிய பாலங்களைக் கட்ட திட்டமிடப்பட்டு மேலே குறிப்பிட்டுள்ள இரண்டு நிதி நிறுவனங்களில் நிதி உதவியுடன் செயல்படுத்த மாநில அரசு ஆணையினை வெளியிட்டு தள ஆய்வுப் பணிகள் நடைபெற்று முடிந்து, ஒப்பந்தங்கள் கேட்கப்பட்டுள்ளன. இந்தப் பாலங்களும் டிசம்பர் 2000-ஆம் ஆண்டுக்குள் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டு அதற்கான வகையில் நெடுஞ்சாலைத்துறை அலுவலர்கள் முடுக்கி விடப்பட்டுள்ளனர்.

## பொருளாதாரம் மற்றும் பன் மாநில முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்கள்

பொருளாதாரம் மற்றும் பன் மாநிலங்களுக்கிடையே முக்கியத்துவம் வாய்ந்த பணிகள் திட்டத்தின் கீழ், 35 கோடி ரூபாய் செலவில் திருப்பூர் நகருக்கு 46.2 கி.மீ. சுற்றுச் சாலையும் திண்டிவனம் நகரில் மேம்பாலம் கட்டும் பணியும் எடுக்கப்பட்டு நல்ல முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணி 7 தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டு பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.

## நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்

நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 1988-89ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. உலக வங்கி இத்திட்டங்களுக்கு நிதி வழங்க முன்வந்தது. இத்திட்டங்கள் சென்னை, மதுரை, கோவை, திருச்சி, நெல்லை, தூத்துக்குடி, திருப்பூர், சேலம், ஈரோடு, மற்றும் வேலூர் ஆகிய 10 நகரங்களில் செயலாக்கப் படுகின்றன. எனினும் உலக வங்கியின் நிதி உதவி 30.9.97ல் முடிவடைந்துவிட்ட நிலையில் மீதமுள்ள பணிகளை தமிழ்நாடு நிதியிலிருந்து தொடர்ந்து நடத்தப் பட்டு, முடிக்கப்பட்டு வருகின்றன. இவைகளில் ராயபுரம், கிண்டி ரயில்வே மேம்பாலப் பணிகளும் அடங்கும். இப் பணிகளை 1999-2000 ஆம் ஆண்டில் முடிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. இப்பணிகளையும் சேர்த்து 5 பணிகள் வரும் ஆண்டில் முடிப்பதற்கு ரூ.1628.37 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 27.20 கி.மீ. வரை மதுரை புற வழிச்சாலைப் பணிகளும் செயல்படுத்த திட்டமிட்டு பணிகள் நல்ல முன்னேற்றத்தில் உள்ளன.



## இருப்புப் பாதை பாலங்கள்

★ செயின்ட் தாமஸ் மலை ரயில் நிலையத்திற்கு அருகில் கீழ்ப்பாலம் கட்டநிலம் கையகப்படுத்த ரூ.2.50 கோடி ஒதுக்கீடு.

அரக்கோணத்தில் மேம்பாலம் - ரூ.10.175 கோடியில் தற்போது முடிவடையும் நிலை.

★ திருவாரூர் நகரில் கீழ்ப்பாலம் - ரூ.5 கோடியில், 1999-2000 நிதியாண்டில் முடிவடையும்.

★ திண்டிவனம் - தேசிய நெடுஞ்சாலை 66ல் இரயில்வே கடவில் மேம்பாலம் - தேசிய நெடுஞ்சாலை - 45 பரிமாற்றப்பாலம் - ரூ.19.89 கோடி - (பொருளாதாரம் மற்றும் பன் - மாநில முக்கியத்துவம் வாய்ந்த திட்டம்) 60 சதவீதம் முடிவடைந்துள்ளது. 1999-2000ஆம் ஆண்டில் முடிவடையும்.

★ விழுப்புரம் - கீழ்ப்பெரும் பாக்கம் ரயில்வே கீழ்ப்பாலம் அமைக்கும் பணி ரூ.6.50 கோடியில் 50 சதவீதம் முடிவடைந்துள்ளது.

★ கடலூர் - திருப்பாதிரிப் புலியூர் - ரயில் நிலையம் அருகில் மேம்பாலம் அமைக்க - நிலம் கையகப்படுத்த ரூ.1.20 கோடி.

★ விருதுநகர் ரயில்வே மேம்பாலம் - ரூ.7.40 கோடியில் பணி துவங்கப்பட்டுள்ளது.

★ சிதம்பரம் ரயில் நிலையத்தருகில் இரயில்வே மேம்பாலம் ரூ.10 கோடி 1999-2000ஆம் ஆண்டில் பணி தொடங்கும்.

★ மதுரை மாநகரில், தமிழ்ச்சங்கம் சாலையில், 'மதுரை மில்', அருகே இரயில்வே மேம்பாலம் அமைக்க ரூ.6.5 கோடி.

★ கரூர் இரயில் மேம்பாலம் அமைக்க ரூ.12 கோடி

★ பி.ஓ.டி. திட்டத்தின் கீழ், பச்சைக்குப்பம் இரயில்வே மேம்பாலம் மற்றும் வாணியம்பாடியில் ஒரு மேம்பாலம் ஆக இரண்டு இரயில்வே மேம்பாலங்கள்.

★ ரூ.6.07 கோடியில், சென்னை மாநகர் கிண்டி இரயில்வே மேம்பாலம்

★ சென்னை மாநகர் இராயபுரம் இரயில்வே மேம்பாலம் ரூ.11.55 கோடி.

★ மதுரை புறவழிச்சாலையில் மதுரை - இராமேஸ்வரம் இரயில்வே பாதையிலும் (ரூ.6 கோடி) மதுரை - விருதுநகர் இரயில்வே பாதையிலும் இரண்டு இரயில்வே மேம்பாலங்கள் (ரூ.8 கோடி)

★ திருச்சி - கரூர் சாலையில் ரூ.9 கோடியில் ஒரு இரயில்வே மேம்பாலம்.

★ திருச்சி மாநகரில் பாலக்கரை, திருவரங்கம் மற்றும் திருச்சி டவுன் இரயில்வே நிலையம் ஆகிய பகுதிகளில் 3 இரயில்வே மேம்பாலங்கள்.

1999-2000ஆம் ஆண்டில், சென்னை தொழில் நுட்ப கல்லூரி (எம்.ஐ.டி) இரயில்வே கடவு மற்றும் வேளச்சேரி - தாம்பரம் ரோட்டில் தாம்பரத்தில் உள்ள இரயில்வே கடவு ஆகிய இடங்களில் இரயில்வே மேம்பாலங்கள் கட்டப்படும். மேலும், ஏற்கெனவே தொடங்கப் பட்டு சில பல காரணங்களால் நின்றுபோன, 'செயின்ட் தாமஸ் மலை' மற்றும் தில்லைகங்கா நகர் இரயில்வே கீழ்ப்பாலப் பணிகள் இந்த ஆண்டு மீண்டும்

தொடங்கப்பட்டு 2000-ஆம் ஆண்டிற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன.

இவைகள் தவிர, மேலும் 24 இரயில்வே மேம்பாலங்கள் தமிழகத்தில் கட்டப்பட வேண்டுமெனவும், அதற்கான நிதியை தமிழக அரசு ஒதுக்கீடு செய்யத் தயராக உள்ளது என்றும் மைய அரசிற்குரிய அதன் பங்கான 50 சதவீதம் நிதியை ஒதுக்கீடு செய்து தருமாறு இரயில்வே துறையை நாம் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கின்றோம்.

## கிழக்குக் கடற்கரைச் சாலைத் திட்டம்

கிழக்குக் கடற்கரைச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.102 கோடி செலவில் சென்னையில் இருந்து கடலூர் வரை 166 கி.மீ. சாலை பணி முடிவடைந்து கடந்த 14.1.98 அன்று போக்குவரத்து அனுமதிக்கப்பட்டது.

கடலூரிலிருந்து, தூத்துகுடி வரையில் உள்ள கிழக்குக் கடற்கரைச் சாலையை மேம்படுத்தி முடிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 905 கோடி ரூபாய் செலவில் 1500 கி.மீ. சாலைகள் உலக வங்கி நிதியுடன் மேம்பாடு செய்ய எடுத்துக் கொள்ள திட்டமிடப்பட்டு முதல் கட்டமாக கடலூர் முதல் தூத்துக்குடி வரை 375 கி.மீ. சாலைகளுக்கான விரிவான பொறியியல் விவரங்கள் மற்றும் வடிவமைப்பு தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து மேலும் 375 கி.மீ. நீளமுள்ள சாலைகளுக்கான விரிவான பொறியியல் விவரங்கள் மற்றும் வடிவமைப்பு தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 750 கி.மீ நீளமுள்ள சாலைகள் மேம்படுத்தத் திட்டமிடப்பட்டு, சாலைகளும் தெரிவு செய்யப் பட்டுள்ளன. இவை தவிர 1996ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட வெள்ளத்தில் மிகவும் பழுதடைந்த 1,543 கி.மீ. அரசுச் சாலைகள் நிரந்தர நிவாரணப் பணிகள் கீழ் 8 மாவட்டங்களில் ரூ.150 கோடி செலவில் மத்திய சுடுகலவை இயந்திரங்கள் மற்றும் பேவர் இயந்திரங்கள் அமைத்து 1200 கி.மீ. சாலைகள் சீர்செய்யப்பட்டு மிகுதிப்பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

## சாலைப் பணியாளர் நியமனம்

1977ஆம் ஆண்டு முதல் இத்துறையில் சாலைப் பணி யாளர்கள் நியமனம் செய்யாததால் சாலை பராமரிப்பு மிகவும் பாதிக்கப்பட்டது.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் காரணமாக 10,000 சாலைப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு தற்போது சாலைகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## கரும்புச் சாலைகள்

கரும்புத் தீர்வை நிதியிலிருந்து அமைக்கப்படும் இச்சாலைகள் தற்போது 1,366 கிலோ மீட்டராக உள்ளது.

இச்சாலைகள் அனைத்தும் சரிவரப் பராமரிக்கப்படாத நிலையில் உள்ளதால், அதை பராமரிக்கும் பொறுப்பினை நெடுஞ் சாலைத் துறையிடம் ஒப்படைக்க அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ரூ.15.07 கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்தின் கீழ் 198.50 கி.மீ. உள்ள 704 புதிய சாலைகள் அமைக்கப்படவுள்ளன.

## வேளாண்மை வளர்ச்சி

வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்கள் உலக வங்கி நிதி உதவி யுடன் மேற்கொள்ளப்பட்டன. அவைகளில் பல முடிவடையாத நிலையில் உலக வங்கித் திட்டம் சென்ற 31.12.98 தேதியுடன் முடிவடைந்து விட்ட காரணத்தால், அவைகளை முடிப்பதற்குத் தேவையான நிதி முழுவதும் தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

## மரக்கன்றுகள் நடும் திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பவள விழாவை முன்னிட்டு, நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் கடந்த ஆண்டு 75,000 மரக்கன்றுகள் சாலை ஒரங்களில் நடப்பட்டு பராமரிக்கப் பட்டு வருகின்றன. அதற்காக ரூ.70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. தொடர்ந்து வரும் ஆண்டிலும் மரக்கன்றுகள் நட்டுப் பராமரிப் பதற்கு ரூ.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# தமிழ் ஆட்சிமொழி

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி – தமிழ் பண்பாடு
மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்
முனைவர் **மு. தமிழ்க்குடிமகன்**

தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாட்டுத்துறை 13.5.1996 அன்று தனியாகப் பிரிக்கப்பட்டது. அதன் அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 10.9.1996 முதல் ரூ.500 ஆக உயர்த்தி வழங்கப்பெற்று வருகிறது. இப்போது 459 பேர் பயன்பெற்று வருகின்றனர்.

அரசு அருங்காட்சியகம், பழநி, திருவாரூர், சிவகங்கை, காஞ்சிபுரம், நாகை ஆகிய ஐந்து இடங்களில் புதிய அருங்காட்சியகங்கள் தோற்றுவிக்கப் பட்டுள்ளன. 1999–2000 நிதியாண்டில் இரண்டு அருங்காட்சியகங்கள் அமைக்கப் படும்.

### *இசைப்பள்ளி*

திருவையாறு தமிழ் இசைக் கல்லூரி மற்றும் திருநெல்வேலி, தூத்துக்குடி, கரூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, திருவாரூர், சேலம், கடலூர், விழுப்புரம், பெரம்பலூர் ஆகிய 10 மாவட்டத் தலைநகர்களில் புதிய இசைப்பள்ளிகள், 60 இசை வல்லுநர்கட்கு வேலைவாய்ப்பு.

1999 பிப்ரவரியில் உலகத் தமிழ் இணையம் மாநாடு தமிழக அரசால் நடத்தப்பட்டு, கணினியின் விசைப்பலகை ஒரே சீராக்கப்பட்டதுடன், உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் அமைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதன் முதலில் இணையத்தில் வாழ்த்துச் செய்தி வழங்கிய பெருமை இந்தியாவிலேயே தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்குத்தான் உண்டு. இந்தியாவிலேயே இணையத்தில் அதிகப் பக்கங்களைக் (Home Page) கொண்ட மொழி தமிழ்தான் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. உலகில் உள்ள தமிழர்கள் அனைவரையும் இணையம் இணைக்கிறது.

### *இந்திய ஆட்சிப் பணித் தேர்வு*

இந்திய ஆட்சிப் பணித் தேர்வுகள் தமிழில் எழுதப்பட்டால், அதிகம் பேர் வெற்றி பெற வாய்ப்பு உள்ளது. அதனால் தமிழ்மொழி மற்றும் இலக்கிய வரலாறு, புவியியல், வரலாறு போன்ற பாடங்களைத் தனித்தனியே தொகுத்து வெளியிட – இந்திய ஆட்சிப் பணித்தேர்வு எழுதுவோர்க்கு உதவி செய்திட அரசு முன்வந்துள்ளது. இதற்காக ரூ.3 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *இயல், இசை, நாடக மன்றம்*

இதுவரை இருந்த நல்கைத் தொகை ரூ.25 இலட்சம் ரூ.45 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. புகழ்பெற்ற கலைஞர்களின் மறைவுக்குப்பின் தடுமாறும் குடும்பத்தாருக்கு நிதியுதவி அளித்தல் ரூ.4.70 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. நவீனக் கலையரங்கம் அமைக்க ரூ.34 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### *இலக்கணக்குழு*

தொல்காப்பியம், நன்னூல் ஆகிய இலக்கண நூல்களின் அடிப்படையில் இக்காலத் தேவைக்கேற்பவும் பள்ளி/ கல்லூரி மாணவர்கள் எளிதில் பயன் கொள்ளத் தக்க வகையிலும் ஒரு புதிய இலக்கண நூலை எழுதி வெளியிடு வதற்காக வல்லுநர் குழு ஒன்றினை அமைக்க அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

### *உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்*

ஊர்திகளில் காணப்படும் பதிவெண் பலகைகளில் ஆங்கில எழுத்துகள் மட்டுமே பயன்டுத்தப்பட்டு வருகின்றன. தற்போது தமிழில் அவற்றை எழுதிக்



கொள்ள அரசாணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

***செம்மொழி***

இந்தியாவின் செம்மொழிகளில் தமிழும் ஒன்று என அறிவிக்க வேண்டி, நடுவண் அரசுக்கு மடல்கள் எழுதப் பட்டுள்ளன. எனினும், அதற்கான விடைகள் எவையும் வரப்பெறவில்லை.

***சென்னை – பெயர் மாற்றம்***

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னை என்ற பெயர் எல்லா மொழிகளிலும் அவ்வாறே வழங்கப்பட வேண்டும் என்று செய்த அறிவிப்பு பற்றிப் பெங்களூரில் உள்ள மைய அரசு நில அளவைத்துறையின் (தெற்கு மண்டலம்) குறிப்புரை 12.8.96ல் கோரப்பட்டது. இது தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களாலேயே சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டு, ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது. நடுவண் அரசின் ஒப்புதல் பெற்று இன்று எல்லா இடங்களிலும் சென்னை எனும் பெயர் ஆங்கிலத்திலும் பிறமொழிகளிலும் வழங்குமாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

***தமிழ் வளர்ச்சி வளாகம்***

ரூ.2 கோடி செலவில் அருங்காட்சியகப் பகுதியில் தமிழ் வளர்ச்சி வளாகம் ஒன்று உருவாகின்றது. இதில் தமிழ் வளர்ச்சி இயக்ககம், தொல்பொருள் ஆய்வுத் துறை ஓலைச்சுவடி நூலகம், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் ஆகிய அனைத்தும் ஒரே இடத்தில் அமையுமாறு, இதனை பார்வையிட வரும் உள்நாட்டாரும், வெளிநாட்டாரும் ஒரே இடத்தில் தமிழ் தொடர்பான விளக்கங்களைப் பெறும் வகையிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

***தமிழில் அகவி*** (Pager)

சென்னையில் உள்ள ஆர்பிஜி (RPG) அகவி நிறுவனமும், உலக அமைப்பான மோட்டோராலவும் சேர்ந்து தமிழில் அகவி எனும் தகவல் அறிவிப்புக் கருவியை உருவாக்கியுள்ளன. உசா மார்ட்டின் நிறுவனமும் தமிழ் அகவியை வெளியிட்டுள்ளது. கோவையில் மட்டும் இதனை 3,000 பேர் வாங்கியுள்ளனர்.

***தமிழில் அறிவியல் நூல்கள்***

வருங்காலத்தில் பொறியியல் கல்வியைத் தமிழில் பயிலவும், வேறு வகையான பயன்பாட்டிற்கும் அறிவியல் நூல்களைத் தமிழில் கொண்டு வரும் முயற்சியை அரசு மேற்கொண்டது. 15 பல்கலைக்கழகங்களுக்கு ரூ.64 இலட்சம் பிரித்து வழங்கப்பட்டு, அதனடிப்படையில் இன்று அனைத்து நூல்களும் வெளியிடப் பட்டுள்ளன.

***தமிழில் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்***

தரம் மிகுந்த நூல்களைத் தமிழில் வெளியிட்டு உதவும் தகுதி மிக்காரையும் நெஞ்சார வாழ்த்த வேண்டும் என்ற கடமை உணர்ச்சி மேலீட்டால், பதிப்பகத்தாருக்கும் பாராட்டிதழ் வழங்கிச் சிறப்பித்து வருகிறது.

முதற்பரிசு ரூ.5,000 ஆகவும், இரண்டாம் பரிசு ரூ.3,000 ஆகவும் மூன்றாம் பரிசு ரூ.1,000 ஆகவும் வழங்கப் பட்டு வந்த பரிசுத்தொகை 1997 முதல் முதற்பரிசு ரூ.10,000 இரண்டாம் பரிசு ரூ.5,000, மூன்றாம் பரிசு ரூ.2,000 என உயர்த்தி வழங்கப்படுகிறது.

***தமிழில் மருத்துவம்***

மருந்துச் சீட்டுகள் அனைத்தும் தமிழில் எழுதப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அரசு வெளியிடும் மாத்திரைகளுக்கான உறைகளில் தமிழ் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

***தமிழில் வழிபாடு***

தமிழில் வழிபாடு என்பதை நாடெங்கிலும் தெளிவுபடுத்தி முறையான அறிஞர் குழு – உயர்மட்டக் குழுவின் இசைவு – சிவாச்சாரியார், பட்டாச்சாரியார், ஓதுவார்கள் முன்னிலையில் அரங்கேற்றம் – ஆதீன கர்த்தர்கள் வழங்கிய திருத்தங்கள் ஏற்பு எனும் நிலையில் இன்று சிவபெருமான், நடராசர், தென்முகக் கடவுள், உமையம்மை, விநாயகர், முருகவேள், திருமால், தாயார், கோதண்டராமர், மாரியம்மன், காளியம்மன், துர்க்கையம்மன் போற்றிகள் வெளியிடப் பட்டுள்ளன.

***தொடர் வண்டி***

தமிழக அரசு எடுத்த முயற்சியின் வாயிலாக நடுவணரசுக்கு உட்பட்ட தொடர் வண்டித் துறையில், திரு. அக்னி கோத்ரி என்பவர் உடனடியாகச் செயற்பட்டு, அனைத்துத் தொடர் வண்டிகளிலும் தமிழில் பெயர்ப் பலகைகளை வைத்துள்ளார். அதன்படிக் 'கம்பன் விரைவு வண்டி', 'மலைக்கோட்டை விரைவு வண்டி', 'வேகத் தொடர்வண்டி' முதலிய சொற்றொடர்களைத் தொடர் வண்டிகளில் இப்போது காணலாம்.

***நாட்டுடைமை***

தேவநேயப் பாவாணர் நூல்களுக்காக ரூ.20 இலட்சமும், மறைமலையடிகள் நூல்களுக்காக ரூ.30 இலட்சமும், திரு.வி.க. நூல்களுக்காக ரூ.20 இலட்சமும், கல்கி நூல்களுக்காக ரூ.20 இலட்சமும் பரிவுத் தொகையாக வழங்கப்பட்டு அனைவரது நூல்களும் நாட்டுடைமையாக்க ப்பட்டுள்ளன.

சுதந்திரப் பொன்விழாவையொட்டி விடுதலை உணர்வூட்டி நூல்கள் எழுதிய மறைந்த தேசியத் தமிழ் எழுத்தாளர்கள் 15 பேரின் நூல்களை நாட்டுடைமையாக்கி மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்தார். அவர்களின் பெயர்கள் வருமாறு:

- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை,
- ப. ஜீவானந்தம்,
- நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை,
- மூதறிஞர் இராஜாஜி,
- வ.உ. சிதம்பரனார்,
- சுத்தானந்த பாரதியார்,
- அகிலன்,
- ஏ.எஸ்.கே. அய்யங்கார்,
- வ.ரா.,
- நாவலர் சோமசுந்தர பாரதியார்,
- கா.மு. ஷெரீப்,
- பரலி சு. நெல்லையப்பர்,
- வ.வே.சு. அய்யர்,
- காரைக்குடி சா. கணேசன்
- ச.து.சு. யோகி. இவர்களில்
- இராஜாஜி மற்றும் அகிலன் குடும்பத்தினர்

நாட்டுடைமையாக்கப்படுவதை ஏற்காத காரணத்தால் எஞ்சிய 13 பேருக்கு ஒவ்வொருவருக்கும் ரூபாய் ஐந்து இலட்சம் வீதம் ரூ.65 இலட்சம் தமிழக அரசு வழங்கியுள்ளது.

***நினைவுச் சின்னங்கள்***

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்' என்ற




பாடல் வரியை உலகுக்குத் தந்த கணியன் பூங்குன்றனுக்காகச் சிவகங்கை மாவட்டம் மகிபாலன் பட்டியில் நினைவுத்தூண் எழுப்பப்பட்டு வருகிறது.

### *நூல் உதவி*

சமதக்கினி எனும் விடுதலைப் போராட்ட வீரர் காரல்மார்க்சின் 'மூலதனம்' நூலைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். அதனை வெளியிட அரசு ரூ.5 இலட்சம் நிதியுதவி செய்துள்ளது.

### *பாகம் 1 – தமிழ்*

தமிழக அரசு எடுத்த முயற்சியின் காரணமாக 10 மற்றும் 12ஆம் வகுப்பில் தமிழை முதன்மொழியாக எடுத்துத் தேறி உயர் மதிப்பெண் பெறுபவர்களுக்கு மட்டும் தமிழக அரசின் முதற்பரிசும், மேல்படிப்புக்கான உதவியும் கிடைக்கும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி, 10ஆம் வகுப்பில் தமிழை முதன்மொழியாக எடுத்து உயர் மதிப்பெண் பெற்றோர் 11, 12ஆம் வகுப்புப் படிக்க அரசின் படிப்பு உதவித்தொகை பெறுகின்றனர். 12ஆம் வகுப்பில் தமிழை முதன்மொழியாக எடுத்து உயர்மதிப்பெண்கள் பெற்றுக் கல்லூரிக்கோ, தொழில்நுட்ப, மருத்துவப் படிப்புக்கோ செல்பவர்கள் அரசின் படிப்புதவி பெறுகின்றனர். 1998ஆம் ஆண்டில் இவ்வுதவி பெற்றோர் 235 பேர்.

### *மழலையர் பள்ளிகளில் தமிழ்*

தமிழ்நாட்டில் எந்தவொரு வகுப்பிலும் தமிழே பயிலாமல் பட்டம் பெற்றுவிடும் நிலை இருந்து வந்தது. இந்நிலையை மாற்ற தற்போது அரசு சிறப்பான நடவடிக்கை எடுத்துள்ளது. தமிழ்நாட்டில் தமிழ்மொழியை ஒரு பாடமாகச் சொல்லித்தரும் மழலையர், தொடக்க நிலைப் பள்ளிகளுக்கே அரசின் ஏற்பு வழங்கப்படும் என்றும், தாய்த்தமிழ் தொடக்கப் பள்ளிகளுக்குக் கட்டணங்களில் சலுகை வழங்கப்படும் என்றும் அரசு ஆணையிட்டுள்ளது.

### *மொழிப்போர்க் காவலர்கள்*

1998இல் மேலும் 387 பேருக்கும் 1999இல் 159 பேருக்கும் மொழிப்போர்க் காவலர்க்கான ஓய்வூதியம் வழங்கப் பட்டுள்ளது. ரூ.400ஆக இருந்த ஓய்வூதியம் ரூ.500ஆகவும், பின்னர் ரூ.1,500ஆகவும், அதன்பின் ரூ.3,000 ஆகவும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் ஆணைப்படி வழங்கப் படுகிறது. மருத்துவப்படி ரூ.15ம் சேர்கிறது. இவ்வகையில் 2,055 பேர் மாதம் ரூ.3,015ம், மரபுரிமையர் 426 பேர் மாதம் ரூ.1515ம் பெறுகின்றனர். அத்துடன் இவர்களுக்கு இலவசப் பேருந்துப் பயணச் சலுகையும் வழங்கப்பெறுகிறது.

### *வானூர்தியில் தமிழ்*

வெளிநாடுகளிலிருந்து சென்னைக்கும், சென்னையிலிருந்து வெளிநாடுகளுக்கும் செல்லும் வானூர்திகளில் அறிவிப்புகள் தமிழிலும் செய்யப்படுகின்றன.

### *விருதுகள்*

1997 முதல் பாரதியார் விருதும் வழங்கப்பட்டு வருகிறது. அன்றியும் 1998 முதல் திரு.வி.க., பாரதியார், பாரதிதாசன் விருதுகளும், 1999 முதல் திருவள்ளுவர் விருதும் ரூபாய் ஒரு இலட்சமும், தங்கப் பதக்கமும் கொண்டதாக வழங்கப் படுகின்றன.

### *வெளி மாநிலம்*

1. கல்கத்தாவிலும், மும்பையிலும் தமிழ் மையம் அமைத்திட ரூ.12 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மையங்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2. திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிட மொழியியற் பள்ளியில் பேரா.பி. சுந்தரம்பிள்ளை நினைவாக நூலகக் கட்டடம் கட்டுவதற்குத் தமிழக அரசு ரூ.10 இலட்சம் வழங்கியுள்ளது. 1998–99ஆம் ஆண்டு மானியமாக இந்நிறுவனத்திற்கு ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### *வெளிநாட்டுப் பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கை*

வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் (மலேயாப் பல்கலைக்கழகம்) தமிழ் இருக்கை நிறுவிட ரூ.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

# கூட்டுறவு நமக்குயர்வு!

இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் தமிழ்நாட்டில் இந்த அரசு பதவியேற்ற மூன்று ஆண்டுகளில் 23,493 அதாவது 99.5 சதவீதம் கூட்டுறவுச் சங்கங்களில் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தி சாதனைப் படைத்துள்ளது.

**கூட்டுறவுக் கடன் அமைப்பு**

★ தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் கடன் வழங்கல் பணியினைப் பன்முகப்படுத்தும் நோக்குடன் ரூ.50 இலட்சத்திற்கு அதிகமாக வைப்புத் தொகைகள் கொண்டுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், சிறு தொழில்களை மேற்கொள்ள பண்ணைச்சாராக் கடன்கள் மற்றும் சிறு போக்கு வரத்து வாகனங்கள் வாங்கவும் கடன் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

★ ரூ.5 கோடிக்கு மேல் வைப்புத் தொகைகள் கொண்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் வணிக வளாகம் மற்றும் கிடங்குகள் கட்ட ரூ.10 இலட்சம் வரை கடனாகவும், வீடுகட்ட ரூ.5 இலட்சம் வரை கடனாக வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளன.

★ தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுவங்கிகள் பதிவுபெற்ற கரும்பு பயிர் சாகுபடியாளர்களுக்கு நபர் ஜாமீன்பேரில் 10 ஏக்கர் வரையில் பயிரிட பயிர்க் கடனளவு களுக்கு ஏற்ப கடன் வழங்க அனுமதிக்கப் பட்டுள்ளது.

★ கூட்டுறவுகள் வழங்கும் நகைக் கடன்களுக்கான தனி நபர் கடன் உச்சவரம்பு ரூ.40,000லிருந்து தற்போது ரூ.1,00,000ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ரூ.75,000 வரையில் தானிய ஈட்டுக் கடன் வழங்க அனுமதிக்கப் பட்டுள்ளன.

★ தமிழகத்திலுள்ள 23 மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றும் சுமார் 7,500 பணியாளர்கள் மாதம் ஒன்றுக்குக் குறைந்தபட்சம் ரூ.500ம் அதிகபட்சமாக ரூ.2,000ம் கூடுதலாக நிதிப்பயன் பெறும் வகையில் அவர்களது சம்பளத்தை மாற்றியமைத்து அரசு ஆணை வழங்கியுள்ளது.

★ தமிழ்நாட்டில் மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி, நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில், 1995-96ஆம் நிதியாண்டில் ரூ.4859.36 கோடி அளவிற்கு வைப்புத் தொகைகள் கொண்டிருந்தன. கடந்த மூன்று ஆண்டுகளில் இவ்வங்கிகள் கூடுதலாக வைப்புத் தொகைகள் திரட்டி, 1998-99ஆம் ஆண்டு (பிப்ரவரி '99 வரை) ரூ.10,884.94 கோடி அளவிற்கு உயர்த்தியுள்ளது. இது கூட்டுறவுகளின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை எடுத்துக் காட்டுகிறது.

**★ மகளிருக்குக் குறைந்த வட்டியில் கூட்டுறவுக் கடன்**

சேமிப்புடன் இணைந்த மகளிர் சிறு வணிகக் கடன் திட்டம் என்ற ஒரு திட்டம், நகர்ப்புற பகுதிகளில் வாழும் ஏழை எளிய மகளிர் தம் பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்வதற்காகவும், சேமிக்கும் பழக்கத்தை உருவாக்கிக் கொள் வதற்காகவும், கூட்டுறவு வங்கிகளிடமிருந்து குறைந்த வட்டியில் அவர்களுக்கு கடன் வழங்க 1.1.99 முதல் அரசு தொடங்கியுள்ளது. சிறு வியாபாரம் செய்து அதன் மூலம் தமது அன்றாட வாழ்க்கையை நடத்தி வருகின்ற மகளிர்க்காக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சென்னையில்




– மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்
**திரு. கே.என். நேரு**

தொடங்கிய இத்திட்டம் சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாநகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டு ஆயிரக்கணக்கான மகளிர் பயன்பெற்று வருகின்றனர். இத்திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட்டு அனைத்து நகர் பகுதிகளிலும் இவ்வாண்டு மே மாதம் 2ஆம் தேதி முதல் அமல்படுத்தப்படுகிறது.

★ கடும் மழை/வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்களினால் பயிர்கள் பாதிக்கப்பட்ட கடன்தாரர்களுக்கு, நிவாரணம் அளிக்கவேண்டி ரூ.62.34 கோடி அளவிற்குத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் உறுப்பினர்களுக்கு குறுகிய கால கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்றப்பட்டது. 1997–98ஆம் ஆண்டு பசலி ஆண்டு 1,407ல் குறுகிய கால கடன்களை மத்தியகாலக் கடனாக மாற்றி அமைக்கும் நிதிச் சுமையில் மாநில அரசின் 15 சதவீதம் பங்காக ரூ.9.35 கோடி அளவிற்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

★ ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தை ரூ.11.24 கோடி மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஐந்தாண்டுகளில் செயல்படுத்த 1998ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் அரசு ஆணையிட்டுள்ளது. முதலாண்டுத் தொகையான ரூ.2.56 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டச் செயலாக்கம் தற்போது துவங்கியுள்ளது.

### நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்

★ நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளில் பணியாற்றும் 7,600க்கும் மேற்பட்ட பணியாளர்களின் சம்பள விகிதங்களை 1.10.'94 முதல் முன்தேதியிட்டு மாற்றியமைத்து அந்தத் தேதியில் குறைந்தபட்சம் மாதம் ஒன்றுக்கு ரூ.224 ஊதிய உயர்வு அளிக்கும் வகையில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

★ நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளின் கட்டுப்பாடற்ற பொருட்களின் விற்பனையை அதிகரிக்கும் முகத்தான் 26 பண்டக சாலைகளுக்கு மொத்தத்தில் ரூ.2 கோடி அளவிற்கு சலுகை வட்டி விகிதத்தில் அரசு கடன் உதவி அளித்துள்ளது.

★ 1998ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் தமிழ்நாடு மற்றும் ஒட்டுமொத்த தேசமும் பெருமளவு வெங்காயம் பற்றாக்குறையை எதிர்கொண்டபோது பொது மக்களுக்கு உதவிட நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வெங்காயம் மற்றும் இதர காய்க்கறிகள் வரவழைக்கப்பட்டு, குறைந்த விலையில் வழங்கப் பட்டது. வெளிச்சந்தையில் வெங்காயம் ரூ.24க்கு விற்கப்பட்ட பொழுது, மாநில அரசு தேசிய வேளாண்மைக் கூட்டுறவு விற்பனை இணையத்தின் மூலம் வெங்காயத்தினை வரவழைத்து கிலோ ரூ.12க்கு வழங்கியது.

★ சில அத்தியாவசியப் பொருட்களின் வெளிச்சந்தை விலைகளைக் கண்காணித்து விலையேற்றத்தைக் கட்டுப்படுத்திட தேவையான நடவடிக்கைகளை எடுத்திடவும், அத்தியாவசியப் பொருட்களைப் பொருத்தமட்டில் ஏற்படும் தேவை மற்றும் அவற்றை கூட்டுறவுகள் மூலமாக விற்பனை செய்தல் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, அவற்றை வெளி மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்வதற்கு வழிகாட்டி முறைகளை வகுத்திடவும், அரசு தலைமைச் செயலரின் தலைமையில் ஒரு விலை கண்காணிப்புக் குழுவினை அமைத்துள்ளது.

★ 'மாவட்டத்தில் ஒரு நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை' என்ற அரசு கொள்கையின் அடிப்படையில் புதிதாக துவக்கப்பட்ட திருவண்ணாமலை, விழுப்புரம், கரூர், நாமக்கல், திருவள்ளூர், பெரம்பலூர் மற்றும் தேனி மாவட்டங்களில் தலா, ஒரு புதிய மொத்த விற்பனைப் பண்டகசாலை துவக்கப்பட்டுள்ளது.

### பொது விநியோகத் திட்டம்

நியாயவிலைக் கடைகளில் பணிபுரியும் விற்பனையாளர்களின் தொகுப்பூதியம் ரூ.800 லிருந்து ரூ.900 ஆக வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. நியாயவிலைக் கடைகளில் பணிபுரியும் எடையாளர்களின் ஊதியம் ரூ.800 ஆக உயர்த்தி ஆணை வழங்கப் பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் அத்தியாவசியப் பண்டங்களை விற்பதற்குத் தேவையின் அடிப்படையில் புதிய நியாயவிலைக் கடைகள் மற்றும் பகுதிநேர நியாயவிலைக் கடைகள் துவங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

### முழுநேர மற்றும் பகுதிநேர நியாயவிலைக் கடைகள் புதிதாக திறக்கப்பட்டுள்ள விவரம்

1996–97ல் 69 நியாயவிலைக் கடைகள் கூடுதலாகத் திறக்கப்பட்டுள்ளன.

1997–98ல் புதிதாக முழுநேர நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டு அவைகளின் எண்ணிக்கை 777–ஆக அதிகரித்துள்ளது. இதேபோன்று பகுதிநேர நியாயவிலைக் கடைகளின் எண்ணிக்கையும் 549 ஆக அதிகரித்துள்ளது.

1998–99ல் புதிதாக முழுநேர நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டு அவைகளின் எண்ணிக்கை மொத்தம் 433ஆக அதிகரித்துள்ளது. இதேபோன்று பகுதிநேர நியாயவிலைக் கடைகளின் எண்ணிக்கை மொத்தம் 1,168 கூடியுள்ளது.

### மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைத்தல்

பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மண்ணெண்ணெய் குடும்ப அட்டைதாரர்களுக்கு அளவு குறைவின்றி, சென்றடைய உதவி செய்யவும், மண்ணெண்ணெய், இதர உணவுப் பொருட்களுடன் கலந்துவிடுவதைத் தவிர்க்கவும், மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்கும் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகின்றது.

பொது மக்களிடையே பெரும் வரவேற்பினை பெற்று வரும் மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்கும் பணியினை, மாநிலம் தழுவிய அளவில் நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாத ஒதுக்கீடான 76,000 கிலோ லிட்டர் அளவில், நகர்ப்புறங்களில் மட்டுமே சற்றேறக்குறைய 40 சதவீத அளவிற்கு விநியோகிக்கப்படுகிறது.

சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் 10 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்க ஆணை வழங்கப்பட்டது.

சென்னையைத் தவிர்த்த இதர ஐந்து நகராட்சிகளில் தலா இரண்டு வீதம் 10 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள், கூட்டுறவுச் சங்கங்களால் அமைக்க ஆணையிடப்பட்டதில், இதுவரை திருச்சி, சேலம், மதுரை, கோவை ஆகிய இடங்களில் இரு மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களும், திருநெல்வேலியில் ஒன்றும் செயல்படத் துவங்கியுள்ளன. எஞ்சிய ஒன்று திருநெல்வேலியில் கட்டப்பட உள்ளது,



1997–98ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதும் 100 மண்ணெண்ணெய் நிலையங்கள் அமைக்கப்பட்டன.இதில்...

1998–99ஆம் ஆண்டில் 200 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் துவக்க அனுமதிக்கப்பட்டதில் 144 (மண்ணெண்ணெய் வழங்கு நிலைய, இடங்கள், கண்டறியப்பட்டுள்ளன. 18 இடங்களில் செயல்படத் துவங்கியுள்ளன. 9 தயார் நிலையில் உள்ளன. 20 இடங்களில் கட்டுமானப் பணி துவக்கப்பட உள்ளன.

## புதிய குடும்ப அட்டைகள்

இந்தியாவிலேயே முதன் முதலாக குடும்பத்தலைவரின் புகைப்படத்துடன் கூடிய கணினி மயமாக்கப்பட்ட குடும்ப அட்டைகள் வழங்கும் பணி தமிழகத்தில் முதன்முறையாக செயல்படுத்தப்பட்டு உள்ளது. இதுவரை தகுதியான 1.47 கோடி புதிய குடும்ப அட்டைகள் வழங்கும் பணி நிறைவடைந்துள்ளது. தகுதிவாய்ந்த குடும்பங்கள் விடுபட்டிருப்பின் அவர்களுக்கும் கண்டிப்பாக குடும்ப அட்டைகள் வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உரிய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

## அரிசி

1967–68ஆம் ஆண்டில் கழக ஆட்சி ஏற்பட்ட போது உணவுத்துறைக்காக வழங்கப்பட்ட மானியத் தொகை ரூ.5.1 கோடியாகும்.

இன்றைக்கு இந்தியாவிலேயே குறைந்த விலையில் அரிசியை பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் விநியோகிக்கும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று.

கடந்த மூன்று ஆண்டுகளாக, பொதுவிநியோகத் திட்டத்தினை செயல்படுத்த 1996–97 மற்றும் 1998–99 ஆண்டுகளில் ரூ.1,000 கோடி அளவிற்கு அரசு மானியமாக நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு வழங்கியுள்ளது.

மைய அரசு மைய தொகுப்பிலிருந்து பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசியின் விலையை அவ்வப்போது உயர்த்திய போதிலும் மாநில அரசு மக்கள் நலன் கருதி கடந்த மூன்று ஆண்டுகளாக அரிசியின் விலையை உயர்த்தவில்லை. கடந்த ஜனவரி மாதம் மைய அரசு அரிசியின் விலையை உயர்த்தியதால் மாநில அரசுக்குக் கூடுதலாக ரூ.160 கோடி நிதிச்செலவு ஏற்பட்டபோதிலும், மாநில அரசு அரிசி விலையை உயர்த்தாமல் இந்த நிதிச்சுமையை ஏற்றுக்கொண்டுள்ளது.

## நெல்லுக்கு ஆதரவு விலை

ஒவ்வொரு ஆண்டும் மைய அரசு நெல்லுக்கான ஆதரவு விலைகளை, மத்திய விவசாய விளைபொருள் விலை மற்றும் செலவுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நிர்ணயம் செய்கிறது. அவ்வாறு விலை நிர்ணயம் செய்யப்படும் போது, மத்திய மாநில அரசுகளில் ஆலோசனைகள், விவசாய இடுபொருட்கள் விலைகள் ஆகியவை கருத்தில் கொள்ளப்படுகின்றன. மத்திய அரசு 1998–99ஆம் ஆண்டுக்கு நெல்லின் குறைந்தபட்ச ஆதரவு விலைகளை சாதாரண ரகத்திற்குக் குவிண்டாலுக்கு ரூ.440 எனவும், கிரேடு 'ஏ' ரகத்திற்கு ரூ.470 எனவும் நிர்ணயம் செய்துள்ளது. விவசாயிகளின் நலன் கருதி இவ்வாறாக மைய அரசு நிர்ணயித்துள்ள விலைக்கும் மேலாக கடந்த குறுவை '98 பருவத்தில் இணைக்கொள்முதல் திட்டத்தின் கீழ் போக்குவரத்து மற்றும் ஏற்று இறக்குச் செலவு உள்ளிட்ட இடைநிகழ் செலவுக்கென குவிண்டாலுக்கு ரூ.35 கூடுதலாக வழங்கியும், நடப்பு சம்பா '99 பருவத்தில் ஏகபோக கொள்முதல் முறையில் உற்பத்தி ஊக்கத் தொகையாக குவிண்டாலுக்கு கூடுதலாக ரூ.50 அதிகம் வழங்கியும் அரசு நெல் கொள்முதல் செய்தது.

### மகளிர் நடத்தும் நியாயவிலைக் கடைகள்

மதுரை மாவட்டத்தில் 15 இடங்களிலும் மற்ற சில மாவட்டங்களிலும் மகளிர் நடத்தும் நியாயவிலைக் கடைகள் சிறப்பாக செயல்பட்டு மக்களின் வரவேற்பை பெற்றுள்ளன. தற்போது 181 நியாயவிலைக் கடைகள் தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டு வருகின்றன. இன்னும், அதிக அளவில் நியாயவிலைக்கடைகளை மகளிரே நடத்துவதற்கு ஊக்கமளிக்கப்படும்.

### நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்கள் கட்டுதல்

விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க அரசு நிறுவனமான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் காவிரி பாசனப் பகுதிகளில் நேரடி கொள்முதல் நிலையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் விவசாயிகளிடம் இருந்து நெல்லை கொள்முதல் செய்வதால் விவசாயிகள் அவர்கள் விளைவித்த நெல்லை நல்ல விலைக்கு இடைத்தரகர்கள் இன்றி விற்று இலாபம் பெறுகின்றனர். நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குக் கட்டடம் கட்டுவதன் மூலம் அந்த கிராமத்தில் தொடர்ந்து கொள்முதல் காலங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை தங்கு தடையின்றி உடன் திறக்கவும், கொள்முதல் செய்த நெல்லை பாதுகாப்பாக வைக்கவும் முடிகிறது.

1996–97ஆம் ஆண்டில் 7 நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்கள் கட்டப்பட்டன. 1997–98ஆம் ஆண்டில் 8 நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்களும், 1998–99ஆம் ஆண்டில் 20 நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்கள் கட்டத் திட்டமிடப்பட்டு 7 கட்டடங்கள் கட்டப்பட்டுவிட்டன.

### தகவல் சேகரிப்பு மையம்

குடும்பத் தலைவரின் புகைப்படத்துடன், கணினியில் பதிவு செய்யப்பட்ட 1.47 கோடி குடும்ப அட்டைகள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. உணவுப்பொருள் வழங்கு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சிறப்பு ஆணையாளரின் அலுவலகத்திலுள்ள கணினி மையத்தை நவீனமயமாக்கி அங்கு ஒரு தகவல் சேகரித்து வைக்கும் மையத்தை அமைத்து, அம்மையத்தின் மூலமாக புதிய குடும்ப அட்டைகள் அச்சடித்து வழங்கப்பட முடிவெடுக்கப் பட்டுள்ளது.

## வரிவிலக்கும் வரிகுறைப்பும்

**1996–97**ஆம் ஆண்டு பருப்பு, மிளகாய், தனியா, மஞ்சள், புளி, சீரகம், பெருங்காயம், வெல்லம், சிகைக்காய், வெள்ளி மெட்டி, கொலுசு, அரைஞாண் கயிறு, நெல் உமி, குருணை முதலியவற்றிற்கு முழு வரி விலக்கு.

**1997–98**ஆம் ஆண்டு பனியன், புளிச்ச கீரை கயிறு, கோதுமைத் தவிடு, பஞ்சாமிர்தம், விபூதி, நாமக்கட்டி, முதலியவைகளுக்கு வரி விலக்கு.

**1998–99**ஆம் ஆண்டு சமையலுக்குப் பயன்படும் கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய்,நல்லெண்ணெய், சூரியகாந்தி எண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்கள் அனைத்திற்கும் வரி விலக்கு.

கணினி மென்பொருளுக்கும், Picture Varnish தயாரிக்கப் பயன்படும் மூலப் பொருள்களுக்கும் வரி விலக்கு.

### வரி குறைக்கப்பட்ட பொருட்கள்

**1996–97**ஆம் ஆண்டு சமையல் எரிவாயு, கரும்பு, டீசல், மின்உற்பத்திக்கான முதலீட்டுப் பொருள்கள்.

**1997–98**ஆம் ஆண்டு தட்டச்சு பொறிகள் மூக்குக் கண்ணாடிகள் வில்லைகள், கொசுவத்திச் சுருள்,கோலிக்குண்டு, கண்ணாடியிலான சிறுமணி, மின்னணுப் பாகங்கள், தலைக்கவசங்கள், சரளைக் கற்கள், பொம்மைகள், வறுத்த நிலக்கடலை பருப்பு, குடைகள், காகிதப் பைகள், தாம்பாய்கள், சூட்கேஸ், ஆயில் இன்ஜின் பாகங்கள், மேஜை, நாற்காலி, சரிகை, தையல், பூத்தையல் இயந்திரங்கள் முதலியன.

**1998–99**ஆம் ஆண்டு தேங்காய், கொப்பரை, வணிகச் சின்னம் இல்லாத மசாலாப் பொடிகள், பேக்கரியில் தயாரிக்கப்படும் உணவுப் பொருட்கள், வணிக சின்னம் இடப்பட்ட ஐஸ்கிரீம், பட்டாணி மாவு தோலி, குருணை முதலியவை.

# ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும் சமுதாயச் சிற்பி முதல்வர் கலைஞர்



மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்
திரு. க. சுந்தரம்

*"அண்ணாந்து பார்க்கின்ற
மாளிகை கட்டி...
அதனருகினில் ஓலை
குடிசைக்கட்டி...
பொன்னான உலகென்று
பெயரும் வைத்தால்
இந்த பூமி சிரிக்கும்.. அந்த சாமி
சிரிக்கும்"..*

— என்று பாடினான் ஓர் கவிஞன்.

அந்த கவிஞனின் ஏக்க உணர்வை உணர்ந்த கவிஞரான முதல்வர் கலைஞர் அவர்களது சிந்தனையில் உதித்து, உருவாக்கப்பட்ட அமைப்புதான் "தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்".

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்று போதித்தாரே தென்னாட்டு பெர்னாட்சா பேரறிஞர் அண்ணா, அவரது வைர வரிகளுக்கு மெருகூட்டும் வண்ணம் இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழகத்தில் 1970ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் என்ற அமைப்பை உருவாக்கி அடுக்குமாடி வீடுகளை கட்டி குடிசைகளில் வாழ்ந்து கொண்டு ஏக்கப் பெருமூச்சுவிட்டு கொண்டிருந்த ஏழை, எளியவர்களை, அடுக்குமாடி குடியிருப்புகளில் குடியமர்த்தி அவர்களது சிரிப்பினில் இறைவனைக் கண்டவர்தான் நமது தலைவர் கலைஞர்.

## குடிசைப்பகுதி மாற்றுத்திட்டம்

இத்திட்டத்தின் கீழ் மிகவும் நெரிசலான குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்கள் மாற்றிடங்களில் தற்காலிகமாக குடியமர்த்தப்பட்டு அவ்விடங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் போதிய வசதிகளுடன் அமைக்கப்படுகின்றன. இக்குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் அப்பகுதிகளில் முன்னர் வாழ்ந்து வந்த குடும்பங்கள் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் குடியமர்த்தப்படுகின்றனர். இத்திட்டம் 30 சதவீதம் அரசு மானியத்துடனும் 70 சதவீதம் ஹட்கோ நிறுவனத்தின் கடன் உதவியுடனும் நிறைவேற்றப்படுகிறது. இத்திட்டப்பணிகளுக்கான ஹட்கோ நிறுவனத்திடமிருந்து பெறப்படும் கடன் தொகை அரசால் திருப்பி செலுத்தப்படும். தற்போது ஒரு குடியிருப்பிற்கான கட்டுமான செலவினம் ரூ.1.25 இலட்சம்.

1996—99 ஆண்டுகளில் 7,004 குடியிருப்புகள் ரூ.60.03 கோடி செலவில் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

## தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் சென்னை, மதுரை, ஈரோடு, கோவை, சேலம், திருச்சி, வேலூர், திருப்பூர், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய நகரங்களில் குடிசைப்பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகள் அமைத்து மனை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டப்பணிகள் உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு 31.3.99இல் முடிவடைந்தது

இத்திட்டத்தின் கீழ் 1996—98ஆம் ஆண்டுகளில் 3,293 குடும்பங்களுக்கு ரூ.4.22 கோடி செலவில் குடிசைப்பகுதி மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

## நகர குடிசைப்பகுதிகளில் சுற்றுப்புறங்களை மேம்படுத்துதல்

நகரங்களில் குடிசைப்பகுதியின் சுற்றுப்புற சூழ்நிலையினை மேம்படுத்தும் பொருட்டு அடிப்படை வசதிகளான சாலைகள், தெரு மின்விளக்குகள், மழைநீர் வடிகால், குளியலறை, கழிப்பறை போன்ற வசதிகளை அமைத்து சுற்றுப்புற சூழ்நிலையினை மேம்படுத்தி அப்பகுதிகளை நல்ல உறைவிடமாக மாற்றும்

நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

1996–99ஆம் ஆண்டுகளில் 61,403 குடும்பங்கள் பயனடையும் வகையில் ரூ.11.49 கோடி இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

**குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களுக்குக் கல்நார் தகடுகளிலான கூரைகள் அமைத்தல்**

இத்திட்டத்தின் கீழ் 1998–99ஆம் ஆண்டில் 7,936 குடும்பங்களுக்கு கல்நார் தகடுகளிலான கூரைகள் சென்னை, மதுரை, திருச்சி மற்றும் சேலம் ஆகிய நகரங்களில் ரூ.5 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

**சென்னை நகரில் ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் குடிசைவாழ் குடும்பங்களை மாற்றிடங்களில் குடியமர்த்துதல்**

இம்மாபெரும் திட்டத்தின் முன்னோடியாக சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் 6,500 குடியிருப்புகள் ரூ.60 கோடி செலவில் கட்ட திட்டமிடப்பட்டு பணிகள் துவங்கப்பட்டு வெவ்வேறு நிலைகளில் முன்னேற்றத் திலுள்ளன. இப்பணிகள் முடிவுற்றவுடன் ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் குடும்பங்கள் இக் குடியிருப்புகளில் மாற்றுக் குடியமர்த்தப்படுவர்.

**அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்குப் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளுதல்**

இத்திட்டத்தின் கீழ் 1996–99ஆம் ஆண்டுகளில் 47,500 குடியிருப்புகளுக்கு ரூ.14.50 கோடி செலவில் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

**மத்தியதர வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டம்**

குடிசைப்பகுதிகள் அமைந்துள்ள நிலத்தில் குடிசைவாழ் குடும்பங்களை அடுக்குமாடிக் குடியிருப்புகளில் குடியமர்த்தியது போக, மீதமுள்ள நிலத்தில் மத்திய தர வருவாய் பிரிவினருக்கு வீட்டு வசதி திட்டத்தின் கீழ் குடியிருப்புகள் அமைக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் வீடுகள் பொது மக்களுக்குச் சந்தை விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் 1996–99ஆம் ஆண்டுகளில் 584 அடுக்குமாடிக் குடியிருப்புகளை ரூ.12.63 கோடி செலவில் கட்டியுள்ளது.

**நடைபாதை வாசிகளுக்கான வீட்டு வசதித்திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் 1996–99ஆம் ஆண்டுகளில் 2,706 குடும்பங்கள் ரூ.2.04 கோடி செலவில் மேம்படுத்தப்பட்ட மனைகளில் மாற்றிடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

**நிலவங்கித் திட்டம்**

வீட்டு வசதி பணிகளை மேற்கொள்ளும் அரசு நிறுவனங்கள் பொதுமக்களுக்காக மேம்படுத்தப்பட்ட மனைகள் அமைக்கும்போது மொத்த நிலத்தில் 5 சதவீதத்தினை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இக்குடும்பங்களிடமிருந்து நிலக்கிரயம் ஏதுமின்றி மேம்பாட்டுச் செலவினம் மட்டுமே வசூலிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 1996–99ஆம் ஆண்டுகளில் 513 குடும்பங்களுக்கு ரூ.27.45 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்ட மனைகள் அமைத்து வழங்கப்பட்டுள்ளன.

**பகுதி 2 திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் துரித இரயில் போக்குவரத்துத் தடங்களில் வாழும் குடும்பங்களை



மாற்றிடங்களில் குடியமர்த்தும் பொருட்டு 128 அடுக்குமாடிக் குடியிருப்புகள் சென்னை தாம்பரம் சேலையூர் பகுதியில் ரூ.1.30 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் அமைப்புகளை மேம்படுத்தும் பொருட்டு 1998—99ஆம் ஆண்டு ரூ.70 இலட்சம் செலவிடப்பட்டுள்ளன.

கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக, தமிழ்நாட்டில் கழக ஆட்சி மலர்ந்த தருணங்களில் எல்லாம் தலைவர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்ட சமுதாயத் திட்டங்களை நினைவு கூர்ந்தால் சமுதாய சிற்பி தலைவர் கலைஞர் என்பது குன்றிலிட்ட விளக்காக ஒளிரும்.

நாளும்.. அடித்தட்டு மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்டிடும் வகையில் ஓய்வறியாச் சூரியனாக தலைவர் **கலைஞர்** அவர்கள் அயராது பாடுபட்டு வருகிறார்.

# பால்வளம் பெருக்கும் 'ஆவின்'

ஒவ்வொரு மனிதனின் தோற்றத்திலிருந்து மறைவு வரை, அவனது இன்றியமையாத உணவு "பால்", காலை கதிரவனின் ஒளிக்கதிர் விரிவதற்கு முன்னர், அன்றாடம் ஒவ்வொருவர் இல்லங்களிலும் வரும் விருந்தினர் 'ஆவின்' பால். தமிழகத்தில் பெரும்பாலான குடும்பங்களில் இல்லப்பெயராக திகழும் 'ஆவின்' நிறுவனத்தின் கடந்த மூன்றாண்டு சாதனைத் துளிகள்.

கழக ஆட்சி மலர்ந்த உடனேயே 24.10.96 அன்று லிட்டர் ஒன்றுக்கு பால் கொள்முதல் விலை ஒரு ரூபாய் உயர்த்தி தரப்பட்டது. பின்னர், 7.4.98 அன்று வரலாறு காணாத வகையில் லிட்டர் ஒன்றுக்கு 1 ரூபாய் 50 காசுகள் என மீண்டும் ஒரு முறை கொள்முதல் விலை உயர்வு வழங்கி பால் உற்பத்தியாளர்கள் மனம் குளிர செய்துள்ளார் தலைவர் **கலைஞர்.**

ஜனநாயகத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்ட தலைவர் கலைஞர் அவர்களின் ஆணையின்படி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் மாவட்ட ஒன்றியங்களில், தேர்தல்கள் நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டன.

பால் கொள்முதல் விலை உயர்த்தும் போது, நுகர்வோர் விலை அதே அளவு உயர்த்தாததனால் ஏற்படும் இழப்பு லிட்டர் ஒன்றுக்கு 50 காசுகள். தென்னிந்தியாவிலேயே நுகர்வோர்க்கு மானிய விலையிலும், குறைவான விலையிலும் பால் விற்பனை தமிழ்நாட்டில் மட்டும்தான்.

கடந்த கால் நூற்றாண்டுகளில் தமிழக வரலாற்றிலேயே வியத்தகு சாதனையாக முந்தைய சாதனைகளை முறியடித்து நாளொன்றுக்கு சராசரியாக 15.10 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த மூன்றாண்டுகளில் பல்வேறு நலத்திட்டங்கள் மூலமாக கறவை மாடுகள் வாங்க ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் 7,332 கறவை மாடுகள் வாங்க ரூ.219.96 இலட்சம், மதம் மாறிய ஆதிதிராவிடருக்கு 314 கறவை மாடுகள் வாங்க ரூ.9.42 இலட்சம், தாட்கோ மூலம் 39,000 கறவை மாடுகள் வாங்க ரூ.1,170 இலட்சமும் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

ஆவின் வரலாற்றிலேயே முதன் முறையாக 1998—99ஆம் ஆண்டு முதல் பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர் நலத்துறை மூலம் கறவை மாடுகள் வழங்க கடன் வசதி ஏற்படுத்தி 4,000 கறவை மாடுகள் வாங்கித் தரப்பட்டுள்ளன.

கன்று வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 100 சதவீத மானியத்தில் 640.80 இலட்சம் ரூபாயில் 6,000 கன்றுகள் வளர்க்க நிதியுதவி செய்யப்பட்டுள்ளது.

கண்புரை நோய் குறைபாடுகளைக் களைய ஆவின்பாலில் வைட்டமின் 'ஏ' சத்து சேர்த்து விநியோகம்.



பால் உற்பத்தியாளர்களுக்கு 2,040 பால்கேன்களும், 242 பால்தரமளக்கும் கருவிகளும், 185 திரவ நைட்ரஜன் குடுவைகளும் வழங்கப்பட்டுள்ளன. பால் உற்பத்தியாளர்கள் அங்கம் வகிக்கும் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு 305 பால்சேகரிப்பு மைய கட்டடங்கள் கட்டித்தரப்பட்டுள்ளன. ★



# தொழிலாளர் நலனும் வேலைவாய்ப்பும்

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு. **ஏ. இரகுமான்கான்**

**தொ**ழிலாளர்களின் தோழனாக விளங்கும் இவ்வரசு, வெளிப்படையான அணுகுமுறைகள் மூலம் பல்வேறு தொழில் தாவாக்களைத் தீர்த்து வைத்துள்ளது. 3,251 தொழிலாளர்களின் நலன்களைக் கருத்தில்கொண்டு மூடப்பட்டுக் கிடந்த 5 நிறுவனங்கள் மீண்டும் திறக்கப்பட்டன.

நிர்வாகச் சிக்கல் காரணமாக மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளில் பணியாற்றி வேலை இன்றித் தவிக்கும் தொழிலாளர்களின் துயர்துடைப்பு நிவாரணத் தொகையாக முன்னர் தீபாவளிக்கு மட்டும் ரூ.400 வீதம் அளிக்கப்பட்டது. இந்நிவாரணத் தொகையை 1997லிருந்து பொங்கலுக்கும் வழங்கும் வகையில் விரிவுபடுத்தி 19,574 தொழிலாளர்களுக்கு ரூ.78.30 இலட்சம் வழங்கப்பட்டது. 1998 தீபவாளிப் பண்டிகையை முன்னிட்டு இத்தொகை ரூ.400 என்பது ரூ.500 ஆக உயர்த்தப்பட்டு 14,051 தொழிலாளர்களுக்கு ரூ.70,25,500 நிவாரணமாக வழங்கப்பட்டது.

விவசாயம், தீப்பெட்டித் தொழில், தச்சு மற்றும் கருமார் தொழில், பாலிதீன் பிளாஸ்டிக் தயாரிப்புத் தொழில் போன்ற அமைப்புச் சாரா 60 தொழில்நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு அரசால், குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் அமைப்பு ரீதியற்ற கீழ்க்காணும் தொழில்களையும் குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின் அட்டவணையில் சேர்த்து இந்த அரசு 6.4.99 அன்று ஆணைகள் வெளியிட்டது.

மாட்டு வண்டித் தொழில், பந்தல் அமைக்கும் தொழில், சமையல் தொழில், பெட்ரோலியம் காஸ் சிலிண்டர்கள் விநியோகத் தொழில், சைக்கிள் ரிக்ஷா ஓட்டும் தொழில், துணி மடிக்கும் தொழில், நிப் தயாரிக்கும் தொழில், மண்பாண்டம் செய்யும் தொழில், மரம் ஏறும்தொழில், மரக்கடைசல் தொழில் இதனால் சுமார் ஒரு இலட்சம் தொழிலாளர்கள் பயன் பெற இயலும்.

இதே போன்று, கட்டுமானத் தொழிலாளர்களின் நலன் சிறக்க "தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் நலத்திட்டம்" 15.6.97 முதல் தமிழகம் முழுவதும் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் செயலாக்கங்களாக "விபத்துக் காப்புறுதி, குழந்தைகள் காப்பகம், வருங்கால வைப்பு நிதி, தொழிலாளர்கள் ஈட்டுறுதி மற்றும் ஓய்வூதியம்" முதலிய வழிகாட்டும் திட்டங்கள் நிறைவேற்றப்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் பயனடையும் வகையில், 31.12.98 வரையில் 1,09,894 தொழிலாளர்கள் இசைவளித்து பதிவு செய்து கொண்டுள்ளனர். இத்தகு கட்டுமானத் தொழிலாளர்கள் பணியில் இறக்க நேரிட்டால், குடும்பத்தினருக்கு உதவித் தொகையாக ரூபாய் ஒரு இலட்சம் வழங்கப்படுவதுடன், ஈமச்சடங்கிற்கும் ரூ.500 வழங்கவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

பீடித் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் நிலம் கையகப்படுத்தப்படுவதில் நிலவிய இடர்பாடுகள் களையப்பட்டு, முதல் கட்டமாக நெல்லை மேலப்பாளையத்தில் 439 இல்லங்கள் முக்கூடலில் 535 வீடுகளும் கட்டப்படுகின்றன. மேலும், வேலூரில் 588 வீடுகளும் ஈரோடு அந்தியூரில் 90 வீடுகளும் கட்டுவதற்கு இந்த அரசு 18.1.99 அன்று ஆணைகள் வெளியிட்டுள்ளது. கட்டுமான வேலைகள் விரைவில் தொடரும். மற்ற மாவட்டங்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

தொழிலாளர் நலன் காக்கும் வகையில், தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் 26,767 தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் 11.37 இலட்சம் தொழிலாளர்களின் பாதுகாப்பு, அவர்களது நலன் காப்பு உறுதி செய்யப்பட்டுள்ளன.

தொழிற்சாலைப் பாதுகாப்பு பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம் (Industrial Safety Training and Research Institute) ஒன்றை உருவாக்குவதற்கு ரூ.2 இலட்சம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அமைப்புச் சாரா தொழிலாளர்களான கல்லுடைப்போர், சுமை தூக்குவோர், கைவண்டி இழுப்போர், வீட்டு வேலை செய்யும் பெண்கள், சைக்கிள் பழுதுபார்ப்போர் போன்ற 54 வேலைகளில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்கள் விபத்து நிவாரணம், மகப்பேறுக்கான பலன் மற்றும் இறுதி ஓய்வுப்

பலன் (Terminal Benefits) பெறுவதற்கு வகை செய்யும் திட்டம் 28.4.99 அன்று வெளியிடப்பட்டுள்ளது. இதற்கான தனியாக ஒரு நலவாரியமும் 17.3.99 அன்று அமைக்கப்பட்டது.

அமைப்புச் சாரா தொழிலாளர்களான கல்லுடைப்போர், சுமை தூக்குவோர், கைவண்டி இழுப்போர் போன்றோர் வைப்புநிதி பலனைப் பெறுவதற்கும் இ.எஸ்.ஐ. பலனைப் பெறுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் விவசாயத் தொழிலாளர்களின் நிலைமைகளை ஆராய்ந்து அவர்கள் நலன் காக்க கோலப்பன்குழு 43 பரிந்துரைகளை அரசுக்கு அளித்துள்ளது. அவற்றை இந்த அரசு மிக தீவிரமாக பரிசீலித்து வருகிறது. அவற்றில் மிகவும் முக்கியமான ஒரு பரிந்துரையானது அவர்களுக்கு குறைந்த அளவு ஊதியத்தை திருத்தி அமைப்பது பற்றியதாகும். அதனை இந்த அரசு ஏற்று இந்த தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதிய விகிதங்களை திருத்தி அமைப்பதற்கான அறிவிக்கை ஒன்றினை 28.4.99 அன்று வெளியிட்டுள்ளது.

**மக்கள் சாசனம் – மனித உரிமை**

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில், நலிவுற்ற பிரிவினரின்பால் நாட்டம் கொண்டு அடக்கப்பட்டு கிடக்கின்ற மக்களுக்குச் சமத்துவத்தை, சமூக அமைப்பிலும், பொருளாதார அடிப்படையிலும் உருவாக்கிட, நாளுக்கொரு புதிய திட்டமாக அறிமுகப்படுத்தியும், நடைமுறைப்படுத்தியும் வருகிறார். அவைகளை, மக்கள் எளிதாக அறிந்து, தெரிந்து பயனடைய அவர்களுக்கு உரிமை உண்டு என்ற புரட்சிகர இலட்சிய நோக்கில், மக்களாட்சியின் மாண்பிற்கு



"மீண்டும் மெருகூட்டு"கின்ற வகையில், "மக்கள் சாசனம்" ஏற்படுத்த முதலமைச்சர் கலைஞர் ஆணைப் பிறப்பித்துள்ளார்.

மனித உரிமைகள் மீறல்கள் பற்றிய புகார்களை விசாரணை செய்ய மாநில மனித உரிமை ஆணையம் 17.4.97 முதல் தமிழ்நாட்டில் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் புதிதாகத் தொடங்கி வைக்கப்பட்டது.

தமிழ்நாடு கட்டிடத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டிடத் தொழிலாளர்கள் பணி செய்யும் பொழுது இறக்க நேரிட்டால் அவர்களது வாரிசுதாரர்களுக்கு தனிநபர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் தொகை ரூ.50 ஆயிரம் என்பது ரூ.1 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படுகிறது.

பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் மகன், மகள் 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றால் ரூ.750ம், +2 வகுப்பு தேர்ச்சி பெற்றால் ரூ.1000 கல்வி உதவித் தொகையாக இரு பிள்ளைகளுக்கு மட்டும் வழங்கப்படுகிறது.

பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு இரு குழந்தை பிறப்புகளுக்கும் தலா ரூ.1,000 வீதம் மகப்பேறு நல உதவி நிதியாக வழங்கப்படுகிறது.

பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் மகன்/ மகள் திருமணத்திற்கு ரூ.1,000 திருமண உதவி நிதியாக இருபிள்ளைகளுக்கு மட்டும் வழங்கப்படுகிறது.

மூடிக்கிடக்கும் ஆலைகளின் தொழிலாளர் நலனைப் பாதுகாக்கும் வகையில் பின்னி, டன்லப் போன்ற ஆலைகளின் நிர்வாகங்களுடன் பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

பின்னி தொழிற்சங்கத் தலைவர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் 28.3.98 அன்று ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. ஒப்பந்தம் இனம் 6ன்படி தொழிலாளர்களுக்கும் பயிற்சியாளர்களுக்கும் 15 நாட்கள் சம்பளம் கருணைத்தொகையாக வழங்கப்பட்டுவிட்டது. விருப்ப ஓய்வுத் திட்டத்தின் கீழ்பணி விலக விரும்பும் தொழிலாளர்களின் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

**வேலைவாய்ப்பு**

1996–97, 1997–98 ஆகிய இரண்டு ஆண்டுகளில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்த பணிமூப்பு அடிப்படையில் 23,462 இடைநிலை ஆசிரியர்கள் பணியமர்த்தப்பட்டனர்.

1996–97 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு பதிவினை புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு கால அவகாசம் 12 லிருந்து 18 மாதங்களாக உயர்த்தப்பட்டது. இதனால் 75,824 பேர் பயனடைந்தார்கள்.

மூன்று மாதங்களுக்கு காலி ஏற்படும் பணியிடங்களில் இளநிலை உதவியாளர், தட்டச்சர் போன்றோரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

★ ★ ★

நீதி என்பது அரசுக்கு எவ்வளவு முக்கிய மானது, தலையாயது என்பது பற்றி திருவள்ளுவர் எழுதிய திருக்குறளுக்கு முதலமைச்சர் **கலைஞர்** எழுதிய உரை வள்ளுவரின் உள்ளத்தை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.

அறநெறி தவறாமலும், குற்றம் ஏதும் இழைக்காமலும் வீரத்துடனும், மானத்துடனும் ஆட்சி நடத்துபவர்கள் தான் சிறந்தவர்கள் என்று கலைஞர் உரை எழுதி உள்ளார்.

பட்ஜெட்டில் நீதித் துறைக்கு 140 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த சிறிய தொகை மூலம் இந்தத் துறை சட்டம் ஒழுங்கை காப்பாற்ற துணை நிற்கிறது.

சமூக விரோதிகளைத் தண்டிக்க, சமுதாயத்துக்கு பாதுகாவலாக, உரிமைக்கு பாதுகாவலாக, ஊழல் பேர்வழிகளை உள்ளே நுழையவிடாமல் உருவிய வாளோடு நிற்கிறது.



# நீதித்துறையும் சிறைத்துறையும்

— மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு. **ஆலடி அருணா**

### *தமிழ்நாட்டில் 534 நீதிமன்றங்கள்*

சென்னை உயர் நீதிமன்றத்தில் 28 நீதிமன்றங்கள் இருக்கின்றன. இந்த நீதிமன்றங்கள் நீங்கலாக தமிழ்நாட்டில் 534 நீதிமன்றங்கள் இருக்கின்றன. புதிய மாவட்டங்களான நாமக்கல், திருவாரூர், திருவள்ளூர், தேனி மாவட்டங்களில் நீதிமன்றங்கள் இல்லை. இதுதவிர 15 வருவாய் கோட்டங்களிலும், 36 தாலுகாக்களிலும் நீதிமன்றங்கள் இல்லை.

சில வட்டங்களிலும், கோட்டங்களிலும், மாவட்டங் களிலும் அதிகமாக நீதிமன்றங்கள் இருக்கின்றன. எனவே இத்தகைய நகரங்களில் உள்ள நீதிமன்றங்களை நீதிமன்றங்கள் இல்லாத இடங்களுக்கு மாற்றி அமைக்க 3 மாதங்களுக்குள் பேசி முடிவெடுப்போம்.

### *103 நீதிமன்றங்கள் திறக்க அனுமதி*

கடந்த ஆட்சியில் 5 ஆண்டுகளில் 41 நீதிமன்றங்கள் தான் புதிதாக தொடங்கப்பட்டன. ஆனால் கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் கலைஞர் ஆட்சியில் 103 நீதிமன்றங்கள் திறக்க அனுமதி வழங்கப்பட்டு உள்ளது.

சென்னை உயர்நீதிமன்றத்தின் கிளையை மதுரையில் அமைக்க 75 ஏக்கர் நிலப்பரப்பு உலகநேரியில் அரசு கையகப்படுத்தியுள்ளது.

### *குற்றவியல் நடுவர் மன்றம் அமைக்கப்படும்*

இராமேஸ்வரம், காட்டுமன்னார்கோவில், போச்சம்பள்ளி ஆகிய இடங்களில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்மன்றம் அமைக்கப்படும். சென்னை உயர் நீதிமன்ற நிர்வாகம் முழுமையாக கம்ப்யூட்டர் மயமாக்கப்பட 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

### *சிறையில் கூடுதலான இடவசதிகள்*

தமிழகத்தில் உள்ள சிறைச் சாலைகளில் 18 ஆயிரத்து 135 பேர்களுக்கு இடம் இருக்கிறது. இன்று 17 ஆயிரத்து 316 பேர்கள்தான் இருக்கிறார்கள்.

புழல் சிறையில் பணிகள் இன்னும் 6 மாதங்களுக்குள் முடிக்கப்பட்டு கைதிகள் அடைக்கப்படுவார்கள். புதுக்கோட்டை மாவட்ட இளம் சிறார் சீர்திருத்தப் பள்ளி சேலத்துக்கு மாற்றப்பட்டு அந்த இடத்தை மாவட்ட சிறையாக மாற்ற இருக்கிறோம். இனி தமிழ்நாட்டில் உள்ள சிறைகளில் 3 ஆயிரத்துக்கும் மேல் கூடுதலாக இடவசதி இருக்கும்.

அடுத்த ஆண்டு 350 சிறைக் காவலர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். காவல் துறையினரைப் போல் சிறைத்துறை வார்டர்களுக்கும் ரிஸ்க் அலவன்சு வழங்கவும், உளுத்தம் பருப்பு, துவரம் பருப்பு, ரவா, மைதா போன்ற பொருட்கள் காவல்துறையினருக்கு மானிய விலையில் வழங்குவது போல சிறைத் துறையினருக்கும் வழங்கவும் முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

பெண் சிறை வாசிகளை அழைத்துச் செல்ல பெண் காவலர்களை · தற்காலிகமாக பயன்படுத்துகிறார்கள். இவர்களுக்கு வழங்கப்படும் 40 ரூபாய் 60 ரூபாயாக உயர்த்தப்படுகிறது.

கடந்த 5 ஆண்டு கால ஆட்சியில் 60க்கும் மேற்பட்டவர்கள் சிறையில் இருந்து தப்பினர். ஆனால் கடந்த ஆண்டு ஒரே ஒருவர் மட்டும் தப்பிச் சென்றுள்ளார். அந்த அளவுக்கு விழிப்போடு கட்டுப்பாட்டோடு இந்தத் துறை செயல்படுகிறது

பணியிலிருக்கையில் வீரதீர செயல்கள் புரிந்து மரணமடையும் மற்றும் கடுமையான காயம் அடையும் சிறை களப்பணியாளர்களுக்கு ரூ.5000 முதல் ரூ.2 இலட்சம் வரை மானியத்தொகை வழங்க அரசு ஆணை பிறப்பித்து உள்ளது.

சிறை களப்பணியாளர்களுக்கு ஆண்டொன்றுக்கு 100 குடியிருப்புகள் வீதம் கட்டுவதற்கு அரசு ஆணை வழங்கி முதல் கட்டமாக 1999ம் ஆண்டில் ரூ.2.83 கோடி செலவில் பாளையங்கோட்டை, மதுரை மற்றும் கோவை மத்திய சிறைகளில் 100 குடியிருப்புகள் கட்ட அரசு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பணியிலிருக்கையில் அசம்பாவித சம்பவங்களினால் மரணத்தை எதிர்கொள்ளும் சிறை களப்பணியாளர் களுக்கு அவர்கள் கடைசியாக பெற்றுவந்த ஊதியத்தை அவர்கள் பணியிலிருந்தால் ஓய்வு பெறும் நாள்வரை குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படும்.

சிறை நிர்வாக முன்னேற்றத்திற்காகவும் மற்றும் சிறைப் பாதுகாப்பினை பலப்படுத்தும் பொருட்டும் மத்திய சிறைகள் மற்றும் கிளைச் சிறைகளுக்கு 3 துணைச்சிறை அலுவலர்களும், 12 உதவி சிறை அலுவலர்களும் 2 உதவியாளர்களும் 10 இளநிலை உதவியாளர், 20 சுகாதாரப்பணியாளர்கள் 10 ஓட்டுநர் மற்றும் கிளீனர், 30 இரண்டாம்நிலைக் காவலர்கள், ஒரு மின்கம்பியாளர், இரண்டு சமையலர் பதவிகளை கூடுதலாக தோற்றுவித்து ஆணை பிறப்பித்துள்ளது.

சிறைகளில் சமீபகாலமாக சிறைவாசிகளால் சிறைப்பணியாளர்களுக்கு, அச்சுறுத்தல்கள் மற்றும் மிரட்டல்களை சமாளிக்கும் பொருட்டு சிறைப் பணியாளர்களுக்கு நவீன ஆயுதங்கள் வழங்க அரசு ஆணையிட்டுள்ளதோடு, பயங்கரவாதிகளை எதிர் கொள்ள ஏதுவாக அவர்களுக்கு "கராத்தே" "நிஞ்சா" மற்றும் "கமாண்டோ" பயிற்சி அளிக்கவும் அரசு அனுமதியளித்துள்ளது.

சிறைகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் கல்வித் துறையில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு இணையாக சிறப்புப்படி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

சிறைப் பணியாளர்களின் நலனில் அக்கறை கொண்ட இந்த அரசு சிறைவாசிகளின் நலனிலும் தீவிர ஆர்வம் கொண்டு அவர்களுக்கும் பல சலுகைகள் வழங்கி உள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த அரசு பொறுப்பேற்ற நாள் முதல் கடந்த ஆண்டு வரை 616 ஆயுள் தண்டனை சிறைவாசிகள் அவர்கள் 10 ஆண்டு கால தண்டனை முடித்தபின், பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் மற்றும் இந்திய சுதந்திர தின பொன்விழா ஆகியவற்றை முன்னிட்டு முன்விடுதலை செய்யப்பட்டனர்.

உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் சிறைவாசி களுக்கான ஊதியத்தினை உயர்த்தி ஆணை பிறப்பித்ததோடு அவர்களுக்கு வழங்க வேண்டிய ஊதியத்தினை அவ்வப்போது நிர்ணயம் செய்ய ஏதுவாக உயர் மட்ட அலுவலர்களை கொண்ட சம்பள நிர்ணய குழு அமைக்கவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

சிறைகளில் இயங்கி வரும் சிறைவாசிகளுக்கான தேநீர் விடுதியிலிருந்து சிறைவாசிகள் தங்களுக்கு தேவைப்படும் அத்தியாவசியப் பொருட்களை தங்குதடையின்றி பெற்றுக் கொள்ள ஏதுவாக நிதி உச்சவரம்பினை உயர்த்தி அரசு ஆணை வழங்கி உள்ளது.

கடந்த ஆண்டு கோவை மத்தியசிறையில் உள்ள ஒரு சிறைவாசிக்கு தொழிற் பிரிவில் பணி செய்தபோது காயம் ஏற்பட்டமைக்காக இழப்பீட்டுத் தொகை வழங்க அரசு ஆணையிட்டது.

பார்ஸ்டல் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் அரிசியின் அளவினை 370 கிராமிலிருந்து 470 கிராமாக உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

❋ ❋ ❋

# நெசவாளர் துயர் துடைக்கும் கலைஞர் அரசு

மாண்புமிகு கைத்தறி மற்றும் ஜவுளித்துறை அமைச்சர்
திரு. என்.கே.கே. பெரியசாமி

கடந்த ஆட்சிக் காலத்தின் நிர்வாக சீர்கேட்டால், நெசவாளர் சங்கங்கள் உற்பத்தி செய்த துணிகளை கொள்முதல் செய்யாததால், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் துணிகள் தேக்கமும், அதே நேரத்தில் வெளிச் சந்தையில் தரம் குறைந்த பொருட்களை அதிக விலை கொடுத்து வாங்கி, அதை விற்க முடியாமல் கோ-ஆப்டெக்ஸுக்கு பெரு நட்டமும் ஏற்பட்டது. இலவச வேட்டி, சேலைக்கு வெளிச் சந்தையில் தரம் குறைந்த துணிகளை வாங்கி விநியோகம் செய்ய முடியாமல், கோ-ஆப்டெக்ஸ் கிடங்குகளில் வைத்ததால் பல கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டது. அதேபோல, கூட்டுறவு நூற்பாலைகள் தரம் குறைந்த பஞ்சை அதிக விலை கொடுத்து வாங்கியதாலும், சீராக நிர்வாகம் செய்ய முடியாததாலும், கடந்த 1991 முதல் 1996 முடிய 5 ஆண்டுகளில் 153 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளது. இதனால், கூட்டுறவு நூற்பாலைகள் இயங்க முடியாத நிலை இருந்தது.

**கலைஞர்** அரசு பொறுப்பேற்ற பிறகு போர்க்கால அடிப்படையில், கைத்தறி நெசவாளர் சங்கங்கள், கோ-ஆப்டெக்ஸ் மற்றும் கூட்டுறவு நூற் பாலைகளைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, தற்போது கைத்தறித் துறை சீராக செயல்பட்டு வருகிறது.

கைத்தறி நெசவாளர் சங்கங்களில் உள்ள துணிகளின் தேக்கத்தைப் போக்கவும், விற்பனையை மேம் படுத்தவும், வருடத்திற்கு 100 நாட்கள் மட்டும் 20 சதவீதம் தள்ளுபடி மானியம் என்று இருந்ததை மாற்றி ஆண்டு முழுவதும் 20 சதவீதம் தள்ளுபடி மானியம் வழங்கப்பட்டது. மேலும், நெசவாளர்கள், நெசவாளர் சங்கங்களில் உள்ள குறைகளைக் கண்டறிய ஒரு உயர்நிலைக்குழுவை அமைத்து, அந்த உயர்நிலைக் குழுவின் அறிக்கையினை பெற்று, அந்த குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் 24 சலுகைகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். குறிப்பாக, வழக்கமாக வழங்கப்படும் 20 சதவீதம் தள்ளுபடி மானியத்திற்கும் கூடுதலாக 10 சதவீதம் தள்ளுபடி மானியம் 6 மாதத்திற்கு வழங்கியதால், 202 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை கூடியுள்ளது. மேலும், கோ-ஆப்டெக்ஸ் 50 கோடி ரூபாய்க்கு சங்கங்களில் கொள்முதல் செய்ததாலும், சங்கங்களுக்கு மூன்று மாதத்திற்கு ஒரு முறை தள்ளுபடி மானியம் வழங்க உள்ள பரிந்துரையை ஏற்றதாலும், 94-95, 95-96 ஆகிய ஆண்டுகளில் நிலுவையாக இருந்த தள்ளுபடி மானியத்தொகை ரூ.43.25 கோடி ரூபாய் வழங்கிய தாலும், சங்கங்கள் விற்பனையை மேம்படுத்தி, துணிகளின் தேக்கத்தை போக்கியதால், சங்கங்களின் நிதி நிலைமை சீராக்கப்பட்டு புத்துயிர் பெற்றுள்ளன.

அதேபோல, கோ-ஆப்டெக்ஸும் அதனுடைய விற்பனையை மேம் படுத்தியுள்ளது. கடந்த ஆண்டிலே ரூ.162.78 கோடி விற்பனை செய்தது, கோ-ஆப்டெக்ஸ் விற்பனை சரித்திரத் திலேயே மிகவும் கூடுதலாகும். மேலும், கோ-ஆப்டெக்ஸ் இந்த ஆண்டு ரூ.1.60 கோடி இலாபம் அடைந்துள்ளது.



சென்னையிலுள்ள மக்கள், காஞ்சிபுரத்திற்கு சென்று பட்டு சேலைகள் எடுப்பதை தவிர்ப்பதற்கு, சென்னையிலேயே கோ-ஆப்டெக்ஸ் வளாகத்தில் காஞ்சிபுரத்திலுள்ள அனைத்து பட்டு கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனை நிலையம் அமைத்து, அதை மாண்புமிகு முதல்வர் அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டு, இன்று சீராக செயல்பட்டு வருகிறது.

கூட்டுறவு நூற்பாலைகளைச் சீரமைக்கவும், 12,000 தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வழங்கிடவும், ரூ.185.25 கோடி நிதியில் கூட்டுறவு நூற்பாலைகள் சீரமைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

இந்தியாவிற்கே வழிகாட்டியாக தமிழ்நாட்டில்தான் துணி நெசவுக் கொள்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். அதனடிப்படையில், கைத்தறி துறையின் முன்னேற்றத்திற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

60 வயது கடந்த நெசவாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய் ஓய்வூதியம் வழங்கி, நெசவாளர் நலன் காக்கப்படுகிறது.

நெசவாளர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 1,000 வீடுகள் கட்ட திட்டமிட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், நெசவாளர்கள் வீடு கட்டுவதற்கு வழங்கப்பட்டு வந்த மானியத்தொகை ரூ.5000லிருந்து ரூ.7000ஆக உயர்த்தப்பட்டது.

நெசவாளர்கள் தொழில் செய்யும் போது இறந்தால், அவர்களின் குடும்பத்திற்கு இழப்பீட்டுத் தொகை ரூ.40,000ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 27 ஆண்டுகளுக்கு பின்பு தேர்தல் நடத்தி, தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களால் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகிறது. அதேபோல், கோ-ஆப்டெக்ஸூக்கும், பல ஆண்டுகளுக்குப் பின்பு தேர்தல் நடத்தி தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் அவர்களால் கோ-ஆப்டெக்ஸ் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

இலவச வேட்டி-சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் நமது கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்தது போக, நமது விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் தரமான வேட்டி, சேலைகள் உற்பத்தி செய்யப்பட்டு, 1999 பொங்கலுக்கு 77 இலட்சம் சேலைகளும், 70 இலட்சம் வேட்டிகளும், மக்கள் மனம் குளிரும் வண்ணம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

இலவசச் சீருடைத் திட்டத்தின்கீழ் பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர் நலத்துறைக்கான அனைத்து சீருடைகளும் நமது நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால்



உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

World Trade Organisation - னிடம் போட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், 2005ஆம் ஆண்டு அயல்நாட்டு சந்தையிலிருந்து வரும் துணிகளின் போட்டியை சமாளிக்கும் வகையில், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை இப்போதிலிருந்தே ஆயத்தப்படுத்தி, ஏற்றுமதி செய்வதற்கான பயிற்சியை கொடுத்து, 1999-2000ஆம் ஆண்டில் 25 கோடிக்கும், 2000-2001ல் 75 கோடிக்கும் ஏற்றுமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

கைத்தறி நெசவாளர் குழந்தைகள் உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி படிப்பதற்கு அவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகைகள் கணிசமான அளவிற்கு உயர்த்தி வழங்கப்பட்டுள்ளன.

இதேபோல, சேலத்தில், இயங்கி வரும் இந்திய கைத்தறி தொழில் நுட்பப் பயிற்சி கழகத்தில் படிக்கும் மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை மத்திய அரசு உதவியுடன் கூடுதலாக வழங்கப்பட உள்ளது.

மேலும், நெசவாளர் குழந்தைகளுக்கு தொழிற்கல்வி அளிக்க 510 நபர்களுக்கு, ரூ.36.60 இலட்சத்தில் தேசிய ஆடை வடிவமைப்பு மையத்தின் மூலம் கூட்டுறவு கல்வி நிதியினால் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

புதிய பட்டு மற்றும் பருத்தி வடிவமைப்பு செய்யும் சங்கங்களுக்கு ரூ.5,000 பரிசாக வழங்கி அவர்களை ஊக்கப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

கைத்தறித்துறை சம்பந்தமான உதவிகள், திட்டங்கள் குறித்த கையேடு அனைத்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட உள்ளது.

நெசவாளர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்டங்கள் உண்மையான நெசவாளர்களுக்குச் சென்று சேர வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில், உண்மையான நெசவாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு திங்கட்கிழமை தோறும், மாவட்டங்களிலுள்ள சரக உதவி இயக்குநர் அலுவலகங்களிலும், சென்னையில் கைத்தறி இயக்குநர் அலுவலகத்திலும் நெசவாளர்களின் குறைகள் பெறப்பட்டு உடனடியாக குறைத்தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரசு நிறுவனங்களான, ஈரோட்டில் உள்ள தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை, கோவையில் உள்ள தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், காஞ்சிபுரத்தில் உள்ள தமிழ்நாடு ஜரிகை நிறுவனம் ஆகியவை நிகர இலாபத்தில் இயங்கி வருகின்றன.

தமிழகத்தில் பெரும்பான்மை மக்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்தவும் அவர்கள் வாழ்வில் வளம்பெறவும் தமிழக அரசு, தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் பல்வேறு நலத்திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.

தமிழ் சமுதாய மக்களின் தேவைகளை உணர்ந்து அவர்கள் எதிர்பார்க்கின்ற அளவுக்கு உதவிட வேண்டுமென்ற நோக்கில் பிற்படுத்தப்பட்டோர் மக்களின் மேம்பாட்டிற்கென *1969*-ஆம் ஆண்டில் முதன்முதலில் ஒரு துறையை ஏற்படுத்தியது கழக அரசுதான்.

*1971-72*ல் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கென தனியாக மானியக் கோரிக்கைகளை கொண்டு வந்ததும் **கலைஞர்** அரசுதான்.

*1989*-ஆம் ஆண்டு மிகவும் பிற்படுத்தப் பட்டோருக்கென தனியாக ஒரு இயக்குநரகத்தையும் ஏற்படுத்தியது **கலைஞர்** அரசுதான்.

*1989*-ஆம் ஆண்டிலேயே தலைமைச் செயலகத்திலும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கென தனியாக ஒரு துறையை உருவாக்கியதும் **கலைஞர்** அரசு தான்.

**சமூக நீதி**

*1921*-ஆம் ஆண்டிலிருந்தே இடஒதுக்கீடு வரலாறு தமிழகத்தில் தொடங்கப்பட்டுள்ளது அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

பகுத்தறிவுப் பகலவனாம் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும் பெரும்பான்மை மக்களான பிற்படுத்தப்பட்டோர்/ மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பு மக்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்த கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் **69 விழுக்காட்டினைத் தொடர்ந்து கடைப்பிடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு** வருகிறது.

# பிற்படுத்தப்பட்டோர் நலன் காக்கும் அரசு

**மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்**
**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்**

மேலும் மாநிலத்தின் தேவைக்கேற்பவும் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் இடஒதுக்கீட்டின் அளவினை மாநில அரசுகளே நிர்ணயித்துக்கொள்ள அதிகாரமளிக்கும் வகையில் அரசியலமைப்புச் சட்டத்தினை திருத்த வேண்டுமென மைய அரசுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மத்திய அரசுப்பணி நியமனங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு



இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது போன்றே மத்திய அரசு கல்வி நிறுவனங்களிலும் 27 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டுமென மத்திய அரசுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசுப் பணியிடங்களில் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பணிநியமனங்கள் குறித்து ஆய்வு செய்ய இந்த அரசினால் ஒரு உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டு, அந்த உயர்மட்டக்குழுவின் பரிந்துரைகள் யாவும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் அமைச்சர்கள், 'அரசு செலயாளர்கள் கொண்ட குழு பரிசீலித்து வருகிறது.

**கல்வி**

***"மக்களிடையே மாற்றத்தை உண்டாக்கக் கூடியதும், மக்களிடையே தன்மானத்தை வளர்க்கக் கூடியதும் மக்களிடையே சமுதாய மதிப்பை உயர்த்தக் கூடியதுமாகிய"***

*கல்வியின் அவசியத்தை உணர்ந்த இவ்வரசு பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகிய வகுப்பினர் கல்வியில் ஏற்றம்பெற அதிக கவனம் செலுத்தி வருவதுடன்,*

***கல்வி உதவித்தொகை அளித்தல்***
***இலவசக் கல்வி***
***இலவச பாடநூல்கள்***
***இலவசமாக எழுதுபலகைகள்***
***சிறப்பு வழிகாட்டி நூல்கள்***
***இலவசமாகச் சீருடைகள்***
***மாணவ/மாணவியர் விடுதிகள்***
***சீர்மரபினருக்கென தனியாக பள்ளிகள்***

ஆகிய திட்டங்களை செயல்படுத்தி பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் நலனில் அக்கறை காட்டி வருகிறது.

தமிழ்நாட்டில் இத்துறையின்கீழ் 967 மாணவ/ மாணவியர் விடுதிகள் இயங்கி வருகின்றன. அவைகளில் கழகம் ஆட்சிப்பொறுப்பேற்ற பின்னர்

*1996-97ல்* ... 45 புதிய விடுதிகளும்

*1997-98ல்* ... 62 புதிய விடுதிகளும்

*1998-99ல்* ... 25 புதிய விடுதிகளும்

*1999-2000ல்* .... 5 கல்லூரி மாணவ/ மாணவியர் விடுதிகளுமாக 137 மாணவ /மாணவியர் விடுதிகளும் துவங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

இத்துறையின் கீழ் இயங்கும் விடுதிகளில் தங்கிப் பயில்கின்ற மற்றும் கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/ மாணவியர்கட்கும் தீபாவளி மற்றும் பொங்கல் திருநாளில் வழங்கப்பட்டு வந்த சீருடைகள் யாவும் 1998-99ஆம் ஆண்டு முதல் பள்ளிகள் திறக்கின்ற நாட்களிலேயே வழங்கப்படுகின்றன. இதனால்

18,500 - பிற்படுத்தப்பட்ட விடுதி மாணவ/ மாணவியர்கள், 20,050 - மிகவும் பிற்படுத்தப்பட்ட/ சீர்மரபினர் விடுதி மாணவ/மாணவியர்கள், 44,950 - சீர்மரபினர் பள்ளிகளில் பயிலும் மாணவ/ மாணவியர்களும் பயன்பெறுகின்றனர்.

இத்துறையின் கீழ் இயங்கும் விடுதிகளை விரிவுபடுத்தவும், அனைத்து வசதிகளுடன் கூடிய கட்டடங்கள் கட்டுவதற்கு இந்த ஆட்சி வந்த பின்னர் மாணவர் விடுதிகள் ஒன்றிற்கு ரூ.27.50 இலட்சமும், மாணவியர் விடுதி ஒன்றிற்கு ரூ.33 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1996-97ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் 37 விடுதிகளுக்கு சொந்தமாக கட்டடங்கள் கட்ட அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**சமையலர்களின் ஊதிய உயர்வு**

மாதம் ரூ.500 தொகுப்பூதியத்தில் பணியாற்றிய சமையலர்கட்கு 1.7.98 முதல் ரூ.2550 - 3200 என முறையான ஊதியத்திலும்; மாதம் ரூ.100 தொகுப்பூதியத்தில் பணியாற்றிய சமையல் உதவியாளர்கட்கு ரூ.500 ஆகவும் இந்த ஆட்சியில் தான் உயர்த்தப்பட்டுள்ளது.

விடுதியில் மாணவர் சேர்க்கைக்கான பெற்றோரின் ஆண்டுவருமானம் ரூ.15,000 லிருந்து ரூ.50,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

விடுதிகளில் உணவுக்கட்டணம் பள்ளி மாணவ/ மாணவியர்களுக்கு 1996ல் ரூ.135 லிருந்து ரூ.1180 ஆகவும், 1.6.98லிருந்து ரூ.180 லிருந்து ரூ.225 ஆகவும் இருமுறை உயர்த்தப்பட்டுள்ளது.

கல்லூரி மாணவ/மாணவியர் விடுதிகளில் உணவுக்கட்டணம் கழகம் ஆட்சிப்பொறுப்பேற்ற பின்னர் கிராமப்புறங்களில் ரூ.193 என்பதையும் சென்னை நகரில் ரூ.198 என்பதையும் ரூ.300 ஆகவும்;

1.6.98லிருந்து ரூ.300 என்பதை ரூ.400 ஆகவும் உணவுக்கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளதுடன், தரமான உணவு வகைகள் வழங்கிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

வாரத்தின் ஏழு நாட்களுக்கான உணவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டு விடுதியின் அறிவிப்புப் பலகையில் ஒட்டப்பட வேண்டுமென விடுதிக்காப்பாளர்களுக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.



## கல்வி

10 கள்ளர் துவக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 7 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளியாகவும், 7 உயர்நிலைப் பள்ளிகள் மேனிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்பட்டன.

ஆய்வுக்கூடங்கள் அனைத்து மேனிலைப் பள்ளிகளிலும், 12 உயர்நிலைப் பள்ளிகளிலும் அமைக்கப்பட்டுள்ளது.

வெகுகாலமாக பராமரிக்கப்படாமல் இருந்த பள்ளிக்கூட கட்டடங்களை சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டன.

★ 37 பள்ளிகளில் குடிநீர் வசதி ஏற்படுத்தப்பட்டது.

★ 26 பள்ளிகளில் கூடுதலாக வகுப்பறைகள் கட்டப்பட்டன.

★ 37 பள்ளிகளில் மாணவியர்களுக்குக் கழிப்பறைகள் கட்டப்பட்டன.

★ 40 பள்ளிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது.

★ 10ஆம் வகுப்பு மாணவர்களுக்கு விடுபட்ட பாடப்புத்தகங்களையும் சேர்த்து அனைத்து பாடப்புத்தகங்களும் இலவசமாக வழங்கப் படுகிறன்றன.

★ படிப்புதவித் தொகைக்கான பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.12,000லிருந்து ரூ.25,000 ஆக உயர்த்தப்பட்டது.

## வேலைவாய்ப்புப் பயிற்சிகள்

175 பிற்படுத்தப்பட்டோர்/மிகவும் பிற்படுத்தப் பட்டோர் வகுப்பினருக்கு வழங்கப்பட்டு வந்த கணினி பயிற்சியானது 1,000 நபர்கட்கு வழங்கிட இந்த அரசு ஆணையிடப்பட்டுள்ளது. மேற்சொன்ன பயிற்சியின் தரத்தை உயர்த்தும் பொருட்டு தனியார் நிறுவனங்களால் வழங்கப்பட்டு வந்த கணினி பயிற்சி பல்கலைக்கழகங்களினால் அளிக்ககப்பட்டு வந்தது.

## கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி

250 பிற்படுத்தப்பட்ட/மிகவும் பிற்படுத்தப்பட்ட/ சீர்மரபினருக்கு கும்மிடிப்பூண்டியிலுள்ள கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்டு வந்த கனரக வாகன ஓட்டுநர் பயிற்சியானது தற்பொழுது 2,000 நபர்கட்கு தமிழ்நாட்டிலுள்ள 12க்கு மேற்பட்ட கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி நிறுவனங்களால் அளிக்கப்பட்டு வருகிறது.

பயிற்சியாளர் ஒருவருக்கு ரூ.12,000 பயிற்சிக்கட்டணமும், உண்டி உறையுள் கட்டணமும் உயர்த்தி வழங்கப்படுகிறது.

## செவிலியர் பயிற்சி

பிற்படுத்தப்பட்டோர்/மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் வகுப்பு மக்களிடையே வேலை வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கும் பொருட்டு 25 பெண்கட்குத் துணை செவிலியர் பயிற்சியளிக்க இவ்வரசு ஆணையிட்டுள்ளது.

மேற்சொன்ன பயிற்சி நடப்பு நிதியாண்டு முதல் 250 மகளிருக்கு வழங்கப்பட உள்ளது.

மேலும் இவ்வகுப்பினரிடையே வேலை வாய்ப்புகளை உருவாக்கி கொடுக்கும்பொருட்டு கீழ்க்கண்ட பயிற்சி திட்டங்களும் அறிமுகக் படுத்தப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

★ தானியங்கி பழுதுபார்த்தல்

★ குளிர்சாதன இயந்திரங்கள் பழுதுபார்த்தல்.

★ பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி இயந்திரங்கள் இயக்குவது

★ தோல் காலணிகள் தயாரிப்பு

★ அலங்கார உடை வடிவமைப்பு

★ மகளிர் ஆடை தயாரிப்பு

★ மேலும் IAS / IPS பணியிடங்களுக்கான தேர்வில் பிற்படுத்தப்பட்ட/மிகவும் பிற்படுத்தப் பட்ட/ சீர்மரபினர் மாணவ, மாணவியர்கள் தேர்ச்சி பெறும்பொருட்டு சென்னையிலுள்ள சிறப்பு பயிற்சி நிலையத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. வாடகைக் கட்டிடத்தில் இயங்கிவரும் இச்சிறப்பு பயிற்சி நிலையத்திற்கு சென்னை, சைதாப்பேட்டையிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி வளாகத்தில் சொந்தமாகக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### இலவச வீட்டுமனைப் பட்டா

1996-97ஆம் ஆண்டு வரையில் இத்திட்டமானது மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர்களுக்கும் மட்டும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

1997-98ஆம் ஆண்டிலிருந்து கிராமப்புறங்களில் வறுமைக்கோட்டிற்கும் கீழே வாழும் பிற்படுத்தப் பட்டோர்க்கும் முன்னேறிய வகுப்பினருக்கும் விரிவுபடுத்தப்பட்டு இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1995-96ல் | ... | ரூ.1 கோடி |
| 1996-97ல் | ... | ரூ.2 கோடி |
| 1997-98ல் | ... | ரூ.18 கோடி |
| 1999-2000ல் | .... | ரூ.18 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. |

(மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ரூ.10 கோடி பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ரூ.5 கோடி முன்னேறிய வகுப்பினர் ரூ.3 கோடி)

### பட்டாக்கள் வழங்கப்பட்டவை

1996-97ஆம் ஆண்டில் 4,300 பயனாளிகளும், 1997-98ஆம் ஆண்டில் 44,729 பயனாளிகளும், 1998-99ஆம் ஆண்டில் 34,832 பயனாளிகளும் பட்டாக்கள் பெற்றுள்ளனர்.

இதற்கென 15 தனிவட்டாட்சியர்கள் மற்றும் தொழில்நுட்ப பணியாளர்கள் பணியிடங்கள் புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### இலவசக் கருவிகள்

மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவசமாக வழங்கப்படும் தொழிற்கருவிகளின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது.

சலவைத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 4,000 சலவைப்பெட்டிகள் 2,000 உயர்த்தப்பட்டு 6,000ஆக வழங்கப்படுகிறது.

போயர்களுக்கு 500 நபர்கட்கு வழங்கப்பட்டு வந்த கல்லுடைக்கும் கருவிகள் 1,500 உயர்த்தப்பட்டு 2,000 ஆகவும், சவரத் தொழிலாளர் 500 நபர்கட்கு வழங்கப்பட்டு வந்த சவரக்கருவிகள் 1,500 உயர்த்தப்பட்டு 2,000 ஆகவும் வழங்கப்படுகிறது.

### நிதி ஒதுக்கீடு

1969ஆம் ஆண்டுவரை ஆதிதிராவிடர் நலத்துறை யோடு இத்துறை இணைத்திருந்தபோது நிதிஒதுக்கீடு சில இலட்சங்களில் தான் இருந்தது.

1969-70ல் தனியாக பிற்படுத்தப்பட்டோர் சமுதாயத்திற்கென தனியாக ஒரு துறை உருவாக்கப்பட்டு அதற்கென கோடிக்கணக்கில்தான் நிதிஒதுக்கீடு இருந்தது.

1996 மே மாதத்திற்கு முன்னர் இத்துறைக்கு நிதி ஒதுக்கீடு ரூ.47.21 கோடி மட்டுமே. ஆனால் கலைஞர் அரசு பதவியேற்ற பின்னர், பிற்படுத்தப்பட்ட /மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் நலன்கருதி கலைஞர் ஆட்சியின் காலத்தில்

| | | |
|---|---|---|
| 1996-97ல் | .... | ரூ.54.52 கோடியாகவும் |
| 1997-98ல் | .... | ரூ.64.32 கோடியாகவும் |
| 1998-99ல் | .... | ரூ.89.45 கோடியாகவும் |

1999-2000ல் ரூ.150 கோடியாகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

பகுத்தறிவுப் பகலவனாம் **தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா** அவர்கள் வழியில் அயராது உழைக்கும் தமிழக முதல்வர் **கலைஞர்** அவர்கள் தலைமையில், பிற்படுத்தப்பட்ட/மிகவும் பிற்படுத்தப் பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பு மக்கள், வாழ்வில் வளங்கள் பல பெற்று நலம் பெறுவர் என்பதில் ஐயமில்லை. ★

# வனவளம்

தமிழகத்தில் சுமார் 22,748 சதுர கிலோ மீட்டரில் வனவளம் நிறைந்துள்ளது. இது மொத்த நிலப்பரப்பில் 17.49 விழுக்காடாகும். ஒரு நாட்டின் குறைந்தபட்ச தேவையான 33 விழுக்காடாக வனவளத்தினை உயர்த்த இந்த அரசு கடந்த மூன்றாண்டுகளாக பல்வேறு திட்டங்களின் மூலம் முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

மத்திய அரசின் வன நில அளவை நிறுவனத்தின் (Forest Survey of Indian through Satellite) செயற்கை கோள் ஆய்வின்படி சமீபத்தில் வனவளப்பரப்பினை கணக்கெடுக்கப்பட்டபோது இந்தியாவில் உள்ள அதிக மாநிலங்களில் வனவளப்பரப்பு குறைந்திருக்கும்போது தமிழகத்தில் மட்டும் 19 சதுர கிலோ மீட்டர் வனவளப்பரப்பு (Forest Cover) உயர்ந்துள்ளது என்பதை மிகவும் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். இது மொத்த பரப்பில் 0.08 விழுக்காடாகும்.

தமிழக வனங்களில் அபூர்வமான மரவகைகளும் குறிப்பாக சந்தனம், தேக்கு, ஈட்டி போன்ற மர வகைகளும் புலி, யானை, காட்டெருமை, சிங்கவால் குரங்கு, சாம்பல் நிற அணில் போன்ற அரிய வன விலங்குகளும், எண்ணிக்கையில் அடங்கா தாவர வகைகளும் மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்த மூலிகைகளும் மிகுந்து காணப்படுகின்றன. இவ்வனங்கள் நீர்வளம், மண்வளம் மற்றும் தட்பவெப்ப சூழலையும் பாதுகாக்கும் திறன் கொண்டவை. இவ்வகை வனங்களில் செயலாக்கப்படும் திட்டங்களினால், இதுவரை தமிழகத்தின் வனத்துறையின் சரித்திரத்திலேயே முதன் முதலாக, வனத்தை அடுத்த கிராமங்களில் வசிக்கும் ஏழை எளிய மக்களை உற்பத்தி செய்தலிலும், பாதுகாப்பதிலும் ஈடுபடுத்தி அவர்களின் இருப்பிடத்தின் அருகாமையிலேயே வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படுகிறது.

1996–97ஆம் ஆண்டு ரூ.61.10 கோடி செலவில் 51,456 எக்டேர் பரப்பிலும், 1997–98ஆம் ஆண்டு ரூ.85 கோடி செலவில் 79,215 எக்டேர் பரப்பிலும், 1998–99ஆம் ஆண்டு ரூ.134.34 கோடி செலவில் 92,817 எக்டேர் பரப்பிலும் வனத்திட்டங்கள் செயலாக்கப்பட்டன.

கடந்த மூன்றாண்டுகளைப் போல, வன அபிவிருத்திப் பணிகளில், இந்த அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டது இல்லை என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்ளலாம். கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் 17 கோடி நாற்றுக்கள் நடப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது.

### காடு வளர்ப்பு

தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் மூலம் தரமிழந்த வறண்ட காடுகளைக் கூட்டு வன நிர்வாக முறையின் மூலம் மேம்படுத்தவும் உற்பத்தி திறனை அதிகமாக்குவதும், இத்திட்டத்தின் நோக்கங்களாகும். கூட்டுவன நிர்வாக முறையில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் ஜப்பான் நாட்டு பொருளாதார நிதி நிறுவன உதவியுடன் 1997–98 ஆம் ஆண்டு முதல் 2001–2002ஆம் ஆண்டு வரை ஐந்தாண்டுகளுக்கு ரூ.500 கோடி செலவில் 1,000 கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டம் 1997–98ஆம் ஆண்டு 61,212 எக்டேர் பரப்பில் ரூ.45.20 கோடி செலவில் 200 கிராமங்களிலும், 1998–99ஆம் ஆண்டு 86,419 எக்டேர் பரப்பில் ரூ.94.92 கோடி செலவில் 200 கிராமங்களிலும் செயல்படுத்தப்பட்டது.

**மாண்புமிகு வனத்துறை அமைச்சர்**
**பொங்கலூர் திரு. என். பழனிசாமி**





21,545 எக்டேர் பரப்பில் ரூ.1,058.73 இலட்சம், 1997–98ஆம் ஆண்டு 8,037 எக்டேர் பரப்பில் ரூ.750 இலட்சம் செலவில் செயலாக்கப்பட்டன.

1998–99 ஆம் ஆண்டில் ரூ.263.82 இலட்சம் செலவில் தருமபுரி மாவட்டத்தில் அரூர் மற்றும் மொரப்பூர், விழுப்புரம் மாவட்டத்தில் ஆழ்வார்மலை, தேனி மாவட்டத்தில் வால்கரடு, காஞ்சிபுரம் மாவட்டத்தில் பெருங்களத்தூர், திருச்சி மாவட்டத்தில் களமாவூர் ஆகிய ஆறு இடங்களில் நவீன நாற்றங்கால் மையங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இந்த நவீன நாற்றங்காலில் சுமார் 12 இலட்சம் வீரிய நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்படும்.

## நீர்பிடிப்புப் பகுதி மேம்பாடு

தமிழகத்தின் பெரும்பாலான நீர்த்தேக்கங்கள் ஆறுகள், ஆகியவற்றின் நீர்பிடிப்புப் பகுதிகள் வனங்களிலுள்ள்ன. நிலப்பகுதியிலுள்ள நீர்வளத்தினை வளப்படுத்தவும், நிலவளத்தினை ஒழுங்குபடுத்தவும், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்கு தொடர்ச்சி மலைத் திட்டம், நிலவளப் பாதுகாப்பு மேட்டூர் ஸ்டேன்லி மற்றும் வைகை நீர்பிடிப்புத் திட்டங்களும் 1996–97ஆம் ஆண்டு 5,281 எக்டேர் பரப்பில், ரூ.716.57 இலட்சங்கள் செலவிலும், 1997–98 ஆம் ஆண்டு 3,573 எக்டேர் பரப்பில் ரூ.802.51 இலட்சங்கள் செலவிலும், 1997–98ஆம் ஆண்டு 3,665 எக்டேர் பரப்பில் ரூ.923.55 இலட்சங்கள் செலவிலும் செயல்படுத்தப்பட்டன.

## தகவல் தொடர்பு மற்றும் கட்டடப்பணிகள்

வனப்பகுதிகளில் போக்குவரத்து வசதிகளுக்காகவும், பாதுகாப்புப் பணிகளை தீவிரப்படுத்துவதற்காகவும், சாலைகளைப் **செப்பனிடவும்,** பணியாளர்களுக்கு மற்றும் அலுவலர்களுக்கு குடியிருப்பு வசதிகள் செய்து தருவதற்காகவும் 1996–97ஆம் ஆண்டு ரூ.40.33 இலட்சம் செலவில், 1997–98 ஆம் ஆண்டு ரூ.28.82 இலட்சம் செலவில், 1998–99ஆம் ஆண்டு ரூ.32.95 இலட்சம் செலவில் பணிகள் செயல்படுத்தப்பட்டன.

## கடலோர இயற்கை சூழலை பாதுகாத்தல்

தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் வாழும் நுண்ணுயிரின சூழலை பாதுகாக்கவும், அதிவேக மற்றும் புயல் காற்றுகளின் நாச விளைவுகளை குறைப்பதற்கும் மணல் குன்றுகள் உருவாகுவதால் ஏற்படும் அழிவுகளைத் தடுக்கவும் கடந்த மூன்றாண்டுகளில் 1996–97ஆம் ஆண்டு ரூ.21.74 இலட்சம், 1997–98ஆம் ஆண்டு ரூ.26.94 இலட்சம், 1998–99 ஆம் ஆண்டு ரூ.24.91 இலட்சம் செலவில் செயலாக்கப்பட்டன.

## வேளாண்மை அபிவிருத்தி திட்டம்

உலக வங்கி நிதி உதவியுடன் 1990–91ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் நீர்பிடிப்புப் பகுதியில் காடு வளர்த்தல், தரம் வாய்ந்த விதைகளை உற்பத்தி செய்தல், நிலவள மேம்பாட்டு பொறியியற் பணிகள் மற்றும் காடு வளர்ப்புப் பணிகள் 1996–97 ஆம் ஆண்டு

## சமுதாய தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டதின் மூலம் தரிசு நிலங்களில் மரங்கள் அளவினை, அதிகப்படுத்தி தடிமரங்கள், மென்மரங்கள் மற்றும் இதர சிறுவனப் பொருட்கள் தேவைகளை பூர்த்தி செய்தலும் இதன் முக்கிய நோக்கமாகும். இத்திட்டம் 1996–97ல் 6,885 எக்டேரில் ரூ.22.42 கோடி செலவில் செயல்முறைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான சுவீடன் நாட்டு நிதி உதவி 1996 மார்ச் உடன் முடிவடைந்துவிட்டபடியால் அக்காடுகளை/தோட்டங்களை பராமரிக்க மாநில அரசு நிதிஉதவியுடன் ரூ.4.37 கோடி 1997–98ஆம் ஆண்டில் செலவிடப்பட்டுள்ளது. மேலும் 1998–99ஆம் ஆண்டு ரூ.3.97 கோடி செலவில் இத்திட்டம் செயலாக்கப்பட்டுள்ளது.

## வன ஒருங்கிணைப்பு மற்றும் வனப்பாதுகாப்பு

வன ஒருங்கிணைப்புத் திட்டத்தின் மூலம் ஒதுக்குக்காடுகளை அளவை செய்து எல்லைக் கற்கள் நட கடந்த மூன்று ஆண்டுகளில் செலவிடப்பட்ட தொகை. 1996–97 ஆம் ஆண்டு ரூ.8.85 இலட்சம், 1997–98ஆம் ஆண்டு ரூ.7.86 இலட்சம், 1998–99ஆம் ஆண்டு ரூ.8.08 இலட்சம் ஆகும்.

## வனப்பாதுகாப்பு நடவடிக்கைகள்

தமிழக அரசின் திறமையான நடவடிக்கையினால் வனப்பாதுகாப்புப் பணிகள் மேம்படுத்தப்பட்டு காடுகளிலிருந்து விலை மதிப்புள்ள மரங்கள் கடத்தப்படுவது வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது. கடந்த **மூன்றாண்டுகளில் சந்தனமரக் குற்றங்களின் எண்ணிக்கை 6806 பிடிப்பட்ட சந்தன மரத்தின் மதிப்பு ரூ.44.01 கோடி.** கைது செய்யப்பட்டவர்கள் 89 பேர்.

## சந்தனமர வருவாய்

கடந்த மூன்றாண்டுகளில் சந்தன மர ஏல விற்பனை மூலம் கிடைத்த விற்கப்பட்ட சந்தன மரங்களின் வருமானம் ரூ.72.72 கோடி.

1995–96ல் டன் ஒன்றுக்கு ரூபாய் 2.65 இலட்சத்திற்கு விற்ற சந்தனமரம் கடந்த ஆண்டில் ரூ.44 இலட்சத்திற்கு விற்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் தற்பொழுது மத்திய அரசு1,500 டன் சந்தன மரத்தை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அனுமதித்துள்ளதால் உள்நாட்டில் சந்தன மரத்தின் மதிப்பு அதிகமாகி 1999–2000 ஆம் ஆண்டில் சந்தன மரத்தின் மூலம் வருவாய் சுமார் ரூபாய் நூறு கோடி கிடைக்க வாய்ப்புள்ளது.

### வனஉயிரின பாதுகாப்பு

தமிழ்நாட்டில் 17 சரணாலயங்களும், 5 தேசிய பூங்காக்களும் இருக்கின்றன. தமிழகத்தின் மொத்த வனப்பரப்பில் இவைகள் 12.8 விழுக்காட்டில் அமையப்பெற்றுள்ளன. இப்பகுதிகளைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் மாநில மற்றும் மத்திய அரசின் உதவியுடன் கடந்த மூன்றாண்டுகளில் செலவிடப்பட்ட தொகை ரூ.15.48 கோடி ஆகும்.

### வனப்பொருட்கள் உற்பத்தி

வனங்களிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வாழும் பழங்குடியினரின் வேலைவாய்ப்பு மற்றும் கூடுதல் வருவாய் ஏற்படுத்துவதற்கும், மருந்துச் செடிகளுடன் சிறுவனப் பொருட்களின் தோட்டம் எழுப்பும் பணி கடந்த மூன்றாண்டுகளில் 330 எக்டேர் பரப்பில் ரூ.28.75 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படுகிறது.

ஆழியாறு, மேட்டுப்பாளையம், நீலகிரி விருஞ்சிபுரம் போன்ற இடங்களில் 136 அபூர்வ மூலிகை வகைகளும் உற்பத்தி செய்யப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

### பழங்குடியினர் மேம்பாடு

வனங்களில் வாழும் பழங்குடி மக்களின் பொருளாதாரம் வனவளத்தினை சார்ந்துள்ளது. வனப்பகுதிகளில் வாழும் பழங்குடி மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், முன்னேற்றப்பணிகள், வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் அடிப்படை உள்ளமைப்பு போன்ற வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது. இத்திட்டமானது திருச்சி, விழுப்புரம், வேலூர், திருவண்ணாமலை, தருமபுரி, சேலம் மாவட்டங்களில் செயல்முறைப்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த மூன்றாண்டுகளில் ரூ.4.41 கோடி செலவில் 769 எக்டேரில் செயல்படுத்தப்படுகிறது.

### மனித வள மேம்பாடு

இத்திட்டத்தின் கீழ் விலை மதிக்க முடியாத மனித வளத்தினை மேம்படுத்த தகுந்த பயிற்சியளித்து **உயர்த்திட** கடந்த மூன்றாண்டுகளில் ரூ.1.43 கோடி செலவிடப்பட்டது.

மேலும் 1999–2000ஆம் ஆண்டில் வன வளங்களைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.125 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### வனத்தோட்டக் கழகம், திருச்சி

தமிழ்நாடு வனத்தோட்டக் கழகமானது வனத்துறையினரிடமிருந்து 71,013 எக்டேர் வனநிலங்களைக் குத்தகை பெற்றதன் மூலம் கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை, பெரம்பலூர், கரூர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் தைலம், முந்திரி மற்றும் சவுக்கு மரங்களை பயிரிட்டு பராமரித்து வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் இக்கழகத்தின் வருவாய் ரூ.60.45 கோடி ஆகும். 1998–99ல் இக்கழகத்தின் நிகர இலாபம் ரூ. 7.43 கோடியாகும்.

### சந்தனமர எண்ணெய்த் தொழிற்சாலை

கடந்த ஆண்டில் இக்கழகத்திற்கு சொந்தமான சந்தன மர எண்ணெய் தொழிற்சாலையில் 5,529.700 கிலோ சந்தன எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் முன்பு இருப்பில் இருந்த எண்ணெயும், கடந்த ஆண்டு உற்பத்தி செய்த எண்ணெயும் சேர்த்து 8,983.85 கிலோ எண்ணெய் விற்பனை செய்து அதன் மூலம் ரூ.9.46 கோடி வருமானம் ஈட்டியுள்ளது. சந்தனமர எண்ணெய் விற்பனையில் கடந்த ஆண்டில் ஒரு கோடி ரூபாய் இலாபம் கிடைத்துள்ளது.

### தேயிலைத் தோட்டக் கழகம், குன்னூர்

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கழகமானது ஆசியாவிலேயே பெரிய குளோனல் ரக (பதியன் முறை) தேயிலைச் செடிகள் கொண்ட தோட்டமாகும். இதன் பரப்பு 4,431.92 எக்டேராகும். நீலகிரி மாவட்டத்தின் பொருத்தமான நிலங்களில் தேயிலை உற்பத்தி செய்து இந்தியா திரும்பிய இலங்கை அகதிகளுக்கு நிரந்தர வேலை அளித்து மறுவாழ்வு கொடுப்பதே இதன் முக்கிய நோக்கமாகக் கொண்டு துவங்கப்பட்டது. இக்கழகம் 6,926 நிரந்தர் பணியாளர்களுக்கும், 5,000 அன்றாடப் பணியாளர்களுக்கும் வேலைவாய்ப்பளித்து வருகின்றது.



கடந்த மூன்று ஆண்டுகளில் உற்பத்தி 2.77 கோடி கிலோ வருவாய் ரூ.173.96 கோடியாகும்.

### அரசு இரப்பர் கழகம், நாகர்கோவில்

அரசு இரப்பர் கழகம், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 4,785.70 எக்டேர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இதில் இரப்பர் மரங்களும் சிறிய அளவில் கிராம்பும் வளர்க்கப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் இரப்பர் உற்பத்தி 8283 மெ. டன், வருவாய் ரூ.49.83 கோடி ஆகும். ★

# வீட்டு வசதி துறையின் வியப்பூட்டும் சாதனை



மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர்
திரு. கு. பிச்சாண்டி

தமிழகத்தில் நான்காவது முறையாக முதல்வராக பொறுப்பேற்று நல்லாட்சிபுரிந்து வரும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இன்று அனைத்து துறைகளிலும் ஆயிரமாயிரம் திட்டங்களை அள்ளித் தந்து வழிகாட்டி செயலாற்றி வரலாற்று சாதனைகளை படைத்து வருகிறார்கள்.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் தமிழ்நாடு வீட்டு வசதித்துறை பல்வேறு திட்டங்களை நாட்டு மக்களுக்காக வழங்கி சாதனை படைத்து வருகிறது.

*"நீரின்றி அமையாது உலகு என்பது போல*
*வாழும் மனிதனுக்கு*
*வீடின்றி அமையாது வாழ்வு"*

என்று சொல்லும்படியாக "ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு" எனும் குறிக்கோளை தன்னகத்தே கொண்டு அந்த குறிக்கோளை அடைய கடந்த மூன்று ஆண்டுகளாக அயராமல் உழைத்து வரும் துறை தான் வீட்டுவசதித் துறை.

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையில்

*வீட்டு வசதி வாரியம்*
*கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள்*
*தமிழ்நாடு வீட்டு வசதி இணையம்*
*ஊரக வீட்டு வசதிக் கழகம்*
*கட்டிட மையங்கள்*
*நகர் ஊரமைப்புத் துறை*

ஆகியன கடந்த மூன்று ஆண்டுகளாக மிகுந்த முனைப்போடும் - சுறுசுறுப்போடும் இயங்கி வருகின்றன.

## தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் பல்வேறு வீட்டு வசதி திட்டங்களின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் (1996 மே முதல் 1999 ஏப்ரல் வரை) ரூ.673.83 கோடி செலவில் 49,336 குடியிருப்புகளை பொருளதாரத்தில் நலிந்த பிரிவினரும், குறைந்த வருவாய் பிரிவினரும், நடுத்தர மற்றும் உயர் வருவாய் பிரிவினரும் பயன்பெறும் வண்ணம் கட்டி முடித்துள்ளது.

1995-96ஆம் ஆண்டில் ரூ.242 கோடியாக இருந்த வாரியத்தின் திட்ட மதிப்பீடு 1998-99ல் ரூ.252 கோடியாக உயர்ந்துள்ளது. வாரியம் இந்த இலக்கை முழுவதும் பூர்த்தி செய்துள்ளது. மேலும் 1998-99 நிதியாண்டில் நிர்ணயிக்கப்பட்ட 15,000 குடியிருப்புகளில் 13,801 குடியிருப்புகள் வாரியத்தால் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

## சுயசார்பு நகரங்கள்

சென்னையைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகளில் சுயசார்பு நகரங்களை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் உருவாக்கும் திட்டம் 1996ஆம் வருடம் ஆகஸ்டு மாதம் அறிவிக்கப்பட்டது. இச்சார்பு நகரங்களின் மூலம், நகரத்தில் மக்கள் தொகை நெரிசல் குறையும்.

இது சம்மந்தமாக செம்பரம்பாக்கம், குத்தலாம்பாக்கம், நரசிங்கபுரம், பார்வதிராசபுரம், வெள்ளவேடு,ஜமீன் பல்லாவரம், பருத்திப்பட்டு, சோளிங்கநல்லூர் மற்றும் பூஞ்சேரி (மகாபலிபுரம்), ஆகிய ஊர்களில் நிலம் கையகப்படுத்தும் பணிகளும், மற்றும் அரசு நிலம் மாற்றும் பணிகளும் தற்போது நடைபெற்று வருகின்றன.

## சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீடு

தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களுக்காக வாரியத்தால் 240 அடுக்கு மாடி வீடுகள் ரூ.45 கோடி செலவில் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் 5.04 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வீடும் 110 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட இந்த குடியிருப்பில் உயர் வேக தூக்கிகள் மற்றும் மாடிப்படிகள், வாகனங்கள் நிறுத்துவதற்கான இடம், காவல் அலுவலகம், மின்சார அலுவலகம் மற்றும் பூங்கா வசதிகள் கொண்டவையாகவும் அமையும். எழில்மிகு தோற்றத்தோடு வடிவமைக்கப்பட்டுள்ள இக்கட்டிடம் சென்னை மாநகரத்தில் குறிப்பிட்டு சொல்ல கூடிய சிறப்பு வாய்ந்த கட்டிடமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

அமையப் பெற்றிருக்கும்.

## வீட்டு மனை அபிவிருத்தித் திட்டம்

கோவை அருகில் பெரிய நாயக்கன் பாளையத்தில் பெரிய அளவிலான மனை அபிருத்தி திட்டம் முடிவு பெற்றுள்ளது. அடிப்படை வசதிகளான தார் சாலைகள், கழிவு நீர் மற்றும் குடிநீர் வசதிகள், மழை நீர்கால்வாய்கள், பூங்காக்கள் மற்றும் கடைகளுக்கான நிலம் ஆகியவை கொண்ட 101 ஏக்கர் நிலம் ரூ.27 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வகை வருவாய் பிரிவினரின் வீட்டுவசதிகளுக்காக உருவாக்கப்பட்டுள்ளன.

மேலும் தொழிற்சாலைகள் நிறைந்த ஒசூர் நகரத்தில் நிலவும் வீட்டுவசதி தேவையைக் கருதி



## வணிக வளாகத்தோடு அடுக்குமாடி வீடுகள்

சென்னை வில்லிவாக்கத்தில் ரூ.25 கோடி செலவில் கடைகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகள் கொண்ட 11 மாடி கோபுரக் கட்டடம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. இதில் 69 சதுர மீட்டர் மற்றும் 119 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட 124 அடுக்குமாடி வீடுகள் (2 மற்றும் 3 படுக்கை அறைகளைக் கொண்டவை) உயர் வருவாய் பிரிவினருக்காவும் மற்றும் 16 கடைகள் கொண்ட வணிக வளாகமும் கட்டப்பட்டு வருகின்றன.

மேலும் 450 சதுர மீட்டர் பரப்பு கொண்ட சமூகப் பணிக்கான இடமும் ஒதுக்கப்பட்டுள்ளது. கடைகளுக்கு மேலுள்ள முதல் மாடியில் கோபுரம்

ஒசூர் பகுதி 15ல் 52.87 எக்டேர் நிலப்பரப்பில் எல்லாவித அடிப்படை வசதிகளுடன் கூடிய 1,781 மனைகளை மேம்படுத்தும் திட்டம் ரூ.16.59 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

கோயம்புத்தூர் துடியலூர் பகுதியில் மேம்படுத்தப்பட்ட வீட்டுமனைகள் உருவாக்கும் திட்டம் இரண்டு பகுதிகளாக நடைபெற்று வருகின்றன. 21.20 எக்டேர் நிலப்பரப்பில் 983 மனைகள் பல்வேறு வகை வருமான பிரிவினருக்காக எல்லா உள்ளமைப்பு வசதிகளையும் கொண்டு ரூ.4.39 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டு வருகிறது.

அதுபோன்று ஈரோடு அருகே உள்ள முத்தம்பாளையத்தில் இரண்டு பகுதிகளாக வீட்டு

மனைகளை மேம்படுத்தும் திட்டத்தை ரூ.4.13 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் மொத்தம் 623 மனைகள் அனைத்து வருவாய் பிரிவினருக்கு எல்லாவித அடிப்படை வசதிகளுடன் உருவாக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம் முடிவடையும் நிலையில் உள்ளது.

### அரசு ஊழியர் வாடகை குடியிருப்புத் திட்டம்

மேலும் தமிழ்நாடு அரசின் புது மாவட்டங்களை உருவாக்கும் கொள்கைப்படி புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்ட தலைநகரங்களான கரூர், நாகப்பட்டினம், திருவண்ணாமலை, திருவாரூர், தேனி, விழுப்புரம், நாமக்கல் மற்றும் திருவள்ளூர் ஆகிய நகரங்களில் அரசு ஊழியர்களுக்கான வாடகை குடியிருப்புகளை உருவாக்கும் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. மொத்தம் 796 குடியிருப்புகள் துவங்கப்பட்டதில் 688 குடியிருப்புகள் ரூ.18.11 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 108 குடியிருப்புகளுக்கான பணிகள் ரூ.3.66 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

### பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கு வீட்டு மனைகள்

அதுமட்டுமின்றி ஒவ்வொரு நிலமேம்பாட்டுத் திட்டத்திலும் 5 சதவீத நிலத்தினை பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு வீட்டு வசதி செய்து கொடுப்பதற்காக ஒதுக்கி வைக்கப்படுகிறது. அவ்வாறு ஒதுக்கி வைக்கப்பட்ட நிலத்தில் எல்லாவித அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி, மேம்படுத்திய வீட்டு மனைகளாக இப்பிரிவினருக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் 7,634 மேம்படுத்தப்பட்ட மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

### வீடுகளுக்கு எழில்மிகு வடிவமைப்பு

மேலும் கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தினால் கட்டப்பட்டுள்ள வீடுகளில் உபயோகத்திற்கான பரப்பை அதிகரிப்பதற்காக புதிய வடிவமைப்புகளை வாரியம் உருவாக்கி வருகிறது. மேலும் இந்த வீடுகளின் முகப்பு தோற்றத்தை கண் கவரும் வண்ணமாக ஆக்குவதற்கு தனியார் துறையிலுள்ள பெயர் பெற்ற கட்டிடக் கலைஞர்களிடமிருந்து வடிவமைப்புகள் வரவேற்கப்பட்டு சிறந்தவை தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

### ஒளிவுமறைவில்லா ஒப்பந்தப்புள்ளி முறை

அத்துடன் கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் திறந்த முறை ஒப்பந்தபுள்ளிகளை கையாண்டு வருவதால் செய்தித் தாள்களில் விளம்பரம் கொடுக்கப்பட்டு போட்டியின் மூலம் ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்படுகின்றன. இதன் வாயிலாக ஒப்பந்தக்காரர்கள் குறைந்த விலையில் ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பிக்கின்றனர். இதன் மூலமாக தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் 1996-97ல் ரூ.4 கோடியினையும், 1997-98ல் ரூ.7 கோடியினையும் மற்றும் 1998-99ல் ரூ.3.85 கோடியினையும் சேமிப்பாக பெற்றுள்ளது.

அத்துடன் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தனது வருடாந்திர வருவாய் வசூலிக்கும் முறையில் சில முக்கியமான கோட்பாடுகளை கடைபிடித்தமையால் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. 1998-99ஆம் ஆண்டில் வாரியத்தில் வருவாய் வசூல் ரூ.220.42 கோடியை எட்டியுள்ளது. இது கடந்த ஆண்டை காட்டிலும் ரூ.21.42 கோடி அதிகமாகும்.

### நலிவுற்ற தொழிலாளர்களுக்கான வீடுகள்

மேலும் சலுகை விலையில் தொழிலாளர்களுக்கும் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின்படி சென்னை, திரு.வி.க. நகர் மற்றும் சர்மா நகர் ஆகிய குடியிருப்பு பகுதிகளில் சலுகை விலையில் பொருளாதாரத்தில் நலிவுற்ற தொழிலாளர்களுக்கு வீட்டின் விலையாக ரூ.9,600 முழுவதும் செலுத்திய 497 தொழிலாளர்களுக்கு விற்பனை பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்படி மதுரை, சிவகாசி, இராமநாதபுரம், கோயம்புத்தூர், திருப்பூர், புதுக்கோட்டை போன்ற நகரங்களில் வாரியத்தினால் கட்டப்பட்டுள்ள தொழிலாளர் வீட்டுவசதி குடியிருப்புகளில், மேற்கூறியபடி ரூ.9,600 முழுவதும் செலுத்திய 315 தொழிலாளர்களுக்கு விற்பனை பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### சிரமமின்றி வீட்டுமனை பத்திரம்

அத்துடன் விற்பனை பத்திரங்கள் பெற இருந்து வந்த கரடு முரடான நிபந்தனைகளை நீக்கி விற்பனை பத்திரங்களை வழங்கும் முறையினை எளிதாக்கி இந்த அரசு ஆணை பிறப்பித்து, ஒதுக்கீடு பெறுபவர்களுக்கு இதனை ஒரு வரப்பிரசாதமாக வழங்கியுள்ளது.

வீட்டு வசதி வாரிய ஒதுக்கீடுதாரர்களுக்கு எளிய முறையில் கிரயப்பத்திரங்கள் வழங்க சிறப்பு முகாம்கள் ஏற்படுத்தப்பட்டது. இச்சிறப்பு முகாம் மூலம் சென்னை மாநகர வாரிய திட்டப் பகுதிகளைச் சேர்ந்த 451 ஒதுக்கீடுதாரர்களுக்கு



7-4-99 அன்று கிரயப்பத்திரம் வழங்கப்பட்டது. இதைப்போன்று சிறப்பு முகாம்கள் வெளி மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டு 322 கிரயப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் 1-4-96 முதல் 30-4-99 வரை 16,597 ஒதுக்கீடுதாரர்களுக்கு கிரயப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

வாரியம் தனது செயல்பாடுகளை கொள்கை ரீதியாகவும், தற்காலத்திற்கு ஏற்பவும் மாற்றி அமைப்பதற்காக ஆலோசனை நிறுவனம் ஒன்றை அமைத்துள்ளது.

### கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வீட்டுவசதி

கடந்த 1996-97, 1997-98, 1998-99 ஆண்டுகளில் பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்காக ஊரக வீட்டுவசதித் திட்டம், குறைந்த வருவாய் பிரிவினருக்கானத் திட்டம், நடுத்தர பிரிவினருக்கானத் திட்டம், நகர்ப்புறங்களில் பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கான வீட்டுவசதித் திட்டம், நகர்ப்புற வீட்டுவசதித் திட்டம் என - இதுவரை இந்த மூன்று ஆண்டுகளில் 2,11,772 வீடுகள் கட்ட ரூ.929.84 இலட்சம் வீட்டுவசதிக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

### கட்டிட மையம்

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையின் கீழ் ஊரகப் பகுதிகளில் இயங்கி வரும் 33 கட்டிட மையங்கள் இதுகாறும் 18,156 ஊரக இளைஞர்களுக்கு பயிற்சி அளித்துள்ளதுடன், அப்பயிற்சியின் போது ரூ.626.47 இலட்சம் கட்டிடப் பொருட்கள் தயாரிக்கப்பட்டுள்ளது கட்டிட மையங்கள் மூலம் ரூ.52.506 கோடி மதிப்புள்ள கட்டுமானப் பணிகள் நடைபெற்றுள்ளன.

### ஊரக வீட்டுவசதிக் கழகம்

கிராமங்களில் வசிக்கும் மக்களின் வீட்டுவசதி தேவைகளை பூர்த்தி செய்யும் வீட்டுவசதி நிறுவனம் தமிழ்நாட்டில் இல்லாமல் இருந்து வந்தது. இதற்காக வீட்டுவசதிக் கழகம் ஒன்று உருவாக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க அரசாணை வழங்கப்பட்டு கிராம வீட்டு வசதிக் கழகம் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

மேலும் இக்கழகம் மாவட்டங்களிலுள்ள கட்டிட மையங்களை ஒருங்கிணைத்து அவற்றின் செயல்பாடுகளை கண்காணிக்கவும் உள்ளது. இதன் மூலம் ஊரகப் பகுதிகள் மேன்மேலும் உயரவும், வளரவும் வாய்ப்புள்ளது.

தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் அரிய வழிகாட்டுதலின் பேரில் சாதனைகளை படைத்து வரும் வீட்டுவசதித் துறை தொடர்ந்து நாட்டு மக்களுக்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்டு செயல்படும் என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக தொழில் வரலாற்றைச் சற்று பின்நோக்கி பார்த்தோம் என்றால், இன்றைய தொழில் வளத்திற்கு கலைஞர் அரசு அன்றே அடித்தளமிட்டதை யாராலும் மறைக்கவோ, மறுக்கவோ இயலாது. சான்றாக சிப்காட் என்ற அரசு நிறுவனத்தை 1971ஆம்ஆண்டு தோற்றுவித்தது கழக அரசு. அதேபோல் சிட்கோவை சிறு தொழில் வளர்ச்சிக்காக உருவாக்கியதும் கழக அரசுதான். மின்னணு தொழில்கள் வளர வேண்டிய தேவையை அன்றே உணர்ந்த கலைஞர் அவர்கள், எல்காட் என்ற நிறுவனத்தைத் தொடங்கினார்.

ஆண்டுகளில் முந்தைய அரசால் வழங்கப்பட்ட மானியங்கள் ரூ.116.50 கோடி மட்டுமே. ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றவுடன் 1996–97, 1997–98, 1998–99 ஆகிய மூன்று ஆண்டுகளில் வழங்கப்பட்ட மானியம் ரூ.213.55 கோடியாகும். அதைப்போலவே பாரதப்பிரதமரின் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1993–94, 1994–95, 1995–96 ஆகிய மூன்றாண்டுகளில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 42,760 நபர்களுள் 36,597 நபர்களுக்கு மட்டுமே கடன் ஒப்புதல் அளிக்கப்பட்டு 28,144



– மாண்புமிகு ஊரகத்தொழில் மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. **இ. பெரியசாமி**

# கலைஞரின் ஆட்சியில் தழைத்திடும் ஊரகத் தொழில்

இப்படி சிப்காட், சிட்கோ, எல்காட் போன்ற தொழில் நிறுவனங்களைத் தொடங்கியதன் மூலம் இன்றைய தொழில் வளர்ச்சிக்கு அன்றே விதை ஊன்றியது கலைஞர் அரசுதான். அந்த வித்துக்கள்தான் வளர்ந்து விருட்சம்ஆகி, இன்று ஆயிரமாயிரம் தொழில்கள் தொடங்குவதற்கு நிழலாக விளங்கி வருகின்றன.

தொழில் வணிகத்துறையைப் பொருத்தமட்டில் 1993–94, 1994–95, 1995–96 ஆகிய மூன்று

நபர்களுக்குக் கடன் வழங்கப்பட்டு ஒட்டுமொத்தமாக 83.30 சதவீதம் இலக்கைத்தான் முந்தைய அரசால் அடைய முடிந்தது. ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றபின் 1996–97, 1997–98, 1998–99 ஆகிய மூன்று ஆண்டுகளில் நிர்ணயம் செய்யப்பட்ட இலக்கான 58,800 நபர்களுள் 53,446 நபர்களுக்குக் கடன் ஒப்புதல் வழங்கப்பட்டு அதில் 33,975 நபர்களுக்குக் கடன் அளிக்கப்பட்டு ஒட்டுமொத்த சாதனை, 91 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

படித்த இளைஞர்களுக்கு அதிக அளவில் தொழில் தொடங்கிட தொழில் முனைவோர் பயிற்சி, மாவட்டங்களில் உள்ள மாவட்ட தொழில் மையங்கள் மூலம் நடத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற தொழில்முனைவோர்களுக்குத் தொழில் தொடங்குவதற்குத் தேவைப்படும் மூலதனத்தில் விளிம்பு தொகையைத் திரட்ட முடியாமல் பல பெண்கள் அல்லல்படுவதைக் கண்டறிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு பயிற்சி பெற்ற அவர்களுக்குத் தேவைப்படும் மூலதன விளம்பு தொகையை மானியமாகவோ அதாவது மூலதனத்தில் 10 விழுக்காடு தொகையை அரசே வழங்கும் என்று அறிவித்துள்ளார். இந்தத் தொகையில் அதிகபட்ச அளவு ரூ.50,000 வழங்க உத்திரவிடப்பட்டது. இந்த உதவி, உண்மையிலேயே தொழில் முனைவோர்களுக்குப் புது தெம்பினை உண்டாக்கி இருக்கிறது. முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்த இந்தச் சலுகை கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், இளம் விதவைகள் மற்றும் திருமணம் ஆகாத பெண்களுக்கு வழங்கப்படவேண்டும் என்று

உள்ளது. இச்சலுகையினைப் பெருமளவில் பெண்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்பதற்காக தற்போது திருமணமான பெண்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்ற நோக்கில் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தைப் பொருத்தவரை, தொழில் முனைவோர் பயிற்சித் திட்டத்தின் கீழ் கடந்த இரண்டாண்டு காலமாக 2,500 பெண்களுக்கு மகளிர் தொழில் முனைவோர் திட்டத்தில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில், 1,500 பெண்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தொழில் முனைவோர்களுக்குப் பயிற்சி தருவதோடு அல்லாமல், அவர்களை ஊக்குவிக்கும் வகையில் உதவித் தொகையும் வழங்கப்பட்டு வருகிறது. 2 மாத பயிற்சி திட்டத்தில் சேருபவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.300 வீதம் 2 மாதங்களுக்கு ரூ.600 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

இதேபோல், இன்னொரு சிறப்பு பயிற்சித் திட்டம் கழக அரசால் இந்த ஆண்டு தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் படித்த வேலையற்ற பட்டதாரிகள், டிப்ளமோ பெற்றவர்கள் மற்றும் பொறியியல் பட்டதாரிகள் சேர்ந்து பயனடையலாம். அவர்களுக்குப் பயிற்சியோடு உதவித்தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.1,000 வீதம் 6 மாதங்களுக்கு ரூ.6,000 வழங்கப்படுகிறது.

### தொழில் நுட்ப குழுமம்

சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள், வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்பத்தை, குறைந்த செலவில் பயன்படுத்தி முன்னேற வசதியாக தமிழ்நாடு தொழில் நுட்ப குழுமம் என்ற அமைப்பு 3.3.99 அன்று தமிழ்நாடு சங்கப் பதிவு சட்டம் 1975ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. உலகளவில் வளர்ந்து வரும் தொழில் நுட்பத்தை கூர்ந்து கவனித்து பரிசீலித்து, அவற்றைத் தமிழ்நாட்டின் தொழில் துறையில் செயல்படுத்தவும், இந்தக் குழுமம் உதவி செய்யும். தொழில் நுட்ப பரிமாற்றம், தொழில் நுட்ப மேம்பாடு ஆகிய துறைகளிலும் இக்குழுமம் உதவும்.

இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டவுடன் மாநிலத்திலேயே முதன்முறையாக சிறுதொழில் வாரியம் (SSI Board) ஒன்றை 19.12.96ல் அமைத்தது. இந்த வாரியம் இரண்டு தடவை கூட்டப்பட்டு சிறுதொழில் முனைவோர்களுக்கு உள்ள பிரச்சினைகளை ஆய்வு செய்து நடைமுறை இடர்பாடுகளைச் சீர்செய்ய பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

### புதிய தேயிலை தொழிற்சாலைகள்

கடந்த மூன்று ஆண்டுகளில் இன்கோசர்வ் அமைப்பின் மூலம் நீலகிரி மாவட்டத்தில் தேயிலை சிறுதொழில் விவசாயிகள் பயனடையும் வகையில், எப்பநாடு மற்றும் பிதர்காடு ஆகிய இடங்களில் இரண்டு தேயிலை தொழிற்சாலைகள் புதிதாக தொடங்கப்பட்டுள்ளன.

### தொழில் முதலீடுகள்

சிறுதொழில்கள் நலிந்து விடாமல் நாளும் காக்க இந்த அரசு தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் மூலம் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, இக்கழகத்தால் வழங்கப்படும் தொழில் முதலீட்டுக்காக பெறப்படும் வட்டியினை 20 விழுக்காட்டிலிருந்து 17.5 ஆக அரசு குறைத்துள்ளது. இதைத் தவிர குறித்த காலத்தில் திருப்பிச் செலுத்த முடியாத தொழில் முனைவோர்களுக்கு அபராத வட்டியாக 5 விழுக்காடு வசூலிக்கப்பட்டு வந்தது. இந்த வட்டிப் பளுவை 2½ விழுக்காடாக இந்த அரசு குறைத்துள்ளது.

மாவட்டங்கள் தோறும் தொழில் முனைவோர்களைச் சந்தித்து, அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளையும், உதவிகளையும் இந்நிறுவனம் வழங்கி வருகிறது. அண்மையில் திருப்பூருக்கு அருகில் உள்ள முதலிபாளையம் என்ற ஊரில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த 64 பேர்களுக்கு பனியன் தொழிலைத் தொடங்க ரூ.41.58 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

கழக அரசு பொறுப்பேற்றபோது மிகவும் நலிந்த நிலையிலிருந்த தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி) மேலும் நலிந்துவிடாமல் காக்க பல்வேறு முனைப்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த அரசு பொறுப்பேற்ற அன்று தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி கழகம் (சிட்கோ) ரூ.3.27 கோடி நட்டத்தில் இயங்கி வந்தது. கழக அரசு பொறுப்பேற்றுக்கொண்டவுடன் திட்டமிட்டு செயலாற்றியதால் நட்டத்தை லாபமாக்கி1996–97இல் ரூ.57 இலட்சம் இலாபம் ஈட்ட முடிந்தது. தொடர்ந்து 1997–98இல் ஈட்டிய இலாபம் ரூ.1.86 கோடி. 1998–99இல் ஈட்டிய இலாபம் ரூ.84.44 இலட்சம். 1999–2000இல் எதிர்பார்க்கப்படும் இலாபமோ ரூ.5.4 கோடி. இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டவுடன் தமிழகம் முழுவதும் 304 தொழிற்கூடங்கள் காலியாக இருந்தது. இதில் முடங்கி உள்ள மூலதனம் சுமார் 21 கோடியாகும். இந்த காலியாக உள்ள தொழிற்கூடங்களைச் சிறுதொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

### முத்திரை பதிக்கும் பத்திரப்பதிவுத்துறை

அரசின் ஆக்கபூர்வமான திட்டங்களைச் சமூக நன்மைக்காக தீட்டப்படுகின்ற வேளையிலே அவற்றுக்கு ஆகின்ற செலவை ஈடுகட்டுகின்ற வகையில் வருவாயை மேம்படுத்துகின்ற தலையாயப் பணியினை பதிவுத்துறை ஆற்றிவருகிறது.

இந்தத் துறையை பொறுத்தமட்டில் 1993–94,

**1994–95, 1995–96** ஆகிய மூன்று ஆண்டுகளில் ஆவணப்பதிவின் மூலம் அரசுக்குக் கிடைத்த வருவாய் ரூ.**1,746.82** கோடியாகும். ஆனால் இந்த அரசு பொறுப்பேற்ற கடந்த மூன்றாண்டுகளில் **1996–97, 1997–98, 1998–99** ஆவணப்பதிவின் மூலம் பெறப்பட்ட வருவாய் ரூ.**2409.16** கோடியாகும். அதாவது நமது ஆட்சியில் அரசுக்குக் கிடைத்த அதிகமான வருவாய் ரூ.**662.32** கோடியாகும். இதே போல இந்த அரசு பொறுப்பேற்றவுடன் கிட்டதட்ட **73,027** ஆவணங்கள் தனித்துணை ஆட்சியரால் நிர்ணயம் செய்யப்படாமல் நிலுவையில்



இருந்தது. இதனால் அரசுக்கு வரவேண்டிய வருவாய் ரூ.**220.58** கோடி முடக்கப்பட்டிருந்தது. இதை எப்படியாவது இந்த வருவாயை அரசுக்குக் கொண்டு வருவதற்காக முயற்சி எடுக்கப்பட்டு மத்திய அரசு திட்டத்திற்கு ஈடான சமாதான் திட்டம் ஏற்படுத்தப்பட்டு கிட்டதட்ட **1.3.99**லிருந்து சுமார் **10** கோடி ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

**1989**ல் அதாவது **26.5.89** அன்று கலைஞர் ஆட்சியில் வழிகாட்டி மதிப்பு நிர்ணயக்குழு என்ற குழு ஏற்படுத்தப்பட்டது. இந்த குழு இந்தியாவிற்கே முன் உதாரணமாக இன்னும் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள சொத்துக்களை வெளிமாநிலங்களில் பதிவு செய்வதைத் தடுத்துச் சட்டம் இயற்றியதால் இந்த அரசிற்கு ரூ.**25** கோடி கூடுதல் வருமானம் கிடைத்துள்ளது. இந்த சட்டத்தினால் பல்வேறு முறைகேடுகள் களையப் பட்டுள்ளன. நமது மாநிலத் திற்குக் கிடைக்க வேண்டிய வருவாய் பிற மாநிலங்களுக்குச் செல்லாமல் நமது மாநிலத்திற்கே கிடைக்கும் வகையில் வழிவகை செய்யப் பட்டுள்ளது. **20,000** மக்கள் தொகைக்கு ஒரு ஆவண எழுத்தர், என்றிருந்ததை **10,000** மக்கள் தொகைக்கு ஒரு ஆவண எழுத்தர் என்ற நிலையை தோற்றுவித்தது இந்த அரசு. அதைப் போலவே படித்த வேலையில்லா இளைஞர் களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்ற வகையில் ஆவண எழுத்தர் மற்றும் நகல் எழுத்தர் எண்ணிக்கையினை இந்த அரசு அதிகரித்து சுமார் **13,000** பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். ஆவணங்கள் எழுதுவதற்காக ஆவண எழுத்தர் அதிகக் கட்டணம் வசூலிப்பதை கண்டறிந்த இந்த அரசு ஆவணம் தயாரிப்பதற்கு ஆவண எழுத்தர் பெறவேண்டிய கட்டணத்தையும் நிர்ணயம் செய்து ஆணை வெளியிட்டுள்ளது. தற்போது சென்னையில் உள்ள மூன்று பதிவு அலுவலகங்களில் வில்லங்க சான்றிதழ்கள் கணிப்பொறி மூலம் வழங்கப்படுகின்றன. வரும் ஆண்டுகளில் இத்திட்டத்தில் மேலும் **21** சார்பதிவகங்களில் விரிவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் கடந்த நிதியாண்டில் **12** புதிய சார்பதிவகங்கள் திறக்கப்பட்டன. பதினைந்து சார்பதிவகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இதில் இரண்டு இடங்கள் திறக்கப்பட்டு விட்டன. மீதமுள்ள இடங்களில் கட்டுமானப்பணி முடியும் தருவாயில் உள்ளது. ஏனைய **11** கட்டடங்களுக்குக் கட்டுமானப் பணிக்கான மதிப்பீடு கோரப்பட்டுள்ளது. வேலூர் துணை பதிவுத்துறை தலைவர் மண்டலம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு கடலூரை தலைமையிடமாகக் கொண்டு ஒரு துணை பதிவுத்துறை தலைவர் மண்டலம் இயங்கி வருகிறது. அதேபோன்று விருத்தாச்சலம், சேலம் மற்றும் தஞ்சாவூர் பதிவு மாவட்டங்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

பதிவுத்துறை நடவடிக்கைகளைப் பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் வண்ணம் பதிவுத்துறை கையேடு வெளியிடப்பட்டுள்ளது. பதிவு செய்ய வரும் மக்களுக்கு முத்திரை தாள்கள் தட்டுப்பாடின்றி கிடைக்கச் செய்வதற்காக முத்திரைத்தாள் விற்பனை மையம் ஒன்று சென்னையில் உருவாக்கப்பட்டு விரைவில் செயல்படும் நிலையில் உள்ளது.

வெண்தாடி வேந்தரின் சீடராய், பேரறிஞரின் பாசமுள்ள தம்பியாய், எங்கள் நெஞ்சம் நிறைந்த அண்ணனாய், ஆசானாய், பாசம் பொழிவதில் அன்னையாய் அறிவார்ந்த ஆட்சித் தலைமையாய், வாழுகின்றபோதே வரலாறு படைக்கின்ற முத்தமிழாய், விளங்கும் தானைத் தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் தமிழகம் முதலீட்டில் இந்தியாவிலேயே முதலிடம் பெற்று சாதனைப் படைத்துள்ளது.

# செய்தித்துறையின் சீரியப் பணிகள்

மாண்புமிகு செய்தி–விளம்பரம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர்
திரு. வ.முல்லைவேந்தன்

செய்தித் துறை என்பது மக்களுக்கும் அரசுக்கும் ஒரு பாலமாக அமைந்து நல்லெண்ணத்தையும் நட்புறவையும் வளர்க்கிற துறையாகும். அரசின் செயல்பாடுகளை, ஆற்றிவரும் பல்வேறு நலத்திட்டங்கள் பற்றிய விளக்கங்களை மக்களுக்கு எடுத்துச் சென்று அவர்களுக்கு விழிப்புணர்வையும் ஈடுபாட்டையும் ஏற்படுத்துகின்ற கடமையைச் செய்தி-மக்கள் தொடர்புத்துறை செய்து வருகிறது.

"உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே!" என்றார் உலகப் பொதுமறை தந்த திருவள்ளுவர். நாடு, மொழி, இனம், கலை, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றில் தங்கள் முத்திரையைப் பதித்தச் சான்றோர் நினைவைப் போற்றுவதும் அவர்களது வரலாற்றுச் சாதனைகளை நிகழ்காலத்திற்கு எடுத்துச் சொல்லி, வளமான வருங்காலத்திற்கு வழிகோலுவதும் பொறுப்புள்ள மக்கள் நல அரசின் தலையாய கடமையாகும். இந்தக் கடமையை, கலைஞர் அரசு, ஏனைய மாநிலங்களும் பின்பற்றத்தக்க வண்ணம் சிறப்புறச் செய்து வருவது தமிழர் அனைவருக்கும் பெருமிதம் தரும் ஒன்றாகும்.

பழைய நினைவகங்களைப் பராமரித்தும் புதிய நினைவகங்களை உருவாக்கியும், காலம் மறந்தாலும் அவர்களை கலைஞர் அரசு மறக்காது. அதற்கு சான்றாக 31 நினைவகங்கள் இந்தத் துறையால் பராமரிக்கப்படுகின்றன.

**கடந்த மூன்றாண்டுகளில் நிறுவிய நினைவகங்களும், சிலைகளும்**

விடுதலைப் போராட்ட வீரரும், முன்னாள் முதலமைச்சரும், பழுத்த அனுபவம் பெற்ற அரசியல் தலைவருமாகிய பெரியவர் எம்.பக்தவத்சலம் நினைவிடம் ரூ.25 இலட்சம் செலவில், அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது.



நாடறிந்த தமிழறிஞராய், நூறு வகைச் செயல்களை ஒரே நேரத்தில் நிகழ்த்திக் காட்டும் நினைவுக்கலை ஏந்தலாய் விளங்கிய செய்குதம்பி பாவலர் அவர்களது நினைவில்லம் நாகர்கோவிலில் அரசின் சிறப்பான பராமரிப்பில் உள்ளது.

தந்தை பெரியார் அவர்களின் சமூகப் புரட்சி தமிழகத்தின் எல்லையோடு மட்டும் அமைந்துவிடவில்லை. கேரள மாநிலத்தில் வைக்கத்தில் நிலவிய தீண்டாமைக் கொடுமையை எதிர்த்தும் அவர் போராடியுள்ளார். அந்த பகுத்தறிவுப் பகலவனின் போராட்டத்தை நினைவுகூரும் வகையில், வைக்கத்தில் பெரியார் நினைவகம் அமைக்கப்பட்டு, இந்தத் துறையால் சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

கட்டபொம்மனின் படைத்தளபதியாய் விளங்கிய வீரன் சுந்தரலிங்கம் பெயரில் புதிய நகரை கவர்னகிரியில் உருவாக்கி, அங்கு அவரது வாரிசுகள் 200 பேருக்கு 1 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் வீடமைத்துக் கொடுத்துள்ளதும் கலைஞர் அரசில்தான்.

திருநெல்வேலி மாவட்டத்தில் நெல்கட்டும்செவல் எனும் ஊரில் பூலித்தேவன் மாளிகை 53.04 இலட்ச ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

வீரத்தியாகி விசுவநாததாஸ் வாழ்ந்த திருமங்கலம் வீட்டினை புதுப்பித்து, அவர் நினைவைப் போற்றும் வகையில், 61.82 இலட்சம் ரூபாய் செலவில் திருமண மண்டபம், நூல் நிலையம் ஆகியவைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

சுதந்திரப் பொன்விழாவை யொட்டி, சென்னையில் தியாகிகள் மணிமண்டபம் ரூ.37.67 இலட்சம் செலவிலும் மற்றும் சுதந்திரத் திருநாள் பொன்விழாவின் நினைவாக, போர் நினைவுச்சின்னம் அருகில் பொன்விழா நினைவுச் சின்னம் ரூ.3.75 இலட்சம் செலவிலும் அமைத்தது இவ்வரசு.

பொதுவுடமை வீரர் ஜீவாவுக்கு நாகர்கோவிலில் நினைவுச் சின்னம். ரூ.15.5 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டது.

நேதாஜி நூற்றாண்டை ஒட்டி ரூ.7.40 இலட்சம் செலவில், சென்னையில் எழுச்சியூட்டும் நேதாஜியின் முழுஉருவச் சிலை.

வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்துத் தமிழ்நாட்டில் வேலூரில் 1806ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் சிப்பாய்க் கலகத்தின்போது உயிர்நீத்தோர் தியாகத்தைப் போற்றிட வேலூரில் நினைவுத் தூண். ரூ.3 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டது.

எழும்பூரில் ருக்மணி லட்சுமிபதிக்குச் சிலை திறந்து - அவர் வாழ்ந்த மார்ஷல் சாலைக்கு அவரது பெயரைச் சூட்டிய கலைஞர்தான், சர்தார் வேதரத்தினம் பிள்ளை நினைவு அஞ்சல் தலை வெளியிடச் செய்ததும் கலைஞர்தான்.

முன்னாள் முதல்வர் பி.எஸ். குமாரசாமி ராஜாவின் நூற்றாண்டு விழாவை இராஜபாளையத்தில் கொண்டாடி, சென்னையில் அவர் வாழ்ந்த கிரீன்வேஸ் சாலைக்கு அவர் பெயர் சூட்டப்பட்டது.

1995ஆம் ஆண்டிலேயே கொண்டாடி இருக்கவேண்டிய, முன்னாள் முதல்வர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களின் நூற்றாண்டு விழாவை 1998ஆம் ஆண்டு ஆகஸ்டு 25 அன்று சென்னையில் சிறப்பாகக் கொண்டாடி, சென்னை அரசினர் தோட்டத்திற்கு ஓமந்தூரார் அரசினர் தோட்டம் என்று பெயரிட்டது இவ்வரசு.

மதுரையில் ரூ.4.25 இலட்சம் செலவில் தியாகி கக்கன் திருவுருவச் சிலையும், சென்னை, கிண்டியில், பெருந்தலைவர் காமராஜர் நினைவிட முகப்பில் ரூ.78 ஆயிரம் செலவில் அமைக்கப்பட்ட பெருந்தலைவர் காமராஜர் மார்பளவுச்சிலையும், பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிட முகப்பில் ரூ.78 ஆயிரம் செலவில் அமைக்கப்பட்ட டாக்டர் எம்.ஜி.ஆர். மார்பளவுச் சிலையும், பேரறிஞர் அண்ணா நினைவிட முகப்பில் ரூ.78 ஆயிரம் செலவில் அமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா மார்பளவுச் சிலையும், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்தில் ரூ.3.90 இலட்சம் செலவில் அமைக்கப்பட்ட சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் திருவுருவச்சிலையும், சென்னை கிண்டியில், ரூ.4.25 இலட்சம் செலவில் அமைக்கப்பட்ட தீரன் சின்னமலை திருவுருவச்சிலையும் முதலமைச்சர் கலைஞர் ஆட்சியில் திறந்து வைக்கப்பட்டன.

டெல்லியில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் பொன்விழாப் பேரணியில் பங்குபெறச் சென்ற 50 தியாகிகளுக்குச் சென்னை இராஜாஜி மண்டபத்தில் வழியனுப்பு விழா நடத்தப்பட்டு, அந்தத் தியாகிகள் ஒவ்வொருவருக்கும் அரசின் சார்பில் கதராடையைப் போர்த்தி, பொற்கிழி வழங்கிச் சிறப்பிக்கப்பட்டனர்.

### மேம்பாட்டுப் பணிகள்

சென்னை - கிண்டியில், காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள காந்தி மண்டபம், பெருந்தலைவர் காமராஜர், மூதறிஞர் இராஜாஜி, பெரியவர் எம்.பக்தவத்சலம் ஆகியோர் நினைவிடங்களில் முகப்பு வளைவுகள், தோட்டம்,

மின்விளக்குகள் ரூ.50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

காந்தி மண்டபத்தில் உள்ள காந்தி அருங்காட்சியத்திற்கு ரூ.3.75 இலட்சம் செலவில் புகைப்படங்களும், சென்னை, மூதறிஞர் இராஜாஜி நினைவாலயத்தில் உள்ள பழைய ஓவியப் படங்கள் ரூ.2.60 இலட்சம் செலவிலும் புதுப்பிக்கப்பட்டன.

காஞ்சிபுரம், பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம் ரூ.4.37 இலட்சம் செலவிலும், நாகப்பட்டினம், தில்லையாடி வள்ளியம்மை நினைவு இல்லம் ரூ.5.91 இலட்சம் செலவிலும், எட்டயபுரம் மகாகவி பாரதியார் இல்லம் மற்றும் பாரதி மணிமண்டபம் ரூ.5.12 இலட்சம் செலவிலும், கன்னியாகுமரியில் உள்ள காந்தி மண்டபம் ரூ.2.60 இலட்சம் செலவிலும் புதுப்பிக்கப்பட்டன.

திருச்சிராப்பள்ளி வ.வே.சு. அய்யர் நினைவு இல்லத்திற்கு ரூ.1.20 இலட்சம் செலவில் புகைப்படங்கள், நூல்கள் வாங்கப்பட்டன.

### புதிய நினைவகங்கள்

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டையில், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் நினைவாக மணிமண்டபம் அமைத்திட ரூ.20.50 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைநகரில், உடுமலை நாராயணகவி நினைவாக மணிமண்டபம் அமைத்திட, ரூ.20.50 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு அதற்கான பணிகளும் செம்மையுற நடைபெற்று வருகின்றன.

நாமக்கல்லில் உள்ள நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் இல்லம் ரூ.9.58 இலட்சத்திற்கு வாங்கி, ரூ.1.55 இலட்சம்



செலவில் அரசு நினைவு இல்லமாக புதுப்பிக்கப்பட்டு வருகின்றது.

### திருவள்ளுவர் சிலை, கன்னியாகுமரி

கன்னியாகுமரி கடற்கரையிலிருந்து 366 மீட்டர் தொலைவில் கடலில் அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபம் நிறுவப்பட்டுள்ள பெரிய பாறையின் அருகிலுள்ள சிறிய பாறையில், 133 அடி உயர (பீடம் 38 அடி, சிலை 95 அடி) திருவள்ளுவர் சிலை அமைக்கும் பணி இவ்வாண்டு ஆகஸ்டு மாதத்தில் முடிவுபெறும்.

கடலூர் மாவட்டம், மருதூர் கிராமத்திலுள்ள வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகளாரின் இல்லத்தினைப் புதுப்பொலிவுடன் மாற்றிட ரூ.2 இலட்சம் செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் கன்னியாகுமரியில் காமராஜர் அஸ்தி கரைக்கப்பட்ட இடத்தில் மணிமண்டபமும், சென்னையில் காயிதே மில்லத் அவர்களுக்கு மணிமண்டபமும், சிவகங்கை மாவட்டம் குன்றக்குடியில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணி மண்டமும் அமைக்கப்படும் என்று முதல்வர் அறிவித்துள்ளார். தியாகிகள் பாஷ்யம், சங்கரலிங்கம் சிலைகள் சென்னையிலும், மன்னர் இராஜகோபால தொண்டமான் திருவுருவச் சிலை புதுக்கோட்டையிலும் அமைக்கப்படவுள்ளன.

### தீண்டாமை ஒழிப்பு

"தமிழகம், சாதி - சமயப் பிணக்கற்று நல்லிணக்கத்தோடு விளங்கிட வேண்டும் என்ற அடிப்படையில், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், இந்த ஆண்டை "தீண்டாமை ஒழிப்பு - மதநல்லிணக்க ஆண்டாகக்" கடைப்பிடிக்க வேண்டுமென அறிவுறுத்தியுள்ளார்கள். அதோடு, தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்திற்கென ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடும் தந்துள்ளார்.

தீண்டாமை ஒழிப்பிற்கு தீவிரப்பிரச்சாரம் செய்ய பல்வேறுத் திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்தப் பட்டு வருகின்றன.

**பத்திரிகையாளர் ஓய்வூதியம்**

கலைஞர் அவர்கள் எல்லாத் தரப்பு மக்களுக்கும் பல்வேறு நலத்திட்டங்களை உருவாக்கி வருவதைப்போல பத்திரிகையாளர் இறந்தால் அவருடைய குடும்பத்திற்கு இந்தியாவிலேயே முதன்முதலாக ரூ. 25,000 நிதி உதவி என்று கடந்த ஆண்டு அறிவித்தார். அதையும் இந்த ஆண்டு யாரும் கேட்காத நிலையிலேயே ரூ.40,000ஆக உயர்த்தி வழங்கியுள்ளார்கள்.

பத்திரிகையாளர்கள் ஓய்வூதியம் ரூ.500 என்று இருந்ததை இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்ற அடுத்த ஆண்டு 1,000 ரூபாயாக ஆக்கி இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் 1,500 ரூபாயாக அதை உயர்த்தப்பட்டுள்ளது. அதைப்போல பத்திரிகையாளர் ஓய்வூதியம் பெறுகிறவர்கள் இறந்தால் அவருடைய மனைவிக்கு, கணவர் பெற்றுவந்த மாதாந்திர ஓய்வூதியத்தொகையில் 50 விழுக்காடு வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும். இது இந்தியாவில் தமிழ்நாட்டில் மட்டும்தான் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**பொருட்காட்சி**

இத்துறை நடத்திய 98 பொருட்காட்சிகளில் 718 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாய் இலாபமாக ஈட்டியிருக்கிறது. ஆனால் 1991 முதல் 1996 வரை நடைபெற்ற 9 பொருட்காட்சிகளில் 51 இலட்சத்து 72 ஆயிரம் ரூபாய் இழப்புக் கணக்கைத்தான் காட்டியிருக்கிறார்கள்.

**தமிழரசு**

1970ல் மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட தமிழரசு ஏடு, வெள்ளிவிழா ஆண்டைக் கடந்து வெற்றி நடைபோட்டு வரும் பெருமைக்குரியது ஆகும். ரூ.37 இலட்சம் செலவில் தமிழரசு அச்சகத்தில் நவீன 'வெப்ஆப்செட்' இயந்திரம் வாங்கி நிறுவப்பட்டுள்ளது.



**அரசு செய்தி**

அரசின் திட்டங்களையும் சாதனைகளையும் வெளியிடும் 'அரசு செய்தி' என்னும் வண்ணச் சுவரொட்டி இதழ், தமிழக முதல்வர் அவர்களால் 14-4-97ல் தொடங்கப்பட்டது. இந்த இதழ் வாரந்தோறும் 20,000 பிரதிகள் அச்சடிக்கப்பட்டு தமிழ்நாடு முழுவதும் ஒட்டப்படுகிறது.

**திரைப்பட விருதுகள்**

திரைப்படத் துறையை ஊக்குவிக்கும் பொருட்டு, 1968ஆம் ஆண்டு முதல் சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், கலைஞர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கு தமிழ்நாடு அரசால், திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

திரைப்படங்களில், பெண்களை இழிப்படுத்துவதைத் தவிர்க்கவும் பெண்கள் நிலையை உயர்த்திக் காட்டவும் தயாரிக்கப்படும் திரைப்படங்களுக்கு ரூ.1.25 இலட்சம் ரொக்கப் பரிசு மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

**திரைப்படத் தொழிலாளர்களுக்கு விபத்துக் காப்புறுதித் திட்டம் மற்றும் ஓய்வூதியத் திட்டம்**

திரைப்படத் தொழிலாளர்களுக்கு விபத்துக் காப்புறுதித் திட்டம் ஒன்றை அரசு செயல்படுத்தி வருகிறது. சண்டைக் காட்சியில் நடிக்கும்பொழுது சண்டைப் பயிற்சியாளர்கள் உயிரிழக்க நேரிட்டால் ரூ.1 இலட்சமும், செயல்பட முடியாத அளவுக்கு ஊனமுற்றால் ரூ.50 ஆயிரமும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும்.

**தமிழ்த் திரைப்படங்களுக்கு மானியம்**

சமுதாய நோக்குடன் கூடிய, தரமான தமிழ்த் திரைப்படங்கள் குறைந்த செலவில் தயாரிக்கப்படுவதை ஊக்குவிக்கும் நல்ல நோக்குடன், அவ்வாறு தயாரிக்கப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு மானியம் வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படம் ஒன்றுக்கு 17-7-1996 முதல் மானியத் தொகையை ரூ.3 இலட்சத்தி லிருந்து ரூ.5 இலட்சமாக அரசு உயர்த்தியுள்ளது.

திரைப்படத் தொழில் நலிந்துவிடக் கூடாது என்பதற்காகத் தான் கேளிக்கை வரிக் குறைப்புச் செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு திரைப்பட பிரிவு**

தமிழ்நாடு திரைப்பட பிரிவு, குடும்ப நலம், காட்டு வளம், சிறுசேமிப்பு, நுகர்வோர் பாதுகாப்பு, சாலை விபத்து போன்ற பல்வேறு துறைகளுடைய செய்திப் படங்களை தயாரிக்கிற பெரும் பணியினை மேற்கொண்டிருக்கிறது. 'பேரறிஞர் அண்ணா வாழ்கிறார்' என்ற தலைப்பில் பேரறிஞர் அண்ணா அவர்களது வாழ்க்கை வரலாற்றினை படமாக்கி வெளியிட்டிருக்கிறது.



பெருந்தலைவர்கள் பலருடைய வாழ்க்கை வரலாற்றினை படமாக்கி வெளியிட நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறது. 'தமிழகத்தில் தொழில் வளர்ச்சி', 'கலைஞர் கண்ட காவேரி', தமிழக முதல்வர் 'கலைஞர் கண்ட சமத்துவபுரம்' என்ற தலைப்புகளில் 35 எம்.எம்.படச் சுருள் விளக்கப் படங்கள் தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு எங்கும் திரையரங்குகள் மற்றும் தொலைக்காட்சிகளில் திரையிடப்படுகின்றன.

**தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைகாட்சி பயிற்சி நிறுவனம்**

இந்தியாவிலேயே திரைப்படம் தயாரிக்கத் தேவைப்படும் பல்வேறு நவீன தொழில்நுட்பத்தினையும் தொலைக்காட்சி நுட்பத்தினையும் கற்றுத் தருவதற்கென்றே அரசால் நடத்தப்படும் முழுமையான திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம் இது.

இந்நிறுவனத்தில், திரைப்பட இயக்கம் மற்றும் திரைக்கதை வசனம் எழுதுதல், ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு, படத்தொகுப்பு மற்றும் படச்சுருள் பதனிடுதல் ஆகிய மூன்றாண்டு பட்டயப் படிப்பும், திரைப்பட நடிப்பில் ஓராண்டுச் சான்றிதழ் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

**வீடியோ திருட்டு தடுப்பு**

திருட்டு வீடியோக்களைக் கட்டுப்படுத்துவதற்காக மாநிலக் காவல் துறை இயக்குநர் (குற்றப்பிரிவு) கட்டுப்பாட்டின் கீழ் ஒரு காவல் துறை கண்காணிப்பாளர் தலைமையில் அரசு தனிப்பிரிவு ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது. இப்பிரிவு, வீடியோ கேசட்டுகள் மூலமாகத் திரைப்பட பதிவு உரிமைகளை மீறுதல், ஏனைய பதிப்பு உரிமை மீறுதல் தொடர்பான புகார்களைப் புலனாய்வு செய்து வருகிறது.

அனுமதி பெறாத வீடியோ கேசட் மற்றும் காம்பாக்ட் வீடியோ டிஸ்க் ஆகியவற்றை விற்பனை செய்பவர்கள் மீதும் மற்றும் உரிமம் பெறாத திரைப்படங்களைத் திரையிடும் கேபிள் தொலைக்காட்சி உரிமையாளர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மேற்கண்டப் பணிகளை கலைஞர் அவர்களின் மகத்தான வழிகாட்டுதலில் இத்துறைச் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.





# கால்நடைகளைக் காப்போம்!

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்
திரு. புலவர் செங்குட்டுவன்

கால்நடைச் செல்வங்களை கருத்தோடு பாதுகாக்க வேண்டும். கால்நடை வளத்தை காக்கும் கால்நடை பராமரிப்புத்துறையின் பணிகள் இங்கே தொகுத்து வழங்கப்படுகிறது.

கால்நடைத்துறை முனைப்போடு செயலாற்ற மேலும் ஒரு இயக்குநர் பதவி தோற்றுவித்து மகளிருக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற வகையில் தகுதிவாய்ந்த பெண் மருத்துவர் ஒருவரை கால்நடை மருத்துவப் பணிகள் துறை இயக்குநராக நியமனம் செய்யப்பட்டது.

### கால்நடை மருத்துவ நிலையங்கள்

120 கால்நடை மருந்தகங்கள் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டன.

50 கால்நடை மருந்தகங்கள் மருத்துவ மனைகளாகத் தரம் உயர்த்துப்பட்டன.

3 கால்நடை மருத்துவமனைகள் (திருவாரூர், கரூர், உதகமண்டலம்) பொதுமருத்துவ மனைகளாக நிலை உயர்த்துப்பட்டன.

கிராமங்களில் கால்நடை சிகிச்சைப் பணிகள் தீவிரமாக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் ஏற்கெனவே உள்ள 2,126 கால்நடை கிளை நிலையங்களுக்கு இணையாக மேலும் 2,126 பார்வை கிளை நிலையங்கள் புதிதாக உருவாக்கித் திறக்கப்பட்டன.

### தடுப்பூசிப் பணிகள்

தொண்டை அடைப்பான், சப்பை நோய், கோமாரி நோய், வெக்கை நோய், ஆட்டம்மை துள்ளுமாரி போன்ற நோய்களுக்குத் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை 1,92,86,081 ஆகும்.

கோழிக்கழிச்சல் போன்ற கோழிகளைத் தாக்கும் நோய்களிலிருந்து காப்பாற்ற மேற்கொள்ளப்பட்ட தடுப்பூசிப் பணிகள் 5,00,66,899 ஆகும்.

### செயற்கைமுறைக் கருவூட்டல்

வம்சாவழி வந்த நாட்டின இனவிருத்திக்கு உகந்த பசுக்களை அதிக அளவில் பால் தரக்கூடிய அயலின ஜெர்ஸி மற்றும் ப்ரீசியன் பொலிகாளைகளின் விந்தினைக் கொண்டு இனவிருத்தி செய்வதற்காக செயற்கை முறை கருவூட்டல் பணிக்கு உற்பத்தி செய்யப்பட்ட உறைவிந்துக் குச்சிகளின் எண்ணிக்கை 56.66 இலட்சங்கள்.

### குடற்புழு நீக்கம்

குடற்புழு நீக்கப்பணி மேற்கொள்வதால் கால்நடைகளின் வளர்ச்சி அதிகரிப்பதுடன் அதன் உற்பத்தி திறனும் கூடுகிறது. இதற்கான குடற்புழு நீக்கம் செய்ய கட்டணமாக வசூலிக்கப்பட்ட ரூபாய் ஒன்று என்ற கட்டணத்தை அக்டோபர்'96 முதல் அரசு இரத்துச் செய்து ஆணை வழங்கியது.

இதன் மூலம் 96-97ஆம் ஆண்டில் ரூ. 44,05,463-ம், 97-98ஆம் ஆண்டில் ரூ.91,01,415-ம், 98-99 ஆம் ஆண்டில் ரூ.1,00,14,298-ம் அரசு சலுகை வழங்கியுள்ளது.

### மருந்துக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு

1995-96ல் கால்நடைகளுக்கான மருந்து வாங்க அனுமதித்து ரூ.5 கோடியிலிருந்து 98-99ல் மருந்துகள் வாங்க ரூ.8 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது கழக அரசு.

## டானிடா நிதியுதவியுடன் கூடிய கால்நடை வளர்ப்புத் திட்டம்

டானிடா நிதியுதவியுடன் கூடிய கால்நடை வளர்ப்புத் திட்டத்தின் கீழ் கிராம அளவில் கிராமப்புறங்களில் வாழ்கின்ற ஏழை எளிய விவசாயப் பெருங்குடி மக்கள் தங்கள் புறக்கடைகளில் வளர்க்கப்படும் ஆடுகள், மாடுகள், கோழிகள் போன்ற கால்நடைகளைப் புதிய உத்திகளோடு வளர்க்கும் பொருட்டும், தீவின பராமரிப்பு, செயற்கைமுறை கருவூட்டுதல், இலாபகரமான கால்நடை வளர்ப்பு போன்ற பெரிய தொழில்நுட்பங்களைப் பரப்பும் வகையான பயிற்சித் திட்டம் 7 ஆண்டுகளில் ரூ.27.50 கோடியில் புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், தூத்துக்குடி ஆகிய 5 மாவட்டங்களில் ஊராட்சிகளில் தொடர் தம்பதியினரைத் தேர்ந்தெடுத்து பயிற்சியளிக்கப் பட்டு வருகிறது.

புதுக்கோட்டையில் சென்ற ஆண்டு திருவரங்குளம் ஒன்றியத்தில் 50 ஊராட்சியில் 157 தொடர்பு தம்பதியினருக்குப் பயிற்சியளிக்கப் பட்டது. விவசாயத் தொடர்பாளர்கள் பயிற்சி பெற்றவர்கள் 7,526.

இவைகளைச் சேமித்து வைத்து கருவூட்டலில் பயன்படுத்தவதற்ககாக பாதுகாப்பாக வைத்திருக்க உற்பத்தி செய்யப்பட்ட திரவ நைட்ரஜன் 6.17 இலட்சம் லிட்டர்கள் ஆகும்.

கடந்த 3 ஆண்டுகளில் கால்நடைகளுக்குச் செய்யப்பட்ட செயற்கைமுறை கருவூட்டல் எண்ணிக்கை 81,73,552 ஆகும்.

சினை பரிசோதனை செய்யப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை 68,74,255 ஆகும்.

பிறந்த கன்றுகளின் எண்ணிக்கை 17,30,434.

## மக்கள் தொடர்பு முகாம்

கால்நடை நிலையங்களுக் வெகுதொலைவில் உள்ள குக்கிராமங்களில் கால்நடை மருத்துவர்கள் அந்தந்த கிராமங்களில் முன்னறிவிப்புச் செய்து குழுவாகச் சென்று சிகிச்சை அளித்து கால்நடை பராமரிப்புப் பற்றி விளக்கிய மக்கள் தொடர்பு முகாம்கள் 91,824 ஆகும்.

## வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட உயர்ரக பொலிகாளைகள்

ஒரு பொலிகாளையில் இருந்து ஆண்டு ஒன்றுக்கு 8,000 சினை ஊசிகள் தயாரிக்கக்கூடிய திறன் பெற்ற 31 பொலிகாளைகள் ஜெர்ஸி, ஹோல்ஸ்டீன், ப்ரீசியன் ஆகியவை ரூ.41 இலட்சத்தில் வாங்கப்பட்டுள்ளன.

பண்ணைகளில் உள்ள உயர்ரக 300 பொலிகாளைகளிலிருந்து 56.66 இலட்சம் உறைவிந்துக் குச்சிகள் உற்பத்தி செய்யப் பட்டுள்ளன.

3,516 கருவூட்டல் நிலையங்களின் மூலம் செயற்கை முறை கருவூட்டல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



### கால்நடைகளுக்குச் சிகிச்சைக் கட்டணம் ரத்து

செல்லப்பிராணிகளான நாய், பூனை போன்ற வளர்ப்புப் பிராணிகள் சிகிச்சைக்கு வரும்பொழுது அனுமதிக்கட்டணம் ரூ.5ம் மருத்துவச் செலவு கட்டணம் ரூ.5ம் வசூலிக்கப்பட்டு வந்ததை டிசம்பர் 96 முதல் கழக அரசு ரத்து செய்து ஆணை வழங்கியது.

### ஆடு வளர்ப்புத் திட்டம்

திருச்சி மற்றும் கரூர் மாவட்டங்களில் 440 பேர் பயனடையும் வண்ணம் ரூ.8.70 இலட்சம் செலவில் ஆடுகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை, சேலம், நாமக்கல், திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் 50 பயனாளிகளுக்கு 500 கிடாக்குட்டிகள் வழங்கப் பட்டுள்ளன.



### தாதுஉப்புக்கள் சத்து

தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 3,000 பயனாளிகள் பயனடையும் வகையில் ரூ.5.4 இலட்சம் செலவில் தாது உப்புக்கள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

### உபரி வைக்கோலை ஊட்டச்சத்துள்ளதாக மாற்றுதல்

தஞ்சாவூர், திருச்சி, திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் கிடைக்கும் உபரி வைக்கோலைச் சத்துள்ளதாக மாற்ற செயல்விளக்கப் பண்ணைகள் அமைத்து 1,000 விவசாயிகள் தேர்வு செய்து செயல்விளக்கப் பண்ணைகள் ரூ.5 இலட்சம் செலவில் நடத்தப்பட்டது.

### பணியாளர் நலன்

புதிதாக 174 கால்நடை மருத்துவப் பட்டதாரிகள் கால்நடை உதவி மருத்துவர்களாக தேர்வாணைக்குழு மூலம் தேர்வு செய்து பணி நியமனம் வழங்கப்பட்டது.

35 கால்நடை உதவி மருத்துவர்கள்- உதவி இயக்குநர்களாகவும், 31 உதவி இயக்குநர்கள் - துணை இயக்குநர்களாகவும், 34 துணை இயக்குநர்கள் - இணை இயக்குநர்களாகவும், 5 இணை இயக்குநர்கள் - கூடுதல் இயக்குநர் களாகவும் பதவி உயர்வு அளிக்கப்பட்டனர்.

பத்தாண்டுகளுக்கு மேல் கால்நடைப் பண்ணைகளில் தினக்கூலிப் பணியாளர்களாக பணியாற்றிய 826 பேர்களுக்குக் கருணை உள்ளத்தோடு **கலைஞர்** அரசு நிரந்தர பணியை ஏற்படுத்திக் கொடுத்தது.

### தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

மாண்புமிகு முதல்வர் **கலைஞர்** அவர்களால் ஆசியாவிலேயே முதன்முதலாக தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் 1989ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. 9 ஆண்டுகளுக்குப் பின்னால் ரூ.160 இலட்சம் செலவில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகக் கட்டடம் அவர் திருக்கரத்தினாலேயே 26.5.98 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- கால்நடை மருத்துவம் பயிலும் மாணவர்களின் பருவ (செமஸ்டர்) கட்டணம் ரூ.1,500லிருந்து ரூ.1,000 ஆகக் குறைக்கப்பட்டது.

- பயிற்சிக் கால உதவித்தொகை ரூ.250லிருந்து ரூ.750ஆக உயர்த்தப்பட்டது.

- கிராமப்புற மாணவர்களுக்கு பி.வி.எஸ்.சி., பட்டப்படிப்பில் சேர 15 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

- பட்டதாரி இல்லாத குடும்பங்களைச் சேர்ந்த முதல் மதிப்பெண் பெறும் 10 மாணவர்களுக்கு இலவசக்கல்வி அளிக்கப் படுகின்றது.

- பட்டுக்கோட்டை அழகிரி பெயரில் ரூ.25 இலட்சம் ஒதுக்கீட்டில் அறக்கட்டளை - வட்டித் தொகையில் சிறந்த மாணவர்களுக்கு முழு உதவித்தொகை வழங்கப்பட உள்ளது. ★

# மகளிர் நலம் பேணுவோம்

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்

திருமதி. **சற்குணபாண்டியன்**

**நா**ம் அனைவரும் அன்னையின் வயிற்றில் பிறந்து அவரது அரவணைப்பில் வளர்ந்தவர்களே. எனவே இந்த சமூகம் முழுதும் அன்னையரின் பெருங்கொடையாகும்.

***"பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டில் மண்ணடிமை தீர்ந்திடுதல் முயற்கொம்பே"***

– என்று பெண் விடுதலைக் குறித்து பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் பாடியுள்ளார். அவருடைய எண்ணத்தையெல்லாம் ஈடுசெய்வதைப் போல் முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் மகளிர் முன்னேற்றத்திற்கான திட்டங்களை தீட்டி சமூகநலத்துறை மூலம் செயல்படுத்தி வருகிறார்கள்.

★ மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டத்தின் கீழ் கடந்த மூன்றாண்டுகளில் **1,36,284** ஏழைப் பெண்களுக்கு ரூ.**136.284** கோடி வழங்கப்பட்டுள்ளது.

★ டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் கடந்த மூன்றாண்டுகளில் **6,53,422** தாய்மார்களுக்கு ரூ.**15.22** கோடி வழங்கப்பட்டது.

★ டாக்டர் தருமாம்பாள் அம்மையார் விதவை மறுமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் கடந்த மூன்றாண்டுகளில் **557** மகளிர்க்கு ரூ.**35.62** இலட்சம் வழங்கப்பட்டது.

★ கடந்த மூன்றாண்டுகளில் ஏழை விதவை மகள் திருமண நிதிஉதவித் திட்டத்தின் கீழ் **3,013** பெண்களுக்கு ரூ.**1.2** கோடி வழங்கப்பட்டது. இத்திட்டம் ஈ.வே.ரா. மணியம்மையார் பெயரால் அழைக்கப்படும்.

★ கடந்த மூன்றாண்டுகளில் ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் ரூ.**8.66** இலட்சத்தில் பயன்பெற்றோர் **242**. இத்திட்டம் அன்னை தெரசா பெயரால் அழைக்கப்படும்.

★ அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், கடந்த மூன்றாண்டுகளில் ரூ.**1.63** கோடியில் பயன்பெற்றோர் **1,643** தம்பதிகள்.

★ தையல் இயந்திரம் **5,075** ஏழைப்பெண்களுக்கு ரூ.**91.97** இலட்சம் செலவில் வழங்கப்பட்டது.

★ தமிழக அரசு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ரூ.**2.25** கோடி செலவில் **14,745** குழந்தைகள் பயன்பெற்றன.

★ மூன்றாண்டுகளில் **7,094** ஊனமுற்றோர்களுக்கு ரூ.**1.24** கோடியில் மூன்று சக்கர சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

★ காதுகேட்கும் கருவிகள் ரூ.**36** இலட்சம் செலவில் **5,100** நபர்களுக்கு வழங்கப்பட்டது.





★ 7,974 பார்வையற்றோருக்கு ரூ.6.48 இலட்சம் செலவில் கறுப்புக் கண்ணாடிகள், மடக்குக் குச்சிகள் வழங்கப்பட்டன.

★ சக்கர நாற்காலிகள் ரூ.11.35 இலட்சம் செலவில் 970 ஊனமுற்றவர்களுக்கு வழங்கப்பட்டது.

★ 1 முதல் 8ஆம் வகுப்பு வரை படிக்கும் உடல் ஊனமுற்றவர்கள் படிப்பு உதவித்தொகை திட்டத்தின் கீழ் 44,600 பேர்களுக்கு வழங்கப்பட்ட உதவித்தொகை ரூ.99.9 இலட்சம்.

★ 9 வகுப்பு முதல் கல்லூரி வரை படிக்கும் உடல் ஊனமுற்ற மாணவர்கள் படிப்பு உதவித்தொகை 11,910 பேர்களுக்கு ரூ.1.11 கோடி ஆகும்.

★ பார்வையற்றோரை மணந்து கொண்ட நல்ல உடல் நிலையிலுள்ள 300 நபர்களுக்கு ரூ.30 இலட்சம் சலுகை.

★ கடுமையாக உடல் ஊனமுற்ற 8,850 பேர்களுக்கு ரூ.1.53 கோடி பராமரிப்புத் தொகை வழங்கப்பட்டது.

★ ரூ.2.32 கோடியில் 37,500 ஊனமுற்றோருக்கு பயணச்சலுகை வழங்கப்பட்டது.

★ இளம்பிள்ளைவாத மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ், 32,922 பேர்களுக்கு ரூ.2.76 கோடி உதவி.

★ 1,428 நபர்களுக்கு ரூ.4.48 இலட்சத்தில் பிரெய்லி கைக்கடிகாரங்கள் வழங்கப்பட்டது.

★ வாய் பேசாத காது கேளாதோரை மணந்து கொள்ளும் நல்ல உடல்நிலையில் உள்ளவர்களுக்கு சலுகைத் திட்டத்தின் கீழ் 145 பேர்களுக்கு ரூ.7.25 இலட்சம் உதவி.

★ மீண்டும் செறிவூட்டக் கூடிய சூரிய வெப்ப மின் கலன்கள் 5,520 பேர்களுக்கு ரூ.17.92 இலட்சம் செலவில் வழங்கப்பட்டது.

★ மகளிர் தங்கும் விடுதியில் தங்கி பயன்பெறுவோர் எண்ணிக்கை 2,920. இதற்கு செலவிடப்பட்டத் தொகை ரூ.16.67 இலட்சமாகும்.

★ குழந்தைகள் காப்பகங்களில் உள்ள குழந்தைகள் 63,450. செலவு ரூ.3.34 கோடி.

***கடந்த மூன்றாண்டுகளில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தின் கீழ் பயன்பெற்றோர்***

★ 0–36 மாத குழந்தைகள் 42,74,395.

★ இணை உணவு பெறும் 0–36 மாத குழந்தைகள் 10,07,225.

★ இணை உணவு பெறும் கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் 8,55,271.

★ மதிய உணவு பெறும் 37–60 மாத குழந்தைகள் 18,04,969.

★ மதிய உணவு பெறும் மூப்பு ஓய்வூதியம் பெறுவோர் 2,72,561.

மகளிர் மேம்பாட்டு கழகம் மூலம் தமிழ்நாடு மகளிர் நலத்திட்டத்தின் கீழ் (IFAD) ரூ.34.85 கோடி செலவில் 35,518 பேர் பயன்பெற்றார்கள். தொழில் பயிற்சித் திட்டங்களின் கீழ் ரூ.27.24 இலட்சத்தில் 696 பேர் பயனடைந்தார்கள்.

இவ்வாறாக ஏராளமான மகளிர் மேம்பாட்டுத் திட்டங்களும் ஊனமுற்றோர் நலத்திட்டங்களும் இத்துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

# ஆதிதிராவிடர் நலத்துறையின் அரும்பணிகள்

மாண்புமிகு
ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்
**சமயநல்லூர் திரு. எஸ். செல்வராசு**

சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் சமூக நிலையினை உயர்த்திட கல்வி, பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு திட்டங்களின் மூலம் மேம்படுத்த நடைமுறையில் உள்ள திட்டங்கள் முனைப்புடன் செயல்படுத்தி வருவதோடு புதிய திட்டங்களையும் தீட்டி இவ்வரசு நிறைவேற்றி வருகிறது. அவையாவன

**'பெரியார் நினைவு' சமத்துவபுரம்**

உலகின் மிகப் பண்டைய நாகரீகங்களில் ஒன்று என்ற பெருமை இந்நாடு பெற்றிருந்த போதிலும் சாதிக் கொடுமை என்ற சிறுமைக்கும் இதே நாடு ஆளாகி ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அவதியுற்றிருந்ததை வரலாறு காட்டுகிறது. ஏற்றத்தாழ்வுகள் மிக்க எந்த ஒரு சமுதாயமும் முன்னேறிய நாடாகக் கருதப்பட முடியாது என்பது கற்றறிந்தோர் கண்ட உண்மை. ஆகவே நமது நாட்டுக்கே உரிய ஏற்றத்தாழ்வுகளின் ஊற்றுக் கண்ணாக இருக்கும் சாதிக் கொடுமையைத் தகர்ப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு புதிய திட்டத்தை அறிவித்தார்கள். அதுவே **பெரியார் நினைவு சமத்துவபுரம்** என்ற புதிய சமுதாயத்தை உருவாக்குவதற்காக அடிக்கல்லை நாட்டும் அரிய திட்டம்.

இத்திட்டத்தின்படி ஒவ்வொரு ஆண்டும் 50 இடங்களில் 'பெரியார் நினைவு சமத்துவபுரம்' குடியிருப்புகள் ரூ.17.50 கோடி செலவில் அமைக்கப்படும். இக்குடியிருப்பு ஒவ்வொன்றிலும் 100 வீடுகள் இருக்கும். அதில் 40 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கும், 25 பிற்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கும், 25 மிகவும் பிற்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கும், மீதி 10 இதர சமூகத்தைச் சார்ந்த குடும்பத்தவருக்கும் வழங்கப்படும். ஐந்து சென்ட் நிலமும், ரூ.35,000மும், ஒவ்வொரு வீடு கட்டவும் இங்கு குடிவர தேர்ந்தெடுக்கப்பட்டவருக்கு இலவசமாகத் தரப்படும். அத்துடன் மின் இணைப்புக்காக ரூ.810ம் ஒரு வீட்டுக்கெனத் தரப்படும். குடிநீர், மின்சாரம், இணைப்புச் சாலைகள், சமுதாயக் கூடம், நியாய விலைக் கடைகள், தொலைக்காட்சி அறை, சுவடியகம், பொது மயானம் மற்றும் பூங்காக்கள் கொண்டனவாக இக்குடியிருப்புகள் விளங்குகின்றன. இச்சமத்துவபுரங்கள் சாதியற்ற சமுதாயத்தை நிறுவும் குறிக்கோளை நோக்கிய பாதையில் ஒரு முக்கியத் தொடக்கமாக இம்மாநிலத்தில் திகழ்கின்றன.



1997–98ல் மாண்புமிகு முதலமைச்சர் தமிழகத்தில் உள்ள பழங்குடியினர் குடியிருப்புகள் அனைத்திலும் குடிநீர், மின்சாரம், இணைப்புச் சாலை, மருத்துவச் சேவை, உணவு பொருள் வழங்கும் கடைகள், தொடக்கப் பள்ளிகள், மதிய உணவுக் கூடங்கள் ஆகிய அடிப்படை வசதிகள் அடுத்த மூன்றாண்டுகளில் செய்து தரப்படும் என அறிவித்தார். ஓர் ஆய்வு நடத்தப்பட்டு இத்திட்டங்களை நிறைவேற்ற ரூ.89 கோடி தேவைப்படும் என தீர்மானிக்கப்பட்டது. இத்துறை, இத்திட்டத்தை முழுமையாக நிறைவேற்ற நடவடிக்கை எடுத்து வருகிறது.

**தனிநபர் தொழில் முனைவோர் திட்டம்**

பழங்குடியினர் சுயதொழில் மூலம் மேம்பாடு அடைய தனிநபர் தொழில் முனைவோர் திட்டத்தை இவ்வரசு தீட்டி, ஆண்டுதோறும் ரூ.1.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டங்கள் தாட்கோ மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி பழங்குடியினருக்கு ரூ.25,000 மானியமாகவும், ரூ.1.25 இலட்சம் (4 சதவீதம் என்ற குறைந்த வட்டியில்) விளிம்புத் தொகையாகவும் தரப்படுகிறது. ஒரு நபருக்கு ரூ.5 இலட்சம் மொத்த நிதியுதவி வழங்கப்படுகிறது.

**கொத்தடிமைகள் மீட்பு**

இம்மாநிலத்தில் கொத்தடிமைகள் உள்ளனரா என்பதைக் கண்டுபிடிக்க தொண்டு நிறுவனங்களின் துணையுடன்



ஆய்வு நடத்தப்பட்டு 25,008 கொத்தடிமைகள் உள்ளதாகக் கண்டறியப்பட்டு 5,178 கொத்தடிமைகள் மீட்கப் பட்டுள்ளனர். அவர்களை மீட்பதற்காக ரூ.6 கோடி(மத்திய, மாநில அரசுகள் இணைந்து) தரப்பட்டுள்ளது. கொத்தடிமைகள் மீட்புக்காக இவ்வரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை மைய அரசு பாராட்டி உள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் கொத்தடிமை முறைக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்த பிரச்சாரம் முடுக்கிவிடப் பட்டுள்ளது. இவ்விழிப்புணர்வை ஏற்படுத்த துணுக்குப் படங்கள் எடுத்து தொலைக்காட்சி மூலம் ஒளிப்பரப்ப ரூ.3 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தீண்டாமை ஒழிப்பும், குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டமும்**

தீண்டாமைக் கொடுமைக்கு ஆளாகி வகுப்புக் கலவரங்களில் பாதிக்கப்படும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு நிவாரணத் தொகையாக 1996–97ல் ரூ.18 இலட்சமும், 1997–98ல் ரூ.2.28 கோடியும், 1998–99ல் 1.06 கோடியும் செலவிடப்பட்டுள்ளது.

தீண்டாமைக் கொடுமைக்கு எதிரான விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த "புதிய சரித்திரம்" என்ற ஒளிநாடா படம் ரூ.1.40 இலட்சம் செலவில் எடுக்கப்பட்டு தொலைக் காட்சியிலும் திரையிடப்பட்டுள்ளது. அது தவிர ஆண்டு ஒன்றுக்கு அனைத்து மாவட்டங்களிலும் அனைத்துத் துறைகளின் ஒத்துழைப்புடன் 'மனிதநேய வார விழா' என்ற ஒற்றுமை விழாவினை மிகச் சீரிய முறையில் நடத்துவதற்காக ரூ.5 இலட்சம் செலவிடப்படுகிறது. தொலைக்காட்சியில் ஒளிபரப்ப, படங்கள் எடுக்கவும், ரூ.3 இலட்சம் செலவிடப்படுகிறது. தீண்டாமைக் கொடுமையை வேரறுக்கவும், சமுதாயத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் செய்தி–மக்கள் தொடர்புத் துறை மூலம் நிறைவேற்றிட ரூ.1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஆசிரியர்கள் நியமனம்**

இத்துறையின் பள்ளிகளில் உள்ள இடைநிலை ஆசிரியர்களின் பற்றாக் குறையைச் சமாளிப்பதற்காக ஆசிரியர் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். வேலைவாய்ப்புத் துறை மூலம் பெறப்பட்ட பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு 1030 ஆசிரியர்கள் புதியதாக நியமிக்கப்பட்டுள்ளனர். இதுதவிர 85 பழங்குடியினர்கள் உட்பட, 850 நபர்கள் இடைநிலை ஆசிரியர் பயிற்சி தரப்பட்டு கல்வித் தரத்தினை உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான செலவு ரூ.5.08 கோடி.

**பள்ளிகளில் கணிப்பொறிப் பயிற்சி**

அறிவியலின் ஒப்பற்ற கண்டுபிடிப்பான கணிப்பொறி இந்த நூற்றாண்டின் மகத்தான சாதனையாகும். செய்திப் பரிமாற்றம் தொழில்நுட்பத்தில் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டு வந்துள்ள கணிப்பொறி அறிவு, ஒரு நாட்டில் அதிகமான அளவில் இருப்பதே அந்நாட்டு வளர்ச்சியை காட்டும் அளவுகோலாக கருதப்படுகிறது. இன்று வளர்ந்து வரும் இவ்வதிசயக் கணிப்பொறி அறிவு ஒவ்வொரு மாணவருக்கும் அவசியத் தேவை என்பதை உணர்ந்துள்ள இந்த அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் 60 உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகளில் கணிப்பொறி கல்வி அறிமுகப்படுத்தியுள்ளது. அறிவியல் கல்வியை இத்துறை நடத்தும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் மேம்படுத்த ரூ.2.30 கோடி செலவிடப்பட்டு அறிவியல் ஆய்வுக் கூடங்களைக் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது.

**கல்வி உதவித்தொகை கணிப்பொறி மயமாக்கப்படல்**

ஆதிதிராவிட மாணவர், மாணவியர் மேற்கல்வியை தொடர்வதற்காக கல்வி உதவித் தொகைகள் உட்பட பல்வேறு ஊக்குவிப்புத் தொகைகள் தரப்படுகின்றன. 1996–97ல் 9.02

இலட்சம் மாணவர்களுக்கு 2,693 இலட்சம் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. 1997–98ல் 9.70 இலட்சம் மாணவர்களுக்கு ரூ.3,341 இலட்சம் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. 1998–99ல் ரூ.3,764.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் 31.62 இலட்சம் மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர். இவர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த உதவித் தொகை ரூ.98 கோடி. உதவித் தொகை வழங்குவதில் தாமதத்தை தவிர்க்க மாவட்ட அளவில் கணிப்பொறி மயமாக்க



திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் மாணவர்கள் கல்வி உதவித் தொகை பெறுவதில் ஏற்படும் தாமதம் தவிர்க்கப்படும். மாணவர்கள் இத்திட்டத்தினை நன்கு அறிய, நல்முறையில் விளம்பரங்கள் செய்தித்தாள்கள், தொலைக்காட்சி, வானொலி ஆகியவை மூலம் செய்யப்பட்டு வருகின்றன.

**கல்விக் கடன் உதவித் தொகை**

ரூ.2,500 வரை மட்டுமே வழங்கி வரப்பட்ட கல்விக் கடன் உதவித்தொகை 1996–97ஆம் ஆண்டு முதல் ரூ.6,500 முதல் ரூ.7,000 வரையில் உயர்த்தப்பட்டு, பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்குத் தரப்படுகின்றன. ஆண்டுக்கு 7,565 மாணவர்கள் ரூ.4.6 கோடி செலவில் இதன் மூலம் பயன்பெறுகின்றனர்.

**வீட்டுமனைப்பட்டா**

கடந்த மூன்று ஆண்டுகளில் 2,34,614 ஆதி திராவிடர்/ பழங்குடியினர்கள் பயன்பெறும் வண்ணம் ரூ.49.18 கோடி செலவில் இலவச வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**விடுதிகள்**

முதல் முறையாக 1996–97ல் சென்னை நகரில் பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கென தனியாக ஒரு விடுதி தொடங்கப்பட்டது. 1997–98ல் இதே போன்று பட்ட மேற்படிப்பு மாணவர் விடுதிகள் மதுரையிலும், திருச்சியிலும் தொடங்கப்பட்டன. 1998–99ல் வேலூரிலும், திருநெல்வேலியிலும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. 300 மாணவர்களுக்கென இத்திட்டத்தின் கீழ் ரூ.25.26 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. விடுதிகளில் தங்கிப் பயில பெற்றோரின் ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.15,000லிருந்து ரூ.50,000ம் ஆக 1997–98ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தப் பட்டுள்ளது.

**உணவுச் செலவு உயர்வு**

விடுதிகளில் வழங்கப்படும் உணவுச் செலவுக்கான தொகை பள்ளி மாணவர் விடுதிகளில் ரூ.138.75லிருந்து ரூ.225 ஆகவும், கல்லூரி மாணவர் விடுதிகளில் ரூ.197.50லிருந்து ரூ.400 ஆகவும் உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. சுமார் 75,000 மாணவர்கள் பயனடையும் இத்திட்டத்திற்கு 1998–99ஆம் ஆண்டில் கூடுதலாக ரூ.4.78 கோடி செலவாகிறது.

**மாணவியர் விடுதிகள்**

அனைத்து மாணவியர் விடுதி களுக்கும் வசதியான கட்டடங் களை 3 வருடங்களில் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. 122

மாணவியர் விடுதிகளுக்கு ரூ.40 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதுவரை ரூ.25.48 கோடி செலவில் 62 கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. மீதிப் பணிகள் விரைவில் நடந்தேறிவிடும்.



### விடுதி மாணவ, மாணவியர் பொது அறிவு வளர்ச்சிக்காக

விடுதி மாணவ, மாணவியரின் பொது அறிவு வளர்ச்சிக்காக அனைத்து விடுதிகளிலும் இரண்டு செய்தித்தாள்கள் வாங்க ஆணையிடப்பட்டுள்ளது. அத்துடன் ஒவ்வொரு விடுதியிலும் ஒரு நூலகமும் தொடங்கப் பட்டுள்ளது. விளையாட்டுப் பொருட்கள், வழங்கிடவும், அறைகலன்கள் வழங்கிடவும் முதன் முறையாக ஆணையிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு விடுதிக்கும் பூச்சிக் கொல்லி மருந்து அடிக்க நிதி ஒதுக்கப்படுகிறது. விடுதிகள் மற்றும் பள்ளிகள் பராமரிப்பதற்காக ஆண்டுதோறும் செலவிடப்படும் தொகை ரூ.80 இலட்சத்திலிருந்து ரூ.1.6 கோடியாக உயர்த்தப் பட்டுள்ளது. கட்டட வசதிகளை மேம்படுத்த ஒவ்வொரு ஆண்டும் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

### ஈமச்சடங்குகள்

ஆதிதிராவிடர், பழங்குடி மக்களின் ஈமச் சடங்கிற்கான தொகை ரூ.200லிருந்து ரூ.500 ஆக 1997லிருந்து உயர்த்தப்பட்டுள்ளது. இதற்காக ஆகும் கூடுதல் செலவு ஆண்டுக்கு ரூ.3.86 கோடியாகும்.

### இடஒதுக்கீடு

அரசுத்துறை, பொதுத்துறை நிறுவனங்களில் மற்றும் கல்வி நிறுவனங்களில் ஆதிதிராவிடர்க்கு 18 விழுக்காடும், பழங்குடியினர்க்கு 1 விழுக்காடும் இட ஒதுக்கீட்டு முறை உள்ளது. இது சரியாக அமல்படுத்தப்பட்டு உள்ளதை கண்காணிக்க ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர்களை கொண்ட குழு ஒன்று ஏற்படுத்தப் பட்டுள்ளது. இக்குழு 110 அரசுத் துறைகளில் 80துறைகளை ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. அனைத்து பிரிவுகளிலும் நேரடி நியமனம் செய்திடவும் பின்னடைவினை நிரப்பிடவும் ஒவ்வொரு துறையிலும் பற்றாளர் நியமிக்கவும் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

### பயிற்சி

கல்வி அறிவு பெற்று வரும் ஆதிதிராவிட மாணவ, மாணவியர் தொழில் துறையில் தக்க பயிற்சிகள் பெற்று வளமான எதிர்காலம் உள்ள தொழில்களில் சேர திட்டங்கள் தீட்டப் பட்டுள்ளன. அதன்படி பிளாஸ்டிக் பொறியியல், பேஷன் தொழில் நுட்பம், மருத்துவம் சார்ந்த துறைகள் கணிப்பொறி சார்ந்தவை ஆகியவற்றில் இம்மாணவர்கள் பயிற்சிப் பெற உதவிகள் தரப்படுகின்றன. 1997-98ல் 8,175 மாணவர்களுக்கு ரூ.34.75 இலட்சமும் 1998-99ல் 560 மாணவர்களுக்கு ரூ.22.58 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் முன்னேற்றத்தில் ஆழ்ந்த பற்றுடைய இவ்வரசு இத்துறைக்கான ஒதுக்கீட்டினை 1996-97ஆம் ஆண்டில் ரூ. 267 கோடியும், 1997-98 ரூ. 275 கோடியும், 1998-99ஆம், ஆண்டில் ரூ.325 கோடியும், 1999-2000ஆம் ஆண்டில் ரூ. 362' கோடியும் உயர்த்தியுள்ளது.

★ ★ ★

# தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சி

நம் நாட்டின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்தில் சுற்றுலா முக்கியப் பங்கு வகிக்கிறது. நாட்டிற்கு அத்தியாவசியத் தேவையான அந்நியச் செலவாணியை பெருமளவில் ஈட்டித் தரும் தொழில்களில் சுற்றுலா ஒன்றாகும். எனவே சுற்றுலா மேம்பாட்டை அடைவதற்கு முக்கிய சுற்றுலாத் தளங்களில் அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பது இன்றியமையாததாகிறது. இதன் மூலம் உள்ளூர் மக்களும் பயன் அடைவர். சுற்றுலா மேம்பாட்டினால் ஊரகப் பகுதியில் அதிக அளவில் வேலை வாய்ப்பு ஏற்படுகிறது.

தமிழ்நாடு எல்லா சுற்றுலாச் சிறப்புகளையும் தன்னகத்தே கொண்டு எத்திசையும் புகழ் பரப்பும் மாநிலமாக விளங்குகிறது. இங்குள்ள கவின்மிகு காட்சிகளையும் சுற்றுலாத் தலங்களின் தொன்மை மிகுப் பாரம்பரிய சிறப்பினையும் கண்டுகளிக்க வெளிநாட்டிலிருந்து பிற மாநிலங்களில் இருந்தும் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர்.

இந்தியாவில் அந்நியச் செலவாணி ஈட்டும் தொழில்களில் மொத்த வருவாய் ஈட்டுவதில் மூன்றாவது இடத்திலும், நிகர அந்நியச் செலவாணி வருவாயில் இரண்டாவது இடத்திலும் சுற்றுலாத் தொழில் உள்ளது.

1998ல் இந்திய உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) இந்தியப் பயணம் மற்றும் சுற்றுலாவின் பங்கு 5.6 சதவீதமாகவும் வேலைவாய்ப்பில் 5.8 சதவிகிதமும் இருக்கிறது. இந்திய மொத்த ஏற்றுமதி வருவாயில் இந்தியப் பயணம் மற்றும் சுற்றுலாவின் பங்கு ரூ.230 கோடியாகும்.

**தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை**

மாநில அரசு, சுற்றுலாக் கொள்கையை வகுத்தபோது ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசு கடைப்பிடித்து சுற்றுலாக் கருத்து மற்றும் வழிகாட்டிக் குறிப்புகள் கருத்தில் கொள்ளப்பட்டன.

- ஒவ்வொரு சுற்றுலா மையத்திற்கும் குறிப்பாகத் தேவைப்படக்கூடிய வசதிகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் நலனுக்காகச் செய்து தரப்படும்.
- குறிப்பிட்ட சுற்றுலாப் பகுதிகளில் உள்ள அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளில் பற்றாக்குறை இருப்பதைக் கண்டறிந்து ஒருங்கிணைந்த தீவிர மேம்பாட்டு நடவடிக்கைகளைக் கருத்தறிவிக்க பெருந்திட்டம் ஒன்றைத் தீட்டுதல்.
- சுற்றுலாத் திட்டங்களில் தனியார் முதலீட்டை ஊக்குவித்து பல்வேறு அனுமதிகளை ஒரு குடையின் கீழ் வழங்க ஏற்பாடு செய்தல்.
- தமிழ்நாட்டின் சுற்றுலாச் சிறப்புகளைப் பற்றி வெளிநாடு மற்றும் வெளிமாநிலங்களில் தீவிர விளம்பரம் செய்தல்.



மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்
திரு. என். சுரேஷ்ராசன்





- மாநில தலைமையிடத் திலும் மாவட்டங்கள் அனைத்திலும் சுற்றுலா வளர்ச்சிக் குழுவை ஏற்படுத்துதல்.
- பல்வேறு விழாக்களை நடத்துவதன் மூலம் பண்பாட்டுச் சுற்றுலாவைத் தீவிரமாகப் பரப்புதல்.

தமிழ்நாட்டில் 14 முக்கிய சுற்றுலா மையங்களில் சுற்றுலா அலுவலகங்கள் ஏற்கெனவே உள்ளன. இத்துடன் புதுதில்லி, கல்கத்தா, மும்பை மற்றும் கோவா மாநிலத்திலுள்ள பனாஜி ஆகிய இடங்களிலும் சுற்றுலா அலுவலகங்கள் ஏற்கெனவே சீரிய முறையில் செயல்பட்டு வருகின்றன. இவை சுற்றுலாப் பயணிகள் அனைவருக்கும் சுற்றுலாத் தகவல்கள் அளிக்கின்றன.

### சுற்றுலா ஒரு தொழில்

சுற்றுலாவை ஒரு தொழிலாக அரசு அறிவித்து, பின்வரும் புதிய சுற்றுலாத் திட்டங்களுக்குச் சலுகைகள் மற்றும் மானியங்களை வழங்க ஆணை பிறப்பித்துள்ளது.

- சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகராட்சி நீங்கலாக ஏனைய இடங்களில் 20.1.1992 தேதிக்குப் பின்னர் ரூ.100 கோடிக்கு மீகாமல் முதலீட்டில் முடிக்கப்பட்ட ஒன்று முதல் மூன்று நட்சத்திர தங்கும் விடுதிகளுக்கு மான்யம் வழங்குதல்.
- பொழுதுபோக்கு பூங்காக்கள் ஏற்பளிக்கப்பட்ட சுற்றுலா நடத்துநர்கள் இயக்கும் சீர்வளிப் பேருந்துகள்.
- கோல்ப் விளையாட்டிடங்கள்
- அரசு ஒப்புதல் அளித்த சிற்றுண்டிச் சாலைகள்

அவ்வப்போது அரசு/இந்திய ரிசர்வ் வங்கி நிர்ணயிக்கும் வட்டி வீதங்களில் சுற்றுலாத் திட்டங்களுக்கு நிதி நிறுவனங்கள் கடன் வழங்கும்.

### மூலதன உதவித் தொகை

நிலத்தின் விலை நீங்கலாக, மொத்த முதலீட்டில் 10 சதவீதம் புதிய சுற்றுலாத் திட்டங்களுக்கு மூலதன உதவித் தொகை அளிக்கப்படுகிறது. திட்டம் ஒன்றுக்கு உயரளவுத் தொகையான ரூ.10 இலட்சம் அளிக்கப்படுகிறது.

### மின்னாக்கி எந்திர உதவித் தொகை

தகுதியுடைய புதிய சுற்றுலாத் திட்டத்திற்கு மின் உற்பத்தி எந்திரங்கள் வாங்க 15 சதவீதம் உதவித்தொகை அளிக்கப்படுகிறது. இச்சலுகையின் கீழ் வழங்கப்படும் அதிகபட்சத் தொகை ரூ.5 இலட்சமாகும்.

### பொருட்காட்சியும், விழாக்களும்

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயண முகவர்கள் முன்னதாகவே தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணத் திட்டங்களை சிறந்த முறையில் திட்டமிட்டு வகுத்துக் கொள்ள வசதியாக, பின்வரும் விழாக்கள் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளன.

தேயிலை மற்றும் சுற்றுலா விழா, குன்னூர்; நாட்டிய விழா, மாமல்லபுரம்; நாட்டியாஞ்சலி விழா, சிதம்பரம்; சித்திரைத் திருவிழா, மதுரை; கோடை விழா, ஊட்டி; பொங்கல் விழா (முக்கியமான சுற்றுலா மையங்களில்); சாரல் விழா, குற்றலாம்; குமரி விழா, கன்னியாகுமரி; மாங்கனிவிழா கிருஷ்ணகிரி.

தமிழகத்தின் சுற்றுலா மற்றும் தொழில் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு ஆண்டுதோறும் சென்னையில் அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சியினை நடத்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. பிற மாநிலங்களும், மத்திய அரசுத் துறைகளும், நிறுவனங்களும் இப்பொருட்காட்சியில் அரங்குகள் அமைக்கின்றன. இவை தவிர எல்லா மாவட்டங்களிலும் செய்தித்துறை நடத்தும் பொருட்காட்சிகளிலும் இத்துறை பங்கேற்கிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1971ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆசியுடன் தொடங்கப்பட்டது. மிகவும் சாதாரண முறையில் 5 தங்கும் விடுதிகள் மற்றும் சொகுசுப் பேருந்துகளுடன் இக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்து இக்கழகம் இன்று மாநிலம் முழுவதும் சங்கிலித் தொடர்போல் 36 தங்கும் விடுதிகளைக் கொண்டுள்ளது என்பது பெருமைப்படக்கூடிய ஒன்றாகும். இக்கழகத்தின் விடுதிகளில் முதலில் 253 படுக்கை வசதிகள் இருந்தன. 1999ல் 2400 படுக்கை வசதிகள் உள்ளன. இதே போல் சொகுசுப் பேருந்துகளும் பன்மடங்கு பெருகி, தற்போது 26 பேருந்துகள் மற்றும் சீருந்துகள் உள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கீழ்க்கண்ட வசதிகளைச் சுற்றுலாப் பயனிகளுக்கு வழங்கி வருகிறது.

ஓட்டல்கள் - 36; இளைஞர் விடுதிகள் - 8; படகுக் குழாம் - 10; உணவு விடுதிகள் - 3; சிற்றுண்டி விடுதிகள் - 2; தொலைநோக்கிக் கோபுரம் - 4; நடமாடும் உணவு விடுதி - 2; தோட்டங்கள் - 3; சுற்றுலா சேவை மையம்(பெட்ரோல் பாங்க்) - 1.

குறைந்த வருவாயுடைய சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்காக இளைஞர் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. இவற்றில் பலர் தங்கும் பெரிய அறைகள் உள்ளன. தங்குவதற்கான விடுதிக் கட்டணம் நபருக்கு நாளொன்றுக்கு ரூ.50 மட்டுமே.

**போக்குவரத்து பிரிவு**

தென்னிந்தியாவில் உள்ள ஆந்திரா, கர்நாடகா, கோவா, பாண்டிச்சேரி மற்றும் கேரளா போன்ற அனைத்து மாநிலங்களையும் உள்ளடக்கிய சுற்றுலாவைத் திறம்பட நடத்துவதில் இந்தியா விலேயே முதலிடம் வகிப்பதில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பெருமை கொள்கிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலாப் பயணிகளின் அன்றாடத் தேவையினை அறிந்து 26 வகையான திட்டமிட்ட சுற்றுலாக்களை நடத்தி பயணிகளைக் கவர்ந்து வருகிறது.

**உணவுக் கலை நிறுவனம்**

திருச்சிராப்பள்ளியிலுள்ள மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்பப்பயிலகம் சுற்றுலாத்துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது. இங்கு உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்பத்தில் மூன்றாண்டுப் பட்டயப்படிப்பை நடத்தி வருகிறது. இவை தவிர ஓராண்டு முழுநேரச் சான்றிதழ் வகுப்பும் நடத்தி வருகிறது.

தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் ஆட்சியில் மூன்றாண்டுக் காலத்தில் சுற்றுலாத்துறையில் ஏற்படுத்திய சாதனை விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டு உள்ளன.

சுற்றுலாத்துறையில் மே 1996 முதல் தற்பொழுது வரை மேற்கொண்டு முடிக்கப்பட்ட திட்டங்கள்

- பூம்புகார் சுற்றுலா வளாகத்தில் ரூ.62 இலட்சம் செலவில் சுற்றுலாப் பயணிகளுக்கான வசதியை மேம்படுத்தியுள்ளது.
- பாஞ்சாலங்குறிச்சி, வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டையில் ரூ.24 இலட்சம் செலவில் சுற்றுலாப் பயணிகளுக்கான வசதி மேம்படுத்தப்பட்டுள்ளது.
- பெங்களூர், திருவனந்தபுரம் ஐதராபாத் ஆகிய இடங்களில் ரூ.10.16 இலட்சம் செலவில் சுற்றுலாத் தகவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன.
- 14 ஆண்டுகளாக நிலுவையிலிருந்த ஒகேனக்கல் சுற்றுலாத் தலத்தில், தொங்கு பாலம் ரூ.17 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளது.
- திருநெல்வேலி குற்றலாம், கிருஷ்ணகிரி சேலம் ஆகிய இடங்களில் மத்திய அரசு நிதி உதவி திட்டத்தின் கீழ் ரூ.140 இலட்சம் செலவில் தமிழ்நாடு ஓட்டல்கள் கட்டப்பட்டுள்ளன.
- புதுக்கோட்டை, ஸ்ரீபெரும்புதூர், இராமேஸ்வரம், நாமக்கல் விருதுநகர், பழநி ஆகிய இடங்களில் ரூ.155 இலட்சம் செலவில் தமிழ்நாடு ஓட்டல்கள் கட்டி முடிக்கப்பட்டு துவங்கும் நிலையில் உள்ளன.
- ஊட்டியில் பயணிகளைக் கவரும் வண்ணம் தண்ணீர் சாகச விளையாட்டு கருவிகள் ரூ.20 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு உள்ளன.
- பழைய வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகளை மாற்றி புதியதாக தமிழ்நாடு ஓட்டலில் 200 வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகள் ரூ.22 இலட்சம் செலவில் வைக்கப்பட்டுள்ளன.
- 1998ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் புதுதில்லியில் நடந்த சுற்றுலாத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் இராமேஸ்வரம் தேசிய புண்ணியத் தலமாகவும், கன்னியாகுமரி தேசிய சுற்றுலாத் தலமாகவும் அறிவிக்கப்பட்டு திட்டங்கள் தில்லி சுற்றுலாத்துறைக்கு அனுப்பப்பட்டு மைய அரசு இந்த ஆண்டு ரூ.50 இலட்சம் நிதி உதவ முன்வந்து ஆணை பிறப்பித்துள்ளது.
- காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் கனவை நினைவாக்கும் வகையில் படகு இல்லம் தொடங்கப்பட்டுப் பயனில் உள்ளது.
- கும்பகோணம் மகாமக குளத்தில் படகு குழாம் ரூ.5 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு 21-3-1999 முதல் இயங்கி வருகிறது.
- ரூ.12 இலட்சம் செலவில் நவீன தொலைபேசி இணைப்புகள் மதுரை அலகு 1 மற்றும் 2 கோயம்புத்தூர் மற்றும் திருச்சி தங்கும் விடுதிகளில் நிறுவப்பட்டுள்ளன.
- தொழில் நுட்ப ரீதியான சேவை வழங்க தொழில் கல்வி தகுதியுள்ள 10 அலுவலர்கள் மேலாண்மை பயிற்சியாளர்களாக நியமனம் செய்யப் பட்டுள்ளனர்.
- சுற்றுலாத்துறை இண்டர்நெட், இ மெயில் வசதி செய்யப்பட்டது.
- சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி ரூ.5 இலட்சம் செலவில் சுற்றுலா வழிகாட்டிகள் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
- சுற்றுலா விளம்பர மேம்பாட்டுப் பணிகள் ரூ.150 இலட்சம் செலவில் இதுவரை மேற் கொண்டுள்ளது.
- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கீழ் உள்ள தமிழ்நாடு விடுதிகள் குறிப்பாக முக்கிய நகரங்களில் உள்ள விடுதிகளில் ரூ.20 இலட்சம் செலவில் கணினி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- முக்கொம்பு சுற்றுலா மையத்தில் ரூ.10 இலட்சம் செலவில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் முடிவடையும் தருவாயிலுள்ளன:
- ரூ.10 இலட்சம் செலவில் குற்றாலத்தில் படகு குழாம் அமைத்தல், சிற்றுண்டி விடுதி கட்டுதல் ஆகிய சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.
- சென்னை விமான நிலையம் முதல் மாமல்லபுரம் வரையிலுள்ள சாலைகளில் வழிகாட்டி பலகைகள் அமைத்தல் பணி ரூ.6 இலட்சம் செலவில் தொடங்கி உள்ளது.
- சுருளி அருவி, திற்பரப்பு அருவி, திருமூர்த்தி மலை, மனோரா, தாடகை நாச்சி அம்மன் கோவில் ஆகிய இடங்களில் ரூ.20 இலட்சம் செலவில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்த ஆணையிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- மாமல்லபுரம் சாலைகளில் சோடியம் விளக்கு பொருத்துதல், கன்னியாகுமரியில் கடற்கரையில் 2 உயர்கம்ப விளக்கு அமைக்க ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மாமல்லபுரத்தில் பணிகள் முடிவுற்றன. கன்னியாகுமரியில் பூர்வாங்கப் பணிகள் முடிந்துள்ளன.
- மாமல்லபுரம் திறந்தவெளி அருங்காட்சியகத்தில் ரூ.15 இலட்சம் செலவில் கூடுதல் சிலைகள் அமைக்க பூர்வாங்கப் பணிகள் முடிவுற்று சிலைகள் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
- ரூ.115 இலட்சம் செலவில் புதிய தொழில்நுட்பத் தரம் வாய்ந்த சொகுசுப் பேருந்துகள் வாங்குதல்.
- மாவட்ட பரவலாக்கத் திட்டத்தின் கீழ் சுற்றுலாவை வளர்த்திட மாவட்ட ஆட்சியர்களுக்கு நிதி ஒதுக்கீடு.
- சுற்றுலா வளர்ச்சிக்கு மலைப்பகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு (நீலகிரி மாவட்டத்திற்கு மட்டும்)
- சென்னையில் கலைவாணர் அரங்கிற்கு அண்மையில் சுற்றுலா வளாகம் ரூ.200 இலட்சம் செலவில் உருவாக்கிடும் வகையில் முதல்வர் அவர்களால் 30.12.98 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.
- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சிறந்த தங்கும் விடுதிகளான மாமல்லபுரம், உதகமண்டலம், கொடைக்கானல், கன்னியாகுமரி, மதுரை, இராமேஸ்வரம் ஆகியவை மேம்படுத்தவுள்ளன. அதற்கு ரூ.250 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்படவுள்ளன.

**சுற்றுலாப் பயணிகள் தமிழகம் வருகை விவரம்:**

1996ஆம் ஆண்டில் உள்நாட்டுப் பயணிகள் - 182 இலட்சம், வெளிநாட்டுப் பயணிகள் - 6.14 இலட்சம்; 1997ஆம் ஆண்டில் உள்நாட்டுப் பயணிகள் - 189 இலட்சம், வெளிநாட்டுப் பயணிகள் - 6.37 இலட்சம்; 1998ஆம் ஆண்டில் உள்நாட்டுப் பயணிகள்- 204 இலட்சம், வெளிநாட்டுப் பயணிகள் - 6.36 இலட்சம் ஆகும்.

**சுற்றுலாக்கள் விவரம்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 29 வகையான சுற்றலாக்களை நடத்தி வருகிறது. அவற்றில் சில முக்கியமானவை

**ஆன்மீக சுற்றுலாக்கள்**

நவகிரக சுற்றுலா; தேவியர் தரிசனம்; திருமால் தரிசனம்; தொண்டைநாட்டு திருப்பதிகள்; சோழநாட்டு திருப்பதிகள்; திராவிட பண்பாட்டுச் சுற்றுலா; 14 நாட்கள் காசி சுற்றுலா; 12 நாட்கள் மும்பை சுற்றுலா; ஊட்டி, கொடைக்கானல், குற்றலாம் பெங்களூர் சுற்றுலா (பருவ காலங்களில் மட்டும் - சீசன் நேரம்)



அரசு அலுவலர்கள் மற்றும் தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்கள் எல்.டி.சி. பயணச் சலுகையினை பயனடையும் வண்ணம் பயணத் திட்டங்கள் உள்ளன.

**புதிய பேருந்துகள்**

35 இருக்கைகள் கொண்ட பெரிய சொகுசு பேருந்துகள் 5 வாங்கப்பட்டன, 18 இருக்கைகள் கொண்ட சிறிய சொகுசு பேருந்துகள் 8 வாங்கப்பட்டன, 10 இருக்கைகள் கொண்ட சிறிய சொகுசு பேருந்துகள் 2 எண்ணிக்கை வாங்கப்பட்டன (1 குளிர்சாதன வசதியுடையது).

சுற்றுலாப் பயணிகளை கவர தமிழ்நாடு அரசு ஏராளமான வசதிகளை செய்து தந்துள்ளது. ★

# கைவினைஞர்களை காக்கும் கதர்த்துறை

அண்ணல் காந்தியடிகள், மக்கள் தொகை மிக்க இந்த நாட்டிற்குக் கதர் கிராமத் தொழில்களே கை கொடுக்கும் என்று கைராட்டையையும் கதராடையையும் அறிமுகம் செய்தார். அவரது கனவு நனவாகும் வகையில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியமானது 1960ஆம் ஆண்டிலே நிறுவப்பட்டது. மாநில அரசு, மத்திய அரசு மற்றும் மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையம் ஆகியவற்றின் ஆதரவோடு இந்த வாரியம் கடந்த 39 ஆண்டுகளாக மக்களுக்குச் சேவைபுரிந்து வருகிறது.

கிராமப்புறத்தில் ஆங்காங்கே கிடைக்கக்கூடிய மூலப் பொருட்கள் மற்றும் இதர வசதிகளை பயன்படுத்தி அங்கே வாழ்கின்ற கைவினைஞர் களுக்குப் பயிற்சி அளித்து வேலைவாய்ப்பு அளித்து அவ்வாறு உற்பத்தியாகக்கூடிய பொருள்களை விற்பனை செய்து வருதல் இந்த வாரியத்தினுடைய நோக்கமும் கடமையும் ஆகும். சுற்றுப்புற சூழலுக்கு எந்தவித இடையூறும் இல்லாவண்ணம் வேலைவாய்ப்பிற்காக நகரத்தை நோக்கி வருகின்ற கிராமப்புற மக்களைத் தடுத்து நிறுத்தி அவர்களுக்கு அவர்கள் ஊரிலேயே வேலைவாய்ப்பு அளித்து அவர்கள் பொருளாதார மேம்பாட்டுக்காக உதவும் மிகப்பெரிய சமூக நலப்பணியை இந்த வாரியம் செய்துவருகிறது.

மும்பை கதர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப் பட்ட 59 கிராமத் தொழில்களையும் மற்றும் கதர் தொழில்களையும், 968 சொந்த அலகுகள் மூலமாகவும், 674 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் 88,116 தனிப்பட்ட கைவினைஞர்கள் மூலமாகவும் தனது உற்பத்தியைச் செய்து வருகின்றது. கிட்டதட்ட 16.50 இலட்சம் கிராமப்புற கைவினைஞர்களுக்கு தொடர்ச்சியான வேலைவாய்ப்பினை இந்த வாரியம் நல்கி வருகிறது. இந்த எண்ணிக்கையில் 4.27 இலட்சம் பெண்களும், 3.69 இலட்சம் ஆதிதிராவிடர் இனத்தவரும் அடங்குவர். அதேபோன்று தமிழகம் முழுவதும் சென்னை குறளகத்தில் இருக்கக்கூடிய காதி கிராப்ட் என்னும் மிகப்பெரிய விற்பனை நிலையம் உட்பட 234 விற்புனை நிலையங்களை இவ்வாரியம் நடத்திவருகிறது.

தமிழக கதர் கிராமத் தொழில் வாரியத்தினைப் பொறுத்தவரையில் முதல்வர் **கலைஞர்** அவர்களது அக்கறையும் அரவணைப்பும் இருக்கின்ற காரணத்தால் பல்வேறு பிரச்சினையில் சிக்குண்ட வாரியம் மீண்டும் எழுச்சி பெற்று பீடு நடைபோட்டு செயலாற்றி வருகிறது என்பதை இந்நாட்டு மக்கள் நன்கறிவார்கள்.

கழக ஆட்சி பொறுப்பேற்றதும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தை திறம்பட செயல்பட வைக்க சில முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. பிற மாநிலங்களிலிருந்து தேவையற்ற பொருட்களை கொள்முதல் செய்வது நிறுத்த ஆணையிடப்பட்டது.

2. உற்பத்தி செய்வதில் மக்கள் பெரிதும் விரும்பக்கூடிய கதர் பட்டு, பாலியஸ்டர் மற்றும் மெல்லிய கதர் ரகங்கள் மற்றும் கிராமத் தொழில் பொருட்கள் மட்டுமே உற்பத்தி செய்ய ஆணையிடப் பட்டது.

3. பெயரளவில் மட்டுமே இயங்கி வந்த கிராமத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களை இனங்கண்டு அதன் பதிவுகளை ரத்து செய்ய ஆணையிடப்பட்டது.

4. தேவையற்ற விளம்பரச் செலவுகள் முற்றிலுமாக குறைக்க ஆணையிடப்பட்டது.

முடங்கிக் கிடந்த கதர் வாரியத்தின் உற்பத்தியில் முன்னேற்றம் ஏற்படக்கூடிய வகையில் கடந்த இரண்டரை ஆண்டு காலத்தில் மக்களால் பெரிதும் விரும்பக்கூடிய பட்டுப்புடவை உற்பத்தி ரூ.43.12 கோடியாக உயர்ந்தது. அதேபோல் பாலியஸ்டர் மற்றும் மெல்லிய கதர் ரகங்கள் முறையே ரூ.7.72 கோடி மற்றும் ரூ.12 கோடி அளவுக்கு உற்பத்தி செய்யப்பட்டன. இதர பொருட்களின் உற்பத்தியும் விற்பனையும் பின்வருமாறு :-

– மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர்
திரு. அந்தியூர் ப. செல்வராசு



சோப்பு ரூ.8.33 கோடி - ரூ. 9.68 கோடி, கைமுறை காகிதம் ரூ.1.34 கோடி - ரூ.1.09 கோடி, தச்சுப் பொருட்கள் ரூ.4.92 கோடி - ரூ.4.77 கோடி, மண்பாண்ட பொருட்கள் ரூ.0.31 கோடி - ரூ.0.29 கோடி.

கதர் வாரியத் தொழில்களிலேயே முன்னணி வகிப்பது தச்சு கொல்லு அலகுகளும் தோல் உற்பத்தி அலகுகளும்தான். 97-98ஆம் ஆண்டு மட்டும் மாநில காவல் துறைக்கு ரூ.2 கோடியே 97 இலட்சம் மதிப்பிற்கு தமிழக கதர் வாரியம் சீருடை காலணிகளைத் தயாரித்து வழங்கியிருக்கிறது. கடந்த ஆண்டில் ரூ.2.5 கோடிக்கு காவல் துறைக்கு காலணிகள் வழங்கப்பட்டுள்ளன.

### 97–98ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட புதிய திட்டங்கள்

கடந்த 90-91 முதல் 95-96ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் தமிழ்நாட்டிலே விற்பனையான கதர் ரகங்களுக்கு வழங்கப்பட வேண்டிய தள்ளுபடி மானிய நிலுவைத் தொகையான ரூ.9.71 கோடியை இவ்வரசுதான் வழங்கியது. கடந்த நிதியாண்டில் மட்டும் இந்த அரசால் மொத்தம் ரூ.14.79 கோடி அளவுக்கு தள்ளுபடி மானியம் வழங்கப்பட்டிருக்கிறது. தஞ்சையில் நாஞ்சிக்கோட்டை என்னுமிடத்திலுள்ள கைமுறை சோப்பு உற்பத்தி அலகை நவீனப்படுத்தும் திட்டத்தின் முதற்கட்டப் பணி நிறைவேற்றப் பட்டுள்ளது. விழுப்புரம் அருகே பிடாகம் என்னுமிடத்திலுள்ள காகித அலகிற்கு புதிய இயந்திரங்கள் தருவித்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் மார்த்தாண்டம் என்னுமிடத்தில் தேன் பதப்படுத்தப்படும் அலகின் கட்டடப் பணியில் முதற்கட்டம் பூர்த்தியாகியுள்ளது.

கடந்த நிதியாண்டில் நேபாளி தறிகளை நவீனப்படுத்தும் வகையில் ரூ.3 இலட்சம் செலவில் உதிரிப்பாகங்கள் கொள்முதல் செய்ய ஆணையிடப் பட்டுள்ளது. ரூ.5.25 இலட்சம் செலவில் நெசவாளர்கள் பயன்படுத்தும் கைத்தறிகளுக்குத் தேவையான அச்சு மற்றும் விழுதுகள் கொள்முதல் செய்து 700 நெசவாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தினுடைய மைய அலகில் ரூ.5 இலட்சம் செலவில் தமிழாலான மின்னனு கணிப்பொறி ஒன்று நிறுவப்பட்டுள்ளது. மூன்று மாவட்ட உதவி இயக்குனர்களுக்கு ரூ.9 இலட்சம் செலவில் 3 ஈப்புகள் வாங்கப்பட்டுள்ளன. 20 பட்டு உபகிளைகளுக்கு மின் இழுவை இயந்திரத்துடன் நூல்பிழியும் கருவிகளை ரூ.2 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்பட்டுள்ளன. பழைய ராட்டைகளுக்குப் பதிலாக புதிய 8 கதிர் ராட்டைகள் வழங்க ரூ.9 இலட்சம் ஒதுக்கப்பட்டு இதுவரை 5 செட் அதாவது 25 ராட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. சென்னை குறளகம் கதர் அங்காடி உள்பட 5 கதர் அங்காடிகள் ரூ.9.6 இலட்சம் செலவில் நவீனப்படுத்தப்பட்டுள்ளன. ரூ.1.2 இலட்சம் செலவில் கைமுறை காகிதம் மற்றும் இதரப் பொருட்களுக்கான ஆராய்ச்சிக்காக செலவிடப் பட்டுள்ளது. அதேபோல ரூ.10 இலட்சம் செலவில் விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்ப ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்குத் தேவையான திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டன.

### சுதந்திர தின பொன்விழா ஆண்டும் 40 சதவீதம் தள்ளுபடியும்

கடந்த சுதந்திரதினப் பொன்விழா ஆண்டில், ஆண்டு முழுவதும் அனைத்து கதர் ரகங்களுக்கும் 15 சதவீதம்

தள்ளுபடியை மைய அரசு அறிவித்தது. அதற்கு இணையாக மாநில அரசும் 15 சதவீதம் தள்ளுபடியை வழங்க தமிழக முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் மனமுவந்து உத்திரவிட்டார்கள். இதுதவிர பொன்விழா ஆண்டில் வந்த விழாக் காலங்களில் 90 நாட்களுக்குக் கூடுதலாக 10 சதவீத தள்ளுபடியை மும்பை கதர் ஆணைக்குழு வழங்கியது. இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி தமிழக கதர் கிராமத் தொழில் வாரியமானது ரூ.36 கோடி மதிப்பிற்குக் கதர் ரகங்களை விற்பனை செய்தது. எனவே 1998-99ஆம் ஆண்டில் மொத்தத்தில் வாரியம் ரூ.1 கோடியே 98 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

### *கிராமப்புற கைவினைஞர்களுக்குக் கடன் உதவி திட்டம்*

மும்பை கதர் கிராம ஆணைக்குழுவினுடைய ஆதரவில் தமிழகத்திலே 6 மாவட்டங்கள் மற்றும் 6 வட்டாரங்களில் விளிம்புக் கடன் உதவி மானிய திட்டம் எனும் திட்டம் அமல்படுத்தப்பட்டு உள்ளது. கதர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சுமார் 96 தொழில்களில் ஏதேனும் ஒன்றை துவங்க முன்வருவோருக்குச் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன்உதவி வழங்குவதுதான் இந்த திட்டத்தினுடைய முக்கிய அம்சம் ஆகும். இந்த திட்டத்திலே பயன்பெறவிரும்புவோர் விண்ணப் பிக்கின்ற கடன் தொகையில் சுமார் 25 சதவீதத் தொகையை விளிம்புத் தொகை மானியமாக வழங்குவது இத்திட்டத்தினுடைய சிறப்பம்சமாகும்.

### *தேனீ வளர்ப்போர்க்கு ஒரு இனிப்பான செய்தி*

தமிழகத்திலே தேனீக்கள் வளர்க்கும் 8,000 நபர்கள் பயன்படத்தக்க வகையில் தேன் கொள்முதல் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.44ல் இருந்து ரூ.47ஆக உயர்த்தி 1.4.98 முதல் கொள்முதல் செய்யப்படுகிறது.

### *பணியாளர்கள் நிரந்தரம்*

கடந்த பத்து பதினைந்து ஆண்டுகளாக ரூ.20 முதல் ரூ.25 வரை தினக்கூலியாக பெற்று பணியாற்றி வந்த 33 பணியாளர்களை அடிப்படை ஊதிய விகிதத்தில் உள்ள பதவிகளில் நிரந்தரமாகப் பணியமர்த்தி தமிழக முதல்வர் **கலைஞர்** அவர்கள் கடந்த ஆண்டு உத்திரவு பிறப்பித்தார்கள்.

### *இண்டர்நெட்டில் கதர் வாரியம்*

தமிழக கதர் கிராமத் தொழில் வாரியம் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் பொருட்களின் விவரங்கள் 27.3.98 முதல் 'இண்டர்நெட்டில்' விளம்பரம் செய்யப்படுகின்றன. இதனால் உலகளவிலே நமது கதர் வாரியம் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களுக்கு அறிமுகமும், விற்பனைக்கான வாய்ப்பும் கிடைக்கும் என்று நம்பப்படுகிறது.

### *பனை வாரியத்தின் பாராட்டக்கூடிய சாதனைகள்*



கடந்த நிதியாண்டில் ரூ.1.5 இலட்சம் செலவில் சிப்பம் செய்யும் புட்டிகளை பாதுகாக்க குளிர் சாதனங்கள் வாங்கப்பட்டன. திருப்பூர் மண்டலத்தில் குன்னத்தூர் என்னும் இடத்தில் பாம்கோலா உற்பத்தி பிரிவு, பதனீர் பதப்படுத்தும் பிரிவு ரூ.10 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டு உற்பத்தி துவங்கப்பட்டு உள்ளது. மேலும் அதே இடத்தில் ரூ.2.48 இலட்சம் செலவில் பிரஷ் தயாரிக்கும் பிரிவு ஒன்று ஆரம் பிக்கப்பட்டது. இராமநாதபுரத்தில் ரூ.2.55 இலட்சம் செலவில் பதனீர் பதப்படுத்தும் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது. கடந்த 5 அல்லது 6 ஆண்டுகளாக செயல் படாமல் முடங்கிக் கிடந்த மாதவரம் பனஞ்சீனி ஆலை ரூ.2.94 இலட்சம் செலவில் பழுதுபார்க்கப்பட்டு தற்போது சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அதேபோல் கடந்த 5



ஆண்டுகளாக பழுதுபட்டு இயங்காமல் இருந்து வந்த கோவை மாவட்டத்தில் கலிக்க நாயக்க பாளையத்தில் உள்ள பனஞ்சீனி ஆலையும் ரூ.3 இலட்சம் செலவில் பழுது பார்க்கப்பட்டு தற்போது இயங்கி வருகிறது. அதே போல் தருமபுரி மாவட்டம் மாத்தூர் பனஞ்சீனி ஆலையும் தற்போது இயங்கி வருகிறது. கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் என்னுமிடத்தில் தும்பு சுத்திகரிப்பு பிரிவு ஒன்று ரூ.3 இலட்சம் செலவில் ஆரம்பிக்கப்பட்டு சிறந்த முறையில் செயலாற்றி வருகிறது. தஞ்சை மாவட்டம் பட்டுக் கோட்டை, கோவைமாவட்டம் பொள்ளாச்சி ஆகிய ஊர்களில் ரூ.5 இலட்சம் செலவில் பனைத் தும்பிலிருந்து துப்புரவுப் பொருட்கள் செய்யும் அலகுகள் துவங்கப்பட்டுள்ளது. விருதுநகர் மாவட்டம் திருவில்லிபுத்தூர், திருநெல்வேலி மாவட்டம் குலவணிகபுரம் ஆகிய இடங்களில் ரூ.2 இலட்சம் செலவில் பனை நாற்றங்கால் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. தவிர பனைத்தொழில் ஆராய்ச்சிக்கென ரூ.2 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### *கள் இறக்கி வந்த தொழிலாளர்களின் கடன் தொகை தள்ளுபடி*

மதுவிலக்குத்திட்டத்தால் வேலை வாய்ப்பை இழந்த கள் இறக்கும் தொழிலாளர்களுக்கு வட்டியில்லா கடனாக தலா ரூ.1,000 வீதம் 30 ஆயிரம் நபர்களுக்கு வழங்கப்பட்டது. அவர்கள் கடனை திருப்பி செலுத்துவதில் இருந்த சிரமத்தை பரிவோடு கவனித்த தமிழக முதல்வர் **கலைஞர்** அவர்கள் மொத்த கடன் தொகையான ரூ.3 கோடியை தள்ளுபடி செய்ய உத்தரவிட்டார்.

### *காந்தியின் சீடர் சர்வோதயத் தலைவர் ஆசாரியா வினோபாவுக்கு சிலை*

தமிழ்நாடு பூமிதான வாரியம் கடந்த ஆட்சிக் காலத்தில் செயலற்று போயிருந்த நிலை நீங்கி இவ்வரசு பொறுப்பேற்றதும் தகுதியுள்ள ஏழை விவசாய தொழிலாளர்களுக்கு விவசாய நிலங்களை வழங்கி வருகின்ற திட்டம் முடுக்கிவிடப்பட்டது. இதுவரை, சுமார் 309 ஏக்கர் பரப்புள்ள நிலங்கள் 223 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. பூமிதான இயக்கத்தை கண்ட ஆசார்ய வினோபா அவர்களைப் போற்றுகின்ற வகையில் மார்பளவு சிலை ஒன்று வடிக்கப்பட்டு சென்னை குறளகத்தின் முன்பு நிறுவப்படவிருக்கிறது.

அண்ணல் காந்தியடிகளின், "மக்கள் தொகை மிக்க இந்திய திருநாட்டிற்குத் கிராமத் தொழில்களே உயிர்நாடி" என்ற நம்பிக்கையை இலட்சியமாகக் கொண்டு தமிழக கதர் கிராமத் தொழில் வாரியமும் தமிழக பனைப்பொருள் வாரியமும் கிராமப்புற கைவினைஞர்களுக்கு உதவும் வகையில் தொய்வின்றி செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையத்திற்கும் 7 மாவட்ட சம்மேளனங்களுக்கும் தேர்தல் நடைபெற்று புதிய நிர்வாகிகள் பொறுப்பேற்றிருக்கிறார்கள். மக்கள் பிரதிநிதிகள் பொறுப்பேற்றதன் விளைவாகப் பனைப்பொருள் தொழில் புத்துணர்வு பெற்றுள்ளது. தமிழக முதலமைச்சர் **கலைஞர்** அவர்களது ஆலோசனை மற்றும் அரவணைப்பும் இருக்கின்ற நிலையில் இவ்வாரியங்கள் வருங்காலத்தில் சிறப்பாக தம்தம் பணியை ஆற்றவிருக்கின்றன. "உழைப்போரே உயர்வர்" என்ற உயர்ந்த தத்துவத்தை உலகுக்குச் சொல்லும் வகையிலும் சாதி மத பேதங்கள் இன்றி தமிழினம் முன்னேற கதர்த் துறை தனது பங்கை ஆற்றும் என்று மீண்டும் உறுதி கூறுகிறது.

★ ★ ★

**செய்யும் தொழிலே தெய்வம் அந்தத் திறமைதான் நமது செல்வம் - பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்**

# மீன்வளம் பெருக்குவோம்! மீனவர் நலம் பேணுவோம்!

— மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திருமதி. **எஸ். ஜெனிபர் சந்திரன்**

தமிழ்நாட்டு பொருளாதாரத்தில் மீன்வளம் ஓர் இன்றியமையாத பங்கு வகிக்கிறது. இம்மாநிலம் 1000 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரைப் பகுதியைக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் 442 கடலோர மீனவ கிராமங்கள் உள்ளன. ஏறக் குறைய 8.53 இலட்சம் கடல் மீனவர்கள் உள்ளனர். இவர்களில் 2.62 இலட்சம் மீனவர்கள் கடல் மீன்பிடிப்பில் நேரிடையாக ஈடுபட்டுள்ளனர். தனிமனித ஆண்டு சராசரி மீன் தேவை 12 கிலோ ஆகும். ஆனால் இன்றைய உற்பத்தி அளவுப்படி 6.7 கிலோவாக உள்ளது. எனவே இந்த உற்பத்தி குறைவை சீர்செய்ய தமிழக முதல்வர் **கலைஞர்** அவர்களின் சீரிய தலைமையில் நடைபெறும், இந்த அரசு மீனவ மக்களின் நலப்பணியில் அக்கறை செலுத்துவதோடு மட்டுமன்றி மாநிலத்தில் மீன்வளத்தை பெருக்கிட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுகிறது. அதில் முக்கிய பங்காற்றும் மீனவ சமுதாயத்தின் சமூக மற்றும் பொருளாதார நலன்களை மேம்படுத்தி அவர்கள் வாழ்க்கைத்தரம் உயர சீரிய பல நல்ல திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

அவைகளில் ம. சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டம், ஒரு வீடு விளக்குத் திட்டம், மீனவ கிராமங்களில் இணைப்புச் சாலைகள் அமைத்தல், கடல் மீனவர் சேமிப்புத் திட்டம், மீனவர் விபத்துக் காப்புறுதித் திட்டம், மீன் இறங்குதளம் அமைத்தல், மீனவ மகளிருக்கு ஐந்து சக்கர இழுவை ஊர்திகள் அளித்தல் மற்றும் மீனவ மகளிர் பயிற்சித் திட்டம் ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும். அதேபோன்று உள்நாட்டு மீனவ மக்களுக்கும் வீட்டு வசதி திட்டம், மீன் குஞ்சுகள் தேவையான அளவு உற்பத்தி செய்திட மீன் பண்ணை, குளங்கள் மற்றும் மீன்குஞ்சு பொரிப்பகம், மிதவைக் கூடுகள் அமைத்தல், நன்னீர் இரால் வளர்ப்புக்கு மானியம் வழங்கி ஊக்குவித்தல் போன்ற திட்டங்களையும் செயல்படுத்திட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

## மீனவர்களுக்கு இலவச வீடுகள்

தமிழக முதல்வர் **கலைஞர்** அவர்கள் முதல்வராக இருந்த காலத்தில் இந்தியாவிலேயே முதல் முதலாக மீனவர்களுக்கு இலவசமாக வீடு கட்டும் திட்டத்தை 1975–76ஆம் ஆண்டு தொடங்கி வைத்தார்கள். (முந்தைய ஆட்சி காலத்தில் ஆண்டு ஒன்றுக்கு 2000 வீடுகள் வீதம் மீனவர்களுக்கு கட்டித்தர ஆணை பிறப்பிக்கப்பட்டு இருந்தது). 1975–76ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இந்த திட்டத்தில் தி.மு.க. ஆட்சி காலத்தில் கட்டப்பட்ட வீடுகள் 19,987 ஆகும். அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட வீடுகள் 11,139 ஆகும். மேலும் இந்த அரசு பொறுப் பேற்றவுடன் 1996–97ஆம் ஆண்டில் சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர் நினைவினை போற்றும் வகையில் "ம. சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டம்" என்ற சீரிய திட்டம் மூலம் ஆண்டொன்றுக்கு 4,000 வீடுகள் வீதம் ஐந்து ஆண்டுகளில் 20,000 வீடுகள் கட்டித் தரப்படும் என சட்டமன்றத்தில் மாண்புமிகு முதல்வர் **கலைஞர்** அவர்கள் அறிவித்தார்கள். இந்த அறிவிப்பின் அடிப்படையில் கடலோர ஏழை மீனவர்களுக்கு அடிப்படைத் தேவையான வீடுகளை 1996–97, 1997–98 மற்றும் 1998–99ஆம் ஆண்டுகளில் தனித்தனியாக ஆண்டொன்றுக்கு 4,000 வீடுகள் வீதம் 12,000 வீடுகள் கட்டித்தர அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் முந்தைய அரசின் ஆட்சி காலத்தில் ஒரு வீட்டிற்கு ரூ.26,000 ஆக இருந்த கட்டுமானச் செலவினை ரூ. 32,000 ஆக இந்த அரசு உயர்த்தியுள்ளது. நடப்பு ஆண்டில் இந்தக் கட்டுமானச் செலவினத்தினை ரூ.37,000ஆக உயர்த்தி ஆணை பிறப்பித்துள்ளது.

இது தவிர முந்தைய ஆட்சி காலத்தில் 1995–96ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட 2,000 வீடுகளை கட்ட ரூ.40 இலட்சம் மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டு இருந்தது. மிகக் குறைந்த அளவில் நிதி ஒதுக்கீடு செய்தமையால் இந்த வீடுகளின் கட்டுமானப்பணி துவக்கப்பட முடியாமல் இருந்தது. ஆனால் இந்த அரசு இதனைக் கருணையுடன் பரிசீலித்து, நடப்பு நிதி ஆண்டில் 1,068 வீடுகள் கட்டுவதற்கு ரூ. 256.32 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

கடந்த ஆட்சியில் ஐந்து ஆண்டுகளில் 1991–92 முதல் 1995–96 வரை மொத்தம் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை (13.5.96 வரை) – – 3,165 ஆகும்.

இந்த ஆட்சியில் இதுவரை 1996–97 மற்றும் 1997–98 ஆகிய இரண்டு ஆண்டுகளில் 5,148 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1998–99ஆம்



ஆண்டிற்கு இதுவரை 2,007 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகள் விரைவில் கட்டி முடிக்கப்படும். அதுதவிர முந்தைய அரசில் ஒப்பளிக்கப்பட்டு கட்டப்படாமல் இருந்த 3,341 வீடுகள் 31.3.99 கட்டி முடிக்கப் பட்டுள்ளன.

### மீனவர் விடுகளைப் பழுது பார்க்கும் திட்டம்

நல வாழ்வு அளிக்கும் நோக்கத்தில் கடற்கரையோரத்தில் குடிசையில் வாழும் ஏழை மீனவர்களுக்காக 1975–76 முதல் கட்டப்பட்ட இலவச வீடுகளில் ஏற்பட்ட பழுதுகளை நீக்க எந்த அரசும் இதுவரை எந்தத் திட்டமும் தீட்டவில்லை. ஆனால் இந்த அரசு 1996ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்தவுடன் இதனை பரிசீலனை செய்து, மீனவர்களுக்கு கட்டி வழங்கப்பட்ட வீடுகளில் முதற்கட்டமாக 2,000 வீடுகளை பழுது பார்க்க ஒரு வீட்டிற்கு ரூ.5,000 வீதம் ஒரு கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது. 1,310 வீடுகளுக்கு பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் எஞ்சிய 690 வீடுகள் பழுது நீக்கம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. 650 வீடுகளுக்கு பழுது பார்க்கும் தொகை விடுவிக்கப்பட்டது.

### ஒரு விட்டிற்கு ஒரு விளக்கு திட்டம்

ம. சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 1996–97ஆம் ஆண்டில் கட்டப்பட்ட 4,000 வீடுகளுக்கு ஒரு வீட்டிற்கு ஒரு விளக்கு என்ற புதியத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வீட்டிற்கும் மின் விளக்கு வசதி செய்து தர ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. இத் திட்டத்தின் பலனால் அனைத்து கடலோர மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ள 4,000 மீனவர்களின் குடியிருப்புகளுக்கு மின் விளக்கு வசதி தர உரிய துரித நடவடிக்கை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது.

### மீனவர் கிராமங்களுக்கு மின் விளக்குகள்

இதுவரை எந்த அரசும் மீனவர் கிராமங்களுக்குத் தெரு மின் விளக்குகள் அமைக்க ஒப்புதல் அளிக்கவில்லை. ஆனால் இந்த அரசு ஆட்சிக்கு வந்தவுடன் 1996–97ஆம் ஆண்டு 1,203 தெரு மின் விளக்குகள் அமைக்கவும், 1997–98ஆம் ஆண்டில் 1,188 தெரு மின் விளக்குகள் அமைக்கவும், ஆணை பிறப்பித்துள்ளது. மொத்தம் இதுவரை 1,579 தெரு மின் விளக்குகள் அமைக்கப்பட்டு விட்டன. மேலும் நடப்பு நிதி ஆண்டில் (1998–99) 2,578 மின் விளக்குகள் அமைக்க அரசு பரிசீலித்து வருகிறது.

### மீனவர் கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள்

பெரும்பாலான மீனவர் கிராமங்கள் கடற்கரைப் பகுதியில் மணற்பாங்கான இடங்களில் அமைந்துள்ளன. சாலை வசதிகள் பெரும்பாலும் மீனவ கிராமங்களிலிருந்து தொலைவிலேயே உள்ளன. இதன் காரணமாக பிடிக்கப்படும் மீன்களை அங்காடி களுக்கு கொண்டுச் செல்ல மீனவர்கள் பெரும் அவதிக்குள்ளாகிறார்கள். இந்த நிலைமையை போக்கிட இந்த அரசு மீன்களை எடுத்துச் செல்ல இணைப்புச் சாலைகளை அமைத்து வருகிறது.

அந்த அடிப்படையில் 1996–97ஆம் ஆண்டு 34 இணைப்புச் சாலைகள் ரூபாய் ஒரு கோடியில் அமைக்க இந்த அரசு அனுமதியளித்துள்ளது. இந்தப் பணியில் 32 பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. 2 பணிகள் நடவடிக்கையில் உள்ளன. இது தவிர கன்னியாகுமரி மாவட்டத்தில் பழையாற்றின் குறுக்கே மேலமணக்குடி, கீழமணக்குடி இணைப்புப் பாலம் ரூ.6 கோடியில் அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

### மீன் இறங்கு தளம்

இத்திட்டத்தின் கீழ் ஆற்காட்டுத் துறை, வீரபாண்டியன் பட்டிணம், பழவேற்காடு, தேங்காய்ப் பட்டிணம், முடசல் ஒடை, பாம்பன், ஜெகதா பட்டிணம், புன்னக்காயல், அனுமந்தை, சேதுபாவாசத்திரம் ஆகிய இடங்களில் புதிதாக 10 மீன் இறங்கு தளங்கள், தளம் ஒன்றிற்கு ரூ.1.5 கோடி வீதம் ரூ.15 கோடிக்கும் திட்டம் தீட்டி மத்திய

அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப் பட்டுள்ளது. இத்திட்டத்தில் மாநில அரசின் 50 சத பங்காக ரூ.7.5 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

### மீன் இறங்கும் தளங்களில் சோடியம் விளக்குகள்

கடலோர மீனவர்கள் தரம் பிரித்த மீன்களை 362 மீன் இறங்குத் தளங்களில் அவர்கள் உபயோகிக்கும் மீன்பிடி வலைகளின் தன்மைக்கு ஏற்ப அதிகாலையிலோ அல்லது நள்ளிரவிலோ கரைக்கு கொண்டு வருகின்றனர். போதிய விளக்கு வசதி இல்லாமையால், இங்கு வந்து சேரவும் மீன்களை வண்டியில் ஏற்றவும் சிரமப்படுகின்றனர். இக்குறையை நீக்க இந்த ஆண்டு தமிழகத்தின் 12 கடலோர மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 5 மீன் இறங்கு தளங்களில் தளம் ஒன்றுக்கு இரண்டு சோடியம் விளக்குகள் வீதம், மொத்தம் ரூ.13.20 இலட்சம் செலவில் விளக்குகள் அமைக்க அனுமதி அளித்துள்ளது. அதற்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டு இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

தமிழ்நாட்டு கடல் மீனவர்களால் 12 மாதங்களுக்கும் மீன்பிடிக்க இயலாது. மீனவரிடமிருந்து மாதம் ரூ.45 வீதம் எட்டு மாதங்கள் வசூலித்து இத்தொகையுடன் மத்திய மாநில அரசுகளால் ரூ.720 அளிக்கப்படும். மொத்தத் தொகையான ரூ.1,080 மாதம் ரூ.270 வீதம் மீனவர்களுக்கு மீன்பிடிக்க இயலாத காலங்களில் கொடுக்கப்படும். இத்திட்டத்திற்காக ரூ.12.17 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் சுமார் 1.69 இலட்சம் மீனவர்கள் பயனடைவார்கள்.

### மீனவர் விபத்துக் காப்புறுதித் திட்டம்

இந்த ஆட்சி துவங்கிய நாளிலிருந்து இத்திட்டத்தின் கீழ் மத்திய மற்றும் மாநில அரசு நிதியுதவியின் கீழ் இத்தொகையை ரூ.25,000லிருந்து ரூ.35,000க்கு உயர்த்தியும், மேலும் பகுதி நிரந்தர ஊனத்திற்கு ரூ.12,500லிருந்து ரூ.17,500மாக உயர்த்தியும் புதுடில்லி தேசிய மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இதில் மீனவர் ஒருவருக்கு ரூ.12 வீதம் சம பங்காக மத்திய, மாநில அரசுகள் 2,91,697 மீனவர்களுக்கு ஆண்டு பிரிமியம் செலுத்தியுள்ளன. இக்காலச் சூழ்நிலையில் இந்தத் தொகை மிகவும் குறைவாக உள்ளதை கருத்தில் கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 25.3.97 முதல் மாநில அரசு திட்டத்தின் கீழ் ஒரு மீனவர் இறந்தால் கூடுதலாக ரூ.15,000மும், பகுதி ஊனமடைந்தால் கூடுதலாக ரூ.7,500மும் வழங்க ஆணை பிறப்பித்துள்ளார். இதற்கான கூடுதல் காப்புறுதி பிரிமியம் மீனவர் ஒருவருக்கு ரூ.4.05 வீதம் மாநில அரசே 29.6.97 முதல் செலுத்தி விடுகிறது. 25.3.99 முதல் 24.3.2000 வரை நியூ இந்திய அஷ்யூரன்ஸ் நிறுவனம், திருநெல்வேலி ஒரு மீனவருக்கு ரூ.3.90 செலுத்துவதாக விலைப்புள்ளிகள் அளித்துள்ளதால், மேற்கண்ட ஆண்டிற்கு அரசாணை எதிர்பார்க்கப் படுகிறது. அதனால் தற்பொழுது ஒரு மீனவர் இறந்தால் அவரின் வாரிசுக்கு ரூ.50,000மும், பகுதி ஊனமடைந்தால் ரூ.25,000மும் வழங்கப்படுகிறது.

### மீனவர்/மீனவ மகளிர் குழு விபத்துக் காப்புறுதித் திட்டம்

இத்திட்டம் கடந்த ஆட்சியின் போது மீனவர்களுக்கு மட்டுமே செயல்படுத்தப் பட்டு வந்தது. 1995ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தின் மூலம் முழு நேர மீன்பிடிப்புகளில் ஈடுபடும் கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்களுக்கு ஆண்டு சந்தாவாக ரூ.60 செலுத்தினால் அவர்கள் இறந்தாலோ அல்லது முழு நிரந்தர ஊனமடைந்தாலோ அவர்களின் வாரிசுகளுக்கும் மற்றும் ஊனமடைந்தவர் களுக்கு வழங்கப்பட்டு வந்தது. ஆனால் இந்த அரசு இத்திட்டத்தினை பரிசீலித்து 1998–99ஆம் ஆண்டு முதல் காப்பீட்டுத் தொகையாக ரூ.24 செலுத்தும் மீனவர்களுக்கும் ரூ.20 செலுத்தும் மீனவ மகளிருக்கும் விபத்தில் இறக்க நேரிட்டாலோ அல்லது நிரந்தர ஊனமடைந்தாலோ ரூ.1 இலட்சமும், பகுதி நிரந்தர ஊன மடைந்தாலோ ரூ.50,000மும் நிவாரணமாக வழங்கப்படும் என்று **கலைஞர்** அவர்கள் ஆணை யிட்டுள்ளார்.

### மீனவர் குடும்பங்களுக்கு உதவித் தொகை

முந்தைய ஆட்சிக் காலத்தில் இலங்கை கடற்படையினால் துப்பாக்கிச் சூட்டினால் காயமடைந்த/மரணமடைந்த மீனவர் குடும்பங்களுக்கு எவ்வித உதவியும் அளிக்காமல் ரூ.10,000 முதல் ரூ.50,000 வரை முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிவாரணமாக வழங்கப்பட்டு வந்தது. அதனை இந்த அரசு கவனமாகப் பரிசீலித்து 12.8.97 முதல் துப்பாக்கிச் சூட்டினால் காயமடையும்/மரணமடையும் மீனவர் குடும்பங்களுக்கு எவ்வித பாகுபாடு மில்லாமல் நிவாரணத் தொகை ரூ.1 இலட்சம் உயர்த்தி வழங்க ஆணை பிறப்பித்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை இந்தத் திட்டத்தின் கீழ் ஒரு மீனவ குடும்பம் பயனடைந் துள்ளது. மேலும் ஐந்து குடும்பங் களுக்கு நிவாரணத் தொகை வழங்கிடப் பரிசீலனையில் உள்ளது.

மேலும் கடல் மீன்பிடிப்பின் போது இலங்கை இராணுவத்தினால் பிடித்துச் செல்லப்படும் தமிழ்நாட்டு மீனவர்களின் ஒரு குடும்பத்திற்கு ஒரு நாளைக்கு ரூ.50 வீதம் அக்குடும்பத் தலைவர் திரும்பி வரும்வரையில் நிவாரணமாக வழங்க ஆணை பிறப்பித்துள்ளார். இந்தத் திட்டத்தின் கீழ் 29 மீனவக் குடும்பங்கள் பலன் அடைந்துள்ளனர்.

அக்குடும்பங்களுக்கு இதுவரை ரூ.65,350 நிவாரணமாக வழங்கப் பட்டுள்ளது.

## சுங்கத் தீர்வையை திரும்ப அளித்தல்

20 மீட்டர் நீளத்திற்குக் குறைவாக உள்ள மீன்பிடி விசைப்படகுகளுக்கு வழங்கப்படும் உயர் வேக டீசல் எரியெண்ணெய்க்கு சுங்கத் தீர்வு விதிக்கப்படுகிறது. 1996–97 ஆண்டு வரை இந்த சுங்கத் தீர்வையை திரும்ப பெற்று மாநில அரசின் பங்கு ஒரு லிட்டருக்கு 0.07 பைசா வீதமுடன் மைய அரசின் பங்கு ஒரு லிட்டருக்கு ரூ.0.28 பைசா வீதமும் மொத்தம் லிட்டர் ஒன்றுக்கு ரூ.0.35 பைசா வீதம் மானியம் வழங்க மத்திய அரசின் ஆதரவுடன் ஏற்கெனவே செயல்படுத்தப் பட்டு வருகிறது. 1996–97ஆம் ஆண்டிற்கான டீசல் மானியத் தொகை ரூ.75 இலட்சத்தில் 31.3.98 வரை 1,440 பயனீட்டாளர்களுக்கு ரூ.69,80,265 வழங்கப்பட்டுள்ளது. 1997–98ஆம் ஆண்டிற்கு மாநில அரசின் பங்கு ஒரு லிட்டருக்கு 0.17 பைசா வீதமும், மத்திய அரசின் பங்கு ரூ.0.28 பைசா வீதமும் மொத்தம் ஒரு லிட்டருக்கு ரூ.0.45 பைசா வீதம் டீசல் மானியமாக வழங்கப்பட்டு வருகின்றது. 1997–98ஆம் ஆண்டுக்கான டீசல் மானியத்தொகை ரூ.96.55 இலட்சத்தில் 28.2.99 வரையில் 1,336 பயனீட்டாளர் களுக்கு ரூ.90,46,778 வழங்கப் பட்டுள்ளது.

## பாரம்பரிய மீனவர்களுக்கு மண்ணெண்ணெய்/டீசல் மானியம் வழங்கும் திட்டம்

இத்திட்டத்தின்படி 20,000 உட்பொருத்தும்/வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் உள்ள சிறிய மீன்பிடி கலன்களுக்கு மண்ணெண்ணெய்/டீசல் ஒரு லிட்டருக்கு ரூ.0.50 பைசா வீதம் மாதம் ஒன்றுக்கு ரூ.125க்கு மிகாமல் ஆண்டொன்றுக்கு ரூ.1,500 மானியமாக வழங்க நடப்பு நிதியாண்டில் அரசு ரூ.3. கோடி அனுமதியளித்துள்ளது.

## மீனவ மகளிர்களுக்குக் குளிர்சாதனப் பெட்டிகள்

மீன்கள் கெட்டுப்போகாமல் சுகாதாரமான முறையில் பாதுகாத்திட மீனவ மகளிர்களுக்கு உதவிடும் வகையில் மத்திய அரசு உதவியுடன் 2,436 குளிர் சாதனப் பெட்டிகளை மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கிட ரூ.59.70 இலட்சத்திற்கு ஆணை பிறப்பித்துள்ளது. இதில் மத்திய அரசு 75 விழுக்காடு மானியமாக வழங்குகிறது. மீதம் 25 விழுக்காடு பயனாளிகள் செலுத்த வேண்டும். இந்தியா முழுமைக்கும் ஒப்பளிக்கப்பட்ட 5,000 குளிர்சாதன பெட்டிகளில் தமிழ்நாட்டிற்கு மட்டும் 2,436 குளிர் சாதனப் பெட்டிகள் இந்த அரசின் சீரிய முயற்சியால் பெறப்பட்டது. இதில் 60 லிட்டர் கொள்ளளவு கொண்ட பெட்டிகள் 1750ம், 100 லிட்டர் கொள்ளளவு கொண்ட குளிர்சாதன பெட்டிகள் 686ம் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப் படவுள்ளன.

## மீனவர் பயிற்சி நிலையங்கள்

தமிழ்நாட்டில் 6 மீனவர் பயிற்சி நிலையங்களில் மீனவர்களுக்கான 10 மாத பயிற்சி நடைபெற்று வருகிறது. முந்தைய ஆட்சியில் பயிற்சியாளர் களுக்கு உதவித் தொகை மாதம் ரூ.150ஆக வழங்கப்பட்டு வந்ததை ரூ.50 உயர்த்தி தற்போது ரூ.200ஆக வழங்கப்படுகிறது. பயிற்சியாளர்களுக்கு கடல் பயணப்படியாக நாள் ஒன்றுக்கு ரூ.1.25 வழங்கியதை தற்போது ரூ.2.50 ஆக உயர்த்தி ஆணை பிறப்பிக்கப் பட்டது.

## ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டு திட்டம்

1993–94ஆம் ஆண்டில் 5 கடலோர மாவட்டங்களில் 80 மீனவ கிராமங்களில் செயல்படுத்திட முந்தைய ஆட்சி காலத்தில் ரூ.15.88 கோடிக்கு ஒப்புதல் அளித்தது. இத்திட்டத்தின் பயன் எல்லா கடலோர மீனவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழக முதல்வர் **கலைஞர்** அவர்கள் மீன் உற்பத்தியை பெருக்குவதுடன் மீனவர் வாழ்க்கைத் தரம் உயரவும், ஏதுவாக ரூ.45 கோடியில் 13 கடலோர மாவட்ட 100 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் 1998–99 முதல் ஐந்தாண்டுகளில் செயல்படுத்திட ஆணை வழங்கியுள்ளார். இத் திட்டத்தின் மூலம் 35 கோடி செலவில் 5 ஆண்டுகளில் 10,900 மீனவ பயனாளிகளுக்கு 3600 மீன்பிடி சாதனங்கள் (கட்டுமரம், எப்.ஆர்.பி. கட்டுமரம், பெரிய, சிறிய வள்ளங்கள், வலைகள், இயந்திரங்கள்) வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முதலாம் ஆண்டில் (1998–1999) ரூ.502 இலட்சத்தில் 600 மீன்பிடி சாதனங்கள்13 மாவட்டங் களுக்கு வழங்கப்படவுள்ளன. மீன் ஏற்றிச் செல்லும் வாகனங்கள், குளிர்பதனப்பெட்டி, இயந்திரங்களைப் பழுது பார்க்க ஏதுவாக பணி நிலையங்கள் ஆகிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்த ரூ.35 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் செயல்படுத்துவதுதன் மூலம் ஆண்டொன்றுக்கு சுமார் ரூ.83 கோடி மதிப்புள்ள சுமார் 35 ஆயிரம் டன் மீன்கள் கூடுதலாக பிடிக்கப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

1999–2000ஆம் ஆண்டில் எல்லா கடலோர மாவட்டங்களின் மீனவர்களுக்கு ரூ.8.09 கோடி மதிப்புள்ள 826 மீன்பிடி சாதனங்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறாக **கலைஞர்** ஆட்சி மீனவளத்துறை, மீனவர் மேம்பாட்டிற்கு ஏராளமான பணிகள் செய்து வருகிறது.

★ ★ ★




வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு. மு.க. ஸ்டாலின்

தமிழக அரசு, முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் பொறுப்பேற்று மூன்றாண்டு நிறைவெய்தி, நான்காம் ஆண்டில் பீடுநடை போடத் தொடங்குகிறது. மக்களாட்சி முறைக்குப் புத்துயிர் அளித்து, தலைவர் கலைஞர் அவர்கள் நடத்திய உள்ளாட்சி மன்றத் தேர்தலில் பெண்களுக்கென 33 சதவிகித இட ஒதுக்கீட்டையும் அளித்து, பெண்களையும் உள்ளாட்சிப் பொறுப்பேற்க வைத்து, இட ஒதுக்கீட்டையும் நிறைவு செய்தார்கள்.

### *குறை தீர்ப்பு*

நாங்கள் பொறுப்பேற்ற பின்னர், மக்களின் குறைகளை உடனே தீர்த்து வைக்க வேண்டும் என்ற எண்ணத்தில், சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகையில் செவ்வாய்க்கிழமை தோறும் மக்கள் குறைகேட்கும் திட்டம் தொடங்கப்பட்டுத் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த சுமார் இரண்டரை ஆண்டுகளில் 13,775 மனுக்கள் வரப்பெற்று, 13,266 மனுக்கள் தீர்வு காணப்பட்டு, மனுதாரர்களுக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 509 மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு நடவடிக்கையில் இருக்கின்றன. தொடக்க காலத்தில் வாரந்தோறும் சுமார் 1500 அல்லது 1000 என்ற அளவுக்கு பொதுமக்களிடமிருந்து வரப்பெற்று, இன்றைய நிலையில் வாரந்தோறும் 50 அல்லது 60 மனுக்கள் மட்டுமே வரப்பெறுகின்றன.

### *அடிப்படை வசதிகள்*

பொதுமக்கள் பல்வேறு வசதிகளையும்,



பணிகளையும் மாநகராட்சிகளிடம் தான் எதிர் பார்க்கிறார்கள். எனவேதான், சென்னை மாநகராட்சி - தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் வடிகால் வாரியம், தீயணைப்புத்துறை மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆகிய துறைகளோடு இணைந்து பணிகளை திறம்பட நிறைவேற்றி வருகிறது.

ஒவ்வொரு வார்டு உறுப்பினருக்கும் வார்டு மேம்பாட்டு நிதியாக ஆண்டுதோறும் ரூ.3 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்தத் திட்டத்தின் மூலம் ரூ.9.30 கோடி செலவில் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருவதுடன், நடப்பாண்டில் வார்டு உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.3.50 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் சென்னை மாநகரில் நியமன சட்டமன்ற உறுப்பினர் உட்பட, 15 சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.9 கோடி நிதி ஒதுக்கீட்டிலும், அதேபோன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மொத்தம் ரூ.6 கோடி நிதி ஒதுக்கீட்டிலும் பள்ளிகளுக்கு கூடுதல் வகுப் பறைகள், திருமணக்கூடங்கள், விளையாட்டுத் திடல், மருந்தகம், கணிப்பொறி மையம், கழிப்பிடங்கள் கட்டுதல் போன்ற பல்வேறு பணிகள் நிறைவேற்றப் பட்டு வருகின்றன.

தமிழக முதல்வர் **கலைஞர்** அவர்கள் அறிவித்த சிறப்புத் திட்டமான **அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ்**, சென்னை மாநகராட்சியில் 1997-98 மற்றும் 1998-99ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு மண்டலத்தில் ஒரு வார்டு விதம் 20 வார்டுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவைகளில் ரூ.24.59 கோடி செலவில் பல்வேறு நலத்திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நடப்பு ஆண்டில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மண்டலத்திற்கு இரண்டு வார்டுகள் வீதம் 20 வார்டுகளில் செயல்படுத்தப்பட இருக்கிறது.

தமிழக அரசு அறிவித்துள்ள **'நமக்கு நாமே'** திட்டம் தமிழக அரசின் நிதி உதவியுடன் சென்னை மாநகராட்சியிலும் செயல்படுத்தப்பட உள்ளது.

### *கல்வி*

மாநகராட்சிப் பள்ளிகளில் கல்வியின் தரத்தை தனியார் பள்ளிகளுக்கு இணையாக உயர்த்திக் காட்டுவோம் என்ற உறுதியை நிறைவேற்றுகின்ற வகையில் மாநகராட்சியிலுள்ள 17 மேல்நிலைப் பள்ளிகளிலும் கணிப்பொறி படிக்க வசதி செய்யப்பட்டுள்ளது. அனைத்து வசதிகளுடன் கூடிய மாதிரிப் பள்ளிகளை மண்டலத்திற்கு ஒன்றுவீதம் பத்து மண்டலங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 30 மழலையர் பள்ளிகள் தொடங்கப்பட்டு 4,000 குழந்தைகள் பயின்று வருகிறார்கள்.

1995ஆம் ஆண்டு 50 சதவிகிதமாக இருந்த +2 தேர்ச்சி விகிதம் 1996ஆம் ஆண்டு 56 சதவிகித மாகவும், 1997ஆம் ஆண்டு 69 சதவிகிதமாகவும், 1998ஆம் ஆண்டு 78 சதவிகிதமாகவும் +2 தேர்வில் சில பாடங்களில் மாநில அளவில் முதல் மதிப்பெண் பெற்றும் சாதனை படைத்துள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது ஆகும்.

22 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 4 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும், குடிசைப் பகுதிகளில் 8 தொடக்கப் பள்ளிகள் புதிதாகவும் தொடங்கப் பட்டுள்ளன.

1996-97ஆம் ஆண்டு 1,32,000ஆக இருந்த மாணவர்களின் எண்ணிக்கை 1,50,000ஆக உயர்ந்திருக்கிறது.

### *வடிகால் அமைப்பு*

கடந்த பல ஆண்டுகாலமாக, சென்னை மாநகரம் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுத் தாழ்வான பகுதிகள் தண்ணீரில் மூழ்கி வந்தன. ஜி.என். சாலை, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, மைலாப்பூர் பகுதி, கிரியப்பா சாலை, வேளச்சேரி போன்ற பல பகுதிகள் பெரும் அளவு பாதிக்கப்பட்டு வந்தன.

கடந்த சுமார் இரண்டரை ஆண்டு காலத்தில் ரூ.46.16 கோடி செலவில் மழைநீர் வடிகால்வாய் தூர்வாருதல் மற்றும் புதிய மழைநீர் வடிகால்வாய் கட்டப்பட்டதாலும் கடந்த ஆண்டு (1998) சென்னை மாநகரில் மழைநீர் தேக்கம் பெரும் அளவில் குறைந்து விட்டது.

தெருவிளக்குகளைப் பொருத்த அளவில் வேறு எந்த மாநகராட்சியிலும் இல்லாத அளவுக்கு சென்னை மாநகராட்சி சாதனை படைத்து இருக்கிறது. 1996 அக்டோபர் மாதம் தெரு விளக்குகளின் எண்ணிக்கை 86,740 ஆகும். இன்றைக்குத் தெரு விளக்குகளின் எண்ணிக்கை 1,00,052ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. அனைத்து தெரு விளக்குகளும் சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றன. சென்னை மாநகரில் நெரிசல் மிக்க சாலைச் சந்திப்புகளில் 15 இடங்களில் உயர்கோபுர மின் விளக்குகள் ரூ.1 கோடி செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

### *பூங்காக்கள்*

சென்னை மாநகராட்சியிலுள்ள 88 அரசு அங்கீகாரம் பெற்ற பூங்காக்கள், 73 அரசு அங்கீகாரம் பெறப்படவுள்ள பூங்காக்கள் மற்றும் 70 சாலைத்தீவு பூங்காக்களும், பூங்காத்துறை மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் 69 பூங்காக்கள் ரூ.3.7 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. கட்டி பராமரித்து பின் ஒப்படைக்கும் திட்டத்தின் கீழ் (Build, Operate and Transfer) அண்ணாநகர் கோபுர பூங்கா,

மை லேடீஸ் பூங்கா ஆகியவனவற்றை பொழுதுபோக்கு அம்சங்கள் கொண்ட பூங்காக்களாக மாற்றியமைக்கவும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. சென்னை மெரீனா கடற்கரையில் சங்கீத நீருற்று அமைக்கும் திட்டமும் விரைவில் நிறைவேற்றப்பட இருக்கிறது.

***மேம்பாலங்கள்***

சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக 10 மேம்பாலங்கள் ரூ.115 கோடி செலவில் கட்டுவதற்கான திட்டப் பணிகள் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் கடந்த ஜனவரி மாதம் தொடங்கி வைக்கப்பட்டு அதற்கான கட்டுமானப் பணிகள் தற்போது தீவிரமாக நடைபெற்று வருகின்றன. மேலும், 10 மேம்பாலங்கள் ரூ.120.50 கோடி செலவில் மிக விரைவில் பணிகள் தொடங்கப்பட இருக்கின்றன.

***சுரங்கப்பாதை***

லஸ் சந்திப்பு சுரங்க நடைபாதை ரூ.3.90 கோடி மதிப்பீட்டிலும், ரட்டன் பஜார் சந்திப்பு சுரங்க நடைபாதை ரூ.1.31 கோடி மதிப்பீட்டிலும், வெங்கட்நாராயணா சுரங்க நடைபாதை ரூ.1.33 கோடி மதிப்பீட்டிலும், ஆகமொத்தம் ரூ.6.54 கோடி செலவில் இந்த மூன்று சுரங்க நடைபாதைகளும் மிக விரைவில் பணி தொடங்கப்பட இருக்கிறது.

சைதாப்பேட்டை பஜார் சாலையில் வாகன சுரங்கப்பாதை ரூ.6 கோடி மதிப்பீட்டிலும், காமராஜர் சாலையில் எழிலகம் அருகே ஒரு சுரங்கப்பாதை ரூ.1 கோடி மதிப்பீட்டிலும், நேப்பியர் பாலம் அகலப்படுத்தும் பணி ரூ.5.11 கோடி மதிப்பீட்டிலும் பணிகள் நடைபெற்று வருகிறது. மணலி சாலையில் ரூ.1.60 கோடி மதிப்பீட்டில் வாகனப் பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் எம்.கே.பி. நகர் வாகனப் பாலம் ரூ.3 கோடி மதிப்பீட்டிலும், சூளைமேடு உயர்மட்டப் பாலம் ரூ.4 கோடி மதிப்பீட்டிலும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

கடந்த 3 ஆண்டுகளில் ரூ.106.83 கோடி செலவில் உட்புறச் சாலைகள் குடிசைப் பகுதி சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அதேபோன்று ரூ.33 கோடி செலவில் பேருந்துச் சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

சமுதாயக் கூடங்கள், பள்ளி வகுப்பறைகள், பொதுக் கழிப்பிடங்கள், மருந்தகங்கள் போன்ற பல்வேறு கட்டடங்கள் ரூ.33 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன.

***வரி வருவாய்***

வருவாய்த் துறையில் கடந்த இரண்டாண்டுகளில் மட்டும் சுமார் ரூ.38.50 இலட்சம் வரி வசூல் செய்து சாதனை செய்யப்பட்டுள்ளது. மேலும் தாமாகவே முன்வந்து சொத்து விவரங்கள் தெரிவிக்கும் திட்டத்தின் மூலம் நடப்பு ஆண்டில் 2.85 இலட்சம் சொத்து உரிமையாளர்கள் தங்கள் சொத்து விவரங்களைத் தெரிவித்துள்ளனர். இதன் மூலமும் கணிசமாக வரி வசூல் செய்யப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் ரூ.104 கோடி சொத்து வரி மூலம் வருவாய் கிடைத்துள்ளது. சொத்து வரி உயர்வு கடந்த கால ஆட்சியைப் போன்று 5 மடங்கு, 10 மடங்கு என்ற அளவில் இல்லாமல், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவுரைக்கிணங்க எல்லோரும் பாராட்டும் வகையில் சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியின் அனைத்து வரி விவரங்களும் கணிப்பொறி மயமாக்கப்பட்டுள்ளது. இதனால் சொத்து வரி விவரங்கள் உடனுக்குடன் பதிவு செய்யப்பட்டு தற்காலிக அறிவிப்புகள் வழங்க துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

***கணிப்பொறி***

வளர்ந்து வருகின்ற அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப, சென்னை மாநகராட்சியும் தன்னை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற தொலைநோக்குத் திட்டத்தோடுதான் ஒருங்கிணைந்த கணிப்பொறி மயமாக்கும் திட்டம் சென்னை மாநகராட்சியில் ரூ.2.2 கோடி செலவில் தொடங்கப்பட்டு இருக்கிறது.



பிறப்பு - இறப்பு சான்றிதழ் கணிப்பொறி மூலம் விண்ணப்பித்த அதே நாளில், அதாவது மறுகணமே வழங்குகின்ற திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

***மருத்துவம்***

ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் சென்னை மாநகராட்சியில் 71 மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன. நாளொன்றுக்கு சுமார் 10,000 நபர்கள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இந்த மருத்துவமனைகளுக்கு இந்த நிதியாண்டில் ரூ.1.50 கோடிக்கு மருந்துகள் வாங்கப்பட்டுள்ளன.

ஈ.வெ.ரா. சாலையில் பகுப்பாய்வுக் கூடத்தில் அனைத்து நோய்களையும் கண்டறியக்கூடிய ஸ்கேன் போன்ற அனைத்து வசதிகளும் உள்ளன. தனியார் பகுப்பாய்வுக் கூடத்தைவிடக் குறைந்த கட்டணத்தில் நோய்கள் கண்டறியும் பணியை சிறப்பாக செய்து வருகிறது.

பள்ளி மாணவ-மாணவியர் பயன்பெறும் வகையில், இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப் படுகின்றன. மகளிர் பயன்பெறும் வகையில் 93 நகர நலவாழ்வு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அரசு மருத்துவமனைகளுக்கு இணையான அனைத்து வசதிகளும் கொண்டதாக நகர நலவாழ்வு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னையில் ஆண்டொன்றுக்கு பிறக்கும் சுமார் 90,000 குழந்தைகளில் 20,000 குழந்தைகள் மாநகராட்சி நகர நலவாழ்வு நிலையங்களில்தான் பிறக்கின்றன.

ரூ.20 இலட்சம் செலவில் நடமாடும் மருத்துவ வாகனங்கள் அமைக்கப்பட்டு, இதன் மூலம் 1,220 குடிசைப் பகுதிகளிலுள்ள சுமார் 18 இலட்சம் மக்கள் பயன் பெற்று வருகின்றனர். இளம்பிள்ளை வாத நோயை அடியோடு ஒழிப்பதற்காக தீவிர போலியோ சொட்டு மருந்து முகாம்கள் நடத்தப்பட்டு ஆண்டுதோறும் சுமார் 4.5 இலட்சம் குழந்தைகள் இதன் மூலம் பயனடைந்து வருகிறார்கள்.

### *தீப்பிடிக்காத வீடுகள்*

மாநகராட்சி-குடிசை மாற்று வாரிய இணைக்குழு முயற்சியால், குடிசைப் பகுதிகளில் ஓலைக் கூரைகளை மாற்றி தீப்பிடிக்காத கல்நார் ஓடுகள் வேய்ந்த வீடுகளாக மாற்றியமைக்கும் திட்டம் தமிழக அரசால் செயல்படுத்தப்படுகிறது.

### *குப்பையில்லா நகரம்*

கடந்த காலத்தில் சென்னை மாநகராட்சியில் நாளொன்றுக்கு அகற்றப்பட்ட குப்பைகளின் அளவு 1,900 டன். இந்த ஆண்டு சென்னையை குப்பையில்லா நகரமாக அறிவிக்கப்பட்டு தீவிர பணிகள் மேற்கொண்டதன் விளைவாக இன்றைக்கு நாளொன்றுக்கு 3,100 டன் குப்பைகள் அகற்றப்பட்டு வருகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் குப்பைகளை அகற்றுவதற்காக 60 வாகனங்கள் ரூ.3.8 கோடி செலவில் வாங்கப்பட்டுள்ளன. மேலும் குப்பைகளை அகற்ற சுமார் 150 வாகனங்கள் ரூ.9 கோடி செலவில் வாங்குவதற்கு உத்தரவிடப்பட்டு விரைவில் வாகனங்கள் கிடைக்கப்பெறும் நிலையில் உள்ளது. மேலும் 130 வாகனங்கள் ரூ.8 கோடி செலவில் வாங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### *தியாகிகளின் வாரிசுகளுக்கு வேலை வாய்ப்பு*

மொழிப்போர் மற்றும் சுதந்திரப் போராட்ட தியாகிகளின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் பணி.நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ், தமிழக அரசு ஒதுக்கீடு செய்திருந்த ரூ.3 கோடி தொகையை, நபருக்கு ரூ.10,000 வீதம் 3,000 பெண்களுக்கு வழங்கப் பட்டுள்ளது. இந்தியாவிலேயே முதன் முதலாக தானியங்கி வாகனம் நிறுத்துமிடங்கள் (Automatic Car Parking) திரு.வி.க.சாலை - அண்ணாசாலை சந்திப்பு மற்றும் ஜி.என். சாலை - தியாகராய நகர் சந்திப்பு ஆகிய இடங்களில் அமைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### *குப்பையிலிருந்து மின்சாரம்*

குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கின்றத் திட்டம் இந்த ஆண்டு (1999) இறுதியில் தொடங்கப்பட உள்ளது. ஆஸ்திரேலியா நாட்டு நிறுவனம் இந்த மின் உற்பத்திப் பணியை Build, Own Operate திட்டத்தின் மூலம் ரூ.130 கோடி முதலீட்டில் நாள் ஒன்றுக்கு 14.85 மெகாவாட் மின்சக்தி தயாரிக்க திட்டமிட்டு உள்ளது.

சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூ.2 கோடி செலவில் தொழிற்பயிற்சி நிலையம் (Industrial Training Institute) வரும் ஆகஸ்டு மாதம் லாயிட்ஸ் காலனி அருகில் தொடங்கப்பட இருக்கிறது.

துப்புரவுத் தொழிலாளர்கள் நலனைக் கருத்தில்கொண்டு வாரத்தில்' ஒருநாள் சுழற்சி முறையில் வார விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. துப்புரவுப் பணியாளர்களின் தன்மை மற்றும் அவசியத்தை கருதி இதுநாள் வரை மே தினம் அன்றும் பணியாற்றி வந்தார்கள். இனி அத்தினத்தில் பணியாற்றுபவர்களுக்கு அவர்கள் விரும்பும் ஏதாவது ஒரு நாளில் ஈடான விடுப்பு அளிக்கப்பட இருக்கிறது.

நகர்புறம் மற்றும் வீட்டுவசதி அபிவிருத்தி நிறுவனம் (HUDCO) நகர்ப்புறங்களை தூய்மையாக வைத்திருக்கும் உள்ளாட்சி அமைப்புகளை ஊக்குவிக்கும் பொருட்டு இந்தியாவில் சிறந்த முறையில் செயலாற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் ஒன்றை தேர்ந்தெடுத்து, தூய்மையான நகருக்கான விருது (Clean City Award) ஒன்றினை இவ்வாண்டு முதல் வழங்கிட முடிவுசெய்துள்ளது. அதன் முதல் விருதினை பெறுவதற்கு நம் சென்னை மாநகராட்சி தேர்ந்தெடுக்கப்பட்டு 24-4-1999 அன்று டெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இவ்விருது வழங்கப் பட்டுள்ளது.

எல்லா விதத்திலும் இதுபோன்ற விருதுகளைச் சென்னை மாநகராட்சி பெற்றிடும் வகையில், மாநகராட்சியின் அனைத்து பணிகளுக்கும், அதேபோன்று தமிழக அரசு பணிகளுக்கும் என்றும் போல் ஆதரவு அளிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

❖ ❖ ❖ ❖

# காவல் துறை

**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்**

காவல் துறை நண்பர்களுடைய சங்கடங்களை உணர்ந்து 1969ஆம் ஆண்டு முதலமைச்சர் பொறுப்பை ஏற்றவுடன், ஆர்.ஏ. கோபாலசாமி, ஐ.சி.எஸ். அவர்களுடைய தலைமையில் இந்தியாவிலேயே முதல் தடவையாக, காவல் துறையினருடைய நிலைமைகளை ஆராய்ந்து சொல்ல, ஒரு கமிஷன் அமைக்கப்பட்டது. அந்த கமிஷன் 134 பரிந்துரைகளை வழங்கியது. அவைகளை ஏற்றுக் கொண்டு, உடனடியாக அவற்றை நடைமுறைப்படுத்தினோம். கான்ஸ்டபிள் என்று சொல்லப்படுகின்ற (Second Grade) இரண்டாம் நிலை காவலர்களுடைய அடிப்படை மாத ஊதியம் அன்றைக்கு 70 ரூபாய் முதல் 95 ரூபாய் வரை இருந்தது; அதை, அந்தக் கமிஷனுடைய சிபாரிசின்படி 150 ரூபாய் முதல் 225 ரூபாய் என்று, முதன்முதலாக உயர்த்தியது கழக ஆட்சிதான். எஸ்.எஸ்.எல்.சி. தேர்விலே வெற்றி பெற்றவர்கள் First Grade Constable ஆகலாம் என்ற புதிய நிலையை உருவாக்கி, அவர்களுடைய அடிப்படை மாத ஊதியம் 200 ரூபாய் முதல் 300 ரூபாய் என்று அவர்களுக்கும் ஊதியம் ஒதுக்கப்பட்டது. ஆனால், இப்போது அந்த இரண்டாம் நிலைக் காவலர்களுடைய மாத அடிப்படை ஊதியம் ரூ.3,050 ரூபாய். முதல்நிலை காவலர்களுடைய மாத அடிப்படை ஊதியம் ரூ.3,200 என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

### 1989இல் அமைக்கப்பட்ட இரண்டாவது போலீஸ் கமிஷன் பரிந்துரைகள் நிறைவேற்றம்

இதற்கிடையிலே 1989ஆம் ஆண்டு மீண்டும் கழக அரசு அமைந்தபோது, முன்னாள் தலைமைச் செயலாளர் சபாநாயகம், ஐ.ஏ.எஸ். அவர்களுடைய தலைமையில் இரண்டாவது போலீஸ் கமிஷன் அமைக்கப்பட்டு அவர்கள் தந்த 112 பரிந்துரைகளில் 102 பரிந்துரைகள் மீது முடிவெடுத்து – ஆட்சி அப்போது கலைக்கப்படுவதற்கு முன்பு, 79 பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.



தென் மாநிலங்களில் பணிபுரிந்து வரும் இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் மற்றும் இதர படிகளுடைய விவரங்கள் ஒரு மாதத்திற்கு என்று எடுத்துக் கொண்டால், தமிழ்நாட்டில் அடிப்படைச் சம்பளம் 3,050 ரூபாய். ஆந்திராவில் 1,595 ரூபாய், கேரளாவிலே தமிழ்நாட்டைப் போலவே 3,050 ரூபாய், கர்நாடகத்தில் 3,000 ரூபாய், பாண்டிச்சேரியில் 2,750 ரூபாய். இந்த அடிப்படைச் சம்பளத்தில் சிறப்பு ஊதியம், அகவிலைப்படி, வீட்டுவாடகைப் படி, நகர ஈட்டுப் படி, சீருடைப் படி ஆகிய இத்தனையும் சேர்த்தால், தமிழ்நாட்டில் இரண்டாம் நிலைக்

காவலர்களுக்குத் தரப்படுகின்ற மாதாந்திரத் தொகை 4,630 ரூபாய். ஆந்திராவில் 3,172 ரூபாய். கேரளத்தில் 3,943 ரூபாய். கர்நாடகத்தில் 4,262 ரூபாய். பாண்டிச்சேரியில் 4,080 ரூபாய்.

**தமிழகக் காவல் துறை பற்றிய பெருமைக்குரிய புள்ளி விவரங்கள்**

புதுடெல்லியிலே தேசிய குற்ற ஆவணக்கூடம் National Crime Records Bureau என்ற ஒன்று இருக்கிறது. அது வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தின்படி, ஒவ்வொரு 100 சதுர கிலோ மீட்டருக்கும், அகில இந்திய சராசரியில் காவலர்களுடைய எண்ணிக்கை 38 பேர். ஆனால் தமிழ்நாட்டில் 57 பேர். ஒரு காவலருக்கு ஆண்டு ஒன்றுக்கு ஆகும் செலவு அகில இந்திய சராசரியில் 61,833 ரூபாய். தமிழ்நாட்டில் 68,059 ரூபாய்.

குற்றங்களைப் பொறுத்தவரையில், குற்றப்பத்திரிகை விகிதாச்சாரம் அகில இந்திய சராசரி 76.9 சதவிகிதம். தமிழ்நாடு 90.6 சதவிகிதம். நீதிமன்றங்களிலே வழங்கப்படுகின்ற தண்டனையின் விகிதாச்சாரம் அகில இந்திய சராசரி 37.8 சதவிகிதம், தமிழ்நாடு 63.6 சதவிகிதமாக இருக்கிறது.

**கடந்த 3 ஆண்டுகளில் காவலர் நலனுக்காக ரூ.270 கோடி செலவு**

காவலர்களுடைய நலனுக்கான செலவினம் 1991 முதல் 1996 வரை, தமிழகத்திலே கடந்த 5 ஆண்டு காலத்தில் தொடரும் செலவு 5.58 கோடி ரூபாய்; தொடராச் செலவு 59.96 கோடி ரூபாயாக கடந்த ஆட்சியில் 5 ஆண்டுகளில் மொத்தம் 65.54 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது.

1996 முதல் இந்த 3 ஆண்டுகளில் தொடரும் செலவு 47.40 கோடி ரூபாய்; தொடராச் செலவு 223.55 கோடி ரூபாய். கடந்த 5 ஆண்டுகளில் காவலர் நலனுக்காக செலவிடப்பட்டது மொத்தம் 65 கோடி ரூபாய். இந்த 3 ஆண்டுகளில் செலவிடப்பட்டது மொத்தம் 270 கோடி ரூபாய் ஆகும்.

காவல் துறையை நவீனப்படுத்துவதற்காக, குறிப்பாக தகவல் தொடர்பு மேம்பாடு, வாகனங்கள் வாங்குதல், புலனாய்வுக்குத் தேவையான கருவிகள் வாங்குதல், போக்குவரத்து மேம்பாடு, முக்கியப் பிரமுகர்கள் பாதுகாப்பிற்கும், சட்ட ஒழுங்கை பாதுகாப்பதற்கும் தேவையான உபகரணங்கள் வாங்குதல், காவல் துறையை கணினி மயமாக்குதல் போன்றவைகளில் பயிற்சி அளித்தல் ஆகிய பணிகள் காவல் துறையை நவீனமயமாக்குகின்ற திட்டத்தின் கீழ் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த 5 ஆண்டு கால ஆட்சியில் 1991 முதல் 1996 வரையில் 41,56,27,000 ரூபாய் இந்தத் திட்டத்திற்காகச் செலவிடப்பட்டது. இந்த 3 ஆண்டு காலத்தில் 40,93,54,000 ரூபாய் இந்தத் திட்டத்திற்காகச் செலவிடப்பட்டிருக்கிறது.

**அகில இந்திய அளவில் குற்றங்கள் சென்னையில் குறைவாக உள்ளது**

குற்றங்களைப் பொறுத்த வரையில் சென்னை மாநகரத்திலே மற்ற மாநகரங்களை ஒப்பிடும் போது அகில இந்திய அளவிலே மிகவும் குறைவான அளவிலேதான் இருக்கிறது. 1998ஆம் ஆண்டு டெல்லியிலே 649 பேரும், மும்பையில் 351 பேரும், கல்கத்தாவில் 80 பேரும், சென்னையில் 36 பேரும் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த 36 பேர் கொலை செய்யப்பட்டதை நான் சரியென்றோ, பரவாயில்லை என்றோ ஒத்துக்கொள்ளவில்லை. இருந்தாலும் இந்தியாவிலே உள்ள பெரிய தலைநகரங்களோடு ஒப்பிடும்போது 1998ஆம் ஆண்டிலே கற்பழிப்புகள் என்று எடுத்துக்கொண்டால் டெல்லியில் 438; மும்பையில் 115; கல்கத்தாவில் 25; சென்னையிலே 5 தான்.

கடத்தல்கள் டெல்லியிலே 1,333, மும்பையில் 179, கல்கத்தாவில் 117, சென்னையிலே 15;

கொள்ளைகள் டெல்லியிலே 26,911, மும்பையில் 12,400, கல்கத்தாவிலே 4,041, சென்னையில் 1,196.

புதுடெல்லியில் உள்ள தேசிய குற்ற ஆவணக்கூடம் National Crime Records Bureau அண்மையில் மாநில வாரியாக; ஒரு பட்டியலை புள்ளி விவரங்களோடு வெளியிட்டிருக்கிறது. 1996 வரை அது கணக்கெடுத்திருக்கிறது. அந்த ஆண்டு முழுவதுமாக கணக்கெடுத்து வெளியிட்டிருக்கிறது. உத்தரப் பிரதேசத்தில் 8,514 கொலைகள்; பீகாரில் 5,277 கொலைகள்; மராட்டியத்தில் 2,782 கொலைகள்; ஆந்திராவில் 2,620 கொலைகள்; மேற்கு வங்கத்தில் 1,929 கொலைகள்; தமிழ்நாட்டில் 1,889 கொலைகள்.

மத்தியப் பிரதேசத்தில் கற்பழிப்புகள் 3,265, உத்தரப்பிரதேசத்தில் 1,854, ஆந்திராவில் 812, கேரளாவில் 389, தமிழ்நாட்டில் 327.

அதேபோன்று கூட்டுக்கொள்ளை (Dacoity) பீகாரில் 2,678, உத்தரபிரதேசத்தில் 1,259, மேற்கு வங்கத்தில் 728, ஆந்திராவில் 451, கர்நாடகத்தில் 256, தமிழ்நாட்டில் 172.

கொள்ளை (Robbery) உத்தரப்பிரதேசத்தில் 5,395, பீகாரில் 2,955, மராட்டியத்தில் 2,865, மேற்கு வங்கத்தில் 869, ஆந்திராவில் 775, கர்நாடகத்தில் 994, தமிழ்நாடு 600.

வன்குற்றங்களைப் (Violent Crimes) பொறுத்த வரையில் உத்தரப்பிரதேசத்தில் 17,022, பீகாரில் 12,363, மேற்கு வங்கத்தில் 4,381, ஆந்திராவில் 4,658, கர்நாடகத்தில் 3,085, தமிழ்நாட்டில் 2,988 என்கின்ற அளவில்தான் தமிழ்நாட்டிலே இந்த குற்றம். கொள்ளை, கொலை போன்ற காரியங்கள் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது, மாநில அளவிலேகூட குறைவாக இருக்கிறது என்ற உண்மையை நமக்குத் தெரிவிக்கிறது.

**களவுபோன பொருட்கள் மீண்டும் உரியவர்களிடம் ஒப்படைப்பு**

களவுகள் நடைபெறாத ஒரு சமுதாயத்தை நாம் கனவு காணுகிறோம். எந்தத் தவறும் நடைபெறாத ஒரு சமுதாயத்தைக் கனவு காணுகிறோம். அது நடைபெறுமா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. இருந்தாலும், நடைபெற்றுவிட்ட தவறுகளை மேலும் நடக்காமல் இருப்பதற்காக, கண்டுபிடித்து வழக்கு தொடுத்து, தண்டனை கொடுப்பது, அதிலே நாம் இன்றைக்கு சுணங்கிப் போய்விட்டோமா என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், களவாடிய பொருட்களைத் திரும்பப் பெற்று ஒப்படைத்த வகையில், 25–2–1998 அன்று ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள வைர நகைகள், 490 பவுன் தங்க நகைகள், 7 கிலோ வெள்ளிப் பாத்திரங்கள், எலெக்ட்ரானிக் சாதனங்கள், கேமராக்கள், 70 மோட்டார் சைக்கிள்கள், 11 கார்கள், 9 ஆட்டோக்கள் மற்றும் ரொக்கப்பணம் ஒரு இலட்சத்து எண்பதாயிரம் ரூபாய் – சென்னை மாநகரக் காவல் துறையினரால் களவு கொடுத்த பொதுமக்களுக்குத் திரும்ப ஒப்படைக்கப் பட்டிருக்கின்றது. பலருக்கு இப்போது மொத்தமாகச் சொன்ன கணக்கு பகிர்ந்தளித்து, திரும்ப ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல, 6–6–1998 அன்று 107 பவுன் தங்க நகை, வைர நகை, தொலைக்காட்சிப் பெட்டிகள், ரேடியோக்கள், 7 கிலோ வெள்ளிச் சாமான்கள், 3 மோட்டார் சைக்கிள்கள், 4 கார்கள் மற்றும் ரொக்கப் பணம் 2 இலட்சம் என்று, மொத்தம் 10 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் திருட்டுக் கொடுத்தவர் களுக்குக் காவல் துறையினரால் கண்டுபிடிக்கப் பட்டு திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளது.

27–8–1998 அன்று 200 பவுன் தங்க நகைகள், 7 கிலோ வெள்ளிப் பாத்திரங்கள், எலெக்ட்ரானிக் சாதனங்கள், 10 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ரொக்கப் பணம் 2.4 இலட்சம் ரூபாய் என்று மொத்தம் 35 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் காவல் துறையினரால் திருட்டுக் கொடுத்த பொதுமக்களுக்குத் திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளது.

15–10–1998 அன்று 240 பவுன் தங்க நகைகள், தங்கக் கட்டிகள், வீடியோ டிஸ்குகள், தோல் பொருட்கள், 50 இரு சக்கர வாகனங்கள், 2 கார்கள், 8 ஆட்டோ ரிக்ஷாக்கள் மற்றும் ரொக்கப்பணம் 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் என மொத்தம் 65 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளன.

31–12–1998 அன்று, அதைப்போலவே, 350 பவுன் தங்க நகைகள், 15 கிலோ வெள்ளிச் சாமான்கள், 50 மோட்டார் சைக்கிள்கள், 3 கார்கள், 11 ஆட்டோக்கள், ரொக்கப் பணம் 2.85 இலட்சம் உட்பட ஒரு கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் திரும்ப ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன காவல் துறையால்.

இப்போது 5–5–1999 அன்று 344 பவுன் தங்க நகைகள், 72 மோட்டார் சைக்கிள்கள், 16 கார்கள், 12 ஆட்டோக்கள், ரொக்கப்பணம் சுமார் பத்து இலட்சம் உட்பட ஒரு கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் திரும்ப ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

**நான்கு கோடி 50 இலட்சம் மதிப்புள்ள களவாடப்பட்ட பொருட்கள் திரும்ப ஒப்படைப்பு**

கடந்த ஓராண்டில் மாத்திரம், சென்னை மாநகரக் காவல் துறையினரால் மாத்திரம் மொத்தம் நான்கு கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள களவாடப்பட்ட பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு திரும்ப ஒப்படைக்கப் பட்டுள்ளன.

மனமகிழ் மன்றங்கள் என்ற பெயரால் Recreation Clubs சென்னையிலே, சில இடங்களில் சில தவறான காரியங்கள் நடைபெறுகின்றன. அதிலேகூட 1998ஆம் ஆண்டு, 98 வழக்குகள் அந்த மன்றங்களின் மீது போடப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 1999 அதாவது, 31–4–1999 வரையில் இந்த ஆண்டு 35 வழக்குகள் அவர்கள் மீது போடப்பட்டு, அந்த வழக்குகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**காவல்துறை அலுவலர் நலவாழ்வு நிதி ரூ.1 கோடியாக அதிகரிப்பு**

காவல்துறையைச் சேர்ந்த அலுவலர்களுக்கு நலவாழ்வு நிதியின் கீழ் மருத்துவ வசதிக்கு நிதி உதவி செய்யப்பட்டு வருகிறது. குறிப்பிட்ட மருத்துவ சிகிச்சைகளுக்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதி உதவி அளிக்கப்படுகிறது. வெளிநாட்டிலே மருத்துவ சிகிச்சைக்கு இந்த நிதியிலிருந்து 10 சதவிகித வட்டிக்குக் கடன் வசதியும் செய்யப்பட்டு வருகிறது. தற்போது மாரடைப்பு, சிறுநீரக மாற்று சிகிச்சை ஆகிய பெரிய வியாதிகளுக்கு இந்த நிதியிலிருந்து உதவி வழங்கப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டு 108 காவலர்கள், இந்தத் திட்டத்தால் பயனடைந்தார்கள்.

அதற்கு 83 இலட்சம் ரூபாய் செலவாகியிருக்கின்றது. அந்த நிதிக்கு அரசின் உதவித் தொகையாக 50 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிதியின் கீழ் கோரிக்கைகள் கூடுதலாக வந்துள்ள காரணத்தால் அரசு இந்த நிதிக்கு 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியதை இப்போது ஒரு கோடி ரூபாயாக நிதி ஒதுக்க முடிவு செய்துள்ளது.

**மகளிர் காவல் நிலையங்களுக்கு மொபெட், மோட்டார் சைக்கிள்**

தமிழகத்திலே 57 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் இருக்கின்றன. அந்த நிலையங்களுக்கு ஏற்கெனவே ஜீப்புகள் வழங்கப்பட்டாகிவிட்டது. தற்போது காவல் நிலையங்களுக்கு உட்பட்ட இடங்களுக்கு விரைவாகச் சென்று, புகார் மனுக்கள் மீது விசாரணை செய்திடவும், சம்மன்களைச் சம்பந்தப் பட்டவர்களுக்கு உடனடியாகச் சென்று அளிக்கவும் உதவியாக ஒவ்வொரு மகளிர் காவல் நிலையத்திற்கும் ஒரு மொபெட், மோட்டார் சைக்கிள் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.



பாதிக்கப்பட்டோர் உதவி நிதி என்று ஒரு திட்டம் உருவாக்கப் பட்டு, நடைபெற்று வருகிறது. அதில் கொலை யுண்டவர்களின் வாரிசுகளுக்கு, கொலை யுண்டவர்கள் என்றால் கலவரங்களிலே அல்ல, வேறு அமளிகளிலே அல்ல, பொதுவாக வேறு காரணங்களினால், சொந்தக் காரணங்களினால், கொலையுண்டால் அவர்கள் வாரிசுதாரர்களுக்கு 10,000 ரூபாயும், கடுமையான காயத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 5,000 ரூபாயும், கற்பழிப்பு போன்ற குற்றங்களால் பாதிக்கப் பட்டவர்களுக்கு 5,000 ரூபாயும் இதுவரையிலே வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டம் தற்போது மேலும் விரிவுபடுத்தப்பட்டு கடத்தப்பட்டு பூதிப்புக்குள்ளான பெண்கள் என்றால், அவர்களுக்கு 5,000 ரூபாயும், வரதட்சணை காரணமாக உயிரோடு எரிக்க முயற்சித்தாலோ அல்லது வேறு வகையில் கொலை செய்ய முயற்சித்தாலோ, தீக் காயம் அடைந்தால் 5,000 ரூபாயும், அந்த நிகழ்வில் மரணமே அடைந்துவிட்டால், அவர்களுடைய வாரிசுகளுக்கு 10,000 ரூபாயும், வரதட்சணைக் கொடுமையால் தற்கொலை செய்து கொண்ட பெண்களின் குழந்தைகளுக்கு 10,000 ரூபாயும், கொடுமையினால் பாதிக்கப்பட்டு நிரந்தரமாக ஊனமுற்ற பெண்களுக்கு 5,000 ரூபாயும் நிவாரண உதவி அளிக்க அரசு முடிவு செய்துள்ளது.

**வாகன ஓட்டுநர்களுக்குச் சிறப்பு ஊதியம் உயர்வு**

காவல் துறையிலே வாகன ஓட்டுநர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குள்ள ஊதியத்தோடு மாதந்தோறும் ரூபாய் 90 சிறப்பு ஊதியமாக அளிக்கப்பட்டு வருகிறது. இதை உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று 90 ரூபாய் என்பதை இனி மாதந்தோறும் 120 ரூபாயாக வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

காவல்துறையில் பணியாற்றுகின்ற பணியாளர் களுக்கு வழங்கப்பட்டதுபோல் தீ அணைப்புத்துறை பணியாளர்களுக்கும், பணியில் அவர்கள் ஈடுபட்டு இருக்கும்போது, காயம் அடைந்தாலோ, இறந்துவிட்டாலோ, குடும்ப நலத்திட்டத்திலே வழங்கப்படும் கருணைத் தொகை, வீரமரணம் அடைவோருக்கு இதுவரை 10,000 ரூபாய் என்றிருந்தது. அதை 2 இலட்சம் ரூபாயாக இப்போது உயர்த்தப்படுகிறது.

செயல்பட முடியாத அளவிற்கு நிரந்தர ஊனம் அடைவோருக்கு இதுவரை 1,000 ரூபாயிலிருந்து 3,000 ரூபாய் வரை என்று வழங்கப்பட்டதற்கு மாறாக, இனி 50,000 ரூபாய் வழங்கப்படும்.

படுகாயம் அடைவோருக்கு இதுவரை 1,000 ரூபாய் முதல் 3,000 ரூபாய் வரை என்ற தொகை 10,000 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. சாதாரண அளவிலே காயம் அடைவோருக்கு இதுவரை 1,000 ரூபாய் முதல் 3,000 ரூபாய் வழங்கப்பட்டதற்கு மாறாக, இனி 5,000 ரூபாய் வழங்க அரசு முடிவு எடுத்துள்ளது.

**கடந்த ஆட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட காவலர்கள் பணி நியமனம்**

கடந்த ஆட்சியில் 10,000 பேர் காவலர்களாக நியமனம் செய்யப்பட்டார்கள். ஆனால், நியமனம் செய்வதாக அறிவிக்கப்பட்டதே தவிர உரிய நியமன ஆணைகள் வெளியிடப்படவே இல்லை.

முதல் கட்டமாக 1,581 பெண் காவலர் உட்பட மொத்தம் 4,062 காவலர்களுக்கு நியமன ஆணை அனுப்பப்பட்டு, பயிற்சியும் தரப்பட்டு, அவர்கள் அனைவரும் 16-10-1997இல் பணியிலே அமர்த்தப் பட்டார்கள்.

இரண்டாம் கட்டமாக 1,023 பெண் காவலர்கள் உட்பட மொத்தம் 5,700 காவலர்களுக்கு நியமன

ஆணை அனுப்பப்பட்டு அவர்கள் தற்போது பயிற்சி பெற்று வருகிறார்கள். இந்த ஆட்சியில் இதைத் தொடர்ந்து கடந்த ஆண்டு காவலர்கள் தேர்வு முடிவுற்று 3,165 காவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தப் பட்டியலும் வெளியே வந்திருக்கிறது.

இதன் தொடர்ச்சியாக மேலும் 5,000 புதிய காவலர்களை இந்த அரசு இந்த ஆண்டு நியமிக்கும். அதிலே ஆடவர் 4,000 பேர், பெண்டிர் 1,000 பேர் ஆவர்.

1999ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் சென்னையிலே நடைபெற்ற 86ஆவது இந்திய அறிவியல் மாநாட்டின்போது கூட தடய அறிவியல் அவையைத் தொடங்கி வைத்துப் பேசிய தேசிய மனித உரிமை ஆணையத்தினுடைய உறுப்பினர் நீதியரசர் மாலிமத் அவர்கள் மனித உரிமை மீறல்களைத் தடுக்கும் பொருட்டு தடய அறிவியல் துறை தனித்துறையாக இயங்குவது விரும்பத்தக்கது என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். இந்நிலையில் தன்னாட்சிப் பொறுப்பு வழங்க சாதகமாகக் கோரப்பட்ட கருத்துகள் மற்றும் அதற்கு எதிராக வைக்கப்பட்ட கருத்துகள், இவைகளையெல்லாம் நன்று ஆராய்ந்து பார்த்து, தடய அறிவியல் துறையை உள்துறையின் நேரடிக் கட்டுப்பாட்டில் தனித்துறையாக இயங்க அனுமதிக்கலாம் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

**மதுவிலக்குத் தொடர்பான வழக்குகள் எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள்**

மதுவிலக்கைப் பொறுத்தவரையில் 1998–99ஆம் ஆண்டில் மதுவிலக்கு வழக்குகளுடைய பதிவு எண்ணிக்கை 1,09,022, கைது செய்யப்பட்ட குற்றவாளிகள் 1,02,105 பேர். விழா நாட்களில் மட்டும் சிறப்புச் சோதனையின் போது கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்ட கள்ளச்சாராயம் 38,18,113 லிட்டர். சாராய ஊறல் 2,36,11,045 லிட்டர். சாராயப் பாக்கெட் 4,09,599.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள பிரபல கள்ளச் சாராய வியாபாரிகள் 1998இல் 795 பேர். 1999இல் 347 பேர். காம்பவுண்டிங் செய்கின்ற அதிகாரத்தை இந்தத் துறைக்குக் கொடுத்து அதன் மூலமாக கடைபிடிக்கப்படுகின்ற முறையின் மூலம் முடிக்கப்பட்ட வழக்குகள் 22,776. இதிலே வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை 1,51,92,134 ரூபாய். நீதிமன்றங்களிலே நிலுவையில் இருந்த வழக்குகளை முடித்து வைத்ததின் மூலம் வசூலான அபராதத் தொகை, 1,71,82,051 ரூபாய். 1998–99 இந்த ஓர் ஆண்டில் கைப்பற்றப்பட்ட மதுவிலக்குக் குற்றம் சம்பந்தப்பட்ட வாகனங்கள் மாத்திரம் 1,011. இதிலே பறிமுதல் செய்யப்பட்டவை 145. தவறு செய்த மதுக்கடை உரிமையாளர்கள் மற்றும் அலுவலர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 9,652. கைப்பற்றப்பட்ட போலி மற்றும் இரண்டாந்தர மதுபான பாட்டில்கள் 56,674.

பொதுமக்களுடைய ஒத்துழைப்பு கோரி அரசு உள்துறையின் மூலமாக செய்த விளம்பரத்தினுடைய விளைவாக வந்த புகார் மனுக்கள் 1,323. அதிலே உண்மையான புகார்கள் 504. இதிலே கைது செய்யப்பட்டவர்கள் 909 பேர். எனக்கே புகார்களைத் தரலாம் என்று திருச்சி செய்தியாளர்கள் கூட்டத்திலே அறிவித்து, அதன்படி எனக்கே வந்த புகார் மனுக்கள் 1,092; இதில் நடவடிக்கை எடுக்கப்பட்டவை 770; பதிவான வழக்குகள் 1,890; கைது செய்யப்பட்டவர்கள் 1,829 பேர்; கைப்பற்றப்பட்ட வண்டிகள் 15.

**அரசின் இந்த முயற்சிக்குப் பொதுமக்கள் ஆதரவு நிரம்ப உள்ளது**

எனவே, அரசினுடைய இந்த முயற்சிக்குப் பொது மக்களுடைய ஆதரவு நிரம்ப இருக்கிறது என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. உள்துறைக்கு மாத்திரமல்லாமல், முதலமைச்சர் முகவரிக்கே இந்தப் புகார்களை அனுப்புங்கள் என்றதற்கு இந்த அளவிற்கு நமக்குப் புகார்கள் வந்திருக்கின்றன. நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கின்றன.

மதுவிலக்குத் துறையிலேயிருந்து நமக்கு வருகின்ற வருவாயைப் பற்றி ஒரு குறிப்பு.

1995–96ஆம் ஆண்டு 1,125 கோடி ரூபாய் மதுவிலக்குத் துறை சார்பாக அரசுக்குக் கிடைத்தது; 1996–97இல் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு 1,649 கோடி ரூபாய் கிடைத்தது; 1997–98இல் சில மாறுதல்களைச் செய்தோம். 1997–98இல் ரூ.1,942 கோடி; 1998–99இல் ரூ.2,697 கோடி வருவாய் கிடைத்துள்ளது; 39 சதவிகிதம் கூடுதலாக அரசுக்கு வருமானம் இன்றைக்கு வருகிறது.

**புதிதாக காவல் நிலையங்கள்**

91–லேயிருந்து 96 வரையிலும் மொத்தம் 5 ஆண்டுகளிலே, கடந்த ஆட்சியில் 23 காவல் நிலையங்கள்தான் புதிதாக ஆரம்பித்தார்கள். இப்போது 1996 முதல் இன்றுவரையில் 61 காவல் நிலையங்களை நாம் புதிதாக நாம் உருவாக்கி யுள்ளோம்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி:568926/568927/564906

## கோ-ஆப்டெக்ஸ் -ன் நல்வாழ்த்துகள்

# அன்றும் இன்றும் என்றும்
# கோ-ஆப்டெக்ஸ்



**கோ-ஆப்டெக்ஸ் ரகங்கள்:**

- பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்
- லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்
- படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

★ இன்றே அருகில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்திற்கு வருகை தாரீர்.


தமிழரசு
பதிவு எண் M.8676
Licence No.TN/MS(C)PP-23